2466 | 23.5 | 85

279

[Library stamp: ...ணையர் ... ஆவணக்காப்பகம் மற்றும் ... வரலாற்று ஆராய்ச்சி 11 APR 1985 ... ஆவணக்காப்பகம் ... எழும்பூர் சென்னை-8.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 30, 1984—தொகுதி 208-எண் 3
Friday, 30th March 1984—Volume 208 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

279

## பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்— விடைகள் .. .. | 257—279 |
| 2. | அறிவிப்பு— ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து. .. | 279 |
| 3. | அரசின் தீர்மானம்— ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதம். .. .. | 280—354 |
| 4. | 20—4—1984 அன்று ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல்.. | 354—397 |
| 5. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 398 |

143897

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை 1984 மார்ச், 30.

பங்குனி 17, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் **ம. பொ. சிவஞானம்**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### தலைஞாயிறில் காவல்நிலையம்

67 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் காவல் நிலையமும், காவலர் குடியிருப்பும் கட்டுகின்ற உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டதா?

விடை—

(அ) ஆம்.

(இ) தலைஞாயிறு காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டத் தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

### *Appointment of Member of Tamil Nadu Public Service Commission.*

68. *Q.*—Thiru D. SANTOSHAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that until some years ago, it was a convention to appoint a Christian, as a member of the Tamil Nadu Public Service Commission; and

(*b*) if so, whether there is any proposal to revive this convention?

விடை—

(அ) சாதி, சமய அடிப்படையில் தேர்வாணைக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## *Youth Service Corps Volunteers.*

69. Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Youth Service Corps Volunteers who have passed the Special Examination conducted by the Tamil Nadu Public Service Commission for Group-II Services, have been provided with jobs; and

(*b*) if not, the reason therefor ?

**விடை—**

(அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### விவசாயிகள் சங்க வேலைநிறுத்தம்.

**70 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 ஏப்ரல் 23 ஆம் தேதி, விவசாயிகள் சங்கம் [illegible] பெற்ற பொது வேலை நிறுத்தத்தையொட்டி, முன்னெச்சரிக்கை [illegible] யாக, தமிழ்நாடு முழுவதும் கைது செய்யப்பட்டவர்கள், [illegible] எத்தனை பேர் ;

(இ) இதில் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், [illegible] எத்தனை பேர் ?

(உ) இதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

**விடை—**

(அ), (இ) மற்றும் (உ) அவை முன் ஒரு **விவர** அறிக்கை [illegible] வைக்கப்பட்டுள்ளது.

**71 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 ஏப்ரல் 23 ஆம் தேதி, விவசாயிகள் சங்கம் [illegible] வேலை நிறுத்தத்தின்போது [illegible] [illegible] [illegible] எவ்வளவு ?

(இ) இறந்தவர்களுடைய [illegible] [illegible] அரசு கொடுத்த [illegible] எவ்வளவு ?

[illegible]



**விடை—**

(அ) மற்றும் (இ) அவை முன் விரிவான அறிக்கை @@ வைக்கப்பட்டுள்ளது.

### காவல் நிலையங்களில் இறந்தவர்கள்

**72 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 15—7—1977 முதல் 14—7—1980 வரை காவல் நிலையங்களில் விசாரணைக்காக வைக்கப்பட்டு இருந்தவர்களில், இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் எந்தெந்த காவல் நிலையங்களில் இறந்தார்கள் ?

(உ) அவர்களில் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் எத்தனை பேர் ?

**விடை—**

(அ) 4 (நான்கு).

(இ) 1. [illegible] காவல் நிலையம், செங்கற்பட்டு மேற்கு.

2. [illegible] காவல் நிலையம், [illegible]டாற்காடு.

3. [illegible] காவல் நிலையம், திருச்சி.

4. கொடவாசல் காவல் நிலையம், தஞ்சை கிழக்கு.

(உ) ஒருவருமில்லை.

## *Gazetted Officers Graduated through Tamil Medium.*

73. Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state, the number of Gazetted Officers including I.A.S. Officers serving in the State as on 16—8—1980, who had their Graduation through Tamil medium ?

**விடை—**

203 [illegible] (இந்திய ஆட்சிப்பணியில் ஒருவர் உட்பட).

## *Policemen Braved Death.*

74. Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state :—

@@ 401-402 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(*a*) the number of Policemen and Officers who (i) braved death or (ii) sustained injuries in the discharge of their duty, between 1—7—1977 and 15—7—1980 ; and

(*b*) the number against whom action was taken for dereliction of duty during the above period ?

**விடை—**

(அ) (i) வீரமரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 பேர்.

(ii) பணியின்போது காயமடைந்தோர் 912 பேர்.

(இ) 1—7—1977 முதல் 15—7—1980 வரையில் 6,487 பேர்மீது கடமையினின்று தவறியதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### *"Tamizhagam" and "Tamil Nadu House".*

75. *Q.*—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state, the annual expenditure incurred by the Government for the maintenance of "Tamizhagam" at Uthagamandalam and the "Tamil Nadu House" at New Delhi ?

**விடை—**

புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தின் பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆன நிகரச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வருடம். | நிகரச் செலவு |
|---|---|
| | ரூ. |
| 1980—81 | 9,34,816.00 |
| 1981—82 | 12,48,187.00 |
| 1982—83 | 7,13,245.00 |

உதகமண்டலத்திலுள்ள தமிழகம் இல்லத்தின் பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆன நிகரச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வருடம். | நிகரச் செலவு |
|---|---|
| | ரூ. |
| 1980—81 | 1,52,063.67 |
| 1981—82 | 97,098.57 |
| 1982—83 | 3,36,317.67 |



### கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர்கள்

76 வினா.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) நெருக்கடி நிலை இரத்து செய்யப்பட்ட நாள் முதல் 31—5—1979 முடிய, கட்டாய ஓய்வளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இவர்களில், எத்தனை பேர்கள் மேல்முறையீடுகள் செய்துள்ளனர்?

(உ) இவர்களது முறையீடுகள் எத்தனை காலமாக விசாரணையில் இருந்து வருகின்றன ?

**விடை—**

(அ) 125 நபர்கள்.

(இ) 97 நபர்கள்.

(உ) 97 நபர்களின் மேல்முறையீடுகளும் பரிசீலிக்கப்பட்டு 95 நபர்களின் மேல்முறையீடுகளின்மீது ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மற்ற இரு நபர்களின் மேல்முறையீட்டின்மீது மேலும் சில விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

### நக்ஸல்பாரி இயக்கம்

77. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-ல், வட ஆற்காடு மாவட்டத்தில், ஏலகிரி மலைப்பகுதியில் நக்ஸல்பாரி இயக்கத்தின் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அங்கிருந்து எடுக்கப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள் இவைகளின் மதிப்பு எவ்வளவு ?

**விடை—**

மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### விசா வாங்கித்தருவதாக ஏமாற்றுதல்

78 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் ; மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடு செல்வதற்கு விசா வாங்கித் தருவதாக ஏமாற்றியவர்கள் மீது 1—1—1977 முதல் 10—9—1980 வரை எத்தனை புகார்கள் அரசுக்கு வந்துள்ளன ?

---

@ 402-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) அத்தகையவர்கள், மாவட்ட வாரியாக எத்தனை பேர்;

(ஈ) மாற்றியவர்களில் எத்தனை பேர்மீது வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன?

**விடை—**

(அ), (இ) மற்றும் (ஈ) விவர அறிக்கை (@@) அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

## வத்தலக்குண்டில் வெடி விபத்து

79. வினா.—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்டில், மதுரை மாவட்டம், வத்தலக்குண்டில் வெடி விபத்து ஏற்பட்ட கடைக்குச் சொந்தக்காரர், வெடி மருந்து வியாபாரம் செய்ய உரிமம் பெற்றிருந்தாரா?

(ஆ) இல்லையெனில், உரிமம் இல்லாமல், எத்தனை ஆண்டுகளாக இக்கடையில் வெடி மருந்து வியாபாரம் நடந்துள்ளது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது?

(இ) வெடி மருந்து விற்பனையைக் கண்காணிக்கும் பொறுப்பு எந்த அதிகாரியைச் சார்ந்தது?

(ஈ) அந்த அதிகாரி இந்தக் கடைக்காரர்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) சம்பவம் நடப்பதற்கு முன்பிருந்து நான்கு மாதங்களாக வெடி மருந்து வியாபாரம் நடந்துள்ளது என்று காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(இ) வெடி மருந்து வியாபாரத்திற்காக உரிமம், சென்னையில் காவல் துறை ஆணையாளராலும், மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களாலும் வழங்கப் படுகிறது. சட்ட விரோதமான முறைகளுக்கு நடவடிக்கை எடுக்க காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் மேல் அதிகாரிகளுக்கும், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் அதிகாரம் உண்டு.

---

@@ 402-403 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப் படாததால், திரு. தனசேகரன் தாக்கப்பட்டது சம்பந்தமாக பதிவு செய்யப் பட்ட வழக்கின்மீது 20—3—1981 அன்று மேல் நடவடிக்கை கைவிடப் பட்டது.

### வட ஆற்காடு, திருப்பத்தூர் வட்டார கிராமங்களில் அச்சநிலைமை.

82. **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரத்தில் உள்ள கிராமங்களில், மக்கள் அச்சமின்றி நடமாட முடியாத சூழ்நிலை இன்னும் தொடர்வதாக அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டாரத்தில் மக்களிடையே அச்சமும் பீதியும் நிலவுவதாகக் குறிப்பிட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

(இ) காவல் துறையினர் எடுத்த தீவிர நடவடிக்கைகள் அவ்வட்டார மக்களிடையே நம்பிக்கையையும் துணிவையும் ஏற்படுத்தியுள்ளன.

### வட ஆற்காடு மாவட்டத்தில் பயிர்கள் அழிக்கப்படுதல்

83. **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1—7—1977 முதல் 13—11—1980 வரை எத்தனை உடைமையாளர்களது தோட்டங்களின் பயிர்கள் அழிக்கப் பட்டன?

(இ) இவ்வாறு அழிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(உ) இதுபற்றி அரசுக்கு வந்த புகார்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1—7—1977 முதல் 13—11—1980 வரை உள்ள இடைக்காலத்தில் 49 நிலச் சொந்தக்காரர்களின் தோட்டங்களில் உள்ள பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

(இ) அழிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பீடு ரூபாய் 2,74,628



(உ) இது சம்பந்தமாக மொத்தம் 42 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நக்சலைட்டுகளின் தூண்டுதலினால் இச்சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரிய வந்ததால், வட ஆற்காடு மாவட்டத்தில், நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக அலங்காயம் மற்றும் குரிசில்பட்டு ஆகிய இடங்களில் புதிதாகக் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. மேலும் இம்மாவட்டத்திலுள்ள எட்டு காவல் நிலையங்களுக்குக் கூடுதல் பணியாளர்களை அரசு அனுமதித்துள்ளது. மாவட்ட ஆயுதப்படையினர் 76 பேர் திருப்பத்தூரில் நிறுத்தப்பட்டனர்.

### வேலை கோரும் போராட்டம்

84. **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 நவம்பரில், கோயம்புத்தூரில், "வேலை கொடு அல்லது ஜெயில் கொடு" என்ற கோஷத்தோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இதுபோன்ற போராட்டம் மற்ற நகரங்களில் நடைபெற்றதா?

(உ) ஆம் எனில், எந்தெந்த நகரங்களில் நடைபெற்றது?

(எ) போராட்டத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) கோவையில் மட்டும் 85 பேர் கைது செய்யப்பட்டனர்.

(இ) ஆம். வேலை கோரும் போராட்டம் பலவிதமாக, தமிழகத்தின் பல இடங்களில், 1980-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றமும், மாணவர் பெருமன்றமும் இணைந்து நடத்தியுள்ளது.

(உ) கடலூர் — தென்னாற்காடு
திருத்துறைப்பூண்டி — தஞ்சை (கிழக்கு)
தஞ்சை நகர் — தஞ்சை (மேற்கு)
புதுகை புகைவண்டி நிலையம் — புதுகை
மானாமதுரை புகைவண்டி நிலையம் — மதுரை (கிழக்கு)
தூத்துக்குடி — நெல்லை
நெல்லை நகரம் — நெல்லை
நாகர்கோவில் புகைவண்டி நிலையம் — குமரி
சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையம் — சென்னை

(எ) பட்டம் பெற்று ஐந்தாண்டுகள் வரை (Employment Exchange-ல்) வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு பெற்றிருந்தும் வேலை கிடைக்காதவர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித்தொகை வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் "வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற, மைய மாநில அரசின் கொள்கையை ஒட்டித் தொடங்கும் முதல் முயற்சியாகும்" என்றும் கூறப்பட்டுள்ள கருத்திற்கிணங்க, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மூலம் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### இலஞ்ச ஒழிப்புத் துறையினரின் நடவடிக்கைகள்.

85 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில இலஞ்ச ஒழிப்புத்துறையினர் நடவடிக்கையின் காரணமாக 1977-78, 1978-79, 1979-80, 1980-81 ஆண்டுகளில் எத்தனை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) இவர்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எத்தனை பேர்?

(உ) வேலை நீக்கம், கட்டாய ஓய்வு ஆகியவற்றுக்கு ஆளான அதிகாரிகள் எத்தனை பேர்?

விடை—

ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு இல்லம்

86 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுடில்லி தமிழ்நாடு இல்லம் சரியான முறையில் இயங்கவில்லை என அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

@ 404-405 பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

### மீனவர்கள் தாக்கப்படுதல்.

87 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு, மே மாதம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் உள்ள எல்லையை ஒட்டிய மீனவர்களை கேரள மாநிலத்தைச் சார்ந்த மீனவர்கள் தாக்கினார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(ஈ) இதனால் ஏற்பட்ட சேதத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நீரோடித்துறையைச் சேர்ந்த மீனவர்களுக்கும், கேரளாவைச் சேர்ந்த பொழியூரைச் சேர்ந்த மீனவர்களுக்கும் நீரோடித்துறையில் நடந்த கால்பந்தாட்டப் போட்டியில் சண்டை ஏற்பட்டதன் தொடர்பாக, பொழியூருக்குச் சென்ற நீரோடித் துறை மீனவர் இருவரை அடித்துள்ளனர். பொழியூரிலிருந்து சாராயம் ஏற்றி வந்த டாக்சி ஒன்றினை நீரோடித்துறையினர் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். 6—5—1981 அன்று, பொழியூரிலிருந்து 200 பேர் ஆயுதங்களுடன் வந்து நீரோடித்துறை மீனவர்களையும் அவர்களது வீடுகளையும் தாக்கியுள்ளனர். இதன் தொடர்பாக காவல்துறையினர் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். மீண்டும் கலவரம் ஏற்படாமல் தடுக்க, காவல்துறை நீரோடித் துறையில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது.

(ஈ) கலவரத்தின்போது, நீரோடித்துறையில் உள்ள சில வீடுகளின் சன்னல் கண்ணாடிகள், கூரை ஓடுகள், கடையிலுள்ள கண்ணாடிப் பெட்டி ஆகியவை சேதமடைந்துள்ளன. இதனால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 625 இருக்கும்.

## தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல்.

88 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுமக்கள் நலனை முன்னிட்டு, வட்டத் தலைநகர்களாக உள்ள திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய இடங்களில், தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அந்நிலையங்கள் எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (இ) திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் திறக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. அங்கிருந்து 20 கி.மீ. தூரத்திற்குள் உள்ள வேதாரண்யத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை. தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்கான முன்னுரிமைப் பட்டியலில் உள்ள ஊர்களில் தீயணைப்பு நிலையங்கள் உடனடியாகத் திறக்கும் வகையில், திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் விரைவில் திறக்கப்படும்.

## Listed and Unlisted Telephones.

89. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) the number of listed and unlisted Telephones provided by the Government to each Minister both in the Office and Residence; and

(b) the Telephone charges incurred by each of the Ministers from the date of assumption of Office to December, 1981 ?

விடை—

(அ) முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு அரசினரால் இரண்டு தொலைபேசிகளும், இல்லத்திற்கு ஆறு தொலைபேசிகளும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அலுவலகத்தில் உள்ள தொலைபேசிகளில் ஒன்று (தொலைபேசி) பட்டியலில் இட்டது. மற்றது பட்டியலில் இடாதது. அவரது இல்லத்தில் உள்ள ஆறு தொலைபேசிகளில் மூன்று பட்டியலில் இட்டவை. மற்ற மூன்றும் பட்டியலில் இடாதவை. மற்ற அமைச்சர்கள் அலுவலகங்களில் இரண்டு தொலைபேசிகளும் அவர்கள் இல்லங்களில் இரண்டு தொலைபேசிகளும் அரசால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அலுவலகங்களில் உள்ள தொலைபேசிகளில் ஒன்றும் இல்லங்களில் உள்ள தொலைபேசிகளில் ஒன்றும் பட்டியலிடப்பட்டவை. மற்றொன்று பட்டியலிடாதவை.





(இ) இந்த அமைச்சரவை பதவியேற்ற நாள் முதல் (9—6—1980) 1981 டிசம்பர் 31-ம் நாள் முடிய அமைச்சர்களின் தொலைபேசிகளுக்காக செலுத்திய கட்டணச் செலவு பின்வருமாறு :—

| | ரூ. பை. |
|---|---|
| முதலமைச்சர் | 96,152.90 |
| அமைச்சர் (நிதி) | 95,631.65 |
| அமைச்சர் (மின்சாரம்) | 1,74,838.35 |
| அமைச்சர் (கிராமத் தொழில்) | 1,81,746.40 |
| அமைச்சர் (வருவாய்) | 3,10,433.60 |
| அமைச்சர் (செய்தி மற்றும் அறநிலையத்துறை) | 1,81,679.90 |
| அமைச்சர் (கல்வி) | 1,41,249.80 |
| அமைச்சர் (வேளாண்மை) | 3,64,594.00 |
| அமைச்சர் (கூட்டுறவு மற்றும் சட்டம்) | 2,05,580.45 |
| அமைச்சர் (உள்ளாட்சி) | 2,31,541.10 |
| அமைச்சர் (தொழிலாளர் நலம்) | 1,12,771.40 |
| அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு) | 1,29,940.10 |
| அமைச்சர் (நீர்ப்பாசனம்) | 1,99,107.60 |
| அமைச்சர் (போக்குவரத்து) | 2,39,563.10 |
| அமைச்சர் (கைத்தறி மற்றும் காதி) | 1,32,476.30 |
| அமைச்சர் (ஆதி திராவிடர் நலம்) | 96,879.00 |
| அமைச்சர் (சமூகநலம்) | 1,51,340.80 |
| அமைச்சர் (தொழில்துறை) | 1,24,334.50 |

## Section 154 (2) of Criminal Procedure Code.

90. Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Chief Minster be pleased to state, the steps taken to ensure that the complainants gets the copy of First Information Report without fail as contemplated under Section 154 (2) of the Criminal Procedure Code ?

**விடை—**

முதல் தகவல் அறிக்கையின் நகலொன்று காவல்நிலைய அதிகாரிகளால் புகார் செய்வோர்க்கு அளிக்கப்படுகிறது. அப்படி முதல் தகவல் அறிக்கையைப் பெறாதவர்கள் காவல்துறை அதிகாரிகளின் கவனத்திற்கு அது குறித்து கொண்டுவந்தால், உரிய அதிகாரிகள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 'JALLI KATTU'

9-. *Q*.—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there was any communal clash at Devaram Village, Madurai District, due to dispute over 'Jalli Kattu' on or about 15th January 1982; and

(*b*) if so, the reason for the clash, and the number of casualities?

**விடை—**

(அ) மற்றும் (இ) 15—1—1982 அன்று மதுரை மாவட்டம் தேவாரம் கிராமத்தில் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்றது. தேவர் இனத்தவர் ஒருவரின் பசுவை நாடார் இனத்தவர் ஒருவர் தடியால் அடித்துப் பிடிக்க முயற்சி செய்ததின் காரணமாக 15—1—1982 அன்று மாலை 3 மணியளவில் தேவர்-நாடார் சமூகத்தினருக்கிடையில் ஒரு கலவரம் மூண்டது. இதன் தொடர்பாக ஏற்பட்ட நிகழ்வுகளில் ஒருவர் மரணமடைந்தார்.

## மத்திய அரசுப்பணித் தேர்வுகளில் தமிழ்.

92 **வினா.—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அகில இந்திய அளவில் நடைபெறும் மத்திய அரசுப்பணிக்கான எழுத்துத் தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் ஆகியவற்றில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழிலேயே பங்குகொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று, மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன?



**விடை—**

(அ) மற்றும் (இ) அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளில் வினாத்தாள்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் தயாரிக்கப்படுகின்றன. தேர்வுகளில் பங்குகொள்பவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றத் தேர்வுத்தாள்களைத் தமிழிலும் எழுதலாம்.

தேர்வுத்தாள்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே தயாரிக்கப்படுமென்றும் மற்ற இந்திய மொழிகளில் தயாரிக்கப்படமாட்டாவென்றும் மைய அரசு முடிவு செய்துள்ளதற்கு மாநில அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

## பழவூரில் காவல் நிலையம்.

93 **வினா—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பழவூரில் அமைந்துள்ள புறக்காவல் நிலையத்தை (Police outpost) முழு அந்தஸ்துள்ள காவல்நிலையமாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இதுகுறித்து அவ்வட்டாரத்திலிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (இ): ஆம்.

(உ) திருநெல்வேலி மாவட்டம், பழவூரின் புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்தி காவல் நிலையமாக மாற்றும்படி 1—7—1982-ம் நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 1686-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

## ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள்

94 **வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 22—3—1982 நாளன்றுள்ளபடி, தமிழக அரசில் பணிபுரியும் (I.A.S., I.P.S.) அதிகாரிகளில் எத்தனை பேர், ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்?

[1984 மார்ச் 30

விடை—

(அ) தமிழ்நாடு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 264 பேரில் 36 அதிகாரிகள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஐந்து அதிகாரிகள் மலைவாழ் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

107 ஐ.பி.எஸ். அதிகாரிகளில், 19 அதிகாரிகள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஒரு அதிகாரி மலைவாழ் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்.

(இ) இவர்களுள், ஒரு ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரி பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர் ஆவார்.

ஐ.பி.எஸ். அதிகாரிகளுள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண் அதிகாரிகள் யாருமில்லை.

### சிதம்பரம் காவல் நிலையத்தில் ஆசிரியர் தாக்கப்படுதல்.

*95 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டையைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர் சிதம்பரம் வட்ட காவல் நிலையத்தில் தாக்கப்பட்டதுபற்றி தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் 3—1—1982 அன்று சிதம்பரம் துணை ஆட்சியருக்கு மனு அளிக்கப்பட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட முதல்நிலைக் காவலர் எண் 2049 எத்திராஜ் என்பவர் கடலூர் கட்டுப்பாடு அறைக்கும் (Control Room) காவலர் எண் 1859 கலியமூர்த்தி என்பவர் கடலூர் புதுநகர் (Cuddalore N.T.) காவல் நிலையத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள்மீது துறை நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

### கன்னடி கோவில்

96 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982-ம் சித்திரை பௌர்ணமியன்று கூடலூர் அருகேயுள்ள குமுளி மலையில், கன்னடி கோவிலில் வழிபாட்டிற்குச் சென்ற தமிழ்நாட்டு



1984 மார்ச் 30]

பக்தர்களை, கேரள மாநில காவல் துறையினர் துன்புறுத்தினார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### பாடப்பகுதிக்கு சம்பந்தமில்லாத வினாக்கள்.

97 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு, மே மாதம் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மையங்களில், எங்கு எங்கு கற்பிக்கப்பட்ட பாடத்திட்டம் சம்பந்தமில்லாத வினாக்களை கேட்டதாகக் கூறி மாணவர்கள் களுக்கு கிளர்ச்சி செய்தனர்?

(இ) அவர்கள் கிளர்ச்சிக்குரிய காரணங்கள் உண்மைதானா என்று அரசு ஆராய்ந்ததா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) 15—5—1982 அன்று சென்னையில் உள்ள புதுக்கல்லூரி (College)-யில் தமிழ்தாள் இரண்டில், பாடப்பகுதிக்கு புறம்பான பகுதியிலிருந்து வினாக்கள் எழுப்பியதால் மாணவர்கள் தேர்வு மையத்தை விட்டு வெளியே சென்றார்கள் என சென்னைப் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது. வேறு எந்த மையத்திலும் அவ்வாறு நடந்ததாக தகவல் இல்லையென்றும் பல்கலைக் கழகம் தெரிவித்து உள்ளது. இதன் காரணமாக தேர்வுத்தாள்கள் திருத்தம் தளர்த்தப்பட்டதோடு கருணை மதிப்பிடும் அளிக்கப்பட்டது.

(இ) பாடப்பகுதிக்கு புறம்பாக கேள்விகள் இருந்த காரணத்தால் விடைத்தாள்கள் சற்று தாராளமாக திருத்தப்பட்டதுடன் கிரேஸ் மார்க்குகளும் அளிக்கப்பட்டதாக பல்கலைக் கழகம் குறிப்பிட்டு உள்ளது.

### *Payment of Honorarium to Indigent Artistes.*

98. Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Education be pleased to state :—

[1984 மார்ச் 30

(a) the amount spent by the State Government, every month from January 1977 to June 1982, towards the payment of Honorarium or Pension to the Indigent Artistes belonging to the Literary field and their names; and

(b) the number of persons, who were income tax assessees prior to the award of this Honorarium or Pension?

விடை—

(அ) அவையை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவி அளிக்கும் [illegible] திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் [illegible] முறையாக வைக்கப்பட்டுள்ளது.

(இ) [illegible] ஆசிரியர்கள் [illegible] அடிப்படையில் திங்கள் வருவாய் ரூ. 100-க்கு [illegible] இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. [illegible] ஆசிரியர்களின் வருவாய் [illegible] குறிக்கப்பெறவில்லை.

பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தருதல்.

99 வினா.—திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் [illegible] குடிநீர் வசதி இல்லாத பள்ளிகளுக்கு குடிநீர் [illegible] செய்து [illegible] அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(இ) 1982-ஆம் ஆண்டு [illegible] திங்களில் [illegible] அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது குறித்து தமிழ்நாடு குடிநீர் [illegible] வாரியத்தின் [illegible] அரசால் அளிக்கப்பட்ட [illegible] கொண்டு [illegible] ஒன்று [illegible] தமிழ்நாடு [illegible] ஒவ்வொரு பள்ளிக்கும் [illegible] செய்து கொடுக்க ஆகும் [illegible] அவர்களுக்குச் செலுத்தினால்தான் இத்திட்டத்தை மேற்கொள்ள இயலும்

@ 406-414 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 30]

என்று தெரிவித்துள்ளனர். மேற்கண்டவாறு குடிநீர் வாரியத்தினர் தெரிவித்து விட்டாலும் தற்போது போதிய நிதி வசதியில்லாத காரணத்தினாலும் இந்தப் பொருளை மேற்கொண்டு ஆராய [illegible] பள்ளி மாணவர்களிடமிருந்து ஒரு சிறு தொகையை சிறப்புக் கட்டணமாக வசூலிக்கும் சாத்தியக்கூறு பற்றி ஆராயப்பட்டு வருகின்றன.

*Training for Inducted Teachers.*

100. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have formulated a scheme for giving a special ten months' training to the Inducted Teachers to make them fully qualified;

(b) if so, whether the Inducted Teachers teaching Economics alone have been excluded from this scheme; and

(c) if so, the reasons therefor?

விடை—

(அ) ஆம்.

(இ) மற்றும் (உ) கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் போன்ற உட்படுத்தப்பட்ட பாட ஆசிரியர்களுக்கு செய்முறை பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்குப் போதிய வசதிகள் இல்லாததினால், அஞ்சலகக் கல்வி மூலம் தங்களைத் தகுதி படுத்திக்கொள்ள வாய்ப்பு இல்லை. எனவே, இவ்வாசிரியர்களுக்கு மட்டும் தமிழ்நாட்டு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்த ஆணையிடப்பட்டது. பொருளியல் பாடத்தை மட்டுமின்றி, மொழி மனையியல், புவியியல் வணிகவியல் போன்ற மற்ற பாடங்களை செயல்முறை பயிற்சி வகுப்பிற்குச் செல்லாமல் அஞ்சலகக் கல்வி மூலமாகவோ அல்லது மாலைநேர வகுப்புகளின் வாயிலாகவோ படிக்க வசதிகள் உள்ளன. செயல் முறைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவேண்டிய பாடங்களுக்கு மட்டுமே குறுகியகால பத்துமாத பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டது.

*Three Year Degree Course in Law.*

101. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of applications received during August, 1983, for admission to the Three Year Degree Course in Law and the total number of seats available in the Law Colleges in Tamil Nadu; and

(b) whether in view of the fact that a large number of applications have been received for the said course, there is any proposal with the Government, to continue the course for one more year?

விடை—

(அ) பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை—3,814
அனுமதிக்கப்பட்ட இடங்களின் மொத்த எண்ணிக்கை—390.

(இ) சட்டப்படிப்பு, இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், மேலும் ஓராண்டு சட்டப்படிப்பிற்கு அவசியம் இருந்தால், அம்மன்றமும் அனுமதித்தால், நிலைமைக்கேற்ப, அம்மன்றத்தின் அனுமதி கோருவதுபற்றி கருதப்படும். தற்போது இதுகுறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*Construction of Over Bridge.*

102. Q.—Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any proposal with the Government, to construct an over Bridge on the Railway Level crossing between Thachanallur and Tirunelveli Junction; and

(b) if so, the details thereof?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தொற்று நோய்க்கிருமிகளால் பாதிப்பு

103 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடையாறு ஆற்றங்கரையில் குடியிருப்போரில் 95 சதவிகிதம் பேர் தொற்று நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதனைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



(உ) கிண்டி கிங் நிலையத்தில் ஆராய்ச்சித்துறை குடிநீர் மூலம் பரவும் தொற்று நோய் இருமடங்காகப் பெருகியுள்ளது என்று கண்டுபிடித்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கிடமில்லை.

பழம் பதனிடும் நிறுவனம்

104 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கைத்தறி-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய சோவியத் தொழில்நுட்ப வல்லுநர்கள், வேலூரில் பழம் பதனிடும் நிறுவனம் ஒன்று அமைப்பதுபற்றி கருத்து ஏதும் அரசுக்குத் தெரிவித்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் பழம் பதனிடும் தொழிற்சாலை லாபத்தில் இயங்காததால், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் உதவியுடனும், சோவியத் தொழில் நுட்பத்துடனும், புதுச்சங்கமாக மாற்றி அமைப்பதுபற்றி ஆராயப்பட்டது. புதிய கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் விதித்த நிபந்தனைகள் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ஒத்துக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் இத்திட்டம் நிறைவேறுவது சாத்தியமில்லை.

*Institute of Veterinary Preventive Medicine, Ranipet.*

105. Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

[1986 மார்ச் 30

(a) whether it is a fact that about eleven posts of Assistant Research Officers in the Institute of Veterinary Preventive Medicine, Ranipet, North Arcot District, were kept vacant for a long time;

(b) if so, the reasons therefor;

(c) whether the Government are aware of the fact that the research was greatly affected on account of this?

விடை—

(அ) தற்போது 10 (பத்து) உதவி ஆராய்ச்சி அலுவலர் பதவிகள் காலியாக உள்ளன.

(ஆ) இப்பதவிகளில் இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் பணியாற்றும் ஆராய்ச்சி உதவியாளர்களில், இப்பதவிக்கான கல்வி மற்றும் அனுபவம் முதலிய தகுதிகளைப் பெற்றவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து நியமனம் செய்ய வேண்டும். தற்போது, இப்பதவிக்குள்ள எல்லாத் தகுதிகளையும் பெற்ற ஆராய்ச்சி உதவியாளர்கள் மூன்று பேர்கள்தான் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து மூன்று உதவி ஆராய்ச்சி அலுவலர் பதவிகளில் நியமனம் செய்வதற்கான கருத்துரு கால்நடை இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது. அரசிடமிருந்து செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றவுடன் அரசு அளவில் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஆணை வெளியிடப்படும். இனிமேல் இப்பதவிக்குரிய தகுதிகளைப் பெற்றுவரும் ஆராய்ச்சி உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து மீதமுள்ள காலியிடங்களில் நியமனம் செய்யப்படும்.

(இ) காலியாக உள்ள உதவி ஆராய்ச்சி அலுவலர் பதவிகளின் பணிகள் பாதிக்கப்படாத அளவுக்குத் தக்க உள் ஏற்பாடுகளின் மூலம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

### மீன்கள் கொள்ளை

106. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் டாக்டர் இரா. சுனைக்கனம்: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஸ்ரீலங்கா கடற்படையினர் இராமேஸ்வரம் பகுதியில் கடலில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களிடமிருந்து மீன்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்று புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வெளிநாட்டினரின் இக்கொள்ளையைத் தடுக்க எடுத்த நடவடிக்கை யாது?



விடை—

(அ) மற்றும் (ஆ). பெருமளவில் மீன்கள் முக்கியமாக இறால் கிடைக்கும் இடமான கச்சத்தீவு, இந்தியா-ஸ்ரீலங்கா ஆகிய இரு நாடுகளின் ஒப்பந்தப்படி ஸ்ரீலங்காவிற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டபடியால், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களின் மீன் பிடிக்கும் கடல்பகுதி மிகவும் குறுகிவிட்டது. இரு நாடுகளின் எல்லையைக் கடலில் குறிப்பிடும் அடையாளம் நம் மீனவர்களுக்குப் பல சமயங்களில் தென்படாமல் போய் விடுகிறது. எனவே, இவர்கள் நம் நாட்டு கடல் எல்லையைத்தாண்டி மீன் பிடிக்கச் சென்று விடுகின்றனர். அந்நேரங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நம் மீனவர்களைத் தாக்கி விடுவதோடு, பிடித்து வைத்திருக்கும் மீன்களையும் அபகரித்துக் கொள்கிறார்கள் என்ற புகார்கள் சில அரசுக்கு வந்தன. இது போன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க, மண்டபத்தில் உள்ள இந்திய கடற் பாதுகாப்புப் படையின் கப்பல்களில் ஒன்றை இராமேஸ்வரம் பகுதியில் நிறுத்தி கண்காணிப்புச் செய்யுமாறு சென்னையில் உள்ள கடற்பாதுகாப்புத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், இந்தியா-ஸ்ரீலங்காவிற்கு இடையே பேச்சுவார்த்தைகளும், கூட்டங்களும் நடத்தி சுமுகமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிவிப்பு.

#### ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவன் அவர்களும், மீனாட்சிசுந்தரம் அவர்களும் ஸ்ரீலங்கா தமிழர்கள் படுகொலை குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நான் விசாரித்தவகையில் அரசுக்கு இதுசம்பந்தமான முழுத் தகவல்களும் இடைக்கவில்லையென்பதால், அந்தத் தீர்மானம் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

### 3. அரசின் தீர்மானம்.

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்பட்டோர் நலத் துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு(1) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு(2) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானங்கள்—

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் நான் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1983-84ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 486 லட்சம் என்றும், அதில் ஆதிதிராவிடர்கள் 88.81 லட்சம் என்றும், பழங்குடியினர் 5.20 லட்சம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கல்வி அறிவு பெற்றவர்கள் 46.76 சதவிகிதம். இதில்

(1) மற்றும் (2) 415-534 பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளன



கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிடர்கள் எண்ணிக்கை 29.67 லட்சம், பழங்குடியினர் 20.45 சதவிகிதம் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு சரியான கணக்கா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் சட்டமன்றத்தில் உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசும்போது, 32 ஆண்டுகளாக ஒருவருக்கு உத்தியோக உயர்வு தருவது பற்றிய ஒரு கோப்பு இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி 32 ஆண்டுகளாக உத்தரவு போடாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டிப் பேசியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே அதற்கு நேற்று மாலையே ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் மத்திய சர்க்கார் சிறப்பு உதவியைப் பார்க்கிறபோது, பல கோடி ரூபாய் கிடைப்பதாகத் தெரிகிறது. ஏறத்தாழ 30.27 லட்சம் ரூபாய் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சிறப்பு உதவியைப்பற்றி நாங்கள் அமைச்சர்களிடம் பேசும்போது, இதை டிஸ்டிரிக்ட் இண்டஸ்ட்ரி மையங்களாக மாற்றி, அந்தப் பணத்தைக் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் ஒரு தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். ஆனால், அந்த முறை இதுவரை பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்கெல்லாம் தொழில் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, இதுவரை வேறு ஒன்றும் நடக்கவில்லை. அதுவும் குடிசைத் தொழில்களைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது நெசவுத் தொழிலைத் தந்திருக்கிறார்கள். நெசவுத் தொழில் இப்போது நலிந்த நிலை அடைந்து வருகிறது. ஆயிரக்கணக்கான நெசவாளத் தொழிலாளர்கள் இன்றைக்குப் பசியும் பட்டினியுமாகத் தற்கொலை செய்துகொள்கிற நிலையில் இருக்கிறார்கள். அந்தத் தொழிலை ஆதிதிராவிடர்களுக்குக் கொடுப்பதில் என்ன லாபம்? நல்ல தொழிலை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருமுறை ஆதிதிராவிடர் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று, அங்கே எப்படிப்பட்ட தொழில்களையெல்லாம் நடத்துகின்றார்கள் என்பதைப் பார்த்து வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களெல்லாம்கூட அங்கே நல்ல முறையில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட தொழில்களை நமது மாநிலத்திற்குக் கொண்டுவந்து இங்குள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் சொல்லுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மட்டும் கேட்டுக்கொண்டு செயல்படுவது நல்லதல்ல. அவர்களெல்லாம் நல்ல

காரியங்களைச் செய்கிற அரசுக்குக் கெட்ட பெயரைத்தான் வாங்கிக் கொடுப்பார்கள். எனவேதான் அதிகாரிகள் சொல்வதைக் கேட்பதைவிட நம அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்து, நமது மாநிலத்தில் ஆக்கபூர்வ திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் அரசு செய்கிற நல்ல காரியங்கள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பல இடங்களில் மக்களுக்கு நிலங்களைப் பட்டா போட்டு கொடுக்கிறார்கள். இது 20 அம்சத் திட்டத்தில் ஒன்று. நமது அரசு 20 அம்சத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துகிறது. ஆனால் சென்னை நகரத்தில் பல இடங்களில் 150 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருப்பவர்கள் கூட அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்ற நிலையைப் பார்க்கிறோம். 150 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இடத்தில் வசிக்கக்கூடிய ஆதிதிராவிடர்கள் இருக்கிற பகுதிகளுக்குச் சென்று 'இந்த நிலங்கள் உங்களுடைய நிலங்களல்ல, இவை வேறு ஒருவருக்குச் சொந்தம்'' என்று சொல்லும்போது, இது சம்பந்தமான துறை என்னதான் செய்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே வருவாய்த்துறையோ குடிசைகள் இருக்கின்ற பகுதிகள் இங்கே இருக்கின்றன. அவைகளையெல்லாம் முறையாக சர்வே செய்ய வேண்டும். அவர்களுக்கெல்லாம் இலவசப் பட்டாக்களை வழங்க வேண்டும். மக்களிடமிருந்து குறைகள் வரும்போது மட்டுமே, இவற்றைக் கவனிக்கிற நிலைமை இருக்கிறது. எனவேதான் இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும், கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடியினர் என்ற பெயரில் பல மோசடிகள் நடைபெறுகின்றன. "கொண்டா ரெட்டி" என்று பலர் சர்டிபிகேட் வாங்கி வந்து விடுகிறார்கள். இதன் காரணமாக ரெட்டியார்கள் எல்லாம் கொண்டா ரெட்டிகளாக மாறிவிடுகிறார்கள். அப்படி தங்களைக் கொண்டா ரெட்டிகள் என்று சொல்லிக்கொண்டு பழங்குடியினருக்குச் சேர வேண்டிய நன்மைகளை இவர்கள் அடைகிறார்கள். இதனால் உண்மையான பழங்குடியினருக்கும், பாமர மக்களுக்கும் எந்தவிதமான நன்மையும் அடையாது இருக்கிற அவர்களின் சலுகைகள் எல்லாம் இல்லாமல் போய்விடுகிறது. பழங்குடியினரின் சலுகைகளை ரெட்டியார்கள் வாங்கிக்கொண்டு போவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். சமீப காலத்தில் அதைப்பற்றிப் பெரிய பிரச்சினைகள் எல்லாம்கூட ஏற்பட்டிருக்கின்றன. எனவே இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டா ரெட்டியார்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கொண்டா ரெட்டிகள் என்று சிலர் இருக்கிறார்கள். இதுகுறித்து அண்மையில்தான் உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் சென்று தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அரசு என்ன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** கொண்டா ரெட்டி என்று ஒரு சமுதாயம் இருக்கிறது. அதற்கு பழங்குடியினர் என்று சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக ரெட்டியார்களாக இருப்பவர்கள் கொண்டா ரெட்டி என்று சொல்லிக்கொண்டு, அந்தச் சலுகைகளை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சைக்கிள் கடைகள், ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், அச்சகம், மளிகை போன்ற 31 சிறு தொழில்களை நடத்த ஆதிதிராவிடர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ. 125 முதல் 15,000 ரூபாய் வரை கடன் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் இவைகள் எல்லாம் சரியான முறையில் வழங்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

பல இடங்களில் எங்களிடம் வரக்கூடிய புகார்களையும், தகவல்களையும் வைத்துக்கொண்டு அந்த இலாக்காவிற்குச் சென்று விசாரித்தால், "இன்னும் உங்களுடைய மனுவே இந்த இலாக்காவிற்கு வரவில்லை" என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே எங்களுக்கு சீக்கிரமாக ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்கும் நிலையைப் பார்க்கிறோம். இந்த இலாக்கா துரிதமாக சிறு தொழில் செய்பவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும். இதற்காக நாம் பணம் ஒதுக்குகிறோம் என்றாலும், அது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. கருமார், தச்சர், தையல் தொழில்கள், ஏனைய 18 தொழில்களில் தொழில் திட்பப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்களுக்கு இலவசமாகக் கருவிகள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நான்

பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இவர்களுக்காக தனியாக இல்லங்களை அமைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் நல இல்லம் என்று ஏன் தனியாக வைக்கிறார்கள்? அவர்களையெல்லாம் பொதுவான இல்லங்களில் சேர்த்து சாதி வேற்றுமை ஒழிய ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கென்று தனியாக இல்லங்களைக் கட்டி மீண்டும் இந்த சாதி மனப்பான்மையை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மதுரைக்குச் சென்றபோது, திருமங்கலத்திலே உள்ள மகளிர் இல்லத்தைப் பார்த்தேன். அங்கே இல்லம் கட்டப்பட்டிருக்கிறது என்றாலும், அதைச் சுற்றி சுற்றுச் சுவர் இல்லை. ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இதற்காக பல இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, புதிய கட்டிடம் கட்டப்பட்டாலும், சுற்றுச் சுவர் இல்லாத நிலையைப் பார்த்தேன். ஏன் என்று நான் விசாரித்தபோது, அதற்காக இன்னும் பணம் ஒதுக்கப்படவில்லை, ஆகவேதான் மதில் சுவர் கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். இப்படி மகளிர்களுக்குக்கூட பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல நல்ல காரியங்கள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் சுகாதார வசதிகளைப் பார்க்கும்போது, மிகவும் மோசமாக இருக்கின்றன. குடிநீர் வசதி பல இடங்களில் இல்லை. குப்பைகள் கோபுரங்களாக காட்சி அளிக்கின்றன. இவைகள் எல்லாம் நாம் செய்யக்கூடிய நல்ல காரியங்களைக் கெடுக்கின்றன. இவற்றையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டு, பல நன்மைகளைச் செய்த இந்த அரசைப் பாராட்டி, மேலும் நல்ல முறையிலே நிர்வகிக்க வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எனக்குள்ள ஒரு சந்தேகத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பில் ஆதிதிராவிடர்-பழங்குடியினருடைய நலனுக்காக தமிழ் நாடு அரசின் பணிகளை மூன்று பெரும் தலைப்புகளாகப் பிரிக்கலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதாவது (1) கல்வி, (2) வேலை வாய்ப்பு, பொருளாதார





மேம்பாடு, (3) பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே துறையின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள பெர்பாமென்ஸ் பட்ஜெட்டில் மேலும் ஆக்டிவிட்டியின் என்று ஐந்து பெரும் தலைப்புகளாக—

1. Education.
2. Employment and Economic Advancement.
3. Health, Housing and other Schemes
4. Tribal Areas Sub-Plan.
5. Tribal Areas Sub-Plan.

என்று ஐந்து பெரும் தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கொள்கைக் குறிப்பிலே மூன்று பிரிவுகள் என்றும் பெர்பாமென்ஸ் பட்ஜெட்டில் ஐந்து பிரிவுகள் என்றும் பிரிக்கப்பட்டிருப்பதிலே எது சரியென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத் துறை குறித்த கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டுள்ள மூன்று பிரிவுகளின் அடிப்படையிலே பார்த்தால், கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அதிக முன்னுரிமை கொடுத்து மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 5,429.22 இலட்சத்தில் 1984-85 ஆம் ஆண்டுக்கு 2,617.17 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவே கல்வியைப் பொறுத்தவரையில், அதிகமான ஒதுக்கீடு செய்து இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சிறந்த கல்வி அறிவைக் கொடுப்பதன் மூலமாகத்தான் நாம் எதிர்பார்க்கின்ற சமுதாய மாறுதலை அடைய முடியுமென்ற அடிப்படையில், கல்வித் துறைக்கு அதிக ஒதுக்கீடு செய்வதை நான் வரவேற்கிறேன்; ஆதரிக்கிறேன்; அதற்காக அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில், இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற பெரும் தொகையில் அதிக அளவுக்கு கல்விப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதனால் கல்விப் பிரிவை மேம்பாடு செய்வதற்காக, அதை இன்னும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறையும் அவ்வாறே நான் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றேன். இந்தக் கல்விப் பிரிவை வலுப்படுத்துவதற்காக சில [illegible] ஆண்டுகளாகவே அரசினுடைய பரிசீலனையில் [illegible] இருந்து வருகின்றன. [illegible] இந்தக் கல்விப் பிரிவை, நலத் துறையில் இருந்து [illegible] அந்தக் கல்விப் பிரிவுக்கென்று தனி அதிகாரிகளை தனிப் பிரிவாக அமைத்து

நியமித்து, அதன்மூலமாக பள்ளிக்கூடங்களையும் இந்தக் கல்வித் துறையினுடைய தலைமையின்கீழ் கொண்டுவந்தால்தான், நாம் எதிர்பார்க்கின்ற கல்வித் தரத்தை உருவாக்க முடியும் என்ற ஒரு கருத்தை முன்பே நாம் அமைச்சர் அவர்களிடமும், அதிகாரிகளிடமும் விவாதித்திருக்கின்றோம். அதற்கான சில கருத்துக்கள் பரிசீலனை அளவிலேயே இருக்கின்றனவே யொழிய, அதைப்பற்றி ஒரு இறுதி முடிவை விரைவாக எடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இன்று கல்விப் பிரிவில் டெபுடி டைரக்டர் போஸ்ட் ஒன்று இருக்கிறது. அந்த டெபுடி டைரக்டர் போஸ்ட் கல்வித் துறையிலிருந்து மாற்றுப் பணி மூலமாக இங்கே அனுப்பப்படுகின்ற பதவியாக இருக்கிறது. நடைமுறையில் இது எப்படி இருக்கிறதென்றால், அங்கே வேண்டாதவர்களை இங்கு அனுப்பி வைக்கிறார்கள். அதுதான் நடைமுறையில் நாம் காண்கின்ற காட்சி. இங்கு வருகின்ற ஒரு டெபுடி டைரக்டர் எவ்வளவு விரைவாகத் திரும்பக் கல்வித் துறைக்குப் போக முடியுமோ அதற்கான முயற்சிகளிலேதான் அவர் ஈடுபடுகிறாரேயொழிய, இந்த நலத் துறையினுடைய கல்விப் பணிகளில் ஆக்க பூர்வமான ஆர்வத்தைக் காட்டுவதில்லை என்பதைக் குறித்து கடந்த சில ஆண்டுகளாக நாம் நிலைமையை எடுத்துப் பார்த்தால், அமைச்சர் அவர்களுக்கே பல கசப்பான அனுபவங்கள் வந்திருக்கின்றன. அது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் நலத் துறையில் இருக்கின்ற அந்த டெபுடி டைரக்டர் போஸ்ட் இந்த நலத் துறைக்கே ஒதுக்கப்பட்டு, மாற்றுப் பணியின் மூலமாக அனுப்பப்படுவதை நிறுத்தி, அந்த பணி மூப்பின் அடிப்படையில் அந்தப் பதவியை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே எஜுகேஷனல் ஆபீசர் பதவி ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. அதன் அடிப்படையில் அடையாளமாக சில ஒதுக்கீடும் கடந்த ஆண்டிற்கு முன்பு என்று நினைக்கிறேன், பட்ஜெட்டிலே செய்யப்பட்டதாக அறிகிறேன். அதற்கு அடையாளமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகும்கூட, அந்தப் பதவி உருவாக்கப்படவில்லை. ஆகவே அந்தப் பதவி இப்போது உருவாக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். கல்வியை வலுப்படுத்துகின்ற ஒரு முன்னோடித் திட்டமாக மூன்று டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிகளை தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தி, அதன் பிறகு படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் அது விரிவுபடுத்தப்படுமென்று முன்பு அரசுத் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டு, மூன்று டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிகள்





உருவாக்கப்பட்டு, இப்போது செயல்படுத்தப்படுகின்றன. அதுவே தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் போதுமானதல்ல என்ற கருத்து இருக்கிறது. இன்னும் அதை அதிகப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், எல்லா மாவட்டங்களுக்கும் அத்தகைய பதவிகளை உருவாக்கி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்த டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியை நலத் துறையில் இருக்கின்ற தாசில்தாருடைய நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கிறார்கள்; அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிகிறார்கள். அவ்வாறு இருக்கக் கூடாது. அவர்கள் நம்முடைய நலத் துறை அதிகாரியின் கீழ் வரவேண்டுமேயொழிய, நலத் துறை தாசில்தாருடைய கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவது என்பது சரியாக இல்லை. நடைமுறையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வருகின்ற கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை திறக்கப் பட்டிருக்கின்றன; நம்முடைய நலத் துறையின் சார்பாக மேல் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம் இன்னும் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், இன்னும் பல்வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளையும், பல்வேறு இடங்களில் மேல்நிலைப் பள்ளிகளையும் நாம் துவக்கவேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம். அந்த விவரத்தையும் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இவ்வளவு ஒதுக்கீடு செய்து பல பணியிடங்களை நாம் அனுமதித்திருக்கிறோம். ஆசிரியர் பணியிடங்கள் நலத் துறைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுமதிக்கப்படுகின்றன. இதிலே வேதனைப்படுகிற நிகழ்ச்சி என்னவென்றால், இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகின்ற பணியிடங்களைப் பூர்த்தி செய்யாமல் உரிய பொறுப்பினை அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். இன்றைய தேதியில்

(முற்பகல் 10-20)

விவரங்களைச் சேகரித்துப் பார்த்தால், தமிழகம் முழுவதும், நலத்துறையில் பூர்த்திசெய்யப்படாத ஆசிரியர் பணியிடங்கள் 300 என்று இருக்கின்றது. சான்றாகக் குறிப்பிடவேண்டும் என்று விரும்பினால், இன்று தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே பல பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. சிதம்பரம் நந்தனார் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இங்கெல்லாம் பல இடங்கள் காலியாக

இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்வதானால், போஸ்ட்-கிராஜுவேட்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, காமர்ஸ் ஆசிரியர்கள் பணியிடங்கள் இன்றுவரை நிரப்பப் படவில்லை. அப்படி இருந்தால், அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் கதி என்னவாகும் என்று பார்க்க வேண்டும். துறை அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எவ்வளவோ பணம் செலவு செய்கிறோம். அந்தப் பதவி களுக்கு வேண்டிய ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிறைய இருக்கின்றார்கள். அதற்குப் பஞ்சமே கிடையாது. அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு ஏன் காலதாமதம் ஆகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற காலதாமதம் காரணமாக பாதிக்கப்படுகின்ற மாணவர்கள் நம்முடைய சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கெல்லாம் ஆசிரியர்கள் இல்லாமல் ஒன்றுமே நடக்காது. இந்தக் காலதாமதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஒரு சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிடர் மாணவர்களுக்கு, பழங்குடி மாணவர்களுக்கு ஒரு சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. 9, 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நான் அந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன். அதன் மூலம் பலனடைகின்ற மாணவர்கள் கணிசமான அளவுக்கு இருக்கின்றார்கள். அது வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஒரு திட்டம். ஆனால் 6, 7, 8 ஆம் வகுப்புகளிலும் படிக்கின்ற மாணவர்களுக்கும் அந்தத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும். காரணம் கீழ் மட்டத்தில் அந்தப் பயிற்சி இல்லாமல், மேல் மட்டத்தில் பயிற்சி கொடுக்கப்பட்டால், ஒரு Gap அதாவது ஒரு இடைவெளி ஏற்படுகின்றது. அந்த 6, 7, 8 ஆம் வகுப்புகளில் படிக்கின்ற நம்முடைய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு, பழங்குடி மாணவர்களுக்கு இந்தச் சிறப்புப் பயிற்சி அளிக்கின்ற திட்டத்தை வருகின்ற ஆண்டிலிருந்தாவது விரிவுபடுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், ரூ. 50 பகுதி நேரமாகப் பாடம் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்றார்கள். அப்படி 50 ரூபாய் கொடுப்பதன் காரணமாக, பலர் அந்தப் பணியை ஏற்க முன்வருவதில்லை. எனவே அந்தத் தொகையை உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி முன்பே ஒருமுறை சொல்லி யிருக்கிறேன். அதில் உள்ள சில சங்கடங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்த சமூகத்தைச் சார்ந்த, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்குச் சில உதவித் தொகைகள் கிடைப்பதற்கு அவர்கள் சாதிச் சான்றிதழ்களைப் பெற வேண்டும். அந்த சாதிச் சான்றிதழ்களைப் பெறும்போது, அவர்களுக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் அதிகாரிகளை நாடிப் பெறுவதிலே, பல நடைமுறை சங்கடங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி முன்பே நான் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு மாற்று ஏற்பாடாக, நிரந்தரமாக ஒரு அடையாளச் சீட்டு கொடுத்துவிடலாம் என்பது குறித்து அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக இங்கே சொல்லப்பட்டது. அது ஒரு நல்ல கருத்து. பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு நிரந்தர கேஸ்ட் ஐடென்டிடி கார்டு, நிரந்தர சாதி அடையாளச் சீட்டுகள், நிரந்தரச் சான்றிதழ்கள் கொடுப்பதன் மூலமாக, இந்த மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்திலே ஏற்படக்கூடிய தொல்லைகளை நாம் போக்க முடியும் என்பதை நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். அதற்காக அவர்கள் நிறைய அலைய வேண்டியதாக இருக்கின்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. இன்றைக்கு எத்தனை மணிக்கு முடியும் என்று தெரியவில்லை. பத்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டு பேசினால் போதும். அத்துடன் கட்சிக்கு ஒருவர்தான் பேசுவது என்று வைத்திருக்கிறோம். ஆசிரியர்கள் தொகுதிக்கு இரண்டு பேர்களுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். கால அளவு கொடுத்திருப்பது, ஒரு துறைக்கு என்பதல்ல, கட்சிக்கு ஒருவர் என்றுதான் வைத்திருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இன்னொன்று இந்தப் பதவி உயர்வுக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அதிலே சில முரண்பாடுகள் ஏற்படுவதை நான் சொல்லியிருக்கிறேன், நான் சுட்டிக்காட்டினேன். அப்போதுகூட நம்முடைய நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள், கல்வித் துறை, ஆசிரியர்களுக்கு என்னென்ன சலுகைகளை அளிக்கின்றதோ, அந்தச் சலுகைகளே நலத் துறை ஆசிரியர் களுக்கும் பொருந்தும் என்று நம்முடைய சமூகநலத்துறை ஒரு ஆணையை வெளியிட்டு, அந்த ஆணையை வெளியிட்ட பிறகு, கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகும்கூட, கல்வித் துறை ஆசிரியர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள் நலத்துறையில் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. நான் எடுத்துச் சொன்னேன். அப்போது அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழியைக் கொடுத்தார்கள். எந்தெந்த நடைமுறைகளை நலத்துறை பின்பற்றலாம் என்று ஆய்ந்து அமுல்படுத்த ஒரு ஹைலெவல் கமிட்டி அமைப்போம் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அந்த ஹைலெவல் கமிட்டி அமைக்கப்பட்டுவிட்டதா? அப்படி அமைக்கப்பட்டிருந்தால், அதன் முடிவு

என்ன? அந்தக் கமிட்டி என்ன செய்தது? அதன் பரிந்துரைகள் என்ன? அந்தப் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டனவா? ஆணைகள் வெளியிடப் பட்டுவிட்டனவா என்பதைப்பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொன்று அந்த கல்வித் துறை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சின் முடிவிற்கு வர வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கொஞ்சம் முக்கியமான விஷயங்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லாமே முக்கியமான விஷயங்கள் தான். எல்லோருக்கும் முக்கியம்தான். எனக்கு முக்கியம், நேரம். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கல்வித் துறையைப் பொறுத்தவரையில், ஒன்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் தற்காலிக பதவி வகிக்கும், 10 (எ) (1) விதியின் கீழ் நியமனம் செய்யப்படுகின்ற ஆசிரியர்கள், அந்த அலுவலர்கள், அந்த ஆண்டின் இறுதியில் பணி நீக்கம் செய்யப்படுவ தில்லை. கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அவர்கள் தொடர்ந்து இந்தப் பணியில் அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த முறை நம்முடைய நலத்துறையில் பின்பற்றப்படுவதில்லை. அதைப் பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பதவி உயர்வு சம்பந்தமாக நம்முடைய நலத் துறை தவறு செய்திருக்கிறது.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை ஓர் ஆணை வெளியிட்டிருக்கிறது. அந்த ஆணையின்படி ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 ஆம் தேதி தகுதி பெற்றவர்களுடைய விவரங்களைச் சேகரித்து, பட்டியல் தயாரித்து, அதன்படி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பி, Claims and objections -க்கு வாய்ப்புக் கொடுத்து, அதற்குப் பிறகு தான் பணி உயர்வு கொடுக்க வேண்டுமென்று எல்லாத் துறைகளுக்கும் ஓர் ஆணை அனுப்பியிருக்கிறது. ஆனாலும் இந்த ஆணை செயற்படுத்தப்படாமல், காலம் தாழ்த்தப்படுகிறது. சென்ற ஆண்டு 1—3—1983-ல் தகுதி உடையவர் களுடைய Panel என்று டிசம்பர் 24 அன்று ஒரு Panel -ஐத் தயாரித்து டிசம்பர் 24 அன்றே அந்த Panel அமல்படுத்தப்படுவதாக ஒரு முரண்பாடான—முற்றிலும் கருத்து வேறுபாடுடைய—ஆசிரியர் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிற ஒரு நடைமுறையை நம்முடைய நலத்துறை செயல்படுத்தியிருக்கிறதென்பதை, வருத்தத்துடன் மாண்புமிகு



அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்தமாதிரி நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென்னார்க்காடு மாவட்டத்தில் நலத்துறை அலுவலர் சென்ற மார்ச் மாதத்தில் மட்டும் 40 ஆசிரியர்களுக்கு விதிமுறைகளுக்கு முரணாக மாறுதல்களைச் செய்திருக்கிறார். அவ்வாறு செய்வது சரியல்ல. இப்படிப்பட்ட அதிகாரிகள் அரசை அலட்சியப்படுத்தி, அரசின் கொள்கைகளை அலட்சியப் படுத்தி, அரசு ஆணைகளையும், விதிமுறைகளையும் மீறி தன்னிச்சையாகச் செயல்படுவதன் காரணமாகத்தான், அரசுக்குக் கெட்ட பெயர் வருகிற தென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். ஆகவே இதைப் பற்றி விசாரணை செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் இத்தகைய நடவடிக்கைகள் நடைபெறாத அளவிற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

இறுதியாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது, நந்தனார் சகஜானந்த சுவாமிகள் நினைவாக அமைக்கப் பட்டிருக்கின்ற நந்தனார் கல்வி வளாகத்திற்குள்ளேயே ஒரு தொழிற் கல்வி நிலையம் அமைக்கப்படும் என்று அன்று நடந்த விழாவிலே அறிவித்தார்கள். அது இண்டஸ்ட்ரியல் ஸ்கூலா அல்லது பாலிடெக்னிக்கா என்பதைத் தெளிவு படுத்தவில்லை. அது எதுவாக இருந்தாலும், வருகின்ற கல்வி ஆண்டில் அந்த அறிவிப்பைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த நலத் துறையில் மாணவர்கள் நலனுக்காக ஒதுக்கப் படுகின்ற இந்தத் தொகையைச் சரியான முறையில் செலவிடுவதற்காக கண்காணிப்பை ஏற்படுத்தி, திட்டத்தின் பலன்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத் தினுடைய மாணவர்களின் கல்வி நலனுக்காகச் செம்மையாகச் செய்ல்பட வேண்டுமென்று கருத்தைச் சொல்லி பேசவாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

Thiru J. M. MIAKHAN : Mr. Chairman, I thank you for the opportunity given to me to speak on these two Policy Notes. On the whole, I am satisfied with the proposals that have been enumerated in these Notes and the amount apportioned for the upliftment of the down-trodden people.

There is one category of people, namely, children who had to abandon their studies for the purpose of doing some work so that they might earn their living and sustain their parents. They have

got intelligence to study but they cannot afford to go to schools. For this and various other reasons, they abandon studies. They work as carpenters and helpers and work in match factories and places like that. The Government should make some arrangement to give some education at least in the night to these children. Just as we have adult education programmes, the Government should provide for the education of these working children also, so that these children who are anxious to study may study and better their position in life. There can be some small clubs or recreation centres where these children could be educated, with the help of the teachers who are available. Such qualified and trained teachers may be asked to impart education to them at least for one hour a day. They can be taught the languages and other subjects and examinations may be conducted and the successful candidates may be issued some certificates. With these certificates, they can appear for other examinations and thereby improve their positions. I request the Government to take this into consideration and see that they are given this facility.

Another thing is that large amounts are being expended for running these hostels for these down-trodden people. At present,

*(முற்பகல் 10-30)*

a nomenclature is given to these institutions and they are branded as Depressed Classes Hostels. By this, an inferiority complex develops in the minds of the inmates. Therefore, I request that at least the name may be changed so that the inferiority complex in the minds of the inmates may be removed. In this connection, I would like to cite an example. In Madras, we, the Muslims, are running a private college. There is also a hostel in that college. Very often, during lunch-time, even day-scholars come, take their food in the hostel mess, pay for it and go. In that hostel, there are also some poor, deserving students who are given half-concession or full concession. But the information as to who are the students getting such concessions is not known to anybody except the management

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)*

and the students getting the concessions. In the disbursement of scholarships also, a practice is followed in that institution. The names of the students getting scholarships are not displayed on the notice-board of the college. Information relating to such students is sent to the authorities sanctioning scholarships. No publicity is given to the names. There is no chance for those students developing



any inferiority complex that they are getting aid for pursuing their studies. They may not be ridiculed by the other students. Such a practice may be followed in the institutions run by the Government also. I would like to cite another example also. There is an orphanage in Ambur. It is not named an orphanage. It is named a school. Everybody in that institution is given a uniform dress. As a matter of fact, the uniform dress given there is one of the best given in Tamil Nadu. Many children from well-to-do families also go and study in that institution. Along with the orphans, some other students also stay in that institution. They are given the best food and the best medical care. So, they never feel that they are orphans. Moreover, nobody refers to them as orphans at all. Such a procedure may be followed in the institutions run by the Government. The Government may at least make a beginning so that the children staying in these institutions may grow with self-confidence.

Sir, I would like to mention another thing also. What I am going to say may not be directly concerned with what we are discussing. But, today is the last occasion for me to make a speech in this House. I may not have another opportunity to mention in this House what I want to say now. It is about the pension amounts payable to Government pensioners. Some years ago, the Government were good enough to implement a revised pension scheme. Subsequently, there was a ruling either by the Supreme Court or the High Court on this matter. According to that ruling, the pensions of the Government pensioners have to be revised with effect from 1979. Naturally, they have to be paid arrears of pension. The Hon. the Finance Minister also once said that the payment of arrears of pension would involve an expenditure of about Rs. 3 crores. In this year's Budget, nothing has been mentioned about the payment of these arrears nor even about revising the pensions in pursuance of the Court ruling. It seems that, in the case of certain pensioners, they have to get arrears to the tune of Rs. 20,000 or Rs. 30,000. They are people who have spent the best part of their lives in the service of the country. They have to have a peaceful retired life. Only a retired person will know the difficulties in the life of a person after his retirement. They have to suffer ill-treatment at the hands of their children, their daughters-in-law and their grandchildren also. They have to lead a very insecure life. If they are able to get the arrears of pension, it will give them some relief and they can live peacefully. Therefore, I request the Government to start paying the pensions

at revised rates. The arrears of pension may also be disbursed to the pensioners. I hope that the Hon. the Finance Minister will somehow be able to find the funds for doing this. If it is not possible to disburse the arrears immediately, it may be paid in two instalments. In some unfortunate cases, the pensioner may not live to get the arrears of pension and his heirs may not know how to get the arrears. Therefore, it is better that an intimation is given to each pensioner about the amount that he would be getting as arrears of pension. If the arrears are not going to be paid immediately or are going to be disbursed only in instalments, it is better that a Government bond for the amount is given to the pensioner concerned so that the amount may be received either by the pensioner or by his heirs as and when it is disbursed. I only request the Government to expedite all these matters regarding pensions so that the pensioners may lead a contented life.

As regards harassment meted out to Adi Dravidars, there are not many such cases in Tamil Nadu. Yet, old practices die hard and we cannot say that there is no case of ill-treatment at all. As a matter of fact, only the well-to-do among these Scheduled Castes and Scheduled Tribes reap all the benefits. Many of them still do not even know what sort of benefits will accrue to them, what schemes are implemented by the State Government and the Central Government under the 20-Point Programme and other plans. Since many people in many parts listen to radio broadcast, at least these schemes should be explained through certain talks arranged by the Radio so that they may know their rights and privileges and they may also understand whom they should approach and the place where they should apply, for getting the benefits. They should be helped to know the loan facilities and the help given to entrepreneurs to start industries in the small scale sector. Though these loans are distributed in a large measure, somehow or other they do not reach the people for whom they are intended and the people who are in real need of such assistance. I request the Government to be vigilant in this matter and see that the hard-earned money of the common people is not wasted and is not drained down because of the activities of unscrupulous elements. On the other hand, it should go to the people for whom it is intended.

Sir, I have come to the very end of my tenure as a Member of this House, I am very thankful to all the Hon. Ministers and all the hon. Members and others concerned who have been helping me and who have been considerate to me. The Hon. Ministers have not



been inconsiderate to me even on a single occasion. I thank them for their cordial attitude and their help to me in all the matters that I have taken to them. With these . . . .

MR. DEPUTY CHAIRMAN: I would like to remind the hon. Member that immediately after the conclusion of the discussion on the Policy Notes, there is another item on the Agenda.

THIRU J. M. MIAKHAN: I am concluding my speech and I wanted to express my gratitude to all of them . .

MR. DEPUTY CHAIRMAN: The next item on the Agenda is 'Felicitation to Retiring Members' and at that time, the hon. Member will have an opportunity to convey his thanks to the Members and the Hon. Ministers.

THIRU J. M. MIAKHAN: Thank you, Sir.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Deputy Chairman, I thank you for giving me an opportunity to speak on the Policy Note on Adi Dravidar and Tribal Welfare.

Mr. DEPUTY CHAIRMAN: Wish to inform the hon. Member that there are about 10 Members to speak on these Policy Notes and by about 12 O' Clock, we have to take up the next item on the Agenda, namely, Felicitation to the Out-going Members. I would request the hon. Members to confine their speeches to about 5 minutes and not exceed 10 minutes. The Hon. Chairman has asked me to give only 5 minutes. The Hon. Lady Member may take up to 10 minutes.

THIRUMATHI TARA CHERIAN: Thank you, Sir, I shall finish within the time allowed.

I thank the respective Ministers who have placed the Policy Notes on the table and they have chalked out wonderful programmes and have implemented them. I feel that all these schemes should be implemented in spite of the obstacles and bottlenecks and if so implemented, they will undoubtedly accord fillip to the people, for whom they are intended.

While we are discussing the Policy Notes, and while we are reviewing the work done, let us not get lost in the details of individual grievances. It is time for us to review and make a re-thinking about our goals and objectives. It is not good for us to repeat the same slogan that we aim at a casteless society. That is what our Consti-

tution wants to achieve. The Government are taking all steps to raise the standard of living of the Adi-Dravidar people and bring them on a par with the other sections of the community. Here I would like to ask one thing. Should we imagine that the other sections of the people, non-Adi-Dravidars, are going to remain where they are till the Adi-Dravidar brethren come on a par with them?

(முற்பகல் 10.40.)

Equality in standard of living is not possible of achievement through props and subsidies. We encourage inter-caste marriages. But, what happens if someone asks the children born out of those inter-caste marriages, about their caste? So, will inter-caste marriages, solve the problem? Is it the way to get over casteism? We should evolve a programme which would help us to move forward and have a casteless Indian society. At present, our programmes aim only at providing education, economic development and literacy to the Adi-Dravidars. Will any of those programmes do away with caste itself? Even after all the Adi-Dravidars pass their Higher Secondary Examination, we may not be anywhere near the abolition of caste. Will it not be better to make people less caste-conscious and less caste-oriented in their outlook? The programmes of the Government are, no doubt, good. They aim at reducing the proverty of the Adi-Dravidars and the people belonging to the Backward Classes. It is good to give them houses and to help them better their standard of living and also to give them employment opportunities. But, let us not be under the impression that, by doing all these, we are creating a casteless society. Our policy is to have casteless society. Then, why not treat all the poor people, irrespective of caste, equally, give them what they need and bring them up in the socio-economic set-up?

Sir, we are now having more and more hostels and schools for the Adi-Dravidars and the Backward Classes. But, as far as I can see, all these lead only to segregation and do not help integration. I have carefully read both the Policy Notes. Everywhere in the Notes, there is mention only of separate building, separate hostel, etc. I do not know how such a state of affairs is going to help integration. Whatever amenities, props and subsides we may give, the problem is not going to be solved unless there is a change of heart among the people. Therefore, we should think of having at least some model hostels where children coming from socially backward families in the so-called forward communities may be put. When I was young and in school, we, children in school, never knew about castes



We should consider whether we should continue to have separate schools and hostels for different classes of people. Now, rich people send their children to CBSE schools. The poor people send their children to a common school or to an Adi-Dravidar Welfare school. When they grow up, the boy who had studied in the Adi Dravidar Welfare School may feel nervous if he is asked by the other boy, 'In which school did you study?' Therefore, it is unnecessary to have separate schools as we have now. There may be some political reason or some other reason for having separate schools. Even the highest people in the hierarchy in Delhi do not seem to be bothered about the practical difficulties. A clear thinking on proper lines is what is needed at the present moment. That alone will help us in having integration in the place of separation and segregation.

Sir, I would like to know one thing about the details given in the Policy Notes. Figures are furnished about the number of persons who have received various facilities. But, we would like to know the targets fixed under each head and the actual coverage. Now, we do not know how many have benefited and how many have come up above the poverty line. If the figures about the work done and the amount spent are given to us, we will be in a position to know the progress made in various schemes. There are several coaching schemes for the benefit of these people, viz., typewriting examination, Public Service Commission examinations etc. We are not told how many have been admitted for training and how many of them were successful. In I.A.S. training, there appears to be very poor results. We would like to know the result of various training programmes. A lot of money is being spent. If we know the result, it will be interesting. In one special coaching, out of 850 candidates only 23 have passed. Therefore, we have to see that the scheme is successful. The programmes should be reviewed and the performance watched. A non-official Review Committee will be necessary. There are very many retired people who can help us and we can have a non-official Review Committee, so that we may know the bottlenecks.

MR. DEPUTY CHAIRMAN: I think the hon. Member has taken 10 minutes already. I am sorry to request the hon. Lady Member to conclude her speech early.

THIRUMATHI TARA CHERIAN: Only one sentence, Sir. Finally there are beautiful artistic talents with the Tribal people—Todas. If their creations are properly placed in exhibitions, they will be benefited. If there is a non-official committee to go into this, it will help them and there will be guarantee export of the articles.

(Thirumathi Tara Cherian) [1984 மார்ச் 30

About the backward classes, I am not going into the details. I have talked about it time and again. We aim at a casteless society. In such circumstances, why should a particular section of the Christians alone be favoured with privileges? Even among the Backward Community pople, there are very rich people and they need not be given the privileges. All the other people whether they are Bra.ımins. Vellalas or others or Christians, who are backward socio-economically, should get the privileges. Thank you.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பிற்பட்டோர், பழங்குடியினர் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே ஆதிதிராவிடர் நலத்துறைபற்றி நான் சார்ந்துள்ள கட்சியின் உறுப்பினர் நண்பர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசிவிட்ட காரணத்தால், பிற்பட்டோர் நலத்துறைபற்றி மட்டும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்தத் துறையில் பணியானது வெகு சிறப்பாக நடைபெறுகிறது என்பதை நான் மனமார ஏற்றுக்கொண்டு இந்தத் துறையின் அமைச்சர் அவர்களையும் துறையினரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். ஆனாலும் இவர்கள் மேற்கொண்டிருக்கிற நல்ல திட்டங்களில் உள்ள சில குறைபாடுகளை மட்டும் கூறி, அவற்றிற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்டோர் நலத் துறையில் ஏராளமான பள்ளிகள் செயல்படுகின்றன. அதிலும் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் கல்விப் பணியில் பல உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 1,576 மாணவர்கள் பயில்கிறார்கள். அதைப்போலவே எட்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 1,955 மாணவர்கள் இருக்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளிகளில் கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்னதாக சில ஆசிரியர்கள் முறையாக நியமனம் செய்யப்படாத காரணத்தால், அவர்களின் பணி இன்னும் வரன்முறைப்படுத்தப்படாமல் தேக்கமடைந்திருக்கிறது. அதிலும் 44 இடைநிலை ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு விட்டது. அதைப்பற்றி இயக்குநர் அவர்களிடம் சொல்லி அவர்களும் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்தார்கள். ஒருமுறை அமைச்சர் அவர்களையே பார்த்து 12 பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னபோது, ஆவன செய்வதாகச் சொன்னார்கள்—



1984 மார்ச் 30] [திரு. பா. ரா. தாமஸ்]

நாங்கள் பார்த்தது தற்போதுள்ள அமைச்சர் அவர்களையல்ல. இந்த மன்றத்திலேகூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, துறையிலே

(முற்பகல் 10-50)

சரியான முறையிலே நியமனங்கள் செய்யாததால் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை என்று அன்று காரணம் சொன்னார்கள். தேர்வாணைக் குழு ஒப்புதல் வேண்டும் என்று சொன்னார்கள். தேர்வாணைக் குழுவின் ஒப்புதலும் சென்றுவிட்டது என்று கேள்விப்படுகிறோம். ஆனால் கடந்த மாதம் வரையில் அந்தப் பகுதியில் ஆசிரியப் பெருமக்கள் ஊதிய உயர்வைப் பெற முடியவில்லை. அவர்கள் மருத்துவ விடுப்பில் செல்ல முடியவில்லை, தேவையான சலுகைகளைப் பெற முடியவில்லை, தேர்வு நிலையைப் பெற முடியவில்லை. இந்த அவல நிலையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே மேல்நிலைப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. நாட்டுமங்கலத்தில் செக்காரணி என்ற இடத்தில் இருக்கின்றன. அவைகள் கள்ளர் நலப் பள்ளிகள். சிறப்பாகப் பணியை ஒழுங்காக ஆற்றி வருகின்றன. அங்கே முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. ஒருவேளை இந்தத் துறை அதற்கு முயற்சி செய்யவில்லையா அல்லது சமூகநலத் துறை கல்வித் துறையிடமிருந்து பணியிடங்களை பெற்றுத் தரவில்லையா? காரணம் என்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியில் பல முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஏற்கெனவே பணியாற்றி வருகிறார்கள், பாடங்களைப் போதிக்கிறார்கள். அங்கே ஈர்க்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த தகுதி பெற்றிருந்தபோதிலும், ஊதிய உயர்வைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே விரைவிலே இந்த ஆண்டாவது முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை வழங்கி, அவர்களுக்கு ஊதிய உயர்வை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பொதுவாக பள்ளிகளில் உதவித் தொகை கொடுக்கும்போது, புதிய பழக்கத்தைப் பின்பற்றி வருகிறோம். இந்த இரண்டு நலத் துறைகளிலிருந்து அந்தந்தப் பகுதியில் உள்ள கல்லூரி, பள்ளி ஆகியவற்றின் தலைவருக்கு ஓராண்டிற்குத் தொகையை முன்கூட்டியே அனுப்புகிறோம். இப்படி அனுப்பப்பட்ட தொகையை அவர்கள் பெற்று மாணவர்களுக்குப்

பட்டுவாடா செய்ய வேண்டுமென்றுதான் கொடுக்கிறோம். அவர்கள் பிப்ரவரி, மார்ச் மாதம் கடைசி வரையில் தள்ளிக்கொண்டு வந்து கடைசியில் வழங்குகிறார்கள். அப்படி வழங்குகிற பொறுப்பை அந்தத் தலைமைக் கல்வி நிர்வாகத்தினருக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பொறுப்பை முழுமையாகக் கல்வி நிர்வாகத்தினரிடம் கொடுப்பது சரியாகத் தெரியவில்லை. காரணம் பளு அதிகமாகிவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், அந்தந்தப் பகுதியைச் சார்ந்த எந்த மாணவர்களுக்கு நலனை நாம் செய்ய விரும்புகிறோமோ அவர்களுக்கு குறிப்பிட்ட இந்த இனத்தைச் சார்ந்தவர் என்ற அட்டையைக் கொடுத்தால், நலமாக இருக்குமா என்று கேட்டார்கள். அப்படி ஒருவரை 'ஐடென்டிபை' செய்வது சரியா என்று கேட்டார்கள். இருந்தாலும் இந்த உதவித் தொகை முறையாக குறித்த காலத்திலே போய்ச் சேர இந்த முறையைப்பற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதவித் தொகை, ஐந்தாயிரத்திற்கு அதிகப்பட்டால், தரக்கூடாது என்று சொல்லுகிறோம். அது முறையாக இருக்காது. குறைந்தது 12 ஆயிரம் ரூபாய் வரையில் தர அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். ஐயாயிரம் ரூபாய் என்று பார்த்தால், ஒரு நாளைக்கு 12 ரூபாய், 13 ரூபாய் வருமானம் என்று வருகிறது. அது சாதாரண வருவாய்தான். இதை வைத்துக்கொண்டு பிற்பட்ட நிலையில் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளைச் சரியாகப் படிக்க வைக்க முடியாது என்ற காரணத்தால் இந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்கள் விடுதிகளைப் பொறுத்தவரையில், நகரப் பகுதிகளில் காலியாக இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் கிராமப்புறங்களில் இவ்வாறு விடுதிகள் ஆரம்பிக்கப்படாததன் காரணத்தால், அங்குள்ள விடுதிகளில் மாணவர்களுக்குப் போதுமான அளவிற்கு இடம் இல்லை. பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் முழுமையாக நன்மை பெற வேண்டுமென்றால், அந்தப் பகுதியில் உள்ள இல்லங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும், மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற கருத்தை நான் கூறிக்கொள்கிறேன். மாணவர்கள் இல்லங்களில் வசதிகள் குறைவாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதியில் சென்றபோது பார்த்திருப்பார்கள். அந்த இல்லங்களில் சரியான குளியல் அறைகள் இல்லை, போதுமான அளவிற்குத் தண்ணீர் இல்லை, நல்ல கழிப்பிடங்கள் இல்லை. தண்ணீர் இல்லாவிட்டால், கழிப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியாது. இவைகளை





யெல்லாம் சீர்படுத்த வேண்டும், சிறப்பாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய இருக்கைகள், மேஜைகள், னவாடங்கள் இவைகளையெல்லாம் கொடுத்து நம்முடைய அரசு இல்லங்கள், இல்லங்களாக இருக்க வேண்டும். இப்போது இருக்கின்ற இல்லங்களைவிட, பிற்பட்டோர் நலத் துறை இல்லங்களோ, ஆதிதிராவிடர் நலத் துறை இல்லங்களோ, மாணவர்கள் சிறப்பாகச் சீரிய முறையிலே பெருமைப்படக் கூடிய முறையிலே அமைய வேண்டுமென்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். இறுதித் தேர்வான எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றவர் களுக்கு, 8-வது வகுப்பிலே முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு நாம் பரிசுகளை வழங்குகிறோம். எஸ்.எஸ்.எல்.சி.-யிலே முதல் பரிசு 100 ரூபாய்; இரண்டாவது பரிசு 50 ரூபாய்; அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் 8-வது வகுப்பில் முதல் பரிசு பெற்றவர்களுக்கு 50 ரூபாய் முதல் பரிசு என்றும், இரண்டாவது பரிசு 10 ரூபாய் என்பதையும் நினைக்கும்போது, மிகவும் கேவலமாக இருக்கிறது. அரசு கொடுக்கிற தொகையா இது? ஒரு பரிசு கொடுப்பதற்கு 10 ரூபாய் என்று நாம் நிர்ணயித்தது தவறு. அதை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும். பொதுவாக பிற்பட்டோர் நலத் துறையில் உள்ள மாணவர்கள் எல்லாம் வீரமாக, தீரமாக விளையாடக் கூடியவர்கள்; தகுதியுடையவர்கள்; அவர்களுக்கு நம்முடைய துறையிலே அதிகமாக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அவர்களைச் சிறப்பாகச் சிறந்த முறையிலே பயிற்றுவித்தால், நம்முடைய அகில இந்திய அடிப்படையிலே இருந்து இன்னும் அகில உலக அடிப்படையிலேகூடத் தங்கப் பதக்கங்களைப் பெறக்கூடிய நிலைக்கு உயர்த்த முடியும். அவர்களுடைய உள்ளத் திறமைகளை, ஆற்றல்களை நமது துறை முறையாக வளர்த்து செம்மைப் படுத்த வேண்டும். துறையின் சார்பாக மாவட்ட அளவில்கூட பள்ளிகள் மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டும். டத்தலாம். மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டும். துரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த அந்தப் பிரிவினர் மிக நன்றாக விளையாடக் கூடியவர்கள். மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்கள் முக்குலத்தோர் சமுதாயம் அதிகமாக உள்ள குதிகள். அவர்களுக்கு வாய்ப்புகள், வசதிகள், நல்ல உடைகள், நல்ல பிற்சிகள் இவைகள் எல்லாம் வழங்கினால், அவர்கள் நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்திய நாட்டிற்கே பெருமை தேடித் தரக்கூடிய அளவிலே வீர விளையாட்டுக்கள் எல்லாம் செய்ய முடியும் என்று கூறி, மதற்கு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக இன்னும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ந்த இனத்தை, மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள்

இறித்தவர்கள் என்றால், முற்பட்டவர்கள் என்று பொதுவாகக் கருதப் படுகிறார்கள். நம்முடைய தமிழ் பாரம்பரையிலே இந்திய மண்ணிலே, ஜாதி என்பது ஊறிப் போய் கிடக்கிறது. சில வல்லுனர்கள்கூட ஆய்வு செய்த பின்னர், இன்னும் 200, 300 ஆண்டுகள் ஆனாலும் இது மாற்ற முடியாத தன்மை என்று சொல்லுகிறார்கள். சென்ற ஆண்டு கிறித்தவர்களிலே ஒரு குறிப்பிட்ட பிரிவினரைப் பிற்பட்ட பட்டியலிலே சேர்த்தார்கள். அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். அதை நான் குறைவாகச் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தைக் கொடுத்து, 6, 7 இனத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே சலுகைகளைப் பெறுகிறார்கள். பிற்பட்டவர்கள் என்ற பட்டியலில் சில ஜாதியைச் சேர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் யார் யார் பிற்பட்டவர்கள் என்று கருதப் படுகிறார்களோ, யார் யார் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படு கிறார்களோ, அவர்கள் ஆங்காங்கே என்னென்ன சலுகைகளைப் பெறுகிறார்களோ அந்தச் சலுகைகள் எல்லாம் கிறித்தவர்களுக்குக் கொடுக்கப் பட வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு காரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் கிறித்தவராக இருந்தால், அவருக்குச் சலுகை மறுக்கப்படுகிறது. இந்துவாக மதம் மாறிவிட்டார் என்றால், உடனே அந்தச் சலுகைகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இது எவ்வளவு பெருத்த ஒரு முரண்பாடு? ஒரு இந்து சமயத்தைச் சேர்ந்தவர் கிறித்தவராக மாறினால், மறுநாளே அந்தச் சலுகைகளையெல்லாம் மறுக்கிறார்கள். இது நாம் மத மாற்றத்தைத் தூண்டுவதிலே இருக்கிறது. நான் மொத்தமாக மத மாற்றத்தை ஆதரிக்க வில்லை. என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்குக்கூட எனது நண்பர்கள் ' நான் எந்தச் சமயத்தைச் சார்ந்தவன் " என்று கேட்டார்கள். அதை நான் பெருமையாக ஏற்றுக்கொள்கிறேன். நம்முடைய சமுதாயத்திலே சமயத்தையோ, ஜாதியையோ ஊடுருவிச் செல்வதையோ, பாழ்படுவதையோ நான் விரும்பவில்லை. இருந்தாலும் சலுகைகளை வழங்கும்போது நம்முடைய அரசியல் சட்டத்திலே 15-வது, 16-வது பிரிவிலே, 4-வது பிரிவில் குறிப்பிட்டதுபோல் மாநில அரசுக்கு அந்த உரிமை இருக்கிறது. 15-வது பிரிவிலே (4-வது பிரிவிலே)

"Nothing in this Article or in clause (2) of Article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward class of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes"

"Equality of opportunity in matters of public employment"



"Nothing in this Article shall prevent the State from making any provision for the reservation of appointments or posts in favour of any backward class of citizens which in the opinion of the State, is not adequately represented in the services under the State."

என்று கூறப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலே நம்முடைய மாநில அமைச்சர் அவர்களுக்கு எந்தெந்தப் பிரிவிலே என்று குறிப்பாகச் சில இனத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 10 நிமிடங்களுக்கு மேலாக ஆகிவிட்டது.

திரு. பா. ரா. தாமல்: யாதவர்கள் என்று இருக்கிறார்கள். வண்ணார் என்று இருக்கிறார்கள், முத்தரையர் என்று இருக்கிறார்கள், தேவர் இருக்கி றார்கள், மறவர், அகமுடையர் இப்படிப் பல ஜாதியினர் இருக்கிறார்கள். இந்துக்களாகவும், கிறித்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்துவாக இருந்தால் சலுகை பெறுவதும், கிறித்தவராக இருந்தால் சலுகை மறுப்பதும் முரண்பாடாக இருக்கிறதென்ற கருத்தைக் கூறி, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த ஆதி திராவிடர் நலத்துறை சம்பந்தமாக ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உழவு மாட்டிற்கும், பாசனக் கிணற்றுக்கும் பெறக்கூடிய மானியத்தில் மூன்றில் ஒரு பங்கு மானியம் என்றும், இரண்டு பங்கு கடன் என்றும் சொல்லப்பட் டிருக்கின்றது. நடைமுறையிலே இந்தக் கடனுக்கு வட்டி செலுத்தவும் கடனைத் திருப்பிக் கட்டவும் முடியாத நிலைமையில்தான் பலர் இருக்கின் றார்கள். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்குப் பதிலாக சிக்கலை ஏற்படுத்தி அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே மூன்றில் ஒரு பங்கு மானியம் என்பதற்குப் பதிலாக 50 சதவிகிதம் என்று மாற்றினால், அது மிகவும் நல்ல திட்டமாக அமையும். நம் மாநிலத்தில் உழவு மாடு வாங்குவதற்கும் நடை முறையிலே அவர்கள் அஞ்சுகின்றார்கள். உண்மையில் விவசாயத்தில் ஈடு பாடுள்ளவர்கள் அப்படி அஞ்சுகின்றார்கள். அதைப்போலவே பாசனக் கிணறு வெட்டுவதிலேயும் கடனுக்கு அடிமை ஆகின்றார்கள். இதைப்பற்றி அதிகம் விளக்க விரும்பவில்லை. வேண்டுமானால் இந்தக் கொடுமையினுடைய விவரங் களைப் புரிந்துகொள்வதற்காக ஒன்றைக் கூற விரும்புகிறேன். அண்மைக்

கிறித்தவர்கள் என்றால், முற்பட்டவர்கள் என்று பொதுவாகக் கருதப்படுகிறார்கள். நம்முடைய தமிழ் பரம்பரையிலே இந்திய மண்ணிலே, ஜாதி என்பது ஊறிப் போய் கிடக்கிறது. சில வல்லுனர்கள்கூட ஆய்வு செய்த பின்னர், இன்னும் 200, 300 ஆண்டுகள் ஆனாலும் இது மாற்ற முடியாத தன்மை என்று சொல்லுகிறார்கள். சென்ற ஆண்டு கிறித்தவர்களிலே ஒரு குறிப்பிட்ட பிரிவினரைப் பிற்பட்ட பட்டியலிலே சேர்த்தார்கள். அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். அதை நான் குறையாகச் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தைக் கொடுத்து, 6, 7 இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தே சலுகைகளைப் பெறுகிறார்கள். பிற்பட்டவர்கள் என்ற பட்டியலில் சில ஜாதியைச் சேர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் யார் யார் பிற்பட்டவர்கள் என்று கருதப்படுகிறார்களோ, யார் யார் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படுகிறார்களோ, அவர்கள் ஆங்காங்கே என்னென்ன சலுகைகளைப் பெறுகிறார்களோ அந்தச் சலுகைகள் எல்லாம் கிறித்தவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு காரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் கிறித்தவராக இருந்தால், அவருக்குச் சலுகை மறுக்கப்படுகிறது. இந்துவாக மதம் மாறிவிட்டார் என்றால், உடனே அந்தச் சலுகைகளையெல்லாம் அவருக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இது எவ்வளவு பெருத்த ஒரு முரண்பாடு? ஒரு இந்து சமயத்தைச் சேர்ந்தவர் கிறித்தவராக மாறினால், மறுநாளே அந்தச் சலுகைகளையெல்லாம் மறுக்கிறார்கள். இது நாம் மத மாற்றத்தைத் தூண்டுவதிலே இருக்கிறது. நான் மொத்தமாக மத மாற்றத்தை ஆதரிக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்குக்கூட எனது நண்பர்கள் 'நான் எந்தச் சமயத்தைச் சார்ந்தவன்" என்று கேட்டார்கள். அதை நான் பெருமையாக ஏற்றுக்கொள்கிறேன். நம்முடைய சமுதாயத்திலே சமயத்தையோ, ஜாதியையோ ஊடுருவிச் செல்வதையோ, பாழ்படுவதையோ நான் விரும்பவில்லை. இருந்தாலும் சலுகைகளை வழங்கும்போது, நம்முடைய அரசியல் சட்டத்திலே 15-வது, 16-வது பிரிவிலே, 4-வது பிரிவிலே குறிப்பிட்டதுபோல் மாநில அரசுக்கு அந்த உரிமை இருக்கிறது. 15-வது பிரிவிலே (4-வது பிரிவிலே)

"Nothing in this Article or in clause (2) of Article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward class of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes"

"Equality of opportunity in matters of public employment"



'Nothing in this Article shall prevent the State from making any provision for the reservation of appointments or posts in favour of any backward class of citizens which in the opinion of the State, is not adequately represented in the services under the State."

என்று கூறப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலே நம்முடைய மாநில அமைச்சர் அவர்களுக்கு எந்தெந்தப் பிரிவிலே என்று குறிப்பாகச் சில இனத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்களுக்கு மேலாக ஆகிவிட்டது.

**திரு. பா. ரா. தாமல்:** யாதவர்கள் என்று இருக்கிறார்கள். வண்ணார் என்று இருக்கிறார்கள், முத்தரையர் என்று இருக்கிறார்கள், தேவர் இருக்கிறார்கள், மறவர், அகமுடையர் இப்படிப் பல ஜாதியினர் இருக்கிறார்கள். இந்துக்களாகவும், கிறித்தவர்களாகவும் இருக்கிறார்கள். இந்துவாக இருந்தால் சலுகை பெறுவதும், கிறித்தவராக இருந்தால் சலுகை மறுப்பதும் முரண்பாடாக இருக்கிறதென்ற கருத்தைக் கூறி, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 11-00)

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த ஆதி திராவிடர் நலத்துறை சம்பந்தமாக ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உழவு மாட்டிற்கும், பாசனக் கிணற்றுக்கும் பெறக்கூடிய மானியத்தில் மூன்றில் ஒரு பங்கு மானியம் என்றும், இரண்டு பங்கு கடன் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. நடைமுறையிலே இந்தக் கடனுக்கு வட்டி செலுத்தவும் கடனைத் திருப்பிக் கட்டவும் முடியாத நிலைமையில்தான் பலர் இருக்கின்றார்கள். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்குப் பதிலாக சிக்கலை ஏற்படுத்தி அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே மூன்றில் ஒரு பங்கு மானியம் என்பதற்குப் பதிலாக 50 சதவிகிதம் என்று மாற்றினால், அது மிகவும் நல்ல திட்டமாக அமையும். நம் மாநிலத்தில் உழவு மாடு வாங்குவதற்கும் நடைமுறையிலே அவர்கள் அஞ்சுகின்றார்கள். உண்மையில் விவசாயத்தில் ஈடுபாடுள்ளவர்கள் அப்படி அஞ்சுகின்றார்கள். அதைப்போலவே பாசனக் கிணறு வெட்டுவதிலேயும் கடனுக்கு அடிமை ஆகின்றார்கள். இதைப்பற்றி அதிகம் விளக்க விரும்பவில்லை. வேண்டுமானால் இந்தக் கொடுமையினுடைய விவரங்களைப் புரிந்துகொள்வதற்காக ஒன்றைக் கூற விரும்புகிறேன். அன்மைக்



கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மிகக் குறைந்த அளவில் ஒரு...

[திரு. ப. மாணிக்கம்] [1984 மார்ச் 30

காலத்தில் நடக்கவில்லை என்றாலும், சொல்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தாலுக்காவில் ரூபாய் 10 கடன் வாங்கி அதை 20 வருடங்களாக அசல் கொடுக்காவிட்டாலும் வட்டியைக் கொடுத்தால் போதும் என்று இருப்பதால், அவர்கள் வட்டி கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இதனால் வரைவிட்டே போய் பர்மாவில் குடியேறிய மக்கள், ஆதி திராவிட மக்கள். இது அந்த நாளில் நடந்தது. இப்போது அந்த மாதிரி இல்லை என்று சொன்னாலும்கூட, அது அந்த நாளில் நடந்தது. இப்போதும் கூட அசல் வேண்டாம், வட்டியைக் கொடுத்தால் போதும் என்று ஏமாற்றிவருகின்றார்கள். ஆகவே பாதி மான்யம் என்பது பொருத்தமாக இருக்கும்.

இன்றைக்கு கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு தங்கப் பதக்கம், 14 கேரட்டில் கொடுப்பதை எடுத்துவிடலாம். இதைப் பணமாகவே கொடுத்துவிடலாம். இந்த மெடலை எங்கே போட்டுக்கொள்வது என்று இருக்கின்றார்கள். பணமாகக் கொடுத்து விடுவது நல்லது. இரண்டாவது இது எப்படி நடக்கிறது என்றே எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த ஒருவர் வட ஆர்காடு மாவட்டம் குடியாத்தத்திலே இருப்பவர், அந்த ஊரைச் சேர்ந்தவர். ஆதி திராவிடர், கிருத்தவ மதத்தில் சேர்ந்துவிட்டார். இருந்தாலும் இதிலே எந்தகற்கு ஒரு 3 வருடத்திற்கு முன்வாடி திருமணம் செய்து கொண்டவர். தெலுங்கு பிராமண வகுப்பைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர். அவர்களுக்கு 4 குழந்தைகள் இருப்பது என்பது. அவர்கள் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். அவர்கள் பிரிய மாட்டார்கள். அவர்கள் மெடலாக வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதை வாங்கினால் ஏதாவது வீட்டிலே பயன்படுத்தலாம் என்று போனார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சட்டமன்றத்திலே தலைவராக இருக்கும் திரு. அழகிரிசாமி அவர்கள் இந்த அலுவலகத்திலே பல இடங்களிலே விசாரித்தா கிடைக்காது என்று அறிந்த ஏழைச் சொன்னார்கள். "அதை எதிர்பார்க்காதீர்கள்" என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். யார் என்ன பெயர் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் திரும்ப வந்துவிட்டார்கள். இப்போதும் அவர்கள் இருக்கின்றார்கள். அதை திருப்பிப்பதற்காக நான் சொல்லவில்லை. அனுபவ ரீதியாகவே சொல்கிறேன். இதிலே என்ன நடக்கிறது என்று பார்ப்பதைவிட பணமாகவே கொடுத்துவிடலாம்.

மூன்றாவது பொறியியல் கல்லூரியிலே அவர்களுக்கு இரண்டு இடங்கள். இதில் ஒன்று சொல்லிவிடுகிறேன். இது உண்மையிலேயே நடக்காமல் இருக்கிறது. அவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல மார்க்குகள் பெற்றிருந்தும் இடம் கிடைப்பதில்லை. ஒருகால் ஆதி திராவிடர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள்



1984 மார்ச் 30] [திரு. ப. மாணிக்கம்]

என்று சொல்லலாம். ஒருகால் நடப்பிலே நடக்கிறது என்று சொல்ல
வேண்டும். சென்ற ஆண்டே நான் சொன்னேன். ஒரு 'மானிட்டரிங் செல்'
வேண்டுமென்று சொல்லி, ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு அமர்ந்து
விட்டேன். அதையே மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

கடைசியாக, செங்கல்பட்டு தாலுக்கா சாத்தான்சேரி கிராமத்தில் ஒரு
இட்டத்திற்கு ரூபாய் 6½ லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். ஒரு குறிப்
பிட்ட இடத்திலே ஒரு 5 அடி அல்லது 6 அடி இடம் தேவைப்படுகின்றது. அது
செல்வாக்குள்ள தனிப்பட்டவருக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. மற்ற
வர்கள் எல்லாம் நிலம் கொடுத்து விட்டார்கள். அதிலே அந்தச் செல்வாக்கு
உள்ளவர் தடை இருக்கிறது. சாத்தான் சேரி கிராமம், மாமண்டூர் ஏறக்குறைய
பாலாற்றுக் கரை ஓரமாக அந்த ஊருக்குப் போகலாம். அதில் போக்கு
வரத்துக்கு இடம் வேண்டும். கொஞ்ச இடம்தான் தேவை.
அதை அவர்கள் கொடுக்கலாம். அவர் செல்வாக்கு உடையவர். இனியும்
வெளிப்படையாக நான் சொல்லவேண்டாம் என்று விரும்புகிறேன். அது அந்த
கிராமங்களுக்குப் பயன் அளிக்கும். போக்குவரத்துக்குப் பயனளிக்கும். சாத்
தான்சேரி கிராமம் மாமண்டூரிலிருந்து பினாயுருக்கு நம்முடைய பாலாற்றுக்
கரையின் ஓரத்திலே மிகுந்த வளமான கிராமங்கள். அங்கு சுலபமாகச் செய்ய
லாம். இரண்டு வருடங்களாக இழுபறி என்று நடக்கின்றது. அதிலே தடை
வேண்டாம் என்று சொல்கிறேன். அதில் சமாதானமாகப் போவதற்கு பல்
வேறு முயற்சிகள் எடுத்தோம். ஆனால் பல, அரசியல் கட்சிகளைச்
சேர்ந்தவர்கள் தலையிட்டுத் தடுக்கிறார்கள். மழை வந்தால் அந்தப் பிள்ளை
கள்—6 சேரிகளிலேயுள்ள அந்தப் பிள்ளைகள்— பள்ளிகளுக்குப் போக முடி
யாது. வாய்க்கால்களில் 3 அடி 4 அடி தண்ணீர் இருக்கும். தயவுசெய்து
அதை ஏதாவது காலத்தில் நிறைவேற்றவேண்டும்.

அடுத்து, பிற்பட்டோர் நலத்துறை குறித்து ஒரேயொரு கருத்து சொல்ல
விரும்புகிறேன். 1981-82 ஆம் ஆண்டிலிருந்து மாணவர் இல்லங்களிலுள்ள
மாணவ மாணவியருக்கு உணவு வழங்குவதற்கு, மாநகர்க் கல்லூரி மாணவர்
இல்லங்களுக்கு 95 ரூபாயும், வெளியூர் கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு 80
ரூபாயும், பள்ளி மாணவர் இல்லங்களுக்கு 60 ரூபாயும் அனுமதிக்கப்பட்டிருக்
கிறது. 95 ரூபாய்க்குள் எந்த மாணவனும் சாப்பிட முடியாது. ஒரு மனிதன்
5 வயதிற்கு மேலே 25 வயதுவரை நன்கு சாப்பிடக் கூடிய காலம். எனவே
இந்தத் தொகையைக் கொஞ்சம் உயர்த்தவேண்டும். நிறைய திட்டங்கள்
போட்டு பணத்தை நான்கு பக்கங்களிலும் செலவு செய்வதைவிட சில திட்டங்

களிலாவது அழுத்தமாகச் செய்ய வேண்டும். 93 ரூபாய் என்றிருப்பதை 150 ரூபாய் என்று உயர்த்த வேண்டும். அதேபோலதினி வேலூர் மாவட்டங்களுக்கு 80 ரூபாய் என்றிருப்பதை 125 ரூபாய் என்று மாற்ற வேண்டும்.

இன்னொரு திட்டம் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்குதல். எஸ்.எஸ். எல்.சி. தேர்வில் முதல் பரிசு பெறுபவருக்கு 100 ரூபாய் என்றும், இரண்டாம் பரிசு பெறுபவருக்கு 50 ரூபாய் என்றும், எட்டாம் வகுப்புத் தேர்வில் முதல் பரிசு பெறுபவருக்கு 50 ரூபாய் என்றும் இரண்டாம் பரிசு பெறுபவருக்கு 10 ரூபாய் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு சம்பிரதாயமாக இருக்கிறது. இந்தப் பரிசை வாங்குவதற்கு விழா நடத்துகிற செலவு ஜாஸ்தியாக இருக்கும். அதைவிட இந்தத் தொகையை உயர்த்துவது நல்லது. இதை இரட்டிப்பாக்கி 250 ரூபாய் கொடுத்தால் படிப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே எஸ்.எஸ்.எல்.சி. முதல் பரிசு ரூபாய் 250 என்றும், இரண்டாவது பரிசு ரூபாய் 150 என்றும், எட்டாம் வகுப்பு-முதல் பரிசு-50ஐ 100 ரூபாய் என்றும், பத்தை 50 ரூபாய் என்றும் ஆக்கலாம்.

பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் என்கிற அமைப்பை ரூபாய் பத்து கோடி பங்கு மூலதனத்தோடு ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தக் கழகம் சரிவர செயல்படவில்லை. இப்படி இந்தக் கழகத்தை ஏற்படுத்தி, நான்கு இடத்திலே நல்லது செய்கிறோம் என்று சொல்வதைவிட, இந்தக் கழகத்திற்கான மூலதனத்தைக் கூட்டி அழுத்தந்திருத்தமாகச் செய்தால் நல்லது. அந்தக் கழகத்தை மற்ற அமைப்புகளோடு சேர்த்தாவது ஏதாவது செய்ய வேண்டும். இல்லாமல் பேருக்கு அமைப்பைப் போட்டு, அலுவலகம் திறப்பதால் மட்டும் காரியம் நடக்காது என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சுட்டிக்காட்டி, அங்கிருக்கக்கூடிய ஒன்றிரண்டு கிராமங்களை எடுத்துச்சொல்லி, அங்கே அவர்களுடைய கட்சியின் கொடியை ஏற்றிவைத்திருப்பதன் காரணமாக அரசு வீட்டுமனைகளை வழங்குவதற்கு தயக்கம் காட்டுவதாகப் பொருள்படும்படி பேசியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில், அந்த எண்ணத்தை இந்த அரசு கொண்டிருக்கவில்லை. அப்படிக் கொண்டிருக்குமேயானால் எந்தக் கிராமத்திலும் நாம் வீட்டு மனைகளைக் கொடுக்க முடியாத நிலைமைதான் இருக்கும். ஏனென்றால் எந்தப் பகுதியை எடுத்துப் பார்ப்போமேயானாலும், அங்கே அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். இந்த அரசைப்



பொறுத்தவரையில், ஏதோ ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு மட்டும் வீட்டுமனைகளைக் கொடுக்கிறோம் என்று பொருள் படும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விவரம் வேறு. மாமண்டூர்—பினாயூர் செல்லக்கூடிய பாலாற்றங்கரை ஓரச் சாலையில், அங்கேயுள்ள வயல்களைத் தாண்டிப் போனால், சாத்தஞ்சேரி என்கிற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்குச் சாலை போடுவதற்காக 6¼ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே தனியார் நிலங்கள் 5 செண்ட்தான். ஒரு குறிப்பிட்ட இடத்திலே எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதைத் தனியார் இருவர் தர மறுக்கிறார்கள். அதைத்தான் சொன்னேனே தவிர, வீட்டுமனைகள் பற்றிச் சொல்லவில்லை. முன்பு பேசியபோது, வேண்டுமென்றுதான் அவர்கள் யார் என்று குறிப்பிடாமல் இருந்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரச்சினையை எழுப்பி விட்டதால் சொல்கிறேன். அங்கே பலபேர் தந்துவிட்டார்கள். இரண்டுபேர் தர மறுக்கிறார்கள். ஒன்று ஆளும்கட்சியைச்

(முற்பகல் 11-10)

சார்ந்தவர். மற்றொருவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். அந்த இடத்தில் சாலை போட்டுவிட்டால், 6 காலனிகளைச் சேர்ந்த ஆதி திராவிடர்கள் பேருந்துகளிலே செல்வார்கள். அதனாலே வழியிலே உள்ள மேல் தட்டிலே உள்ளவர்களுக்குப் பேருந்துகளிலே இடம் கிடைக்காது என்ற சிந்தனை இருக்கிறது. இப்போதுகூட அரசு அதிகாரிகள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மேலும் இதில் கவனம் செலுத்தி, அரசு சாலையைப் போட்டால் நல்லது. 3 மாதங்கள் படிக்கும் பிள்ளைகள் பள்ளிகளுக்குப் போக முடியவில்லை. நான் வீட்டு மனைகள் வழங்குவதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆளுங்கட்சித் தலையிட்டால் சாலை போடுவது நின்று போய்விட்டது என்றும் சொல்லவில்லை. சமுதாயத்தில் அதிகம் நிலம் உள்ளவர்கள் நிலத்தைத் தர முன்வரவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்துப் பேச இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் 10 நிமிடங்களுக்குமேல் பேசாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நான் அதைப்பற்றிச் சொல்லும் போது, அவர் இங்கே இல்லை. அதனால் இப்போது சொல்கிறேன்.

[1984 மார்ச் 30

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை குறித்தும், ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறை குறித்தும் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது பேசும் வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மிக மிக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜே. தாஸ் அவர்கள் கைத்தறித் தொழிலை, நெசவாளர்கள் செய்கின்ற தொழிலை ஆதி திராவிடர்களுக்குப் பயிற்றுவிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த இடத்திற்கு நான் போகவில்லை. ஏற்கெனவே ஆதி திராவிடர்களை அதிகமாக உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கிட்டத்தட்ட 20 இருக்கின்றன. குறிப்பாக சேலத்திலே அவர்கள் அந்தப் பணியிலே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் வாதிரியார் என்ற பகுதியினர் அதிகமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு யாரோ, நாங்களோ வலுக்கட்டாயமாக அதைக் கற்றுக் கொடுக்கவில்லை. பக்கத்திலே உள்ளவர்கள் செய்வதைப் பார்த்து, அதைக் கற்றுக்கொண்டு, இன்றைக்கு ஓர் அமைப்பாக அவர்கள் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். அவர்களால் ஜமுக்காளங்கள் நெய்யப்படுகின்றன. பெட்ஷீட்டுகள் கரூர், ஈரோடு பகுதிகளில் சுற்று வட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வாதிரியார்கள் என்பவர்கள் திருச்செந்தூர், ஏரல் போன்ற பகுதிகளில் அவற்றை நெய்கிறார்கள். இங்கே பிரச்சினை ஒன்றுமில்லை. அவை விற்றுப் போய்விடுகின்றன. பவானி பகுதியில் ஜமுக்காளங்கள் நெய்யப்படுவது விற்காமல் இருக்கிறது. இப்போது நாகரிகம் முற்றி முற்றி, ஜமுக்காளத்தை விட, நவீனமாக, அழகான, பொன் போல் பிரகாசிக்கும் பெட்ஷீட்டுகள் வந்திருப்பதால், அவற்றை வாங்குகிறார்கள். எனவே அந்த நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகளை அரசாங்கத் துறையே வாங்கி, ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக விற்கும் பொறுப்பை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். ஏனென்றால் பல கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் விற்றதுபோக மீதி தேங்கியிருக்கிறது. சமீபத்தில் ஷோலாபூர் சென்ற, பெட்ஷீட்டுகள், படுக்கை விரிப்புகள் விற்கும் மார்க்கெட்டிலே அந்த நகராட்சியில் ஏலத்திலே ஒரு இடத்தை எடுத்திருக்கிறோம். அதை அவர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். அதற்கான ஆரம்பச் செலவுகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு, அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்க பொறுப்பை ஏற்றுக் கொண்டால்தான், புதிதாக சங்கங்கள் அமைக்கவும், புதிதாக அவர்கள்



1984 மார்ச் 30] [திரு. சி. இராமலிங்கம்]

விசைத் தறிகள் ஏற்படுத்தவும் முடியும். எனவே விற்பனையை அதிகரித்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுப் பணியில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். சென்னை நகரம், மற்றும் எல்லா நகரங்களிலும் தெலுங்கு மொழி பேசும் அந்த மக்கள் தங்களை ஆதி ஆந்திரர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பிற்குப் பல சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்கள் பஞ்சாயத்துக்களில் மட்டுமே இருக்கின்றன. அவர்கள் இறந்தால் 10,000 ரூபாய் என்ற சலுகை பஞ்சாயத்துக்களிலும், பேரூராட்சிகளிலும் இருக்கின்றது. நகராட்சிகளில் அப்படி இல்லை என்று கருதுகிறேன். சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு இந்தப் பாதுகாப்பு தேவை என்று கேட்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் மட்டும் இல்லை. அவர்கள் தங்களை ஒருகாலத்தில் தொழிலாளிகளாகப் பதிவு செய்து கொண்டார்கள். ஆகவே தான் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குரிய அந்தஸ்துக்கு வரவில்லையென்று சொல்கிறார்கள். அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

அதுபோல் தமிழ் நாட்டிலே சக்கிலியன் என்று சொல்லக்கூடியவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றன என்கிற விவரம் இல்லை. அவர்களுக்கும் சலுகைகள் அளிக்க வேண்டும். அவர்கள் தோல் பதனிடும் தொழிலில் இருந்து பல்வேறு தோல் சம்பந்தமான தொழிலைச் செய்கிறார்கள். அவர்களுக்கு காதி இலாகா மூலமாக 2 ஆயிரம் ரூபாய் மூலதனம் மற்றும் பங்க் வசதி எல்லாம் செய்து கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்கின்ற தொழிலுக்கு முக்கியமான தோலைக் கொடுப்பதில்லை. இந்நிலையில் அவர்கள் ஷூ போன்றவற்றைத் தைத்து விற்பனை செய்வது என்றால். அவர்களை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும்போது. இப்படிப்பட்டவர்கள் தோல் பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்கிக் கொள்ளும் அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுபோல் சென்னையில் அருந்ததியர் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்ற ஒன்று இருக்கிறது. அது டாக்டர் நடேசன் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் டாக்டர் ராஜமன்னார் போன்றவர்கள் எல்லாம் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போது நான் தலைவராக இருக்கிறேன். இன்றைக்கு பாதரட்சைகள் வேண்டுமென்று டெண்டர் மூலமாக அக்ஷந்த நகராட்சிகள், பல டிபார்ட்மெண்ட் துறைகள் எல்லாம் கேட்கின்றன. அந்த நேரத்தில் காதி இலாகா மூலமாக குறைந்த விலைக்கு டெண்டர் எடுக்கப்படுகிறது. இன்றைக்கு சாதாரணமாக ஒரு செருப்பு தைக்க குறைந்த அளவு

21 ரூபாய் அடக்க விலை ஆகிறது. ஆனால் காதி இலாகா மூலமாக 19 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். இது எப்படி சாத்தியம் என்று நான் கேட்ட போது, காதி இலாகாவுக்கு அரசு மானியம் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் தனிப்பட்டவர்களுக்கு இந்த மானியம் கிடைப்பதில்லை. அது குறித்துப் பரிசீலித்து இப்படித் தனியாகத் தொழில் செய்கிறவர்களுக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில், நாளுக்கு நாள் பிற்பட்டோர் என்கிற ஒரு அறிவிப்பை அறிவித்து நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்காக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய நெசவாளர் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால், பலர் பெரிய பணக்காரர்களாக இருக்கலாம். நான் அவர்களை இங்கே சொல்லவில்லை. ஆனால் தகப்பன் தறி நெய்தால், அதுவும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தறி நெய்கிறவனாக இருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வியிலே, அரசுப் பணியிலே சலுகை அளிக்க வேண்டும். அரிசனங்களை விட குறைந்த வருமானம் இன்றைக்கு நெசவாளர்கள் பெறுகிறார்கள். பாவு பிரித்து நெய்யாவிட்டால் வருமானம் வராது. தறியை உட்கார்ந்து மிதிக்க வேண்டும். தறியை மிதிக்க மிதிக்கத் தான் நாம் இடையிலே கட்டுகிற சாரம் உருவாகும். உழைப்பிலே தான் சாரம் உருவாக முடியும். அரிசனங்களாவது உழைத்தால் அவர்களுக்கு வருமானம் வரும். ஆனால் நெசவாளர்கள் உழைத்து உழைத்து தறியை மிதிக்க மிதிக்கத்தான் வருமானம் வரும். ஆகவே அரிசனங்களுக்கு இருக்கிற சலுகைகள் அனைத்தையும், குறிப்பாக கல்வி மற்றும் உத்தியோகங்களில் வழங்கப்படுகின்ற அனைத்துச் சலுகைகளையும் நெசவாளர்களுக்கும் அளிக்க வேண்டும்.

சமீபத்தில் என்னுடைய வேண்டுகோளுக்கிணங்க, வேலைவாய்ப்பு தேடித் தரும் இடங்களில் நெசவுத் தொழில் தெரிந்தவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்கிற வகையில் வாய்ப்பினைத் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களிடம் நான் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் தான், இந்தச் சலுகை வந்திருக்கிறது. அதற்கு முன்பு நெசவுத் தொழில் தெரிந்தவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்போது இந்தத் தொழில் தெரிந்தவர்களுக்கு என்று தனியாக ஒரு பட்டியல் வந்திருப்பது பாராட்டத்தக்கது. அதுபோல் எங்களையும் ஆதி திராவிட





ர்களுக்கு அடுத்தபடியாக பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் அளிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் காப்லர்களுக்குப் பல சலுகைகளை அளித்து அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். முந்தாநாள் நான் பேசினேன். செருப்பு தைக்கின்றவர்களுக்கு பெட்டிகள் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட பொருள்களை எல்லாம் வட நாட்டிலே கொடுக்கிறார்கள் என்று சொன்னேன். அவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்துவிட்டு அந்தப் பொருள்களால் உற்பத்தி செய்யப்படும் செருப்பு போன்றவைகளையும் அவர்களே வாங்கிக் கொள்கிறார்கள். அப்படி நம் மாநிலத்திலும் செய்யலாம். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரையும் சேர்த்து நல்லமுறையில் அவர்கள் தொழிலைச் செய்ய வாய்ப்பு அளிக்கலாம். அல்லது பேக்டரி போல் ஏதாவது வைத்துக் கொடுக்கலாம். அப்படிச் செய்தால், வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவுக்குக் குறையும். அந்த வகையில் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செருப்பு தைக்கின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு முடிந்தவரை வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பல்லாவரம் பகுதியிலே குறிப்பிட்ட ஒரு பகுதியிலே ஒரு குடும்பத்தினர், பிராமணர்கள் தோல் தொழிலைச் செய்கிறார்கள். அதுபோல் மாம்பலத்திலே கூட இப்படிப்பட்ட தொழிலைச் செய்கிறார்கள். இப்போதெல்லாம் ஜாதித் தொழில்களே மாறி

(முற்பகல் 11-20)

விட்டது. அவர்களுக்குத் தோல் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான உதவி செய்வதோடு அரசே அதை ஊக்குவித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இந்த முதலியக் கோரிக்கைக்கு நிதி ஒதுக்கீடு குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுகிறேன். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு குறிப்பாக நெசவாளப் பெருமக்களுக்கு தாராளமாக நிதியுதவி அளித்து, அவர்களின் குறைகளையும் தீர்த்திட கேட்டுக்கொண்டு, இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்பட்டோர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மிகக் குறைந்த அளவில் ஒருசிலவற்றைச்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984 மார்ச் 20

சொல்ல விரும்புகிறேன். இந்த நலத் துறையில் ஒதுக்கியிருக்கிற நிதி சிறப்பாகவே செலவு செய்யப்பட்டு வருகிறதென்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த நலத் துறையைப் பொறுத்தவரையில், நிறைய கல்வி நிலையங்கள் இருக்கின்றன அவைகளில் எல்லாம் ஆசிரியர்களின் நலன்களுக்காகவும் மாணவர்களின் நலன்களுக்காகவும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு எழுதுபலகைகள், புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் தரப்படுகின்றன. ஆனால் தரப்படுபவைகள் எல்லாம் காலத்தில் வழங்கப்படுகின்றனவா என்றால், அப்படி காலத்தில் வழங்கப்படுவதில்லை. அது பயன்தரக்கூடிய அளவுக்காவது இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. பள்ளிகள் தொடங்கும் முன்பே பள்ளிகள் தொடங்குகிற நாளிலிருந்தே அவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், கோடை விடுமுறையின் போதே அந்தப் பணிகளைத் தொடங்கினால், அந்தப் பிள்ளைகளுக்கு பள்ளிகள் தொடங்கும் போதே கொடுத்துவிடலாமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி வழங்கினால்தான், அது பயன்தரத்தக்க அளவில் இருக்கும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் நான் சொல்கிற குற்றச்சாட்டாக இது இருந்தாலும், காரியங்கள் நடைபெறுவதென்னவோ மிகத்தாமதமாகத்தான் என்பதையும், அதுவும் இரண்டு மூன்று மாதங்கள் கழித்துத்தான் அவைகள் கொடுக்கப்படுகின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் உணர்ந்து, வரும் காலத்திலாவது காலத்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிக் கொடுக்கப்படுகிற எழுதுபலகைகளுக்கு (சிலேட்டுகள்) நான் மாதிரியாக அமைச்சர் அவர்களுக்குக் காட்ட வேண்டுமென்று ஒன்றை எடுத்து வைத்திருந்தேன், துரதிருஷ்ட வசமாக வீட்டிலேயே வைத்துவிட்டேன். ஒப்பந்தக்காரர்களிடத்திலோ மற்றவர்களிடத்திலோ அந்தப் பணி ஒப்படைக்கப் பட்டிருப்பதால், உளுத்துப் போன சட்டங்களால் செய்யப்பட்டு, பூருப்ஃபாண்ட், பவுடர் டின் போன்ற தகரங்களால் அவைகள் செய்யப்பட்டு, மேலே கருப்பு மையை பெயின்ட் அடிப்பது போல் அடித்திருப்பதால், அந்த விளம்பர எழுத்துக்கள் கூட தெரிகிற நிலையில் பத்தே நாட்களில் அந்த சிலேட்டுகள் அந்தக் கருமையை இழந்த அந்த பெயின்ட் உதிர்ந்துவிடுகிற காரணத்தால், அந்த எழுதுபலகைகள் சரியாகப் பயன்படுத்த முடியாமற்போய்விடுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தகைய எழுதுபலகைகளை வழங்காமல் பார்த்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து தரமான எழுதுபலகைகளை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ?



1984 மார்ச் 30] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ஆதிதிராவிட மாணவர்கள், பழங்குடி மாணவர்கள் தங்கிப் படிக்கும் அரசினர் இல்லங்களில் வழங்கப்படுகிற உணவுக்கான தொகையை எடுத்துக் கொண்டால், அது மிகவும் குறைவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசுக் கல்லூரி மற்றும் தொழிற் கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு சாப்பாட்டுச் செலவுக்காக ரூபாய் 95 தான் வழங்கப்படுகிறது. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது கற்பனையாகச் சாப்பிடுவதற்குக் கூட போதாது. அதேபோல உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுடைய சாப்பாட்டுச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு 80 ரூபாயும், அதற்குக் கீழே நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்காக 60 ரூபாயும், மற்ற பள்ளிகளில் 45 ரூபாயும் தரப்படுகிறது. இதையெல்லாம் நினைத்துப்பார்த்தால், நாம் இந்த நாட்டில்தான் இருக்கிறோமா அல்லது வேறு எங்காவது போய்விட்டோமா என்று தெரியவில்லை. காரணம் அந்த அளவுக்கு விலைவாசிகள் எல்லாம் ஏராளமாக உயர்ந்திருந்த போதிலும், எப்போதோ ஒதுக்கிய தொகையையே இப்போதும் அவர்களுக்கு உணவுக்காக ஒதுக்கியிருப்பதுபற்றி நம்மைப்போன்றவர்கள் எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனால் அந்த மாணவர்கள் சரியான பலனைப் பெறுவார்களா? அவர்களுக்கு மூளை வளர்ச்சி ஏற்படுமா? உடல் பலத்தைப் பெற முடியுமா? சிந்தித்துப் படிக்க வாய்ப்பு ஏற்படுமா? சாதாரணமாக ஒரு டிபன் சாப்பிடவே நமக்குக் குறைந்தது ரூபாய் 5 வேண்டியிருக்கிறது. ஒரு வேளைக்கே 5 ரூபாய் ஆகிறது. மாதத்திற்கு 45 ரூபாய் என்பது எவ்வளவு வேதனையாக இருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். வேறு எதெதற்கோ தாராளமாக நாம் செலவு செய்கிற இந்த நேரத்தில் ஆதிதிராவிட பழங்குடியினர் மாணவர்களுக்கான உணவுத் தொகைக்காக இவ்வளவு குறைந்த தொகையைத் தான் ஒதுக்குகிறோம். ஆகவே அதை உணர்ந்து நிறைய நிதி ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு உழவுமாடுகள்—கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. நியாயம்தான். வரவேற்கிறேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவை வழங்கப்படுகின்ற முறையைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஒதுக்கப்படுகிற தொகையை ஆதி திராவிட மக்களுக்கு உரிய காலத்தில் வழங்காமல், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், அந்த நிதியாண்டின் இறுதியில், அந்த ஆண்டு முடிவடைகிற தருவாயில் அந்தத் தொகையைச் செலவழித்துத் தான் ஆக வேண்டும் என்று சொல்லி, இறுதி ஒரிரண்டு மாதத்திற்குள் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதால், அந்தத் தொகை உண்மை

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984-மார்ச் 29.

இந்த பழுவு மாடுகளுக்குத்தான் போகிறதா, கறவை மாடுகளுக்குத்தான் போகிறதா என்றால் இல்லை. உண்மை என்னவென்றால் பல இடங்களில் மாட்டைப் பிடித்து வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கொடுத்து அதே மாட்டை மறுபடியும் போட்டோ படம் பிடித்துக்கொள்வதற்குப் பயன்படுத்துகிறார்களே தவிர உண்மையிலே அவர்களுக்கு மாடு வாங்கித் தரப்படுகிறதா என்றால் இல்லை. திருவள்ளுவர் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார் :

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்ற யவை".

மாடு என்றால் செல்வம் என்று பொருள் "மாடல்ல மற்றயவை" என்று சொல்கிறார், அதாவது கல்வி தவிர மற்றவைகள் செல்வமாகா என்று தெரிவிக்கிறார். அந்த வகையில் மாட்டை வாங்கிக் கொடுத்தால் போதும் என்று நம் அதிகாரிகள் மாட்டை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். மாடு என்றால் செல்வம், செல்வம் என்றால் பொருள், பொருள் என்றால் பணம் என்பதாலே பணம் வந்தால் போதும் என்று இதைச் செய்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின் மூலமாக அதிகாரிகள் பங்கு போட்டுக் கொள்வது, ஆதி திராவிட நண்பர் இருக்கிறாரே அவருக்கும் ஒரு பங்கு தருவதற்கும்தான் பயன்படுகிறதே தவிர உண்மையாக மாடு வாங்கிக் கொடுக்கப்படுகிறதா என்றால், இல்லை. இதையெல்லாம் சோதனை செய்து பார்க்க வேண்டும் என்று சொல்லி இந்தத் திட்டம் சரியாகப் பயன்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்காக வீடு கட்டித் தரும் திட்டம் ஒன்றும் இருக்கிறது. கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, டாக்டர் கலைஞர் அவர்களின் காலத்தில் கட்டப்பட்டு வந்த வீடுகளைப் போல இப்போது கட்டித் தரப்படும் வீடுகளும், வலிவுள்ளவைகளாக, பலமுள்ளவைகளாக நிரந்தரமாக இருக்கக்கூடிய வகையில் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது கட்டப்படும் வீடுகளைப் பார்க்கும் போது, அவை பழைய காலத்தில் கட்டிய வீடுகளைப் போல பலமாக இல்லை. அவர் காலத்தில் செய்த திட்டம்தானே, எனவே அதனைப் போய் நாம் பின்பற்றுவதா என்று எண்ணாமல், நல்ல திட்டத்தை யார் செய்தாலும், நாமும் அதை நடைமுறைப்படுத்துவோம் என்று செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே பழைய நிலையிலேயே, பெருந்தன்மையோடு மீண்டும் அந்தத் திட்டத்தைப் போன்றே அரசு வீடு



1984 மார்ச் 30] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அவர்களெல்லாம் மேட்டுக்குடி மக்கள் வாழ்கிற பகுதியிலேயே வாழக்கூடிய வகையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். எனவே கூடுமானவரை மேட்டுக்குடி மக்கள் இருக்கிற பகுதியிலேயே நிலங்களைப் பெற்று வீடு கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம்தான் உண்மையிலேயே நாம் இங்கே ஒரு சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று சொல்லி, அந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். தீண்டாமை ஒழிப்பு என்று 53 வது தலைப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. குடியியல் உரிமைகள், பாதுகாப்புச் சட்டம் இங்கே அமுல்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நம் நாட்டில் வெளிப்படையாகவே அது அமுல் படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு உதாரணத்தின் மூலம் அது இங்கே அமுல்படுத்தப்படவில்லை என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

கோவையில் சென்ற 23 ஆம் தேதி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர், அவர் பணியாற்றும் வரதராஜபுரம் மாநகராட்சிப் பள்ளியில் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் பெயர் எம். கிருஷ்ணசாமி. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஆசிரியர். அவர் வகுப்பில் இருந்தபோது, வெளியாரால் தாக்கப்பட்டார். அது மட்டுமல்ல, பள்ளியில் இருக்கும் மாணவர்களின் முன்னாலேயே—நான் இந்த அவையில் அந்த வார்த்தைகளைச் சொல்லக் கூடாது என்றாலும் அவர் ஜாதிப் பெயரைச் சொல்லி—தாழ்த்தப்பட்ட ஜாதிப் பெயரைச் சொல்லி அவரைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். கொல்லும் நோக்கத்தோடு தாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக மாநகராட்சிக்கு அவர் வந்து புகார் செய்ய வந்தபோது, மாநகராட்சி அலுவலகத்திலேயே "புகார் செய்யவா வந்தாய்" என்று அதே நபர்கள் அங்கேயும் வந்து அவரை நையப் புடைத்து, கையில் கத்தியை எடுத்துக் கொண்டு குத்தச் சென்றிருக்கிறார்கள். அந்த ஆசிரியர் தப்பியோடிச் சென்றிருக்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஆசிரியர்—பெயர் எம். கிருஷ்ணசாமி—கோவை மாநகராட்சிப் பள்ளியில் பணியாற்றுகிறவருக்கு ஏற்பட்ட கதி இது. இது சம்பந்தமாக நான் ஏற்கெனவே 28 ஆம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் தந்தேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் இருந்தால் ஒரு ஐயப்பாட்டைக் கேட்க வேண்டும் என்று இருந்தேன். அது குறித்து இங்கே கேள்வி கேட்கக்கூடாது என்பதை அறிவேன். இருந்தாலும் ஒரு கருத்தை மட்டும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது என்னவென்றால் நான் ஒரு

ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆசிரியர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார். அங்கே 'லா அண்டு ஆர்டர்' பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள ஆசிரியர்கள் சங்கமும், அரசு ஊழியர்கள் சங்கமும் அந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தீர்மானம் போட்டு, மிகப் பெரிய போராட்டம் நடத்த ஆயத்தமாக இருந்த நிலையில் நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசாமல் தங்கள் கருத்துக்களை மட்டும் இங்கே பேசுவது தவறல்ல. சொல்ல வேண்டியவைகளை மட்டும் சொல்லிவிட்டு, ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி இங்கே சொல்லாமல் இருப்பது நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் முடிவு எடுத்துக்கொள்ளலாம். அது எனக்குத் திருப்தித் தராதவைகற்று சொல்லப்பட்ட காரணம் அது தனி நபர் பிரச்சினை என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். அதற்கு அனுமதி கொடுப்பதும், அனுமதி மறுப்பதும் தலைவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. அதற்குக் காரணம் காட்ட வேண்டுமென்ற அவசியம் தலைவருக்குக் கிடையாது. உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி இங்கே பேசுவது முறையானதல்ல. கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கருத்துக்களைச் சொல்லலாம். அதிலே எந்த விதமான தடையும் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** புதுக்கோட்டையிலே பரீட்சை நேரத்தில் மாணவர்களால் தாக்கப்பட்ட மங்கப்பன் என்ற ஆசிரியர் பிரச்சினை இங்கே கொண்டு வரப்பட்டபோது ஏற்கக் கொள்ளப்பட்டது. நீதிபதி சார்குண்டே அவர்கள் தாக்குண்ட பிரச்சினை பற்றி இங்கே பேச ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருப்பரங்குன்றம் வழக்கறிஞர் பிரச்சினை பேச இங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதைப்பற்றி ஏற்கெனவே விவாதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், தலைவர் அவர்கள் நான் கொண்டு வந்த அந்தப் பிரச்சினை பற்றி . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், ஏன் அப்படி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற காரண காரியங்களை ஆராய தலைவர் அறைக்குச் சென்று பேசலாமே தவிர, இங்கே பேசுவது சரியல்ல. அதைத் தவிர்ப்பது நல்லது என்று மீண்டும் அறிவுறுத்த விரும்புகிறேன்.

இரண்டாவது; மாண்புமிகு உறுப்பினர் பத்து நிமிடங்களுக்கு மேலாகப் பேசிக்கொண்டிருக்கிறார். உடனடியாக முடித்துக்கொள்வது நல்லது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஆதி திராவிடர் நலத் துறைக் கொள்கைக் குறிப்பின் மீது மட்டும் பேசுகிறேன். பிற்பட்ட நலத் துறைக்கு நான் வர வில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களுக்கும் பத்து நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் பேசி 11 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. ஆகவே விரைவாக முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தாழ்த்தப்பட்ட ஆசிரியர் தாக்கப்பட்டு அங்கே பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்ட பிறகு, அவர் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டு, மருத்துவ மனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு. மீண்டும் அவர் பள்ளிக்குச் சென்றபோது அவர் தாக்கியதாக அவர் மீது வழக்கு பதிவு செய்து அவரைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் நிலையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். * தாக்கினால் அதைத் தடுத்துப் பாதுகாப்பதற்குரிய நிலை மற்றவர்களுக்கு இல்லையென்று சொன்னால் . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * என்று சொல்லி அவருடைய பெயரையும் சொல்லியிருக்கிறார். இங்கே வந்து பதில் சொல்ல வாய்ப்பு இல்லாதவர்களுடைய பெயர்களை இந்த மன்றத்திலே எப்போதும் சொல்வதில்லை. ஆகவே அப்படி அறிவிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * என்று அவருடைய பெயரைச் சொன்னால், அவர் இங்கே வந்து பதில் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அதைத் தவிர்த்துவிட்டுப் பேசுவது நல்லது.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, அதை நான் எதிர்க்கிறேன். எத்தனையோ முறை அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே ஆசிரியர்களும் மற்றவர்களும் தாக்கப்பட்டால், அதுவும் ஆளும் தரப்பிலே இருப்பவர்களால் தாக்கப்பட்டால், பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கிறது. அதுபற்றி காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இத்தகைய சூழ்நிலை இருக்கும்போது, கல்வி எப்படி நடைபெறும், ஜனநாயகம் எப்படி காப்பாற்றப்படும்? இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, உரிய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, அப்படி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், மிகப் பெரிய போராட்டம் உருவாகும் நிலை ஏற்படும். சட்டம்-ஒழுங்கு குலையும் சூழ்நிலை அங்கே ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களை வேண்டி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அவைக் குறிப்பில் அது பதிவாகும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் ஆராய்ந்து பார்த்து தீர்ப்பு சொல்லுகிறேன். அவர் என்ன பேசினார் என்பதைப் பார்த்து நான் முடிவு செய்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, வெளியே இருப்பவர்களைப்பற்றிப் பேசவே கூடாது என்றால், இங்கே பேசவே முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் * என்று சொல்லுகிறார். அவர் குற்றத்தைச் செய்தார் என்று சொல்லுகிறார், அவர் உண்மையாக குற்றத்தைச் செய்தாரா இல்லையா என்பது அமைச்சருக்குத் தெரியாது. அவர் குற்றம் செய்தார் என்பதற்கு எந்தவிதமான தடையமும், ஆதாரமும் இல்லாதபோது அவையில் இல்லாதவர்களுடைய பெயரைச் சொன்னால், அது பத்திரிகையில் வந்தால், அவரைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை வருகிறது. ஆகவே எந்தவிதத் தடையமும் இல்லாமல் பேசுவது சரியல்ல. ஒருவர் பெயரைச் சொல்ல வேண்டும் என்று கருதினால், முன்கூட்டியே தலைவருக்குச் சொல்லி, இந்தப் பெயரைச் சொல்லி நான் குற்றம் சாட்டவிருக்கிறேன் என்று சொன்னால், அதை அமைச்சரிடத்திலே சொல்லி, அமைச்சர் துறையிலிருந்து அது குறித்து கருத்தைப் பெற்று, இங்கே பதில் சொல்ல முடியும். அப்படி இல்லாமல் திடீரென்று பேசினால், அது பத்திரிகையில் வரும். அதற்கு யார் பொறுப்பேற்பது என்ற நிலைமைகள் இருப்பதால், அப்படிப் பேசுவது மரபாகாது, அதைத் தவிர்த்தல் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் படித்துப் பார்த்து பிறகு முடிவு சொல்கிறேன்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதுபற்றிய புகார் மனு காவல் துறைக்குத் தந்ததற்கெல்லாம் என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது வேறு விஷயம். தாங்கள் சொன்னாலே ஒருவர் குற்றவாளி ஆகிவிடமாட்டார். நீங்கள் விவரம் அறிந்த ஒரு ஆசிரியராக இருக்கிறீர்கள். புகார் தரும்போது ஒரு பெயரைச் சொன்னால், அவர் குற்றவாளி ஆகிவிடமாட்டார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் சொல்ல விரும்புவது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** தயவு செய்து இன்றைக்கு நான் அமைச்சராக இருப்பதனாலே இப்படிப் பேசவில்லை. அதற்கு முன்னாலே நான் பேசினேன் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார். அந்த மாதிரி நான் பேசவும் மாட்டேன் : நான் பேசுவதாக இருந்தால், இப்பவும் பேசுவேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தாங்கள் பேசுவதாக இருந்தால், அதை என்னிடத்திலே கொண்டு வந்து கொடுத்து. இதுபோல ஒரு நபரைப் பற்றி நான் பேச இருக்கிறேன் என்று என்னிடத்திலே தெரிவித்தால், நான் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து, அதைப் பற்றிய முழு விவரங்களை அவர்கள் தர முடியும். திடீரென்று சபையிலே எழுந்து ஒருவரைப் பற்றிக் குற்றம் சொன்னால், அவர் அந்தக் குற்றம் செய்தாரா, இல்லையா என்று தெரியாமல், நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்? அது பத்திரிகையிலே வந்தால், அவருடைய நிலைமை என்னாவது? ஆகவே யார் வேண்டுமானாலும் யாரைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாமென்ற நிலைமை ஏற்பட்டு சட்டதிட்டங்களை உருவாக்க முடியாது.

திரு. மு. மாசிலாமணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறை கொள்கைக் குறிப்பின் மீதும், பிற்பட்டோர் நலத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதும் பேசுவதற்கான வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் இந்தக் கொள்கையிலே பேசுகின்றபோது முதலிலே, மகாத்மா காந்தி யடிகள் கண்ட கனவுப்படி, டாக்டர் அம்பேத்கார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந் தலைவர் காமராசர் ஆகியோர் கண்ட கனவுப்படி மிகவும் பின்தங்கிய சமுதாயத்திலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலும் இருக்கின்ற முத்தரையர் சமுதாயத்தின் சார்பிலே ஒரு அமைச்சரையும், அருந்ததி யர் சமுதாயத்தின் சார்பிலே ஒரு அமைச்சரையும் இங்கே நியமித்துச் செயல் படுவதைக் கண்டு இந்த நாட்டிலுள்ள நல்லோர்கள் எல்லாம். . .

திரு. ப. மாணிக்கம் : அமைச்சர்கள் ஒவ்வொரு சமுதாயத்தின் சார்பிலே இருக்கிறார்களா, அல்லது வேறு எதன் சார்பாக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. மாசிலாமணி : நலிந்த பிரிவினருக்காக, நலிந்த சமுதாய மக்கள் வாழ்வதற்காக, அந்த சமுதாய மக்களின் நன்மைக்காக இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவையை அமைத்திருப்பதைக் கண்டு நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் ஆதிதிராவிட நலக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுகின்றபோது, அதிலே குறிப்பாகக் காணப்படுவது அந்த சமுதாயத்திலே ஒருவர் இறந்துவிடுவாரேயானால், அவருக்கு ஈமச் சடங்குக்காக 50 ரூபாய் நிதி உதவி அரசு அளித்து வருகிறது. ஆனால் இன்றைய தினம் பொருளாதார மாற்றத்தைப் பார்ப்போமானால், அந்த சடங்கு செய்கின்ற காரண காரியங்களுக்கு இந்த 50 ரூபாய் போதவில்லை என்பது அந்த மக்களுடைய கருத்தாகும். அதனை மேம்படுத்தி குறைந்த அளவு 100 ரூபா யாவது கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த மேலவையின் வாயிலாக மிகப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்றைய தினம் ஆதி திராவிட மக்களுக்கு இந்த அரசு இலவசப் பட்டா வழங்கி வருகிறது. பொறம்போக்கு நிலங்களிலே வீடுகளைக்கட்டி வாழுகின்ற மக்களுக்கு 200 ரூபாய் வருமானம் இருந்தால் தான், அவர்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 15 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட அந்த அடிப்படை நிர்ணயம் ரூபாய் 200, இன்றைய தினம் பொருளாதாரம் வளர்ந்து வருகின்ற



போது, சாதாரணமாக கைவண்டி இழுக்கின்ற ஒரு தொழிலாளிக்குக் கூட 10 ரூபாய் கிடைக்கிறது. 200 ரூபாய் அடிப்படை வருமானமாக இருப்பதை குறைந்தபட்சம் ரூ. 400 ஆக வைத்தால் அது நன்மையாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, பொறம்போக்கு நிலத்தில் வீடுகளைக் கட்டியுள்ள எல்லா ஆதிதிராவிட மக்களுக்கும், அவர்களுடைய மாத வருமானத்தைக் கணக்கிடாமலேயே, இலவசப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்று அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் கேட்கிறார்கள். இன்னொன்று. இந்த ஆதி திராவிடர் நலத்தைப் பார்க்கின்றபோது, இந்த இருளர் என்று சொல்லப்படுகின்றவர்கள் ஷெட்யூல்ட் டிரைப்ஸ் என்று கருதப்படுகின்றார்கள். கலெக்டர் அலுவலகமானாலும் சரி, அல்லது தாலுக்கா அலுவலகமானாலும் சரி, அவர்கள் ஷெட்யூல்ட் டிரைப்ஸ் என்று சொல்லப்படுகின்ற ஜாதிச் சான்றிதழ்கள் வாங்குவது மிக அரிதாக இருக்கின்றது. ஆனால் சட்ட மன்ற உறுப்பினரோ, மேலவை உறுப்பினரோ "இவர் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர், இவர் இருளர் சமுதாயத் தைச் சேர்ந்தவர்" என்று சொல்லி சான்றிதழ் கொடுத்தால், அதைச் சட்டப் படி ஏற்பதற்கில்லை என்று கலெக்டர் அலுவலகத்தில் சொல்கிறார்கள். ஆனால் அவ்வாறு கேட்கின்ற அந்தச் சமுதாயத் தோழன், "சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள், உங்களுக்கு நான் வாக்களித்தேன், இந்த சமுதாயத் தொண்டனுக்கு உங்களுக்கு ஜாதி தெரிந்திருந்தும் கூட, நான் இந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று சான்றிதழ் கொடுத்தால் அங்கே மறுக்கப்படுகிறதே, என்ன நியாயம்?" என்று கேட்கிறார்கள். என்னுடைய

(முற்பகல் 11-40)

கடந்த ஆண்டிலே என்னுடைய மகனுக்கு அந்த நிலைமை ஏற்பட்டது. மருத்துவ சமு தாயத்திலேயிருந்து வந்த ஒரு மேலவை உறுப்பினர் சொல்லி அனுப்பப்பட்டும் கூட, நானே சென்று, தாசில்தாருக்குச் சொல்லியும்கூட அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தாசில்தார் தான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மகனை நான் இறுதிப் பள்ளி வகுப்பிலே சேர்க்கின்றபோது, தாசில்தார்தான் அந்த சர்டிபிகேட்டை வழங்க வேண்டும் என்று சொன்னார் கள். அதற்குப் பிறகு தாசில்தாரைச் சென்று பார்த்தேன். பிறகு ஆர். டி. ஓ. அவர் களைச் சென்று பார்த்தேன், கிராம அதிகாரிகளையும் சென்று பார்த்தேன். அதன் பிறகுதான் எனக்கு அந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது. "என்னே நல்ல பணிகளை, ஏழையெளிய மக்களுக்குச் செய்து வருகின்ற மாண்புமிகு

[திரு. மு. மாசிலாமணி] [1984 மார்ச் 30

புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே சட்டமன்ற உறுப்பினர், குறிப்பாக அந்தத் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர், அன்றாடம் அங்கே வாழ்கின்ற மக்களைச் சந்திக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் சாதிச் சான்று கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஆதிதிராவிடர் வகுப்பில் குறவர் என்று ஒரு சாதியினர் வருகின்றனர். அந்தக் 'குறவர்' என்பதை ஷெட்யூல்ட் டிரைப்ஸிலே இருக்கின்றவர்கள், 'குறவா' என்று சொல்கின்றார்கள். ஷெட்யூல்ட் கேஸ்ட்டில் 'குறவன்' என்று சொல்லப்படுகிறது. அந்த டி. என்.சி.யிலே இருப்பது குறவன் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இன்று குறவன் என்று சமுதாயத்திலே ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் ஆதிதிராவிடர் பட்டியலிலே இருக்க வேண்டும். இல்லையென்றால் ஷெட்யூல்ட் டிரைப்சில் சேர்க்கப்படவேண்டும் என்று அந்த மக்கள் இன்றையதினம் கேட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் சென்னையில், பெரம்பூர் பகுதியில், ஓட்டேரி, தம்பார்வார்ப்பேட்டை மற்றும் தமிழகத்திலே இதர பகுதிகளிலே வாழ்கின்ற சிறுபான்மையினராக இருக்கின்றார்கள். அந்தக் குறவர்களுக்கும் சாதிச் சான்று கிடைக்கவில்லை. அவர்களை எந்த சமுதாயத்தினர் என்று சொல்வதற்கு சிக்கலாக இருக்கின்றது. ஆந்திராவிலே ஒரு மாதிரியாகச் சொல்கின்றார்கள். கேரளாவிலே ஒரு மாதிரியாகச் சொல்கின்றார்கள். தமிழகத்திலே ஒரு மாதிரியாகச் சொல்கின்றார்கள். இப்படி மூன்று இடங்களில் 3 சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே சாதிப் பெயர்கள் இருப்பதால், அது அவர்கள் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கின்றது என்கின்றார்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் அமைச்சர் அவர்கள் அதற்கு வழிவகை காண வேண்டும் என்று பணிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து புறம்போக்கு நிலம். பறங்கிமலைத் தொகுதி, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதி. அங்கே பட்ரோடில் ஏரிப் புறம்போக்கு இருக்கிறது. 1981-ல் 47 பேர்களுக்கு மட்டும்தான் இலவசப் பட்டா தரப்பட்டது. மீதமுள்ளவர்களுக்கு ஒரு செண்டுக்கு ரூபாய் 1,200 என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு 3 வருடங்களுக்கு வட்டிபோட்டு இரட்டிப்பு விலையாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 235 வீட்டு மனைகளிலே 47 பேர்கள்தான் அங்கே ரூபாய் 200 க்குக் குறைந்த மாத வருமானம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இலவசப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு மனைப் பட்டா கொடுக்கப்



1984 மார்ச் 30] [திரு. மு. மாசிலாமணி]

படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதில் முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் நலத்துறையில், முடிதிருத்துவோர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் மாதத்திற்கு ஒரு முறை, வருடத்திற்கு ஒரு முறை கொடுக்கப்பட்டு வந்த கருவிகள் போதவில்லை என்று சொல்கின்றார்கள். ஆக ஒரு மாவட்டத்திற்கு 1,050 பேர்களுக்கு முடி திருத்துவோர்களுக்கு, சலவைத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதை மிகைப்படுத்த வேண்டும். அதை அதிகப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு கூட சரியாகக் கொடுக்கவில்லை என்று சொல்கின்றார்கள். அதை விரிவுபடுத்த வேண்டும். பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

கல்வித் துறையிலே பார்க்கின்றபோது, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலுள்ள பிள்ளைகள், சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு ஆங்கிலத்தில் 40 மார்க்கு, தமிழிலே 40 மார்க் என்று இருந்தால்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். இதை நான் கடந்த முறைகூட சொன்னேன். ஆனால் தொழில் நுட்ப வகுப்புக்குச் செல்கின்றபோது, எப்படியோ சேர்த்து விடுகிறார்கள். சிலர் தனியார் துறை தொழில் நுட்ப நிலையங்களில் 10,000 ரூபாய், 12,000 ரூபாய் கட்டிடநிதி என்று முதலிலேயே செலுத்தி சேர்த்துவிடுகிறார்கள். ஆனால் அந்த மாணவன் தொழில் பள்ளியில் சேர்ந்து படித்து வரும்போது, முதலாண்டுத் தேர்வு எழுத அவன் செல்லும்போது, கணக்கிலும், விஞ்ஞானத்திலும் சேர்த்து நூறு மார்க்குகள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, விஞ்ஞானத்திலும் சரி, கணக்கிலும் சரி 40 மார்க்குகள் இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். விஞ்ஞானத்தில் 60 மார்க்குகளும், கணக்கில் 40 மார்க்குகளும் இருந்தால் நூறு என்று கணக்கிட்டு சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் 39 மார்க்கு வாங்கிய பையனுக்கு அங்கே பரிட்சை எழுத இயாயக்கு இல்லை என்று வெளியே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த, நலிந்த பிரிவு சமுதாயத்தைச் சேர்ந்த, பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியிருக்கின்ற; மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற, அடிமட்டத்திலேயுள்ள சமுதாய மக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1970 ஆம் ஆண்டு என்று கருதுகின்றேன். மருத்துவச் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பையனுக்கு மிகவும் சிரமப்பட்டு மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைத்தது.

இடம் கிடைத்ததற்குப் பிறகு ஹாஸ்டலிலே இடம் வேண்டுமென்று விண்ணப்பித்தோம். அப்போது அரசாங்கத்திலே ஓர் உத்தரவு இருந்தது. அதாவது மாணவனுடைய வீடு இருக்கும் இடத்திலிருந்து அந்த ஹாஸ்டலுக்கு 8 கிலோமீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி இல்லாத போது அந்த மாணவனுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, அன்றையதினம் அதிகாரிகள் அதை ஆராய்ந்து அதற்காக வழிவகை செய்து, விதி விலக்கு அளித்து அதன் காரணமாக அந்த மாணவன் இன்றையதினம் ஒரு பெரும் டாக்டராகப் பணிபுரிந்து வருகிறார். எனவே மிகவும் நலிந்து போயிருக்கின்ற மக்கள் முன்னேற நல்வழிமுறையிலே வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முடி திருத்துவோருக்கும், சலவையாளர்களுக்கும் வீடு கட்டுவதிலே ஆதி-திராவிடர் நலத் துறையிலிருந்து கொஞ்சம் பணம் ஒதுக்குவீர்களேயானால், பிற்பட்டோர் நலத் துறைக்குச் சாதகமாக இருக்கும் என்று கருதி, அவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்திலே அல்லது குடிசை மாற்று வாரியத்திலே சலுகைகள் விடுகள் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்—பழங்குடியினர், நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக்குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இறுதி காலம் வரையிலே பிற்பட்ட சமுதாய மக்களுக்காகவும், ஆதி திராவிட சமுதாய மக்களுக்காகவும் பாடுபட்டார்கள். இந்தச் சமுதாய மக்கள் தலைநிமிர்ந்து நடப்பதற்கு அவர்களுடைய பணிகள் காரணமாக இருந்தன என்பதையும் இந்த நேரத்திலே நினைவுறுத்திக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நமது புரட்சித் தலைவர் அவர்கள் அந்த அடிப்படையிலேதான் அமைச்சரவையிலே ஏற்கெனவே சேர்க்கப்பட்ட பிற்பட்ட சமுதாய மக்களைத் தவிர, மேலும் சில பிற்பட்ட சமுதாய மக்களைச் சேர்த்திருக்கின்றார்கள். அதற்காக நாம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(நேரம் 11-30)

இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, நலிந்த மக்களாகிய சலவையாளர்கள், முடி திருத்துவோர், மீனவர் போன்ற சமுதாய மக்களிலிருந்து ஒருவர்



கூட ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். ஆபீசராகவோ, மற்றும் நீதிபதியாகவோ, மாவட்ட நீதிபதியாகவோ வரவில்லை. அதுமட்டுமல்லாமல், சமுதாயத் துறையிலே பொது வாழ்க்கையில் பல ஆண்டுகாலம் அரசியலில் ஈடுபட்டு வந்தாலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் இங்கே பேசும்போது, தனிப்பட்ட ஒருவர் மீது புகார் கூறினார். அதனை ஆராய்ந்து ஒரு முடிவைச் சொல்கிறேன் என்று சொன்னேன். பார்லிமென்டரி புரசிஜர்படி நான் அதுகுறித்து தெரிவிக்க விரும்புகிறேன்.

PRACTICE AND PROCEDURE OF PARLIAMENT Page 779.

"It was against the rules of parliamentary debate and decorum to make defamatory statement or allegations of incriminatory nature against any person and the position was rather worse if such allegations were made against persons who were not in a position to defend themselves on the floor of the House. The House should not be made a forum where the conduct and character of persons should be brought into disrepute, as the person against whom allegations were made had no remedy against a speech made on the floor of the House which was privileged.

இம்மாதிரி ஒருவரைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டு அவர் தவறு இல்லாதவர் அல்லது தவறு செய்திருக்கிறார் என்று ஒரு உறுப்பினர் கருதுவாரானால், என்னென்ன குற்றங்கள் குறித்துச் சொல்ல வேண்டுமென்று தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தலைவர் அவர்களிடத்தில் அதைப்பற்றிச் சொல்லி, தலைவருக்கும் அது சரியாக இருக்கும் என்று அபிப்பிராயம் ஏற்படுமானால், அதற்கு மேல் அதுபற்றிப் பேசலாம். ஆனால் தலைவரிடத்தில் அதுபற்றி ஒன்றுமே சொல்லாமல், வெளியிலே இருக்கின்ற ஒருவரைப்பற்றி அவையிலே பேசுவது என்பது முறையாகாது. இவ்வாறு உறுப்பினர் ஒருவர் தலைவரின் அனுமதியைப் பெறாமல் வெளியில் இருக்கிற ஒருவரைப்பற்றி இவரென்று கூறக் கூடாது. அப்படிக் கூறினால்—

"In appropriate cases, the Member may be asked to withdraw them, or the Chair may even order the expunction of the allegations from the proceedings though this is done in exceptional cases only.

ஆகவே உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கீழ்க்கண்ட வார்த்தைகளை அவையில் சொல்லியிருக்கிறார்கள். *

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. பி. ஆர். சோலையா] [1984 மார்ச் 30

அடுத்ததாக, ஆதி திராவிட மக்கள் [illegible] இறந்துவிட்டார். உதவித்தொகை ரூபாய் 50 தருகிறார்கள். [illegible] கும் போயர் போன்ற சமுதாய மக்களுக்கும் கைத்தறி நெசவாளர் மக்களுக்கும் விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] சலவைத் தொழில் சம்பந்தமாக [illegible] தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, ஆதி திராவிட மக்களை கிராமங்களில் [illegible] போலவே, நலிந்த சமுதாய மக்களையும் கிராமங்களில் [illegible]கிறார்கள். 1959 ஆம் [illegible] கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து [illegible] ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது பேச வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து [illegible]கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலம் குறித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையினுடைய செயல்முறையைப் பற்றி பேரவையின் [illegible] இந்த [illegible] அந்த [illegible] நம்பிக்கையை நாம் எண்ணிப் பார்க்கிற போது, [illegible] முடியாது என்றாலும், நாம் எதிர்பார்த்த அந்த மாற்றத்தை, மறுமலர்ச்சியை நாம் உண்மையாகவே கொண்டுவரவில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

([illegible] தலைமை)



1984 மார்ச் 30] [திரு. க. இராமமூர்த்தி]

(நண்பகல் 12-00)

அதற்கான மற்ற காரணங்களுக்குள் நான் போக விரும்பவில்லை என்றாலும், இந்தியாவினுடைய முன்னாள் பிரதமர் பண்டித நேரு அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்த கருத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆதிதிராவிட மக்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு, கிராமங்களில் மனிதர்கள் புழங்க முடியாத இடங்களில், சுகாதார வசதிகள் கொஞ்சமும் இல்லாத இடங்களில், போக்குவரத்து வசதிகளே இல்லாத இடங்களில், குடி தண்ணீருக்கும் அவதிப்படுகிற இடங்களில், ஒதுக்குப்புறமான இடங்களில் வாழ்கிற நிலையை உருவாக்கி, அதுதான் அவர்களின் தலையெழுத்து என்று சொல்லத் தக்க நிலை இருந்தபோது, மிகுந்த வேதனையோடு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று துடித்தார்கள். ஒருமுறை அவருக்கு மிகவும் கடுமையான கோபம் வந்தபோதுதான், "சேரிகள்" என்ற வார்த்தையைக்கூட அவரால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில்தான், அவருடைய ஆலோசனையின் பேரில்தான், "காலனி" என்ற வார்த்தைகூட பழக்கத்தில் வந்தது. ஆனாலும் எல்லாவற்றையும் நாம் வேகமாக எண்ணினாலும், செயல்முறை என்று வருகிறபோது இருக்கிற தடைக்கற்களை மீறிச் செயல்படுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல என்பதைத்தான் காலம் காட்டியிருக்கிறது என்று கருதுகிறேன். இன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளில் மிகத் தெளிவாக ஒன்றைத் தெரிவித்தது. அதாவது குறைந்தபட்சம் பாதை வசதியும், குடி தண்ணீர் வசதியும் அனைத்து கிராமங்களிலும் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர்கள் வாழ்கிற அனைத்துப் பகுதிகளிலும் நிச்சயமாக இந்த வசதிகளை உருவாக்கித் தருவோம் என்கிற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 20 அம்சத் திட்டத்தின் முதற் குறிக்கோளாக ஆதிதிராவிடர்கள் வாழ்கிற பகுதிகளில் பாதை வசதியையும் குடி தண்ணீர் வசதியையும் தந்தாக வேண்டும். அந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் பல இடங்களில் சண்டையே கூட வந்தது. கிராமங்களில் மற்றவர்கள் குடியிருக்கிற பகுதிகளில் இருந்து அரிஜனங்களுக்குத் தண்ணீர் கொடுக்கலாமா, கொடுக்கக் கூடாதா என்று சண்டை வந்தது. ஒரே இடத்தில் தண்ணீர் டேங்க் வைத்து அதை இரண்டு பிரிவாகப் பிரித்துக் கொடுக்கலாமா என்பதில்கூட சண்டை வந்தது. தற்போது அந்தக் கட்டத்தையெல்லாம் கடந்து வந்துவிட்டோம். என்றாலும் நாம் ஒன்றைச் செய்தே ஆக வேண்டும். எனக்கு

கருத்துத் தெரிந்த நாட்களாக என்னுடைய பகுதியில் மட்டுமல்ல, நான் செல்லுகிற எல்லாப் பகுதிகளிலும் இருக்கிற நிலைமை என்னவென்றால், அரிஜனங்கள் எங்கே ஏற்கெனவே வசித்து வந்தார்களோ அந்தப் பகுதியில் இன்னமும் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. அதிலிருந்து அவர்கள் மாறி எங்கேயும் போய்விடவில்லை. நான் சிறுவனாக இருந்தபோது, அவர்கள் எந்தவிதமான சுகாதாரக் கேடுள்ள சூழ்நிலையில் இருந்தார்களோ அதே நிலையில்தான் இப்போதும் வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், அப்போதாவது அவர்கள் வசிக்கும் பகுதியில் நெருக்கடி இல்லாமல் இருந்தது. இப்போது ஜனத்தொகை வளர்ந்திருப்பதன் காரணமாக அங்கே நெருக்கடி அதிகமாகியிருக்கிறது. சுகாதாரக் கேடுகள் நிறைந்த நிலையில் தான் அவர்களின் வாழ்க்கை நிலைமை இன்னும் தொடர்ந்து வருவதைக் காண்கிறோம். இதையெல்லாம் மாற்றியாக வேண்டும் என்பதால் பரிகாரத்தமாக ஒரு ஏற்பாட்டைச் செய்தோம். அதன் அடிப்படையில் குடிசை மாற்று வாரியத்தின் வழியாக சுகாதாரமான இடங்களை அவர்களுக்குத் தந்து, அங்கே அவர்களைக் குடியமர்த்தி, அதன் மூலமாவது ஒரு மாற்றம் ஏற்படாதா என்று எதிர்பார்த்தோம். ஆனால் நாம் அதிலும் தோற்றுப் போனோம் என்பதுதான் உண்மை. நம்முடைய எண்ணத்திலோ, செயலிலோ எந்தக் குறையும் இல்லை. தேவையான அளவுக்கு அவர்களுக்குச் செய்திருக்கிறோம் என்றாலும் அவர்களை அங்கே முழுமையாக தங்கால் [illegible] முடியவில்லை. ஒன்று மற்றவர்களின் இடையீடு. மற்றவர்கள் அந்த இடங்களை அபகரித்துக் கொள்கிற சூழ்நிலை ஒன்று. மற்றது அவர்களின் இயற்கையான பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக, அவர்களே அங்கே தங்காமல் அதை வேறு யாருக்காவது விட்டுவிட்டு இருக்கிற நிலை. மற்றவர்களுக்கு விட்டுவிட்டு, மீண்டும் தங்களின் பழைய இடத்திற்கே போய்விட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். பொருளாதார நிலை காரணமாகவோ அவர்கள் செய்கிற தொழில் காரணமாகவோ,—அது சட்ட பூர்வமாக இருந்தாலும் சரி, சட்ட விரோதமான செயலாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏற்றவைகளாக அந்தக் குடியிருப்புகள் அமையவில்லை என்ற காரணத்தால், இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதிலிருந்து நாம் அவர்களை மீட்டாக வேண்டும் There must be a dynamic Scheme குறைந்தது சில மாவட்டங்களிலாவது சில ஊர்களை, சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளை சுகாதார வசதிகள் நிறைந்த முழுப் பகுதிகளாக மாற்றியமைத்து, அங்கே அவர்களை வாழ வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே திட்டத்தைத் தீட்டி, கொஞ்சம் அதிகமாக நிதி ஒதுக்கீடு தேவைப்பட்டாலும்



ஒதுக்கீடு செய்து, நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்க விரும்புகிறேன். நகரங்களிலேகூட நான் பார்க்கிறேன். சில காலத்திற்கு முன்பு கழிப்பிடங்கள் இல்லாத இடங்களில் இன்றைக்கும் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தெரு ஓரங்களை பெரியவர்களும், ஆண்களும் பெண்களும் கழிப்பிடங்களாகப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் மத்தியிலேதான் குடிநீர் இருக்கிறது. அங்கேதான் ஐ.ஏ.எஸ். படித்து பெரிய பதவி உயர்வு பெறுகிறவர்களாக இருந்தாலும், தங்களுடைய வாழ்க்கை ஆரம்பமாகிற நிலை தொடங்குகிறது. அப்படி ஒருவர் படித்துவிட்டு அங்கேயிருந்து வேலைக்கு வந்துவிட்டாலும், அவர்களைச் சார்ந்த உறவினர்கள் அங்கேயேதான் இருக்கிறார்கள். படித்தவர்கள் திரும்பிப் பார்க்க முடியாத அளவிற்கு தாங்கள் பிறந்த இடம் இருக்கும் நிலையைப் பார்க்கிறார்கள். இதனால் ஒட்டுமொத்தமாக இந்தச் சமுதாயத்தின் மீது விரக்தி ஏற்பட்டுவிடுகிறது. இதிலேயிருந்து விடுதலை பெற வேண்டும் என்றால், மாற்று ஏற்பாட்டை நாம் செய்தாக வேண்டும்.

வீடுகளைப் பொறுத்த வரையில், ஒரே வீட்டிலே, சமையல் அறையும், குடியிருப்புப் பகுதியும் தனித்தனியாகப் பிரிக்க முடியாத வீட்டில் ஒரு குடும்பம், இரண்டு குடும்பம், அண்ணன், தம்பி என்று குறைந்தபட்சம் ஐந்தாறு பேர் உள்ள நிலைமை பல இடங்களில் இருக்கின்றது. சில இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இத்தகைய நிலைகளிலிருந்து மாற்று ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும். கிராமப்புறங்களில் கழிப்பிடங்கள் கட்டுவது என்ற திட்டம் வந்தபோது, நான் மகிழ்ச்சியோடு ஆதரித்ததற்கு முக்கிய காரணம் அது கிராமப்புறங்களுக்குத் தேவை என்பதுதான். பல இடங்களில் கழிப்பிடங்கள் இல்லாததால், சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. ஆதி திராவிடர்கள் வாழ்கிற பகுதிகள் தனியாக இருக்கக் கூடாது என்று கருதி, நகரங்களில், ஊர்களில் மற்றவர்கள் வாழும் பகுதியில் வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று முயற்சியெல்லாம் செய்தோம். அதிலே எவ்வளவு தூரம் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக துணிச்சலோடு மற்றவர்கள் இருக்கின்ற பகுதிகளில் சுகாதார வசதிகள் நிறைந்த, குடிநீர் வசதி நிறைந்த குடியிருப்புப் பகுதிகளை அமைத்துத் தர வேண்டும். அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து "நீங்களே கட்டிக்கொள்ளுங்கள்" என்றால், அது நடக்காது. காண்ட்ராக்டர்களை விட்டு கட்டித் தருகிற வீடுகள் என்றால், அது வீடுகளாக இருக்காது. அவர்கள் அங்கே தங்கமாட்டார்கள். இதை அனுபவத்திலே நாம் பார்த்திருக்கிறோம். அரசாங்கம் நேரிடையாகப்

பொறுப்பேற்று குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்து, வாய்ப்பு நிறைந்ததாக வசதி நிறைந்ததாக, மனிதர்களாக வாழத்தக்க பகுதிகளாக மாற்றினால்தான், முழுமை பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்ட நலத் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். பிற்பட்ட மக்களாக வராத பகுதியினர் சமுதாயத்தில் 5 சதவிகிதத்தினராக இருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகம். ஒரு குறிப்பிட்ட சமுதாயம் ஐந்து சதவிதம் அல்லது 10 சதவிதம் அல்லது அதிகபட்சம் போனால், 10 சதவீதத்திற்கு மேல் இருக்காது என்று

(பிற்பகல் 12-10)

நான் நினைக்கிறேன். அவர்கள் மீது ஒரு வெறுப்போடு நாடே செயல்படுகிறதோ என்ற விரக்தியும், கோபமும் இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதோடு மட்டுமல்ல, இன்னொன்றையும் நாம் பார்க்கின்றோம். பிற்பட்டோர் நலத் துறையினுடைய பல்வேறு ஒதுக்கீடுகள் காரணமாக பிற்பட்டோருக்குள்ளேயே மன வேதனைகள், வருத்தங்கள், மனமாச்சரியங்கள், சண்டைகள், பொச்சரிப்புகள் என்ற நிலைமைகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் தெளிவாகக் காணுகின்றோம். பிற்பட்டோருடைய பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்காக 'சோஷியலி, எக்கனாமிகலி பேக்வேர்டு' (sccially, economically backward) என்றுதான் நாம் வைத்தது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால் 'சோஷியலி எக்கனாமிகலி பேக்வேர்டு' என்ற நிலைமைக்கு வரமுடியாதவர்கள் கூட, இதனுடைய பலனை அனுபவித்துக்கொண்டிருக்கக் கூடிய நிலைமையை நாம் மறந்துவிட முடியாது. அதைப் போலவே இந்தப் பிற்பட்டோர் பகுதியிலே வராத முற்பட்டோர் இனமாக நாம் கருதினாலும் சரி அல்லது வேறு இனமாக நாம் கருதினாலும் சரி, அந்த இனத்தைச் சார்ந்த மிக மிக ஏழ்மையிலே இருக்கின்றவர்கள் பலர் மாணவர்களாக இருந்து, படித்து வெளியே வருகின்ற நிலை ஏற்படுகின்றபோது, அவர்கள் வாய்ப்பற்று, தங்களுடைய திறமையின் காரணமாக, தங்களுடைய முயற்சியின் காரணமாக ஏற்பட்ட முயற்சிகளுக்கு ஒரு விடிவு காலம் வராத நிலை ஏற்படுகின்றபோது, அவர்கள் சமுதாயத்தினுடைய விரோதிகளாகவே மாறிவிடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இது ஒரு வளர்ந்து வருகிற சமுதாய மாற்றத்திற்கு நல்லதல்ல என்பதை நாம் மனதிலே கொண்டாக வேண்டும். பல்வேறு நிலைமைகள் காரணமாக பிற்பட்டோருக்கான ஒதுக்கீடு கொஞ்சம் கொஞ்சமாக அதி



கரித்து, அரிசனங்களுக்கு என்ற ஒதுக்கீடு அதிகமாக வந்து, இந்த ஒதுக்கீடுகளே மற்றவர்களுக்கு எதிர்ப்பானது என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதை மாற்றியமைத்தாக வேண்டும். அதற்கு ஒரு மாற்று வழி கண்டாக வேண்டும். இன்னொன்று பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஒதுக்கீட்டை பொருளாதாரத்தின் அடிப்படையிலே கொண்டுவரவேண்டுமென்று கருத்துத் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகள் எடுத்தபோது, அதை எதிர்க்கின்ற நிலையிலே நான் முன்வரிசையில் நின்றேன். எனக்கு மாறுபாடு நிச்சயமாக இருந்தது. இன்றைக்கும் கூட சில கருத்துக்கள் உண்டு. ஆனால் நானே உணருகின்றேன், ஒரு மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டிலே 95 மார்க் வாங்கியவர்களுக்குத் தான் இடம் கொடுப்பது என்ற முடிவினை நாம் தெளிவாக அறிவித்திருக்கின்ற போது 10 பேர்கள், அல்லது 15 பேர்கள் அல்லது 100 பேர்கள் வாங்கினால், அதிலே யார் மிக மிக ஏழையாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு முதலிடம் என்ற அளவுக்கு நாம் மாற்றியமைத்தாக வேண்டும். பிற்பட்டோர் என்பதற்காக ஒரு ஒதுக்கீட்டை வாங்கி அதிலே யார் வசதி பெற்றவர்களோ, வாய்ப்புப் பெற்றவர்களோ, செல்வாக்குப் பெற்றவர்களோ அவர்களுக்கு இது கிடைத்துவிடுகிறது என்ற நிலைமை வருகிறபோது, பிற்பட்டோர் அவர்களுடைய சமுதாயத்திலோ, பொருளாதாரத் துறையிலோ ஏற்றம் பெறுவதில்லை. அரசும், ஆட்சியும், மக்களும், அவர்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை அந்தச் சமுதாயத்திலே ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே இதிலே நமக்கு ஒரு மறுபரிசீலனை தேவை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புகின்றேன். அது கல்விக்காக மட்டுமல்ல; உத்தியோகங்களுக்காகவும் அதும். அரசுப் பதவிகளுக்காக மட்டுமல்ல; மற்ற பதவிகளுக்கும் அதும் என்று சொல்ல விரும்புகின்றேன். காரணம் இதிலே இன்னொன்றும் இருக்கிறது. பிற்பட்டோருக்கான நலத் திட்டங்களுக்காக சிலவற்றை நாம் ஒதுக்குகின்றோம். அங்கேயும், பிற்பட்டோர் இனத்திலே வருகின்ற சிறு இனங்களைப் பொறுத்தவரையிலும்—பிற்பட்டோர் இனமாகவே இருக்கின்ற சிறு சிறு இனங்கள், சில ஆயிரம் பேர்கள் மட்டுமே இருக்கின்ற ஜாதிகள், மற்றவர்கள்— அவர்களுடைய நிலை என்ன என்பதை நாம் பார்த்தாக வேண்டும். பல நேரங்களில் அவர்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போகிறது. இன்னும் சில இடங்களிலே, இப்போது பெருவாரியாக பிற்பட்டோர் இனம் என்று யாரைக் குறிப்பிடுகிறோமோ, அவர்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போகிறது. இதற்கெல்லாம் ஒரு மாற்றுக் காண வேண்டுமென்று சொன்னால்,

[திரு. க. இராமமூர்த்தி] [1984 மார்ச் 30

இந்தப் பிற்பட்டோர் என்ற பொதுவான வார்த்தையோடு, பொதுவான கருத்தோடு அவர்களுடைய பொருளாதார நிலைமையையும் இணைத்து ஒரு பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் வந்திருக்கிறதென்று நான் கருதுகின்றேன். இல்லையென்றால் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக இது ஒரு வர்க்கப் போராட்டமாக, பணம் படைத்தவர்கள், பணம் இல்லாதவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள், வாய்ப்பற்றவர்கள், அரசியல் ரீதியாக அல்லது வேறு ரீதியில் அல்லது அவர்கள் சார்ந்திருக்கின்ற குடும்பங்களுடைய கல்வி அடிப்படையிலே கிடைத்த உத்தியோக ரீதியாக வளர்ந்தவர்கள், வளராதவர்கள் என்று அவர்களுக்குள்ளேயே போராட்ட உணர்வும், அல்லது வெறுப்பு உணர்வும் மலிந்துவிடுகிற நிலைமை ஏற்பட்டுவிடும். இவற்றையெல்லாம் மாற்றியமைப்பதற்கு ஏற்ற வகையிலே திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்ல வேண்டியதை என் கடமையாகக் கருதுகிறேன். அரசு இவற்றைப் பரிசீலிக்கும் என்ற நம்பிக்கையோடு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத் துறை பணிகள்பற்றி ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்றாலும், நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, இச்சபையில் அளிக்கும் முதல் கொள்கை விளக்கக் குறிப்பு இது என்பதால், இந்தத் துறை பற்றியும், இந்தத் துறையில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் பற்றியும் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்து வைத்தார்கள். தமிழகத்திலே கிட்டத்தட்ட 177 வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கிட்டத்தட்ட மொத்த மக்கள் தொகையில் 54 சதவிகிதமாக இருக்கிறார்கள். 1921-ல் எடுத்த மக்கள் தொகைக் கணக்குப்படி, 54 சதவிகிதம் என்று கணக்கிட்டு, அவர்கள் 2.65 கோடி அளவுக்கு இருக்கிறார்கள். மக்கள் தொகைக் கணக்குப் புள்ளி விவரங்களிலிருந்து இந்த விவரங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. 196[illegible], 1962-ஆம் ஆண்டுக்குப் பிறகு எடுத்த மக்கள் தொகைக் கணக்கின்படி கணக்கிட்டால், இன்னும் பிற்பட்டோர் தொகை அதிகப்படும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எனவே பெரிய மக்கள் கூட்டத்திற்குப் பணிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்தத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்வது என்னுடைய கடமையாகிறது. பேரவையைப் பொறுத்தவரையில், பிற்பட்டவர்களாக [illegible] இருந்தாலும், இந்தக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திலே ஐந்து உறுப்பினர்கள் தான் கலந்து கொண்டார்கள். [illegible] அதிகமாக வாழ்கிற, பெரும்பான்



1984 மார்ச் 30] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

மையாக வாழ்கிற பிற்பட்ட மக்களுடைய கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, தொழிற் கல்வி போன்ற பல்வேறு பிரச்சினைகளை மிகத் தீவிரமாக, நுணுக்கமாக ஆராய வேண்டிய கட்டத்தில் நாமெல்லாம் இருக்கிறோம். பிற்பட்டவர்கள் என்னும்போது, அவர்கள் யார் என்று நமக்கே இன்னும் தெரியவில்லை. யார், எந்த சாதியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் உயர்ந்தவர்கள் தானா என்பது தெரியவில்லை. யாருக்கு வசதி ஏற்படுகிறதோ, அவரை உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர் என்று மற்றவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னது போல, மொத்தமாகப் பிற்பட்டோருக்கு என்று 50 சதவிகித ஒதுக்கீடு இருந்தாலும், பிற்பட்டவர்களிலே படித்தவர்களாக, விவரம் தெரிந்தவர்களாக இருக்கிறவர்கள் அதிலே பெரும் பகுதியைத் தட்டிச் சென்று விடுகிறார்கள் என்பது உண்மைதான். 177 பிரிவைச் சேர்ந்தவர்கள் இருக்கும்போது, அரசியல் ஆதிக்கம் பெற்றவர்கள், விவரம் தெரிந்தவர்கள் தட்டிக் கொண்டு போகிறார்கள் என்று நினைப்பது சகஜமாகி வருகிறது. அதற்கு என்ன செய்யலாம் என்பதிலே மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்டோருக்கு 50 சதவிகித ஒதுக்கீடு என்பதுகூட சாதாரணமாக நினைத்து முடிவு செய்யப்பட்டதல்ல. மிகத் திட்டமிட்டு, இவ்வளவு பெரும்பான்மையுள்ள பிற்பட்ட மக்களுக்குப் படிப்பு, வேலை வாய்ப்பில் அதிகச் சலுகை வழங்க வேண்டுமென்றுதான் மிகத் துணிச்சலோடு 50 சதவிகித இட ஒதுக்கீட்டை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அறிவித்த பின்னாலே, 51 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்ற கணக்குப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கருக்கை[illegible] இங்கே கவனத்திலே கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொ[illegible] விவரம் தெரிந்த பெரியவர்கள் பிற்பட்டோர் நலத்துறை, பிற்பட்டோ[illegible] னேற்றம் பற்றி, அவர்களை கல்வி, பொருளாதாரம், வேலை வா[illegible] எந்த அளவுக்கு முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்பது பற்[illegible] தீவிரமாக ஆராய்ந்து, நல்ல கருத்துக்களைத் தந்தால், அதையெல்ல[illegible] அரசு ஏற்று, செயல்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இ[illegible] ஒரு கருத்தைச் சொன்னார்கள். பிற்பட்டோர் நலத் துறை[illegible] குறைந்த தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்க[illegible] ஒரு பெரிய மக்கள் கூட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற தொகைதான் எ[illegible] என்னுடைய துறையைப் பொறுத்தவரையில், ஒதுக்கப்படுகிற இந்தத்[illegible] யில் பிற்பட்ட மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்[illegible] அவர்களுக்குச் சில பயிற்சிகள் போன்ற சில காரியங்களை மட்[illegible]

இந்தத் துறை ஏற்று, செயல்படுத்தி வருகிறது. ஆனால் பிற்பட்ட மக்களுக்காக எல்லாத் துறைகளிலும் பல காரியங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தன்னிறைவுத் திட்டம் என்று எடுத்துக்கொண்டால், பிற்பட்ட பகுதி மக்களுக்கு இது பயன்படுகிறது. அதற்காக 220 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தைச் செலவு செய்வதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த அளவுக்கு இந்தத் தன்னிறைவுத் திட்டம் பிற்பட்ட மக்கள் வாழும் பகுதிகளைச் சென்றடைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதைப்போல சத்துணவுத் திட்டம். இத்திட்டத்தினால் பெரும்பாலும் ஏழை எளிய மக்கள், நலிந்த மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள பிற்பட்டவர்களின் குழந்தைகள்தான் பசியாறி மகிழ்கிறார்கள். அதனால் அந்தத் தாய்மார்கள் மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பான திட்டம், 134 கோடி ரூபாய் திட்டம், அதிகமான அளவுக்கு பிற்பட்ட சமுதாய மக்களின் குழந்தைகளைத்தான் சென்றடைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல குடும்பத்தில் ஒருவருக்கு வேலைத் திட்டம்; ஆதரவற்ற பெண்களுக்கு பல்வேறு சமூக நலத் திட்டங்கள்; ஒருங்கிணைந்த குழந்தைகள் நலப் பணித் திட்டம்; படித்த இளைஞர்களுக்கு படி வழங்குகிற திட்டம்; வேளாண்மை, கல்வி இப்படி பல திட்டங்களுக்காகப் பல கோடி ரூபாய்களைச் செலவிட்டு; பல துறைகள் செயல்பட்டு வருகின்றன என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். எனவே இந்தத் துறைக்கு 10 கோடி, 11 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. நிதிநிலை அறிக்கையிலே செய்யப்பட்டுள்ள பெரும்பாலான நிதி ஒதுக்கீடுகள் பிற்பட்ட மக்களைச் சென்றடைகின்றன என்பதைச் சொல்லிக் கொள்வதிலேயும் பெருமைப்படுகிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை 1947-48-லிருந்து தொடர்ந்து வந்தாலும், 1969 லிருந்துதான் தனித் துறையாக இயங்கி வருகிறது. 1949-க்கு முன் பிற்பட்டோர் நலம் தொழிலாளர் நல ஆணையாளரால் கவனிக்கப்பட்டது. குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் நலம் காவல் துறையினரால் கவனிக்கப்பட்டது. 1—4—1949 முதல் 1969 வரை ஆதி திராவிடர் நலத் துறையால் கவனிக்கப்பட்டு வந்தது. 1969 மே முதல் பிற்பட்டோர் நலத் துறை புதிதாக ஏற்படுத்தப்பட்டது. இது, பிற்பட்டோர்





மக்களுக்கு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எனவே, இந்தத் துறை குறைந்த அளவிலே, சுமார் 11 கோடி ரூபாய் அளவிலே செலவு செய்கிறது என்றாலுங்கூட, முன்பு சொன்னதுபோல பல்வேறு துறைகளின் மூலமாகப் பல திட்டங்களை பிற்பட்ட மக்களுக்காக இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. ஆகையால் இந்த ஆட்சியிலே சலுகைகள் கிடைக்கின்றன; வசதிகள் கிடைக்கின்றன; நல்ல வேலை வாய்ப்பு, கல்வி எல்லாம் கிடைக்கிறது என்று பிற்படுத்தப்பட்ட மக்கள், மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 50 சதவிகித ஒதுக்கீட்டைப்பற்றிச் சொல்ல வேண்டும். தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக இருப்பதால் இட ஒதுக்கீடு 31 சதவிகிதம் என்று இருந்ததை 50 சதவிகிதமாக உயர்த்தியதால், 51 லட்சம் பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற ஒன்றை 10 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்த அரசு அமைத்தது. இதுவரையில் 23 தொழிற் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதற்காக 11 லட்சத்து 9 ஆயிரம் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது. இதன் மூலம் 717 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 2,500 ரூபாய் என்றிருந்ததை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 5,000 ரூபாயாக உயர்த்தினார்கள். அதுபோலவே, வளர்ந்து வரும் சமுதாய முன்னேற்றத்தையும், மாற்றங்களையும் கருத்தில் கொண்டு, பிற்படுத்தப்பட்டோரின் பட்டியலைப் பரிசீலனை செய்யவும், கொடுத்துள்ள சலுகைகள் சரியான முறையில் பயன் அளித்துள்ளனவா என்பதை அறியவும் இந்த அரசால் நியமிக்கப்பட்ட இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள்.

மத்திய அரசுப் பணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற மத்திய அரசுத் தேர்வுகளின் முடிவுகளை கடந்த சில ஆண்டுகளாகப் பார்க்கும்போது, நம் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அவற்றில் அதிக அளவில் வெற்றி பெறுவதில்லை என்ற உண்மை தெரியவரும். இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்களைச் சொல்லலாம். அதில் ஒன்று, பிற்பட்டோருக்கென்று மத்திய அரசின்

தனியே இட ஒதுக்கீடு இல்லாமல் இருப்பது. இந்த சந்தர்ப்பத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிற்பட்டவர்களுக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று 'மண்டல் கமிஷன்' பரிந்துரை செய்திருந்தபோதும், அதை மைய அரசு இதுவரை அமல்படுத்தாததினால், பிற்பட்டோருக்கு சரியான வேலை வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்பதை உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். இது சம்பந்தமான குறிப்புகளை தமிழக அரசு மைய அரசிற்கு அனுப்பி வைத்துள்ளது.

என்னுடைய கருத்து என்னவென்றால், இந்திய அரசுப் பணிகளில் பிற்பட்டோர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு மற்றொரு காரணம் அவர்களின் குறைந்த கல்வித் தரமும், தேர்வுகளுக்குத் தேவையான பயிற்சி இல்லாமையும் தான். இதைக் கருத்தில் கொண்டு, 1983 ஆம் ஆண்டு புதுடில்லியிலுள்ள 'ஸ்டாப் ஸ்டடி சர்கிள்' என்ற நிறுவனத்திற்கு, பயிற்சி பெறுவதற்காக பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த 7 பேர் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் இருவர் இறுதித் தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்ற பிறகு நலிந்த நிலையிலுள்ள ஒட்டர், நரிக்குறவர், நாவிதர், சலவைத் தொழிலாளர் ஆகியோர்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனை வழங்கும் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்து, 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 13 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள 157.58 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2,269 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியது. 1983-84 ஆம் ஆண்டுக்கு இதற்காக ரூபாய் 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டிற்கு ரூபாய் 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டு மனைப் பட்டாக்களை இந்த அரசு தாராளமாக ஒதுக்கிக் கொடுத்தும், இதுவரையில் யாரும் ஒதுக்கப்பட்டுள்ள மனைகளில் வீடு கட்டவில்லை.

இந்தத் துறையின் மூலமாக டி.என்.சி. இனத்தவருக்காக நடத்தப்பட்டு வரும் 277 பள்ளிகளில் 50,463 பேர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளிகளில் 1,754 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எட்டாம் வகுப்பு வரை படிக்கும் டி.என்.சி. மாணவ மாணவியருக்கு சீருடை வழங்குவதற்காக 25 லட்சத்து 48 ஆயிரம் ரூபாயும், உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் டி.என்.சி. மற்றும் பிற்பட்ட மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்காக 10 லட்சத்து 2 ஆயிரம் ரூபாயும் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக 23 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் 40 ஆயிரம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

இத்துறையால் இதுவரை நடத்தப்பட்டுவரும் மாணவர் இல்லங்கள் 483. இவற்றில் 68 டி.என்.சி. மாணவர்களுக்கானது. இவ்விடுதிகளில் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்த 23,028 மாணவ மாணவியரும், டி.என்.சி. இனத்தைச் சேர்ந்த 5,834 மாணவ மாணவியரும் தங்கிப் படித்து வருகின்றனர். மொத்தம் 28,862.

இந்த 483 விடுதிகளில் 50 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, அவற்றில் 40 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 10 விடுதிகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, அறிவிக்கப்பட்ட 40 விடுதிகளையும் சேர்த்து மொத்தம் 50 உள்ளிட்ட 523 விடுதிகள் பிற்பட்டவர்கள் மற்றும் டி.என்.சி. மாணவர்களுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இதுவரையிலே 50-க்குத்தான் கட்டடம் கட்ட முடிவெடுத்திருக்கின்றார்கள். இந்த ஆண்டு தொடங்கப்படுவதைச் சேர்த்து 473 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதற்குத் தோராயமாக பார்க்கப் போனால்கூட, ரூபாய் 50 கோடி தேவைப்படும். வாடகைக் கட்டடங்களிலே இருக்கின்ற, கிட்டத்தட்ட 433 விடுதிகளின் சொந்தக்காரர்கள், அந்தக் கட்டடங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றார்கள். அந்த விடுதிகள் தகுதியான கட்டடங்களிலே இல்லை. அதைப் பழுதுபார்த்துத் தர மாட்டேன் என்கிறார்கள். அதைப் பழுதுபார்த்துத் தாருங்கள் என்றாலும், அதுவும் செய்து தரமாட்டேன் என்கின்றார்கள். எனவே 50 கட்டடங்கள்

(பிற்பகல் 12-30)

கட்டி முடித்துவிட்டு, தொடர்ந்து அதிகமான அளவிலே கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கின்றோம். இங்கே தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டுவரும் 47 விடுதிகளுக்கு இந்த ஆண்டு 10 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் உணவு மானியமாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. படிப்பு உதவித் தொகைக்காக பிற்பட்ட மாணவர்களுக்காக ரூபாய் 3 கோடியே 25 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாயும், டி.என்.சி. மாணவர்களுக்கு 43 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயும் இந்த ஆண்டு ஒதுக்கப் பட்டுள்ளது.

...கூடிய பள்ளிகள் குறித்தும், கல்வியின் தரத்தைக் குறித்தும் சொன்னார்கள். அதிலே கலந்து கொண்டு பேசிய பெரும்பான்மையானவர்கள், இந்தப் பள்ளிகளின் தரத்தையும், கல்வியின் தரத்தையும், மாணவர்களின் தரத்தையும் பெருமையோடு சுட்டிக்காட்டியதை நான் உள்ளபடியே மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன். ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக தமிழகத்தில் ஏறத்தாழ 1,192 பள்ளிகளை இந்த மக்களின் குழந்தைகள் நலம் பெறுகிற வகையிலும், பழங்குடி மக்களின் குழந்தைகளின் நலம் பெறுகிற வகையிலும் நடத்தி வருகிறோம் என்பதையும், இந்தப் பள்ளிகளின் மூலமாக ஏறத்தாழ 2.16 இலட்சம் மாணவ-மாணவியர் பயின்று பலன் பெற்று வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறைக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற மொத்த நிதியில் 2/8 பங்கு நலத் துறை மூலமாக இயங்குகிற பள்ளிகளும், அவைகளைப் பராமரிக்கவும் கல்வியின் தரத்தைச் சிறக்கச் செய்யவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 48.28 கோடி ரூபாயில் ஏறத்தாழ 26.17 கோடி இந்தத் துறையின் மூலமாக இயங்கி வருகிற பள்ளிகளின் வளர்ச்சிக்காக செலவழிக்கப்படுகிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், இந்தத் துறையின் மூலமாக இயங்கி வருகிற பள்ளிகளைக் குறிப்பிட்டுச் சொல்லி, அரசுக்கு பயன்தருகிற பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் பேசுகிற நேரத்தில் கல்வித் துறையின் மூலமாக வெளியிடப்படுகிற அரசாணைகள் ஆதிதிராவிடத் துறைப் பள்ளிகளுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தாலும், ஒருசில இடங்களில் கடைப் பிடிக்கப்படவில்லையென்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரையில், கல்வித் துறையின் மூலமாக வெளியிடப்படுகிற அரசாணைகள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என்ற அளவில் நாம் ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறோம் என்பதையும், குறிப்பாக பணி விதிகளைப் பொறுத்தவரையில், அவைகள் பொருந்தாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அதற்கென்று தனியாகப் பணிவிதிகள் இருக்கின்றன என்பதை [illegible] கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக நலத் துறையின் மூலமாக இயங்குகிற பள்ளிகளில் உள்ள ஆசிரியப் பெருமக்களின் [illegible] பல்வேறு பிரச்சினைகள் குறித்து எடுத்துச் சொன்னார்கள். [illegible] யாக தென்னாற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள் மூலமாக பள்ளிகளுக்காக ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் பதவி [illegible]



இந்தத் துறையின் மூலமாக இருக்கக்கூடிய பள்ளிகளின் வளர்ச்சியைப் பற்றி [illegible] கல்வியின் தரத்தைக் கண்காணிக்கக்கூடிய அளவிலும், இருக்க வேண்டி [illegible] பணிமூப்பு பெற்றிருக்கிற ஆசிரியர்களை [illegible] அந்தப் பணியை மேற்கொள்ளவேண்டுமென்ற உணர்வோடு [illegible] கேட்டிருக்கிறார்கள். அந்த உணர்வோடு அரசு நடவடிக்கை [illegible] தங்கள் மூலமாக இந்த அவைக்கும் [illegible] விரும்புகிறேன். குறிப்பாக இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப் படுத்த இருப்பதன் மூலமாக, மற்ற மாவட்டங்களுக்கு இதை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தையும் நாம் கொண்டிருக்கிறோம். அவர்கள் பேசுகிற நேரத்தில், நலத் துறையில் இருக்கக்கூடிய துணை இயக்குநர் பதவியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, தற்போது கல்வித் துறையிலிருந்து அயல் பணியில் (டெபுடேஷன்) வந்து துணை இயக்குநர் பதவியில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் காரணத்தின் அடிப்படையில் வருங்காலத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அந்த நடவடிக்கை நலத்துறையின் மூலமாக இருக்கும் பள்ளிகளில் உள்ள விதிமுறைகளுக்கேற்ப பணிமூப்பு பெற்றிருப்பவர்கள் இருந்தால், அவர்களை நியமிப்பதன் மூலம் நடக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கு அதில் எந்தவித தயக்கமும் இல்லையென்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

இன்னொரு கருத்தையும் அவர் தெரிவித்தார். அதாவது நலத் துறைக்காக என்று தனியாக ஒரு டி.ஈ.ஓ. பதவி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அரசு அந்த வகையில் ஒப்புக் கொண்டதோடு, தற்போது இருக்கிற டெபுடி டைரக்டருக்கு உதவியாக இருந்து, இந்தத் துறையின் மூலம் இருக்கிற அத்தனை பள்ளிகளையும் மேற்பார்வையிட்டு பராமரிக்கிற பணியைச் செய்ய வேண்டுமென்று அரசு புதிய D.E.O. பதவி ஒன்றுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆனால் அந்தப் புதிய பதவிக்கு டி.ஈ.ஓ. என்று பெயர் சொல்லாமல், அசிஸ்டெண்ட் டைரக்டர் என்று சொல்லியிருக்கிறோம். காரணம் தமிழகம் முழுவதுமிருக்கிற அனைத்து நலத் துறைப் பள்ளிகளையும் அவர் பராமரிக்க வேண்டியிருக்கிற காரணத்தால், அசிஸ்டெண்ட் டைரக்டர் என்று அழைக்கப்படுகிற அளவுக்கு அந்தப் பதவியை உருவாக்க இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. நம் துறை மூலமாக தமிழகம் முழுவதுமாக இருக்கும் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள், குழந்தைகள் நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்பதையும், அவ்வாறு பெறுகிற கல்வியை முழுமையாகப் பெற வேண்டும் என்பதையும் நாம் உணர்ந்திருப்பதால், அதற்குத் தேவையான அளவுக்கு ஆசிரியர்கள் இருக்க வேண்டும், அவர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்றுத் தர வேண்டும் என்பதை நான் உளமார ஏற்றுக்கொள்கிறேன். அந்த வகையில் தமிழகம் முழுவதும் இருக்கிற இத்தகைய நலப் பள்ளிகளில் இன்னும் நிரப்பாமல் இருக்கிற ஆசிரியர் பணியிடங்களை ஆராய்ந்து பார்த்து அவையெல்லாம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்று இத்துறை இயக்குநர் மூலமாக அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் துறை அலுவலர்களுக்கும் தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே அத்தகைய நிலைமைகள் இருக்குமானால், அவைகளையெல்லாம் மாற்றுகிற நடவடிக்கைகளை அரசு முறையாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பல உறுப்பினர்கள் போலிச் சான்றிதழ்களைப் பெற்று வேலையில் சேருவதற்கும், அல்லது பள்ளி, கல்லூரிகளில் சேருவதற்கும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் இங்கே சொல்லப்பட்டது. இது குறித்து கோரிக்கைகள் வந்ததோடு மட்டுமன்றி, இந்தக் குறைபாட்டைக் களைய வேண்டும் என்று அரசின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஏற்கெனவே வட்டாட்சியர் மட்டத்தில் வழங்கப்பட்டு வந்த இத்தகைய சான்றிதழ்கள் இனி மாற்றி வழங்கப்பட வேண்டும் என்று அரசு மட்டத்திலே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட நிர்வாகத் துறையின் ஆணையராக இருந்து ஓய்வுபெற்றுள்ள திரு. பசுபதி அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவும் அரசுக்குப் பரிந்துரை அளித்ததற்கு ஏற்ப தமிழகத்தில் இருக்கிற கொண்டாரெட்டி, காட்டுநாய்க்கன் ஆகிய இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சாதிச் சான்றிதழ் கேட்டு வரும் போது, அத்தகைய சான்றிதழ்களை வட்ட ஆட்சியரிடம் பெற வேண்டும் என்கிற நிலையை மாற்றி, இனி கோட்டாட்சித் தலைவரிடம் (ஆர்.டி.ஓ.) வாங்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம். இனி அந்த இரண்டு சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் தேவையான சாதிச் சான்றிதழ்களை



கோட்டாட்சித் தலைவர்கள் தான் வழங்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம். இதற்கான பிரத்தியேகமான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நாம் எடுப்பதன் மூலமாக தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள இயலுவதோடு, போலிச் சாதிச் சான்றிதழ்களைப் பெற்று நியாயமில்லாமல் மற்றவர்கள் சலுகைகளைப் பெறுவதைத் தடுக்கவும், உண்மையிலேயே அத்தகைய சலுகைகளைப் பெற வேண்டிய பழங்குடியினர் மட்டுமே இனி அவைகளைப் பெறவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். தவறுகள் நடைபெறுவதைக் கட்டுப்படுத்தவும் இது பயனுள்ளதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். எனவே உண்மையிலேயே பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சலுகைகளைப் பெறுவதற்கான முறையில் வழிவகைகள் காண இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இரண்டு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அதில் ஒன்று வீடுகளைக் கட்டுவது குறித்து சொல்லப்பட்டதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தை ஆண்டபோது, இலவச வீடுகளைத் "தாட்கோ" மூலம் கட்டித் தந்தது என்றும், இப்போது இந்த அரசு வந்த பிறகு அதை நிறுத்தி விட்டதைப்போலவும் இங்கே பேசியிருக்கிறார்கள். எனவே அவருக்கு ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு "தாட்கோ" மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்பதை கொள்கையாக எடுத்துக் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே நான்காயிரம் ரூபாய் என்ற அளவிலே கொடுக்கப்பட்டு வந்த அந்தத் தொகையை இந்த அரசு தற்போது மாற்றி 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. "தாட்கோ"-வின் மூலமாக வழங்கப்படுகிற அந்தத் தொகை முழுவதும் மானியமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர அவர்களே சொந்தமாக உழைத்து இத்தகைய வீடுகளைக் கட்டிக்கொள்ள முன்வந்தால், இந்த ஆறாயிரம் ரூபாய் மானிய தொகைக்கு மேலாக 750 ரூபாயை அவர்களுடைய உழைப்புக்காக அளிக்கலாம் என்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள், ஆணை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். "தாட்கோ" மூலமாக மட்டும் வீடுகளைக் கட்டவில்லை. வேறு பல திட்டங்

கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே இங்கே கூட விவாதத்திலே பங்கு கொண்டு பேசிய உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் குறிப்பாக காலணி தைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தி வருவதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டும், சென்ற ஆண்டும் அவர்களுக்கு அளித்ததைப் போல, 500 அருந்ததியர்கள் பயன் பெறுகின்ற விதத்திலே ஏறத்தாழ ரூபாய் 37.50 லட்சம் செலவில் அவர்களுக்கு பங்குகளை அளித்து அதன் மூலமாக நிரந்தரமான வேலை வாய்ப்பினைப் பெறுகின்ற சலுகைகளை அவர்களுக்குப் பெற்றுத் தருகின்ற நடவடிக்கைகளை நாம் எடுக்க இருக்கிறோம். இந்தக் குறிப்பிட்ட திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு நபருக்கு 7,500 ரூபாய் என்கின்ற அளவுக்கு, பங்கை உருவாக்குவதற்கு 5,500 ரூபாயும், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற தையல் யந்திரம் போன்ற இதர கருவிகள் (implements) வாங்குவதற்கு 1,500 ரூபாயும் மூலதனச் செலவிற்காக 500 ரூபாயும், 500 பேர்கள் பயன் பெறுகின்ற விதத்தில் இந்த ஆண்டும் நாம் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி இருக்கின்றோம் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் பேசுகிற நேரத்தில் இவர்கள் தயாரிக்கக் கூடிய அந்தத் தோல் பொருட்களை நல்ல முறையிலே விற்பனை செய்வதற்கான வழி வகைகளை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதை நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட துறைகளைக் கலந்தாலோசித்து இவர்கள் உருவாக்கக்கூடிய தோல் பொருட்களை நல்ல முறையிலே விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

உறுப்பினர் திரு. தால் அவர்கள் பேசும்போது, தொழிற்சாலைகளை அமைத்து நிரந்தர வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருகின்ற நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டும் கூட இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதிக்கு அருகிலே ஒரு நூற்பாலை அமைத்து, அதன் மூலமாக ஏறத்தாழ 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருகின்ற நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். இவ்வாறு உருவாக்குகின்ற இந்த நூற்பாலையைப் பொறுத்தவரையில், தற்போது அந்தப் பணிகள் நின்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நூற்பாலைக்குத் தேவைப்படுகின்ற யந்திரங்கள் வாங்குகின்ற பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன



என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த நூற்பாலை ஏறத்தாழ 4 கோடி ரூபாயிலே அங்கு அமைய இருக்கிறது. இந்த 4 கோடி ரூபாயிலும், 2 கோடி ரூபாயை நாம் மத்திய அரசினுடைய சிறப்பு நிதி உதவியிலிருந்து பெற இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, மொத்தமாக வேலை வாய்ப்பினைப் பெறுகின்ற 400 பேர்களில் 200 பேர்கள் ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டுமென்று நாம் வரைமுறைகளை விதித்திருக்கின்றோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாக 200 ஆதிதிராவிடர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருகின்ற நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய கிராமப் பகுதிகள் மேன்மை பெறுகின்ற விதத்திலே, கிராமங்களிலே வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் நிரந்தரமான வேலை வாய்ப்பினைப் பெறுகின்ற நடவடிக்கைகளையும் நாம் எடுத்து வந்திருக்கிறோம் என்பதை இந்த அவைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், நகர்ப் புறங்களில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களும் இத்தகைய திட்டங்களின் மூலமாக மேன்மை பெற அரசு கொடுக்கக் கூடிய சலுகைகளை அவர்கள் முழுவதுமாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் நடவடிக்கை முடியும் வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அதன் மூலமாக சுய வேலை வாய்ப்பிலே ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு, நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் மேன்மை பெறுகின்ற விதத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் விரும்புகின்ற தொழிலில் அவர்கள் ஈடுபடுகின்ற விதத்தில், நாம் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். இவ்வாறு அளிக்கின்ற இந்தப் பயிற்சிக்காக மட்டும் 18 லட்சம் ரூபாயினை நாம் ஒதுக்க இருக்கிறோம். அந்தப் பயிற்சிக்காலம் மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரையிலே இருக்கும். இந்த சுய வேலை வாய்ப்பினைப் பொறுத்த அளவில், சுயவேலை வாய்ப்பிலே பங்கு கொண்டு, அதை ஏற்றுக்கொண்டு, ஏறத்தாழ 3,500 ஆதிதிராவிடர்கள் பயனைப் பெறுகின்ற விதத்தில் மானியமாக 70 லட்சம் ரூபாயை ஒதுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 30

தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்த மக்களுடைய கல்வியின் தரத்தை மட்டுமின்றி சமூக அந்தஸ்தை உயர்த்துகின்ற நடவடிக்கையையும் பொருளாதார மேம்பாட்டினை இந்த மக்கள் அடையக்கூடிய நடவடிக்கைகளையும் அரசு ஏற்கனவே எடுத்திருக்கிறது. சமுதாயத்திலே, நலிந்த நிலையிலே இருக்கின்ற இந்த மக்கள் மேன்மைபெற்ற மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிகராக வரவேண்டுமென்பதை தன்னுடைய எண்ணமாக மட்டுமின்றி, கொள்கையாகக் கொண்ட புரட்சித் தலைவருடைய இந்த அரசு, ஏழையெளிய மக்கள்மீது அன்பைக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு, ஆதி திராவிடர் பழங்குடி மக்கள் மேன்மை பெற்றுத் திகழ்ந்து, மற்றவர்களுக்கு நிகராக வரவேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே பங்கு கொண்ட உறுப்பினர்கள் இந்த மக்கள் மேன்மை பெற வேண்டும் என்று இந்தத் துறை நல்லமுறையிலே இயங்கி இந்த மக்களுக்குச் சேவைகளைச் செய்யவேண்டுமென்று வெளிப்படுத்திய அதே உணர்வுகளை இந்த அரசும் கொண்டிருக்கிறது என்பதையும், குறிப்பாக தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்திலே பங்குகொண்ட அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே அரசு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எதிர் காலத்தில் எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

TIRUMATHI TARA CHERIAN: I want to ask one question. The Hon. Minister has not answered my simple question whether the policy of the Government is to have the segregation for eternity. Is there no possibility of merging the two sections together? When are the Adi-Dravidars and other Backward Class people going to come into the main stream? Unless we have common schools where all of them can be put together, it will not be possible. I would like the Hon. Minister to answer my question. I know the Government will have to give them all the benefits but the time must come when there will be a merger. The programme must be time-bound.

MR. DEPUTY CHAIRMAN: I wish to inform the hon. Members that we have the next item on the Agenda which will take an hour. I request the hon. Members to desist from raising long questions and also the Hon. Minister from giving elaborate answers. If the Hon. Minister wants, he may answer.



1984 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே இருக்கக்கூடிய மற்றவர்களுக்கு நிகராக ஆதிதிராவிடர் மக்களையும் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணமாக இருக்கிறது. அந்த எண்ணத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கொண்டிருக்க மாட்டார் என்றுதான் நான் கருதுகிறேன். காரணம் சமுதாயத்தில் நலிந்த நிலையிலே இருக்கக்கூடியவர்கள், மற்றவர்களுக்கு நிகராக வருவதற்கு பொருளாதார ரீதியாக முன்னுக்கு வருவார்களானால், அதன் மூலமாக தமிழகத்திலே மட்டுமின்றி இந்திய துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய தீண்டாமையை ஒழிப்பதற்கு, அதுவும் தூண்டுகோலாக இருக்கும் என்பதை ஆராய்ந்து பார்த்த அரசு, இந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறையில் கல்வித் துறை மேம்படுவதற்காக அஸிஸ்டெண்ட் டைரக்டர் பதவியை உருவாக்குவது என்று அரசு முடிவு செய்திருப்பதற்கு என்னுடைய நன்றி, மகிழ்ச்சி. இரண்டு சந்தேகங்கள். ஒன்று ஏற்கெனவே கல்வித் துறையில், ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் இந்தத் துறை ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று சமூகநலத் துறை தெளிவாக ஒரு ஆணை வெளியிட்டிருப்பதுபற்றி நான் முன்பே சொன்னேன். அந்த ஆணையிலே 'கன்செஷன்' என்றால் எது என்பதிலே தான் அதிகாரிகளுக்கு சந்தேகம் வந்தது. அதைப்பற்றியும் முடிவு செய்ய அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைக்கலாம் என்று சென்ற ஆண்டு இந்தக் கொள்கைக் குறிப்பு விவாதத்தில் சொன்னார்கள். அது முடிவு செய்யப் பட்டுவிட்டதா? அது தெளிவாக்கப்பட்டுவிட்டதா? இல்லாவிட்டால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா? நியாயமாக மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சாதிச் சான்றிதழ்கள் எந்தவிதமான தொல்லையுமில்லாமல், அந்த மாணவர்களுக்குக் கிடைப்பதற்கு ஒரு எளிமையான ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு என்ன கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறது? நாங்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறோம். நிரந்தரமாக ஒரு அடையாளச் சான்று என்று எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தின் அடிப்படையில், சான்றிதழ் கொடுக்கலாம் என்று கல்லூரி முதல்வர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் அந்த அதிகாரத்தை வழங்கி விடலாம். இது குறித்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவினுடைய அறிவிப்பைப் பொறுத்த வரையில், தற்போது அதன் விவரங்கள் இல்லை என்றாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்றமுறை கலந்துகொண்டபோது என்ன கருத்துக்களை எடுத்துச் சொன்னார்களோ அந்தக் கருத்துக்களையெல்லாம் அதிகாரிகளிடத்தில் எடுத்துச்சொல்லி, அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே அவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும். 'ஐடென்டிடி கார்டை'-ப் பொறுத்தவரையில் எற்கனவே நாம் 'எலிஜிபிலிடி கார்டு' என்று தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கு வழங்கி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜாதியைப் பொறுத்தமட்டிலும், பெற்றோர்களுடைய வருமானத்தைப் பொறுத்த விவரங்களையும் கொண்டதாக அந்த 'எலிஜிபிலிடி கார்டு' இருக்க வேண்டுமென்று . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** . . . கருதி, அந்த முறையிலே வழங்கி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 4. 20—4—1984 அன்று ஓய்வுபெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல்.

***மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 20—4—1984 ஆம் தேதியோடு இந்த அவையிலே கடந்த ஆறு ஆண்டுகளாகவும், அதற்குக் குறைந்த காலத்திலும் சிறந்த பணியாற்றி, இந்த அவையிலிருந்து விடைபெற்றுக்கொண்டிருக்கின்ற, விடைபெறவிருக்கின்ற பதினெட்டு உறுப்பினர்களை நான் இந்த அவையின் சார்பிலும், ஆளுகிற கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும் பாராட்டி, அவர்கள் ஆற்றிய சிறந்த பணிகளுக்காக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து, அவர்களுடைய சிறந்த பணிகள் மீண்டும் இந்த அவைக்குக் கிடைக்கவேண்டுமென்கிற விருப்பத்தையும் தெரிவிக்கிற வகையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இதற்குக் கொடுத்திருக்கிற தலைப்பு, சரியான தலைப்பாக இல்லையோ என்று உங்களுடைய அனுமதியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். '20—4—1984 அன்று ஓய்வுபெற இருக்கும் உறுப்பினர்களுக்கு' என்று இந்தத் தலைப்பு இருக்கிறது. அப்படி இங்கே ஓய்வு பெறவிருக்கிறவர்கள் என்று அவர்களையெல்லாம் அழைக்கக்கூடாதென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த அவையின் முன்னாலே வைக்கிறேன். ஓய்வுபெறுவது என்றால், அவர்கள் எங்கேயோ பணியாற்றி வயது முதிர்ந்த காலத்திலே இனிமேல் பணியாற்றுவதற்கே இயலாது அல்லது முடியாது அல்லது சட்டப்படி முடியாது என்று ஓய்வுபெறுகிற காலத்தைத் தான் ஓய்வுபெறுவது என்று நாம் சொல்வது வழக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சிலர் அப்படியும் இருக்கலாமே.

(சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அது சிலருடைய சொந்த நிலைமைகளைப் பொறுத்ததே தவிர, பொதுவான அமைப்பிலே இந்த மரபை, இந்தப் பழக்கத்தை நாம் வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. ஜனநாயகப் பயணத்தில் உறுப்பினர்கள் இடையிலே விடைபெற்றுக்கொண்டு செல்கிறார்கள். அதிலே பலபேர் மீண்டும் வருவார்கள், சிலபேர் வேண்டாமென்று இருப்பார்கள். ஆகவே இது விடைபெற்றுச் செல்வதற்கு நாம் வழியனுப்புகிற விழா என்றுதான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர, இது ஓய்வு பெறுகிற விழா என்று நாமே ஒரு முடிவுகட்டிவிடக்கூடாதென்பது என்னுடைய

(பிற்பகல் 1-10)

பணிவான வேண்டுகோள். காரணம், நம்முடைய தமிழ் நாட்டிலே அப்படி ஒரு வழக்கம் இருக்கிறது. எப்போதுமே, 'நான் போகிறேன்' என்று சொல்ல மாட்டார்கள். 'போய் வருகிறேன்' என்று சொல்லுவார்கள். இன்னும் சுருக்கமாக 'வருகிறேன்' என்றுதான் சொல்லுவார்கள். 'போய்' என்றுகூடச் சொல்வதில்லை. சொல்லுகிறவர்கள் பல நேரங்களில், 'நீங்கள் சென்று வாருங்கள்' என்பார்கள். சில நேரங்களிலே 'வென்று வாருங்கள்' என்றும் சொல்லுவார்கள். அதைப்போலவே, 'நாங்கள் சென்று வருகிறோம்', 'வென்று வருகிறோம்' என்று அவர்கள் சொல்லிவிட்டுப் போவார்கள். ஆகவே ஜனநாயகத்தினுடைய அற்புதமான அமைப்பின்கீழ் பணியாற்றுகிற இந்த உயர்ந்த அவையில் 18 உறுப்பினர்கள் பணியாற்றி, இப்போது விடைபெற்றுச் செல்லுகிறார்கள். அவர்கள் மீண்டும் 'சென்று வருவார்கள்', 'வென்றும்

வருவார்கள்'. ஆகவே அவர்கள் ஆற்றிய பணியை நாம் இப்போது நினைவு கூர்ந்து அவர்களைப் பாராட்டுவதென்பது நம்முடைய தலைசிறந்த கடமையாகும்.

காரணம், இந்த 18 பெயர்களிலே நம்முடைய மாண்புமிகு தலைவர், டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களுடைய பெயரும் இருக்கிற காரணத்தாலே தான், இந்த உணர்வே எனக்கு ஏற்பட்டது. 'ஓய்வு பெறுகிற' என்ற வார்த்தை அவ்வளவு பொருத்தமாக இல்லை என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. காரணம், தமிழகத்தினுடைய இந்த மேலவை வரலாற்றிலே, மாண்புமிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள் இந்த அவையினுடைய தலைவராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிற அந்தச் சூழ்நிலை ஏற்பட்டபோது, தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை நான் மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழை அரியாசனத்தில் அமர்த்துகிறோம் என்றுதான் நம்முடைய டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களை இந்த அவையின் தலைவர் பொறுப்பிலே மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த அவையினுடைய முழு மனதோடு ஏற்போடு அமர்த்தினார்கள். இந்த மாநிலத்தைத் தமிழ் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்து கொண்டிருக் கிறவர்கள் நம்முடைய டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள். இந்த அவையின் தலைவராக அவர் இருந்துகொண்டு, இதை நடத்திக்கொண்டிருக்கிற அந்த ஆட்சித் திறனும், அந்த மாட்சிதான். ஆகவே அவர்களை, 'ஓய்வு பெறுகிறவர்கள்' என்ற பட்டியலிலே இணைத்துப் பார்ப்பது அவ்வளவு பொருத்தமல்ல என்ற அந்த அளவோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். காரணம், தாங்கள் ஓய்வு பெறவில்லை. ஆகவே விடை பெற்றுக் கொண்டிருக் கிறீர்கள். சட்டப்படி விடைபெற்றுக்கொண்டு, மீண்டும் அவர்கள் எப்படி உள்ளே நுழைகிறார்கள் என்பதையெல்லாம் நமக்கு ஜனநாயகம் கற்றுத் தந்துகொண்டிருக்கிறது.

இங்கே பல உறுப்பினர்கள், ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து இங்கே பணியாற்றியவர்கள் இப்போது இந்தப் பட்டியல்படி விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் புதிய உணர்வோடு, புதிய தெம்போடு ஏப்ரல் 21-க்கு மேலே இங்கே வர இருக்கிறார்கள். ஆகவே அதைக் குறிப்பிடுகிறபோது, இதை ஓய்வு பெறுகிறவர்கள் பட்டியல் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றேன். அந்த வகையிலே, மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உங்களை நான் வாழ்த்துகிறபோது, பாராட்டுகிறபோது, மீண்டும் இங்கே ஏப்ரல் 21 ஆம் தேதிக்கு மேல் இந்த இடத்தில் இருப்பீர்கள் என்ற நிறைவோடு உங்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.



அதைப்போலவே இங்கே பல்வேறு உறுப்பினர்கள்—அவர்கள் சென்று, வென்று வருகிற சூழ்நிலையிலே இங்கே விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆற்றிய பணி மீண்டும் தொடர இருக்கிறது. ஆகவே அவர்களைக் குறிப்பிட்டு தனித் தனியாகப் பாராட்டியாக வேண்டுமென்று அவசியமில்லை. அப்படிப்பட்ட ஆசிரியப் பிரதிநிதிகளாக இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களும் ஏற்கெனவே ஜனநாயகத்திலே எடுக்கப்பட்ட முடிவின்படி இப்போது விடைபெறுகிறார்கள். அது தற்காலிகமாகப் பெறுகின்ற விடை. அவர்களைச் சென்று, வென்று வாருங்கள் என்று அனுப்பியதால், அவர்கள் வென்று, மீண்டும் வர இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றிய பணிக்காகவும், அவர்களைப் பாராட்டி, மகிழ்ந்து இப்போது அனுப்புவது போலவே, அவர்களுக்கு வரவேற்பையும் இப்போதே சேர்த்துச் சொல்லிவிடுகிறேன்.

அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு வர வேண்டுமென்ற விருப்பத்தோடு அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பவிருக்கிறோம். அவர்கள் தனி உறுப்பினராக இருந்தாலும், ஒரு கட்சியினுடைய சின்னமாக, தத்துவத்தினுடைய தூதுவராக இங்கே பணியாற்றினார்கள். அநேகமாக ஆறு ஆண்டுக் காலத்தில் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய ஒரு பிரதிநிதியாக முதன் முறையாக இந்த அவையிலே இடம் பெற்றது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே தான் என்று நான் கருதுகிறேன். அதில் தவறு இருந்தால், திருத்திக் கொள்கிறேன். அப்படி இந்த அவையிலே இடம் பெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் கொள்கையிலே, கோட்பாடு களிலே எவ்வளவு உறுதியாக இருந்தார்கள் என்பதும், இந்த அவையினுடைய மரபை, மாண்பைக் காப்பதில் அவர்கள் எந்த அளவுக்கு ஒத்துழைத்தார்கள் என்பதும் நமக்கெல்லாம் தெரியும். அவர்கள் எடுத்துச்சொல்லும் வாதங்களில் வலிவு இருக்கும். சில நேரங்களில் ஆவேசமும், ஆக்ரோஷமும் இருக்கும். ஆனாலும் அவர்கள் இந்த அவையினுடைய மரபைக் காப்பாற்றிய விதம் மிகச் சிறந்த முறை. அந்த முறையிலே ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள். அவர் களுடைய பணியையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுபோலவே முஸ்லிம் லீகினுடைய பிரதிநிதியாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறபோது, எனக்கு பல்வேறு நினைவலைகள் வருகின்றன. அவர்கள் இந்த அவைக்கு வர வேண்டுமென்று

[திரு. இராம. வீரப்பன்] [1984 மார்ச் 30

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணினார்கள். தமிழ் சமுதாயத்திலே மிகச் சிறந்த தலைவராக, முஸ்லீம் மக்களுடைய தலைவராக மாத்திரமல்லாமல், இந்திய நாட்டிலே உள்ள தனிப் பெரும் தலைவர்களில் ஒரு தலைவராக, தமிழ் மொழி காத்த தலைவராக, தமிழ் இனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களிலே ஒரு தலைவராக, பேரறிஞர் அண்ணா அவர்களாலே, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களாலே போற்றப்பட்ட தலைவராக, வணங்கப் பெற்ற ஒரு தலைவராக, வணக்கத்துக்கும் கண்ணியத்துக்கும் உரிய காயிதே மில்லத் அவர்களுடைய வாரிசாக விளங்குகிற, அமைதிக்கும், கடமைக்கும், கண்ணியத்துக்கும் பெயர் பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் இந்த அவையில் இடம் பெற வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் இடம் பெற வேண்டுமென்ற சூழ்நிலையில் எத்தனை பேர்களுடைய எதிர்ப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது, எவ்வளவு கெட்ட பெயரை வாங்க வேண்டி வந்தது என்பதையெல்லாம் எடுத்துச் சொல்ல இது சரியான நேரம் இல்லை யென்றாலும்கூட, அவர்களெல்லாம் இன்றைக்கும் என்னுடைய என்ன அலைகளாக இருக்கிற காரணத்தால், இங்கே நினைவுபடுத்துகிறேன். அப்படி முஸ்லிம் லீகினுடைய பிரதிநிதியாக மட்டுமல்லாமல், கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களுடைய வாரிசாக மட்டுமல்லாமல், தமிழ் சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பிரதிநிதியாக அவர்கள் இங்கே உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் ஒரு முஸ்லீம் உறுப்பினராக இருந்தாலும்கூட ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குரிய பிரதிநிதியாக இல்லாமல், குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்காக என்று இல்லாமல் அமைதியாகவும், அழுத்தமாகவும் இங்கே நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்து இந்த சபைக்கு மிகுந்த சிறப்பை ஊட்டியிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் வருகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது. என்றாலும் அவர்களும் திரும்பவும் வர வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படி இப்பொழுது அவர்கள் வரவில்லையென்றாலும்கூட, இரண்டு ஆண்டுகள் கழித்து அவர்களும் வரலாம். அப்படி வாய்ப்பை இழந்தவர்கள் மறுபடியும் வருவதற்கான வாய்ப்புகள் மேலவையில் இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டிலே வரவில்லையென்றால், 1986-லே வரலாம் அல்லது 1999-லே வரலாம். அப்படிப் பட்ட சுழன்றுகொண்டிருக்கும் ஜனநாயகப் பணியை நாம் ஆற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அருமையான திரு. மியாகான் அவர்கள் அவையிலேயிருந்து விடைபெறுகிறார்கள் என்றாலும்கூட, அவர்கள் வெளியிலேயும் ஆற்றலோடு தைரியமாக அவருடைய பணியைத் தொடரலாம். இன்று இஸ்லாமியர்களின் வாழ்க்கை தமிழ் நாட்டில் மிகச் சிறந்த தலைவரின்



1984 மார்ச் 30] [திரு. இராம. வீரப்பன்]

கையில், அதாவது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கையில், மிகப் பாதுகாப்பாக, மிகுந்த சிறப்போடு உள்ளது என்பதை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

அடுத்து, நடைபெற்று முடிந்த தேர்தலின் விளைவாக சில மாண்புமிகு உறுப்பினர்கள் 1984 ஆம் ஆண்டிலே வர மாட்டார்கள் என்று முடிவுகள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன. அப்படி வர முடியாமல் ஒரு வாய்ப்பை இழந்தவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன். அவர்கள் இந்த அவையிலே இப்பொழுது இல்லையென்றாலும்கூட, அவர்கள் எல்லாம் இந்த அவைக்கு மிகச் சிறந்த பெருமையைச் சேர்த்த அருமையான

(பிற்பகல் 1-20)

உறுப்பினர்கள். தமிழ்நாட்டுடைய வரலாற்றிலேயே மிகச்சிறந்த பெருமையை தமிழ்ச் சமுதாயத்திற்காக ஆற்றிவந்த டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள், டாக்டர் ஏ. லெட்சுமணசாமி முதலியார் அவர்கள், அதன்பிறகு அவர்கள் வழிவந்த டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், அந்தப் பாரம்பரியத்தை, சிறப்பை இந்த அவையில் பலநேரங்களில் வரலாற்றில் இடம் பெறுகிற வகையில் காப்பாற்றியவர்கள். அவர்கள் எடுத்து வைக்கிற கருத்துக்கள், ஏதோ சொந்த உணர்வுகளில் கருத்துக்களை எடுத்து வைக்கிறார்களோ என்று தோன்றினாலும், அரசுக்கு அவர்கள் சொல்கிற அறிவுரைகள், ஆலோசனைகள் மிகுந்த பலன் உள்ளதாக இருந்திருக்கின்றன. அவர்கள் அதைச் சொல்கிற அழகே என்றைக்கும் கேட்கிற அளவில்தான் இருக்கும். அவர்கள் ஆங்கிலத்தில்தான் பேசுகிற வழக்கத்தையே வைத்துக்கொண்டிருந் தாலும், தமிழாகவே இன்று ஆகிவிட்ட இந்த மேலவையில், ஆங்கிலத்தை மறந்துவிடக்கூடாது என்ற வகையில் அதை நினைவுபடுத்துகிற வகையில் ஆங்கிலத்திலேயே அடிக்கடி அழகாகப் பேசி மிகச் சிறந்த வரலாற்றை இந்த அவையில் உருவாக்கியிருக்கிறார்கள்.

அதைப்போலவே திரு. வசந்த பை அவர்கள். அவர் சென்னை பட்டதாரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையில் நீண்டகாலம் இடம் பெற்றவர்கள். வெளியிலே எவ்வளவு பிரபலமாக இவரைப்பற்றிப் பேசுவார்கள், எந்த அளவுக்கு அவரைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாமெல்லாம் உணர்ந்திருக்கிறோம். சில நேரங்களில் சில கருத்துக்களை வலுக்கட்டாயமாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும், அப்படிப் பட்ட உணர்வுகளும் ஜனநாயகத்தில் தேவை என்ற வகையில், இல்லை

வெறால் சூடும் இருக்காது, சுவையும் இருக்காது என்ற வகையில், அப்படி சூட்டை ஏற்படுத்துகிற வகையில் திகழ்ந்த உறுப்பினராக திரு. வசந்த பை அவர்கள் இருந்தார்கள்.

அதைப்போலவே திரு. டி. சந்தோஷம் அவர்கள் இங்கே உறுப்பினராக இருந்தாலும், அவர் மிகச் சிறந்த வழக்கறிஞர். சட்டத்தைப்பற்றித் தெரிந்தவர்கள். சமுதாயத்தை உணர்ந்தவர்கள். அவர் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இருந்தார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் குழுவிற்கு அவர்கள் தலைவராக இருந்தார்கள். அவர்கள் தமது கருத்துக்களை எடுத்து வைக்கிற நேரத்தில், அமைதியாக எடுத்து வைப்பதையும், அதை அழுத்தந் திருத்தமாக வைப்பதையும் கவனிக்கும்போது, அவை மிகுந்த பயனுள்ளவையாக இருந்தன. அவருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நன்றி கூறவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் இங்கேயே இருக்கப்போகிறவர்கள். அவரைப்பற்றி நானே சொல்வது பொருத்தமாக இருக்காது. மற்றவர்கள் சொல்லி நாங்கள் பார்க்க வேண்டும். ஆகவே அவரைப்பற்றி அதிகம் சொல்ல விரும்பவில்லை.

இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருந்து, தி.மு.க. கட்சித் தலைவராகப் பணியாற்றிய திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் இந்த அவையில் நீண்ட வரலாற்றைப் படைத்தவர்கள். 18 ஆண்டுக்காலம் இந்த அவையில் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றிய ஆசிரியர்கள் பிரதிநிதியாவார்கள். ஒரு கட்சியின் தலைவராக இருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவராகவும் விளங்குகிறபோது, அவர்கள் காட்டிய கண்ணியம், வாதங்களை எடுத்து வைக்கிறபோது இருந்த அழுத்தங்கள், ஆறாண்டுக் காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோதுங்கூட, அவர்கள் தி.மு.க. கட்சித் தலைவராக இருந்தாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை இந்த அவையிலே காட்டுவது அழகல்ல என்ற மிகச் சிறந்த மரபின்படி அவையில் நடந்து மிகச்சிறந்த பணியை ஆற்றினார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை, அவர்களாகவே முன்வந்து ஓய்வு பெறுவது என்ற வகையிலேயா என்னவோ தெரியாது, மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பிறகு வரலாம். ஆகவே அவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஓய்வாக இருக்கிற காரணத்தால், அவரைப் பாராட்டி, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





எதிர்க் கட்சித் தலைவராக, காங்கிரஸ் கட்சியின் தலைவராக, விளங்கும் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் மிகச்சிறந்த அரசியலைத் தெரிந்து கொண்டிருக்கிற, இந்தியா முழுவதும் ஆளுகிற பொறுப்பிலிருக்கிற பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த ஒரு அருமையான தொண்டர். அவர் சட்டமன்றப் பேரவையிலும் உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். இந்த அவையிலும் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். தற்போது கடந்த சில ஆண்டுகளாக இங்கே எதிர்க் கட்சித் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். அவர் மிகச் சிறந்த விவரம் அறிந்த ஒருவர். முறையான வாதங்களை எடுத்து வைப்பதில் வல்லவர். அரசியல் மாறுபாடுகளும், அரசியல் கருத்துவேற்றுமைகளும் இங்கே நம்மிடையே எந்தக் காரணத்தைக் கொண்டும் மனமாச்சர்யங்களை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை காட்டிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நம்முடைய பாராட்டுதலுக்கு உரியவராவார். அவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் இங்கே ஏப்ரல் 20 ஆம் தேதிக்கு மேலவையில் இடம் பெறுகிறாரோ இல்லையோ நமக்குத் தெரியாது. என்றாலும் அவர் மீண்டும் இந்த அவையிலேயே இடம் பெறலாம். அல்லது இந்த அவையைவிட மேலான வேறு அவையிலும் இடம் பெறலாம். எப்படியும் பொதுவாழ்வில் இடம் பெற வேண்டிய ஓர் உறுப்பினர். அவர் அதற்குரிய தகுதிகள் நிறைந்தவர். அந்த வகையில் சிறப்பான பணியை ஆற்றுகிறவர். எனவே அவரையும் இங்கே பாராட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள். அவரும் இங்கே நீண்ட காலமாக இந்த அவையில் ஆசிரியர்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறவர். ஆசிரியர்களுக்காக வாதாடுவதில் முன் நிற்பவர். இங்கே நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். ஆசிரியர்களுக்காக வாதாடுவதில் யார் முன்னணியில் நிற்பது என்பதில்தான் இங்கே பந்தயமே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தின் ஆசிரியப் பிரதிநிதியா, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களின் ஆசிரியப் பிரதிநிதியா அல்லது திருநெல்வேலி பகுதியின் பிரதிநிதியா அல்லது சேலம்-கோவை மாவட்டங்களின் பிரதிநிதியா என்று இவர்களில் யார் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை முன்னாலே எடுத்து வைப்பது என்கிற போட்டியில் அடிக்கடி ஈடுபடுவதைப் பார்த்திருக்கிறோம். அந்த வகையில் அவர் இங்கே அவையினுடைய நடவடிக்கைகளில் மிகுந்த கண்ணியத்தையும் பொறுமையையும் காட்டி, அவையின் மாண்பையும் காப்பாற்றி மிகுந்த துணை புரிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திரு. முத்துசாமி அவர்கள் ஏப்ரல் 20 ஆம்

[திரு. இராம. வீரப்பன்] [1984 மார்ச் 30

தேதிக்கு மேல் நம்மிடையே இருக்க மாட்டார்கள் என்பது நமக்குத் தெரிந்திருந்தாலுங்கூட, மீண்டும் அவர்கள் இங்கே வருவதற்குரிய வாய்ப்பை அவர்கள் தேடிக்கொள்ளக் கூடியவர்கள். அவ்வளவு ஆற்றல் படைத்தவர், அவர். ஆகவே ஆசிரியர்களுக்காக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிறவர் இங்கே இருந்தாலும் பாடுபடுகிறவர், அவைக்கு வெளியே இருந்தாலும் பாடுபடுகிறவர். ஆனால் ஒன்றை மட்டும் எல்லோருக்கும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களைப்பற்றிக் கவலைப்படுகிற அரசு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான் என்பதால், அவர் இங்கே இருந்தாலும் நம்பிக்கையோடு இருக்கலாம், வெளியே இருந்தாலும் நம்பிக்கையோடு பணியாற்றலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அவருடைய பணிக்குப் பலன் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, நீதிபதியாக இருந்து இங்கே அவையில் இடம்பெற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. எஸ். வெங்கடேசன் அவர்கள். அவர் அமைதியாகக் கருத்துக்களை எடுத்து வைத்து அவ்வப்போது அவையினுடைய நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

எங்கள் கட்சியின் கொறடாவாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இருக்கிறார்கள். மற்றும் பல உறுப்பினர்களும் ஏப்ரல் 20 ஆம் தேதிக்குப் பிறகு மீண்டும் புதிய பொலிவோடும், புதிய கோலத்தோடும் புதிய உணர்வோடும் வர இருக்கிறார்கள். இன்னும் இரண்டாண்டுகள் கழித்தும் வர இருக்கிறார்கள். அல்லது வேறு வகையில் வர இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் நாம் வாழ்த்தி அனுப்பி வைக்கிற வகையில்தான் விடை கொடுக்கிறோம். ஓய்வு பெறுகிறார்கள் என்று என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே விடைபெற்றுச் சென்று மீண்டும் திரும்பி வர இருக்கிறார்கள். அவர்களுடைய பணியாலே இந்த அவை சிறப்பு பெற்றிருக்கிறது. அவர்களுடைய சிறந்த கருத்துக்களாலே இந்த அரசு பயன்பெற்றிருக்கிறது. இவைகளையெல்லாம் மனதில் எண்ணிப் பார்க்கும் போது, மாண்புமிகு தலைவர் அவர்களே, "தமிழ் இங்கே ஆட்சி செய்கிறது என்பதையே இன்றைக்கு எங்களுக்கெல்லாம் நினைவூட்ட, நிலைநிறுத்திக் கொண்டிருக்கிற" உங்களுடைய தலைமையில் இன்றைக்கு 19 உறுப்பினர்கள் இங்கே விடைபெற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் அனைவரையும் நான் அரசின் சார்பிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும் இந்த அவையின் சார்பிலும் வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். வணக்கம்.



1984 மார்ச் 30] [திரு. க. இராமமூர்த்தி]

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மிகுந்த மன நிறைவோடு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய குடும்ப நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் என்னுடைய மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயகத்தினுடைய முக்கிய பொறுப்பையாற்றுகிற அங்கமாக சட்ட மன்றங்கள் இயங்கும் வகையில் அதில் நம்முடைய மேலவையின் பங்கு அரசியல் சட்டப்படியான முறையில் எப்படியாக இருந்தபோதிலும், அவற்றினிடமிருந்து எதிர்பார்க்கும் பங்கைவிட அதிகமாகவே மக்கள் மத்தியில் தன்னுடைய செயல்முறை காரணமாக நிலைத்துவிட்டிருக்கிறது என்பதோடு, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளிலும், சமுதாயப் பிரச்சினைகளிலும், பொருளாதாரப் பிரச்சினைகளிலும் மற்ற நாட்டு நடப்பு களிலும் முறையான பங்கைச் செலுத்தி இந்த அவை மக்கள் மனதில் தன்னுடைய இடத்தை நிரந்தரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-30)

எவ்வளவு பெரிய நீண்ட பாரம்பரியம் மிக்க, பெருமைமிக்க அவை இது என்பதை இந்த அவைக்குள்ளே வருவதற்கு முன்பு வெளியேயிருந்து வியந்து பார்த்திருக்கிறோம். இதனுடைய நடவடிக்கைக் குறிப்புகளை நினைவு தெரிந்த நாட்களில், பத்திரிகையில் படித்து தெரிந்து கொண்டிருக்கிறோம். அதற்கு முன்பு நடைபெற்றவைகளை இருக்கின்ற குறிப்புகளிலேயிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த மேலவையிலே பணியாற்றுகின்ற வாய்ப்பு பெற்றதை மிகப் பெரிய வாய்ப்பாக, வாழ்க்கையில் பெருமைக்குரிய வாய்ப்பாக நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த அவையில் தலைவராக தாங்கள் பணியாற்றுகிற நேரத்தில், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில், இந்த அவையின் பணிகளில் பங்கேற்க கிடைத்த வாய்ப்பை மிகப் பெருமையாகக் கருதுகிறோம். முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ் அரியாசனை ஏறி ஆட்சி செலுத்துகிறது, அவை நடவடிக்கைகளை நடத்துகிறது என்பது ஒரு பெருமை. தங்களாலே முடியுமா என்ற அச்சக்குறி, சந்தேகக் குறி எழுந்தபோது, தாங்கள் சிறப்பாகச் செயல்பட்டு நிலைநிறுத்தியிருக்கிறீர்கள் என்பது சரித்திரமாக அமையும். தங்களை மிகச் சிறிய வயதிலேயே அறிந்தவன் என்ற முறையில் எனக்குப் பெருமை. தங்களாலே ஈர்க்கப்பட்டவன் என்பதாலே எனக்குப் பெருமை. எனக்கு இன்னும் ஒரு பெருமை இருக்கிறது. தாங்கள் தமிழுக்கும் துணை, தேசியத்திற்கும் துணை என்ற வகையிலே தங்களுடைய வாழ்க்கையே

வரலாறாக அமைந்திருக்கிறது. அந்தப் பெருமைக்குரிய வரலாறு படைத்த தங்களுக்குக் கீழே உறுப்பினராகப் பணியாற்றி நேரிடையாக நானே பங்கேற்கும் வாய்ப்பு பெற்றதிலே மகிழ்ச்சியடைகிறேன். அது நிலையாக என்னுடைய வாழ்க்கையிலே நிற்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதுபோல், இந்த ஜனநாயக அமைப்புகளில் பல பேர் திரும்ப வருகின்ற வாய்ப்பைப் பெறுகிறோம். இந்த வாய்ப்புகள் அவரவர் ஏற்றுக்கொண்ட பொது வாழ்க்கை முறைகளைபொட்டி அமைகிறது. சில பேர் அவர்களே திரும்பத் திரும்ப வருகிற வாய்ப்பு இருக்கிறது. அல்லது அப்படி அவர்களாலே முயற்சி செய்ய முடிகிறது. இங்கே வருகின்ற வாய்ப்பைப் பெறுவது என்பது ஒரு சிலருக்கு அவர்கள் இடம் பெற்றிருக்கிற அல்லது சார்ந்திருக்கிற அரசியல் கட்சியின் முடிவுகளை பொட்டியுள்ளது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், என்னை எந்த நோக்கங்களுக்காக இந்திய தேசிய காங்கிரஸ் அனுப்பியதோ அந்த நோக்கங்களுக்கேற்ற வகையிலே பணியாற்ற வேண்டும் என்ற உணர்வோடு பணியாற்றியிருக்கிறேன் என்பதை நான் பெருமிதத்தோடு சொல்ல முடியும். அதை நிறைவுபடுத்தியிருக்கிறேனா இல்லையா என்பது வேறு. அந்த அளவிலே அரசியல் கட்சிகளைச் சார்ந்திருக்கின்ற பல பேர் மீண்டும் வருவதா அல்லது வேறு துறைகளில் அவர்களுடைய பணியை அத்தக் கட்சி ஈடுபடுத்துகிறதா என்பது அந்தக் கட்சியின் முடிவைப் பொறுத்ததாகும். ஆனால் இங்கே அரசியல் கட்சிகளின் சார்பிலே வருகிறவர்கள் ஒரு சங்கடமான நிலையிலே பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியினுடைய கருத்துக்களுக்கு ஏற்ப பணியாற்ற வேண்டிய அவசியம் இருப்பது மட்டுமல்லாமல், பல நேரங்களில் தங்களுடைய இயக்கங்கள் விமர்சனத்திற்கு ஆளாகிறபோது, அதற்காக வாதாட வேண்டிய வழக்கறிஞராக நிற்கவேண்டிய பொறுப்பும் இங்கே இருக்கிறது. பல நேரங்களில் அதனுடைய இயக்கங்கள் விமர்சனத்திற்கு ஆளாகின்றபோது, அதற்காக வாதாடவேண்டிய பொறுப்புங்கூட இங்கே இருக்கிறது. அப்படி வருகின்றபோது, முழுவதுமாக இந்த அவை அரசியல் அடிப்படையிலே செயல்படக்கூடாது, செயல்படுவதில்லை என்றாலுங்கூட, இந்த அரசியல் உணர்வின் அடிப்படையிலே, அரசியல் கருத்துக்களின் அடிப்படையிலே ஏற்படுகின்ற மாச்சரியங்களை, வாதங்களை, வாதங்களிலே இருக்கிற சூடு, சுவையைத் தவிர்க்க முடியாது. ஆனால் இவற்றையெல்லாம் சுவையாக மட்டுமல்ல, முறையாக மற்றவர்கள் பார்த்துப் பெருமைகொள்கின்ற அளவுக்கு வழி நடத்தியிருக்கிறோம் என்றால், அதில் இந்த அவையினுடைய அத்தனை உறுப்பினர்களுடைய பங்கும் இருக்கிறது.





அத்தனையெல்லாம் மேலாக வழி நடத்திச் சென்ற தலைவருடைய பங்கும் இருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, தங்களுடைய தலைமைக் காலத்திலே இந்த அவை இன்னொரு பெருமையும் பெற்றிருக்கிறது. இந்த அவையில் மிக அதிகமான நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள்; விவாதங்களிலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த அவையிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதற்கும் அதிகமாக இங்கே இருக்கின்ற எதிர்த் தரப்பிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதையாக, கௌரவமாக நான் நிச்சயமாக ஏற்கிறேன். விவாதங்களிலே பங்கேற்று அதிலே இருக்கின்ற நியாயங்களை ஏற்று அல்லது வாதங்களுக்கு எதிரான தேவை என்ற உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அப்படி முதலமைச்சர் அவர்கள் இங்கே பல வாதங்களிலே கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால் பார்க்க முடிகிறது.

இந்த அவையினுடைய நடைமுறைக் குறிப்புகளைப் பொறுத்தவரையிலே, நான் இங்கே நுழைந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவில் அல்ல, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவோடல்ல; அப்போது பொதுவாக காங்கிரஸ்-கம்யூனிஸ்டு கட்சி என்ற அளவிலேதான் வந்தேன். ஆனால் வந்த பிறகு, ஒரு நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் இயக்கமும் துணையாக இருந்தன. இப்போது அது இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸும் நட்பு என்ற அளவிலேதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகள். இந்த மூன்று நிலைமைகள் தெளிவாக இருந்தபோதிலும், இதிலே எவ்வளவு பெரிய மாற்றங்கள், மாச்சரியங்கள் இருந்தபோதிலும், மிகுந்த நட்புறவோடு, உரிமையோடு, தோழமை உணர்வோடு இங்கே நான் மட்டுமல்ல, அனைத்து அரசியல் கட்சிகளும் இயங்க முடிந்தது, அமைச்சர்கள் நடத்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நாம் நம்முடைய சொந்த விருப்பு, வெறுப்புக்களைத் தாண்டிச் செயல்பட்டிருக்கின்றோம் என்பதற்கு இந்த அவையினுடைய நடவடிக்கைகள் ஒரு அமைப்பாக எனக்கு அமைந்தது. எனக்கு இன்னொரு பெருமை—நான் என்னுடைய பெருமையாகச் சொல்ல விரும்பவில்லை—இந்த அவைக்கு வருவதற்கு முன்னதாக பேரவையிலே பணியாற்றுகின்ற பெரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பு உருவாகியபோது, பெருந்தலைவர் காமராசர் அவர்கள், எனக்கு இருக்கின்ற மற்றத் தகுதிகள் காரணமாக என்னை அழைக்கவில்லை; நிச்சயமாக எனக்குத் தெரியும். அங்கே உள்ளே நுழைந்தபோது அல்லது நுழைவதற்கான அனுமதியை வேட்பாளராக

## [illegible] அன்று ஓய்வுபெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகரல்.

[திரு. க. இராமமூர்த்தி].

[1984 மார்ச் 30

எனக்குத் தந்தபோது, ஏதோ காங்கிரஸ் இயக்கத்தின் பாரம்பரியப் பெருமையைக் கட்டிக் காத்தவன், அதிலே வளர்ந்தவன் என்ற காரணத்தாலே எல்லாம், எனக்கு இடம் கிடைக்கவில்லை. வேட்பாளராக நிறுத்தி நான் உள்ளே நுழைந்தபோது, காங்கிரஸ் முதன்முறையாக எதிர்க்கட்சியாக வந்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பினை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பணியாற்றினார்கள். கொஞ்சமேனும் அந்தச் சங்கடமே எங்களுக்குத் தெரியாத அளவுக்கு வழிநடத்திக்கொண்டு செல்கின்ற முறையிலே அவரே உரிமையோடு அவை நடவடிக்கைகளிலே எங்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அன்றைக்குப் பல பேர்கள் அடையாளம் தெரியாதவர்களாக இருந்தபோது அவர்களையெல்லாம், முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை என்று வருகிறபோதெல்லாம் அல்லது குறுக்கீடுகள் என்று வருகிறபோதெல்லாம், பெயரைச் சொல்லி அழைத்ததின் மூலமாக, அவை நடவடிக்கைகளை வெளியிலே இருந்து படிப்பவர்கள் இந்தப் பெயர்களை எல்லாம் மனதிலே பதிவு செய்கின்ற அளவுக்கு அவருடைய நடைமுறைகள் அமைந்திருந்தன. அப்படிப் போனையிலே செயல்படும்போது, அன்றாடம் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிப்பவராக பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இருந்தார்கள். எங்களையெல்லாம் அழைத்து, இப்படிச் செயல்பட வேண்டும், இப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னதை யெல்லாம் நான் நினைத்துப் பார்க்கின்றேன். அதற்குப் பிறகு அதே அவையிலே கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பணியாற்றுகிற வாய்ப்பினைப் பெற்றோம். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த அவையிலே பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றோம். இந்த மாற்றங்களை எல்லாம் கண்டிருக்கிற நேரத்திலேதான் இந்த மாற்றங்கள் எப்படி அமைந்தது என்றாலும்கூட, அதற்கெல்லாம் மேலாக எல்லோருடைய எண்ணமும், எல்லோருடைய அழுத்தமான வேகமும், உணர்வும், தமிழகத்தினுடைய நலன்களைக் காப்பதிலே இருந்திருக்கிறது.

(பிற்பகல் 1-40)

நலன்களை காப்பதிலே இருந்திருக்கின்றது என்பதோடு மட்டுமல்ல. நம்முடைய மாநிலம், அகில இந்தியாவிலும் முதலிடம் பெறவேண்டு மென்பதற்காக மாநில ஆட்சியின் உதவியோ, தேவையோ, வக்கோ எதுவாக இருந்தாலும், அதைப் பெறுவதிலே கருத்துக்களை வெளியிடுகின்றதில், வார்த்தைகளில் மாற்றம் இருந்திருக்குமே தவிர உணர்விலே மாற்றம் இல்லாமல் செய்திருக்கிறோம். தமிழர்களுடைய நலன்களைக் காப்பதிலே, அது கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே,

[illegible] அன்று ஓய்வுபெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் [illegible] பாராட்டுரை பகர்தல்

1984 மார்ச் 30] [திரு. க. இராமமூர்த்தி]

[illegible]ருக்குள்ளே வாழ்கின்ற தமிழர்களாக இருந்தாலும் சரி, [illegible] [illegible] வெளிப்படுகின்ற நடவடிக்கைகளிலே வார்த்தைகளிலே, [illegible] [illegible] [illegible] இருந்தாலும், உணர்விலே ஒன்றியிருக்கிறோம் [illegible] [illegible] வேறு கருத்து இல்லை. இந்த அளவுக்குச் செயல்பட்டு [illegible] [illegible] இந்த அவை ஆளும் கட்சியினுடைய, எதிர்க் கட்சி [illegible] [illegible] கட்டுறவோடு நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆறு ஆண்டு [illegible] நிகழ்ச்சிகள் என்னுடைய நினைவில் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த அவையிலே ஆளுநருடைய நியமனத்தின்மூலமாக திருமதி [illegible] இருதயசாமி அவர்கள் இடம் பெற்றார்கள். மிகுந்த அமைதியோடு அவர்கள் பேசுகின்ற நேரம் குறைவாக இருந்தாலும்கூட, அவையிலே அவர்கள் [illegible] நேரத்தையும் செலவிட்டிருக்கின்றார்கள். இந்த அவைக்கு [illegible] [illegible] கடைசிவரையில் இருந்து செல்கின்ற ஒரு உறுப்பினராக அவர்கள் இருந்திருக்கின்றார்கள். இதைத் தாண்டி அந்த உறுப்பினர் அவர்கள் பொறுப்போடு வேறுபல பணிகளை, செய்யவேண்டிய காரியங்களைச் செய்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் அவருடைய தொகுதிக்காக, கட்சிக்காக மட்டுமல்ல, அவர்களிடம் வருகின்ற குறைகளையெல்லாம் அமைச்சர்கள் மூலமாக, அரசின் மூலமாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள்.

இன்னொரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சி என்றாலும், ஒரு சிறு சங்கடமும் இருக்கின்றது. இங்கே எதிர்க் கட்சித் தலைவராக நான் நுழைந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பணியாற்றினார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினராகப் பணியாற்றினார்கள் என்றாலும்கூட, இந்த அவையிலே தங்களைப் போலவே தமிழ் உணர்வோடு, தமிழினப் பற்றோடு பணியாற்றினார்கள் என்றாலும்கூட, [illegible] இலக்கியச் செறிவு பொருந்திய வாதங்களை அவர் மிகுந்த [illegible] வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர் பேசுகின்றபோதெல்லாம் இந்த [illegible] இருக்க வேண்டும் என்ற உணர்வோடு நான் உட்கார்ந்து [illegible] கொண்டிருப்பேன். அவர் இடத்தை நான் பெறுகின்றபோது எனக்குச் சந்தேகமே இருந்தது. எந்த அளவுக்கு அந்தக் கடமையை நிறைவேற்றப் போகிறோம் என்கின்ற உணர்வுகூட இருந்தது. அந்த அளவுக்கு இந்த அவையிலே அவர்கள் பணியாற்றினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் கடைசியாக இந்த அவைக்கு வந்தவர்கள். ஆனால், மூன்று, நான்கு நாட்கள் [illegible] மிகத் தெளிவாகப் பேசினார்கள். [illegible] [illegible]கிறேன்.

இருக்குமாம். ரொம்பகாலம் ஆகிவிட்டது என்ற உணர்வுகூட இல்லாமல், பழைய திராவிடக் கழகப் பாணியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சினுடைய பாணியில் பேசுவதைப் பார்க்க முடியும். இன்றைய கருத்துகளை. இன்றைய உணர்வுகளை அவர்கள் நுழைந்து சொன்னாலுங்கூட, அந்த உணர்வுகளோடு நல்ல தமிழ், கேட்க கேட்க சலிக்காத தமிழ், அவர்களுடைய வார்த்தைகளிலே ஒலித்துக்கொண்டிருக்கும். அவர்கள் விடை பெறுகிறார் என்பதோடு மட்டுமல்ல, வெற்றியைப் பெற்று இன்னொரு இடத்திற்கு, நமக்கெல்லாம் பாதுகாப்பாக இருக்கின்ற இடத்திற்கு அல்லது துணையாக இருக்கின்ற இடத்திற்குச் செல்கின்றார் என்னும்போது நாம் மகிழ்வோடு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நமக்கெல்லாம் வழங்கவேண்டிய இடத்திற்கு அவர் போகின்றார்.

திரு. க. இராமமூர்த்தி: நமக்கெல்லாம் அதிகாரங்கள் வழங்கவேண்டிய இடத்திலே உட்கார்ந்து அதிகாரம் வழங்குகின்ற நிலைக்கு, செயல்படுகின்ற நிலைக்குச் செல்கின்றார் என்பதிலே நான் பெருமையடைகிறேன். இந்த பட்டியலிலே அவரும் வருகிறார் என்பதிலே பெருமையடைகிறேன்.

ஏற்கெனவே வந்துவிட்டவர்கள் வரிசையிலே இருக்கின்றவர்களிலே டாக்டர் ஹண்டே அவர்களைப் பொறுத்தவரையிலே, அவரோடு நான் பல காலமாகப் பணியாற்றியிருக்கின்றேன். அவர் பெற்றிருக்கின்ற வெற்றி, வந்திருக்கின்ற முன்ற, அவர்களுடைய பொதுப் பணிக்கு எடுத்துக்காட்டு என்ற வகையிலே அமைந்திருக்கிறது. அவருடைய நெடுங்கால நண்பன் என்ற முறையிலே அவரைப்பற்றி நான் மிக அதிகமாகச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்றாலுங்கூட, நான் பெருமிதத்தோடு சொல்கிறேன். இந்த அவையிலே, முதன்முதலாக இந்த அவையினுடைய உறுப்பினராக தன்னுடைய சட்டமன்ற வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகுதான் பேரவைக்குச் சென்றார். மீண்டும் இங்கே தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற வகையிலே நான் பெருமையடைகிறேன். இந்த அவை சிறப்பு பெற்று விளங்கியதோடு மட்டுமல்ல, கடந்த ஆறு ஆண்டுகளிலே இன்னொரு பெருமை, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் இங்கே பணியாற்றினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. ப. மாணிக்கம் அவர்களும், திரு. ஜே. எம். மியாகான் அவர்களும் ஆற்றிய பணியை மறந்துவிட முடியாது. அவர்கள் எந்த உணர்வோடு அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள் என்பதற்கு மேலாக எவ்வளவு அழுத்தமாக உரிமையோடு இந்த



அவையினுடைய கண்ணியத்தை, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை மதித்து செயல்பட்டார்கள், அணைத்துச் சென்றார்கள் என்பதை பெருமையோடு எண்ணிப்பார்க்கின்றேன்.

அதிமுக உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலும், பல சமயங்களில் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருக்கிறார்களே என்கிற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டாலுங்கூட, அதையும் தாண்டி, அவர்கள் பழகுகின்ற விதத்திலே கசப்பு இல்லாமலாக்கிவிட்டார்கள். இவ்வாறு இந்த ஆறு ஆண்டுக்கால வாழ்க்கை இந்த அவையைப் பொறுத்தவரை எங்களுக்கு முடிவடைகிறது என்றாலுங்கூட, வேறு பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கின்ற நாங்கள் பல இடங்களிலே உரிமையோடு, இங்கே பார்த்த முகங்கள் என்ற உரிமை மட்டுமல்ல, இங்கே பழகிய முகங்கள் என்ற உரிமை மட்டுமல்ல, நம்முடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களை வேறிடங்களிலே சந்திக்கின்றோம் என்கிற உணர்வோடு, உரிமையோடு, இங்கிருந்து செல்கின்ற ஒரு வாய்ப்பினை இந்த அவை எங்களுக்குத் தந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள், அத்தனை பேர்களுமாக இதற்கு அவரவர்கள் அளவிலே துணை புரிந்திருக்கிறோம் என்கிற உணர்வு மதிப்பிற்குரியதாக அமைந்திருக்கிறது என்று சொல்லி, வாலாறு இந்த அவையினுடைய சிறப்பை மீண்டும் சிறப்பிக்க வேண்டும், சிறப்புக்குரியதாக ஆக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இந்த அவையிலே இந்த ஆறு ஆண்டுக்காலம் இடம் பெற்று பணியாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்திற்கும், எங்களுடைய கட்சியின் தலைவியாக விளங்குகின்ற அன்னை இந்திரா காந்திக்கும், அன்றைக்கு தமிழகத்தினுடைய பொறுப்பிலே இருந்த தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் நன்றி சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதற்கெல்லாம் மேலாக இந்த அவையிலே நான் பணியாற்றிய காலத்திலே தனித்த முறையிலே குறைகள் செய்திருக்கலாம், என்னுடைய நடவடிக்கைகளில் பல குறைகள் இருந்திருக்கலாம், அந்தக் குறைகளுக்கு நான் மட்டுமே காரணம், மன்னித்து விடுங்கள் என்று சொல்லி, ஏதாவது நிறைவாகச் செய்ய முடிந்திருக்கின்றதென்றால் அதற்கு என்னுடைய தலைவரும், காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய பாரம்பரியமும் மட்டும்தான் காரணம் என்றும் கூறி, அந்த அளவிலே நிறைவை உங்கள் மனதிலே ஏற்படுத்தி இருப்பேனேயானால், அதற்கான மகிழ்ச்சியைப் பெற்று உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். மற்ற இடங்களிலும், மற்ற துறைகளிலும் சந்திக்கின்றபோதெல்லாம், இந்தத் தோழமையுணர்வோடு மீண்டும் சந்திப்போம் என்கிற உரிமையோடு விடைபெறுகிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

[1984 மார்ச் 30

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியில் பூரித்திறைவு அல்லது மகிழ்ச்சியோடு பங்கு பெறுகிறேன் என்று சொல்வதற்கில்லை. இருப்பினும் இது ஆற்றவேண்டிய கடமை. அவையின் முன்னவர், இங்கேயிருந்து உறுப்பினர்கள் தங்கள் பதவிக் காலம் முடிந்து வெளியே போவது குறித்தும், வர வாய்ப்புள்ளவர்கள் குறித்தும் பல கருத்துக்களைக் கூறினார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களோடு நானும் இணைந்து கொள்கிறேன்.

ஒரு பழமொழி எல்லா மொழிகளிலும் உண்டு. நண்பர்களைச் சந்திக்கும் போது நண்பர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு இருப்போம். நண்பர்களை விட்டுப் பிரியும்போது அதிலே வேதனை உண்டு. இது எல்லா மொழிகளிலும் இருக்கிறது. அந்தமாதிரி ஆறு ஆண்டுகள் நம்மோடு இருந்து, நம்மோடு இருந்து செயலாற்றிய உறுப்பினர்கள் பலர் பிரிகிறார்கள் என்பது வேதனை தந்தாலும்கூட, இந்தப் பதினெட்டு உறுப்பினர்களிலே ஒருவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி குறிப்பிட்டதைப்போல, அதிகாரம் இருக்கிற இடத்திற்குச் செல்கிறார். அதனால் அவரை வழியனுப்புவதிலே மகிழ்ச்சிதான். இருப்பினும் அவர் இங்கே இருந்திருந்தால்தான், நம்முடைய அவைக்கு நன்மை இருந்தாலும் நடந்துவிட்ட நிகழ்ச்சியை மாற்ற முடியாது. எனவே

(பிற்பகல் 1-40)

வழியனுப்புவதிலே மகிழ்ச்சிதான். மற்ற மூன்று பேர்களில் ஒருவர் இந்த அவையின் தலைவர். மேலவைத் தலைவர் என்றால் தங்களை மட்டுமே குறிக்கும். தமிழகத்தில் மேலவைத் தலைவர் என்ற அந்தப் பதவியும் தங்களுடைய பெயரும் இணைந்து பல ஆண்டுகளாகிவிட்டதால், மீண்டும் அது நிலைக்கும் என்ற நம்பிக்கையிலே நான் என் வாழ்த்துக்களைத் தங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

அடுத்த இருவர், திரு. நல்லசிவன் அவர்களும், திரு. ஜேப்பியார் அவர்களும். இவர்கள் இருவரும் இப்போது போட்டியில் இருக்கிறார்கள். இருப்பினும் யார் வருவார்கள் என்பது மாலை தெரியும்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்களும் வந்துவிட்டால் மகிழ்ச்சிதான்.

திரு. ப. மாணிக்கம்: தலைவரவர்களே, அதற்குரிய வாய்ப்பு இல்லாத காரணத்தால், சிறிது நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இருப்பினும் ஒருவர் நண்பர்; மற்றொருவர் நீண்டகாலம் [illegible]



1984 மார்ச் 30] [திரு. ப. மாணிக்கம்]

[illegible] பங்கு பெற்றவர். இவர்களெல்லாம் அவையில் செயல்படும்போது, தங்களுடைய கடமைகளைத் திறம்பட ஆற்றியிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களால் நம்முடைய அவைக்குப் பலன் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, மூன்று பேர்கள் மீண்டும் நம்முடைய அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வழி அனுப்புவதைவிட, வரவேற்பு கூறுவதுதான் பொருத்தம். எனவே அதிலேயும் மகிழ்ச்சி. ஒருவரை டெல்லிக்கு அனுப்புவதில் மகிழ்ச்சி. அதைப்போல் மூன்று பேர்கள் மீண்டும் இந்த அவைக்கு வந்தது குறித்தும் மகிழ்ச்சி.

மீதமுள்ள 11 பேர்களைப் பொறுத்தவரையிலே, வேதனைதான். இவர்களெல்லாம் தங்கள் கடமைகளை, உறுப்பினர்கள் என்ற முறையிலே ஆற்றியிருக்கிறார்கள். கட்சிகள் வேறுபட்டிருந்தாலும், கருத்துக்களிலே மாறுபட்டிருந்தாலும், தங்களுடைய அனுபவம் அல்லது சிந்தனையால் ஏற்படக்கூடிய கருத்துக்களை மக்களுடைய நலன்களுக்காக உறுதியாக வாதிட்டிருக்கிறார்கள். அதிலேயும் சில நேரங்களில் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டிருக்கலாம் அல்லது சில வளைவுகள், நெளிவுகள் ஏற்பட்டிருக்கலாம். இருப்பினும் அப்படியெல்லாம் இல்லாமல் அவை இராதென்றாலும், அவர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றுகிறவர்கள், பொது வாழ்வில் பங்கு வகிக்கிறவர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரலிங்கம், திரு. முத்துசாமி, திரு. ஆறுமுகம், திரு. தாமோதரன், திரு. சந்தோஷம் ஆகியோர் பொது வாழ்க்கையிலே பல்வேறு முறைகளிலே பங்கு பெற்றிருக்கிறவர்கள். மீண்டும் ஒரு வாய்ப்பு வரும்போது இந்த அவைக்கு வர வாய்ப்பு கிட்டும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அவர்கள் பிரிவுக்கு வேதனையைத் தெரிவித்து, வந்திருக்கின்றவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிற இந்த நேரத்தில், ஒரு முக்கியமான, ஒரு எளிய விருப்பத்தைத் தெரிவித்து, அமைய விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் முஸ்லீம் லீக் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், நிரந்தரமாக ஒரே இடத்தில் வாழக் கூடியவர்கள். அவர்களுடைய பூர்வீகம் நெல்லை மாவட்டத்தில் என்பதால் நான் அவரோடு நெருங்கிய உறவு கொண்டவன். இதெல்லாம் தனிப்பட்ட முறையில் இருந்தாலும்கூட, அவருடைய தந்தையார் திரு. முகமது இஸ்மாயில் அவர்கள் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் நீண்ட பாரம்பரியமுள்ளவர்கள். காயிதே மில்லத் என்று அரசியல் அடைமொழியோடு அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் பிறந்து வளர்ந்த இடம் பேட்டை. அவரைப்பற்றி, முஸ்லீம் லீக்

## [illegible] 1984 அன்று ஓய்வுபெறவிருக்கும் உறுப்பினர்களுக்கு பாராட்டுரை பகர்தல்



தலைவர் என்றுதான் தெரியும். அவர்கள் தமிழகத்திலே புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜமால் மகமது சகோதரியின் மகன் அவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் முதலணியில் பங்கு கொண்டு, ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்றவர்களோடு அவர் தொடர்பு கொண்டவர். திரு. முகமது இஸ்மாயில் அவர்கள் முதலில் காங்கிரசில் இருந்தவர்கள்தான். அப்படிப்பட்ட பாரம்பரியம் உள்ளவர்கள் நேர்மைக்கும், அடக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர். அது அவரிடத்தில் இயற்கையாக அமைந்திருந்தது. அப்படிப் பட்டவர்களுடைய மகன் இங்கே இருந்துகொண்டு, தன்னுடைய கடமையை ஆற்றி, பிரிகிறார். இருப்பினும் இந்த நேரத்தில் அவரை நினைவு கூர்கிறோம். அவர் வாழ்ந்த இடம், பூர்வீகம் பேட்டையில் இருக்கிறது. அதை நினைவுச் சின்னமாக, பள்ளிக்கூடமாகவோ, நூல் நிலையமாகவோ மாற்ற வேண்டும். தமிழகம் பொதுவாகவே மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்துகிறது. இந்திய அரசியல் இயக்கத்தை உருவாக்கியவர்களிலே அவரும் ஒருவர். அவர்களுடைய மகன் மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து விடுபட்டுச் சென்றாலுங்கூட, என்றும் அவர்களுடைய எண்ணம் நம் நினைவுகளில் இருக்கும். அந்த வகையில் அவர்களுடைய தந்தையின் நினைவாக நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டும். நாமெல்லாம் எப்படி பெரியவர்களை நினைவு கூர்கிறோம் என்பதற்கு முன் உதாரணமாக அது திகழும். அதையும் இந்த நேரத்தில் தெரிவித்து, நம்மை விட்டுப் பிரிகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் வாழ்த்துக்களையும், நல்லெண்ணங்களையும் தெரிவித்து, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களையும், விடைபெறுகிறவர்களில் மீண்டும் வர இருக்கிறவர்களையும் வருக வருக என்று நல்வரவு கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஜே. எம். மியாகான்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டுக்காலமாக நான் ஆங்கிலத்திலேயே உரையாற்றி வந்தேன். ஒருசமயம், தலைவர் அவர்களே, நான் தங்களிடத்தில் கூடிய சீக்கிரத்தில் தமிழில் உரையாற்றுவேன் என்று சொன்னேன். கடைசியாக நான் விடைபெறும் நேரத்தில் தமிழில் பேச வேண்டுமென்ற எண்ணத்தோடு பேச முற்பட்டாலுங்கூட, என்னால் தமிழில் பேச முடியவில்லை. ஏனென்றால் விடைபெறுகிற கட்டம் ஒரு 'டச்சிங் சீன்' ஒரு உருக்கமான கட்டம். அம்மாதிரி நானும் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். ஆகையால் தான் என்னால் பேசக்கூட முடியவில்லை. இடம் காலியாகப் போய்விடுகிறதே என்பதற்காக எனக்கு வருத்தமில்லை. இத்தனை பெரிய நண்பர்களை, இத்தனை உயரிய தொடர்பு உள்ளவர்களை, அன்யோன்யமாகப் பழகி



புண்ணியவான்களை விட்டுப் பிரிகின்றோமே, இனி இவர்களுடன் பழகுகின்ற வாய்ப்பு இல்லையே என்கிற எண்ணத்தால்தான், நான் பாதிக்கப் பட்டிருக்கிறேன். அவ்வளவு தூரம் பழகிவிட்டோம்.

என்னை நற்றைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் கண்ணியமாகவும், உருக்கமாகவும், பிரியமாகவும், அன்போடும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் என்னால் இயன்றவரை தகப்பனார் பெயருக்கு இழுக்கு ஏற்படாத வகையில் பணியாற்றினேன். என்னுடைய தகப்பனாருடன் பிறந்தவர் மாதிரி மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் எனக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் என்னிடம் அன்போடும், ஆதரவோடும் பழகினார்கள். அவர்கள் என்னிடம் இந்த ஆறு வருட காலத்தில் ஒரு தடவைகூட கோபத்தோடு, கண்டித்து ஒரு வார்த்தை சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வளவு அன்போடு, ஆதரவோடு என்னை அவர்கள் நடத்தினார்கள். அவரைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய முயற்சியால்தான் நான் மேலவை உறுப்பினரானேன். இங்கே ஒரு சிறு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த எண்ணம் வந்தபோது, நான் நாமினேஷன் போட வேண்டி வந்தது. அப்போது திரு. முனுஆதி போன்றவர்கள், எங்கள் பகுதியைச் சார்ந்தவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் பேசியிருப்பார்கள் போலும். அவர் எனக்கு முப்பது வருடமாக நண்பர். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இருக்கிறது என்று அவர் எனக்கு 'போன்' பண்ணினார். நான் அப்போது கட்சிக்குக் கட்டுப்பட்டவன். "என்னுடைய கட்சியின் மாநிலத் தலைவர் திரு. அப்துல் சமது அவர்கள் இருக்கிறார்கள். அவருடன் தொடர்புகொள்ளுங்கள், அவர் சொல்லுமாதிரி நடந்துகொள்கிறேன்" என்று சொன்னேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அவருடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். மறுநாள் காலையில் ஆறு மணிக்கெல்லாம் என் வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டுவிட்டு திரு. அப்துல் சமது அவர்கள் வந்துவிட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் நாமினேஷன் செய்யச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அவர் அதுபற்றி கவனிக்கிறேன் என்று சொன்னதாகவும், உறுப்பினர்களைக் கலந்து பேசியதில் எனக்கே இந்த முக்கியமான வாய்ப்பினைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதனால்தான் முதலில் வாருங்கள், நாமினேஷன் தாக்கல் செய்யுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு ஆறு மாதத்திற்கு முன்பு தான் நான் தேர்தலில் நின்று தோற்றேன். அப்போது புரட்சித் தலைவர்

[illegible] 1985 அன்று ஓய்வுபெறுவோருக்கும் உறுப்பினர்களுக்கும் பாராட்டுரை பேச்சு

[திரு. ஜே. எம். பியாசன்] [1984 மார்ச் 30]

(பிற்பகல் 2-00)

அவர்கள் எவ்வளவு அவதிப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆறாம் முறையாக அவதிப்பட்டார்கள். இரண்டாவது முறையாக நான் வெற்றிபெற்ற பின்பு ஆரத்தழுவியபோது, அவரது கைகள் உண்மையிலேயே நடுங்கிற்று. காரணம் எனது வெற்றிக்காக பாடுபட்ட அவர்கள் மூன்று தினங்களாகத் தூங்கவில்லை. மூன்று இரவுகள் தூங்காத காரணத்தாலும், உணர்ச்சி வசப்பட்டதன் காரணமாகவும் அவரது கைகள் நடுங்குவதைப் பார்த்தேன். கண்களில் நீர் மல்க என்னை வரவேற்று ஆசீர்வதித்தார்கள். எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு எந்தவகையிலும் தொய்ந்துபோகாதபடி நானும் நடந்து கொண்டிருக்கிறேன். பல விஷயங்களில் நான் என் மனதில் பட்டதை இங்கே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு சமயத்தில் அரசாங்கத்தின் கொள்கையை நான் 'கிரிடிசைஸ்' செய்வதுண்டு. ஆனால் யாரையும் நான் திட்டுவது வழக்கமில்லை. 'கிரிடிசம்' இல்லாமல் எந்த அரசாங்கமும் நல்ல முறையில் இயங்க முடியாது. அதை சம்பந்தப்பட்டவர்கள் அப்படி என் விஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியின் பிரச்சினைகளை பலமுறை இங்கே சொல்லியிருக்கிறேன். அவர்கள் அதைக் கவனித்து ஆவன செய்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஓய்வு பெறும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும்பற்றிப் பேசவேண்டுமானால் ஒருமணி நேரம் பேசலாம். எனக்கு ஒதுக்கிய குறுகிய நேரத்தில் அவைகளையெல்லாம் சொல்ல முடியாதுதான். எனக்கு ஒவ்வொருவரிடமும் பழக நல்ல வாய்ப்பு இருந்தது. அதுபோல் எதிர்க்கட்சித் தரப்பில் அன்புச் சகோதரர் திரு. லிங்கம் அவர்களும் என்னுடன் அன்புடன் பழகினார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள், திரு. நல்லசிவன் அவர்கள், திரு. மாணிக்கம் அவர்கள், திரு. ஆறுமுகம் அவர்கள் இப்படி ஒவ்வொருவரும் என்னுடன் நட்புணர்வுடன் இருந்து எனக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்தார்கள். இப்போது அவைத் தலைவராக இருக்கிற திரு. [illegible] அவர்களும் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் எனக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை எப்போதும் நல்லவிதமாகவே நடத்திவந்திருக்கிறார்கள். எனக்கு இந்தப் பணியாற்ற வாய்ப்புத் தந்த ஆண்டவனுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என் தகப்பனார், எந்த நிலையாக இருந்தாலும், எந்த வாய்ப்பாக இருந்தாலும், எல்லாம் ஆண்டவன் செயல் என்று சொல்வார்கள். "எல்லாம் உன்தனுடைய செயலல்லால் வேறொன்றுமில்லை ஆண்டவனே" என்று ஆழ்வார் பாடியதைப்போல எனக்கும் எதிர்பார்த்த

எல்லாவற்றையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் என்மீது அவருக்கு எவ்வளவு அன்பு இருந்தது என்பதைத்தான் இது காட்டுகிறது. எல்லோருமே அப்படித்தான் இருந்தார்கள். எல்லோருமே எனக்கு ஒத்துழைப்புத் தந்தார்கள். இது எனக்கு ஒரு புதிய அனுபவம் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலையில் என்னால் முடிந்தவரை நான் சேவை செய்திருக்கிறேன். அதற்காக அவர்களெல்லோரும் என்னை '[illegible]' செய்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரிகிறது. அதற்காக நான் அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எனக்கு எல்லா வகையிலும் ஆதரவு தந்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இருக்கும் அவை உறுப்பினர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்களிடம், தங்கள் முன்னால் இந்த அவையிலிருந்து விடைபெற்று— மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல—மீண்டும் வருவதற்காக வாழ்த்துக்களைப் பெற்று, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுவதற்குரிய வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்று நாம் படித்திருக்கிறோம். இந்த அவையில் பல்வேறு கட்சிகள், பல்வேறு கொள்கைகள், பல்வேறு அறிவுத் திறன் உள்ளவர்கள், பல்வேறு வகைகளில் மாறுபட்ட அல்லது வேறுபட்ட திறனுடையவர்கள் அத்தனை பேரும் இங்கே ஒரே நிறையாக, ஒரே சமமாக, ஒரே உணர்வோடு மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற லட்சியத்தோடு இருந்து செயல்பட்டிருக்கிறோம். இனியும் செயல்பட இருக்கிறோம்.

இந்தக் காலகட்டத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து, கல்லூரி செல்வதற்குக்கூட வழிவகையில்லாதிருந்த நிலையில், செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சியைப் பெற்று, சேலம் ஜில்லா போர்டின் சரித்திரத்திலேயே இல்லாதபடி உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் நியமனம் நடந்தபோது, 30, 40 முறை ஜில்லா போர்டு உறுப்பினரிடம் நடந்து, கடைசியில் மூடிக் கிடந்த மலையடிவாரத்தில் இருந்த ஒரு தனியார் பள்ளியில் நான் ஆசிரியனாக நியமிக்கப்பட்டேன். அந்த அளவுக்கு மிகச் சாதாரண சூழ்நிலையில் பிறந்து



வளர்ந்த நான் எத்தனையோ தொழில் காரணமாக ஆசிரியர் சமுதாயத்திற்கு உழைப்பதற்கு உந்தப்பட்டு, வட்டத்திலும், மாவட்டத்திலும், மாநிலத்திலும் பொறுப்பேற்று, தொடக்கப் பள்ளி ஆசிரியர் இயக்கத்தின் அவை நின்று அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி, எனக்கு முன்னால் இதற்கான பாசறை அமைத்துப் பணியாற்றிய காலஞ்சென்ற தலைவர் மதிப்பிற்குரிய அமரர் இராமுண்ணி, திரு. [illegible] செட்டியார், இன்றைக்கு இருக்கிற திரு. சாமைய்யா போன்றவர்கள் எல்லாம் தொடக்கப் பள்ளி ஆசிரியர் இயக்கத்தைக் கட்டிக் காத்து வளர்த்து என்னிடம் பொறுப்பைத் தந்தார்கள். அதன் காரணமாக நானும் மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் ஒரே பாசறையில் இருந்து ஆசிரியர் சமுதாயத்திற்காகப் பணியாற்றிய அந்தக் காலத்தில், 1969 ஆம் ஆண்டு 10,000 ஆசிரியர்களைக் கொண்ட சைக்கிள் பேரணி ஒன்று ஆசிரியர்களின் கோரிக்கையை வலியுறுத்த சென்னையை நோக்கி வந்தபோது, இன்றைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அப்போது ஆசிரியப் பெருமக்களின் சைக்கிள் அணிக்கு சென்னையில் தேனீர் விருந்து கொடுத்த அந்த நிகழ்ச்சியை என் மனக்கண் முன்னாலே பார்க்கிறேன். அதனைய 1969 ஆம் ஆண்டு மாநாட்டுக்கும் பின்னாலே அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆசிரியர்களுக்கும் பெரும் நம்பிக்கையை அளிக்கும் வகையில், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் மூலமாக அன்றைக்கு பலபல நன்மைகளை அறிவித்தார்கள் என்ற அவைகளையும் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அப்போதும் ஆறு ஆண்டுகாலம் அவர் தலைமையில் அரசு நடந்தபோது, நான் மேலவை உறுப்பினராகப் பணியாற்றினேன். அந்தக் காலத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு சட்டப் பாதுகாப்பு கொண்டு வருவதற்குப் பணியாற்றும் வாய்ப்பை அப்போது பெற்றேன். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை இல்லை. வாக்குரிமை இல்லாத சமுதாயத்திற்குப் பெயர் ஆசிரியர் சமுதாயம். தெரிந்தோ தெரியாமலோ அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது இது விடப்பட்டது. Not lower than that of a secondary school. என்று எழுதப்பட்டதால் அவர்களுக்கு வாக்குரிமை இல்லை, வாக்குரிமை இல்லாத சமுதாயத்தைச் சார்ந்த

(பிற்பகல் 2-10)

இருவருக்கு முதன் முதலில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், என்ஜினியர்கள், மெடிக்கல் காலேஜில் பணியாற்றுபவர்கள், வாய்ப்பு அளித்து சபைக்கு அனுப்பிய நிகழ்ச்சியை 1970 ஆம் ஆண்டு

[திரு. செ. முத்துசாமி] [1984 மார்ச் 30

உருவாக்கினார்கள். அன்றைக்குத்தான் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் இந்தச் சபைக்குள்ளே நுழைந்த காட்சியைப் பார்த்தோம். மறைந்துவிட்ட உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியராக இருந்து மிக வல்லமையாக தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசி பணியாற்றிய, கட்சிசார்பற்ற அவருடைய கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறேன். என்னைப் பொறுத்த வரையில், தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று கற்பனையிலும் காண முடியாத சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருந்தேன். ஆனால் அவர்கள் "இந்தச் சபைக்குச் சென்று பணியாற்றுங்கள்" என்று என்னை அனுப்பி வைத்தார்கள். கடந்த 12 ஆண்டுகளாக பொதுவாக அப்பழுக்கு இல்லாமல் அவர்களுக்காகப் பணியாற்றியிருக்கிறேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப பணியாற்றியிருக்கிறேன். யார்மீதும் கோபப்பட வேண்டும் என்று அல்ல. இந்தச் சமுதாயத்திற்கும் சில சேவைகளைச் செய்ய வேண்டும் என்ற அவசர உணர்வால், பிரச்சினைகள் நீண்ட காலம் தீர்க்கப்படவில்லை என்ற எண்ணத்தாலே, சில விஷயங்களைச் சொல்லும்போது, வார்த்தைகளைக் கடுமையாகப் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது இது நான் வளர்ந்த முறையின் காரணமாக இருக்கலாம். இந்த அவையில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருக்குமானால், அது என்னுடைய சொந்தக் குறையாகும். நிறைவுகள் ஏதாவது ஏற்பட்டிருக்குமானால், என்னுடைய இயக்கமும், ஆசிரியர் பெருமக்களும் எனக்குத் தந்த பயிற்சி காரணமாக பெற்ற நிறைவுகளாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த அவையில் எனக்கு உதவிய முன்னாள் கல்வி அமைச்சரும் இந்நாள் நிதியமைச்சருமாகிய நாவலர் அவர்களுடைய பெருமையை நான் மறக்க மாட்டேன். முதலமைச்சர் அவர்களும் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஒரு முறை ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு ஆசிரியர் பணியில் முன்னுரிமை தர வேண்டும், அதுபோல் மற்ற இலாக்காக்களில் தருகிறார்கள் என்று சொன்னபோது முதலமைச்சர் அவர்கள் மனம் திறந்து "இது நியாயம்தான், நல்ல காரியம்தான், உங்களையும், எதிர்க் கட்சித் தலைவரையும் கலந்துகொண்டு முடிவு செய்வேன்" என்று கூறி, தன்னுடைய நல்லெண்ணத்தைப் பிரதிபலித்த நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கிறேன். பொதுவாக சத்துணவுத் திட்டத்திலே ஆசிரியப் பெருமக்களுக்கு ஏற்படக்கூடிய வேலைப் பளுவைக் குறைத்து நன்மை செய்ததற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 மார்ச் 30] [திரு. செ. முத்துசாமி]

"ஆசிரியர்களுடைய பிரச்சினையைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையையும் முத்துசாமி பேசமாட்டார். இன்றைக்கு பம்பாயில் வாழும் தமிழர் பிரச்சினைக்காக பேசுகிறார்" என்று கலைஞர் ஒரு நாள் பாராட்டியதை எண்ணிப் பார்க்கிறேன்.

பொதுவாக மனிதர்கள் பல பேர் வருகிறோம்; வாழ்க்கையிலே பொதுப் பணி ஆற்றுகிறோம். சில நேரங்களில் மனப் பயிற்சியும், மனப் பக்குவமும் பெற்று சில நேரங்களில் நல்ல நிலையிலே எண்ணங்களைச் சொல்லுகிறோம். சில நேரங்களில் சங்கடங்கள், மோதல்கள் வந்திருக்குமானால், இவைகள் இயற்கையின் நியதிக்குட்பட்டதாகும். ஆகவே இரவு பகல் போல நல்லவைகளும், சில நல்லவை அல்லாதவைகளும் இருந்திருக்கலாம். அந்த வகையிலே நான் பணியாற்றிய கால கட்டத்திலே பல்வேறு விஷயங்களைச் சொல்லும்போது, ஆசிரியர் சமுதாயத்தை எண்ணிப் பேசியிருக்கலாம். என் மனதிலே பட்டதைச் சொல்லியிருப்பேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், "முத்துசாமி அவர்கள் இங்கு இருந்தாலும், வெளியே இருந்தாலும், இந்தச் சமுதாயத்தின் நலனுக்காக இந்த அரசு உதவி செய்யும்" என்று நல்லெண்ணத்தோடு சொன்னார்கள். அந்த வாசகத்திற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது வாழ்க்கையில் வெற்றிகள் இல்லை, தோல்விகள் இல்லை, இரண்டையும் ஒன்றாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். 1970 ஆம் ஆண்டு இந்தச் சபையில் நுழைந்தபோது நான்தான் வயதிலே இளைஞன்—33 வயது. மற்றவர்கள் என்னைவிட வயது முதிர்ந்தவர்கள். இவ்வளவு சிறு வயதிலேயே என்னை இந்தச் சபைக்கு அனுப்பினார்கள். சின்னப் பையன் உட்கார்ந்திருக்கிறான் என்று நினைத்தார்கள். ஆனால் ஆசிரியர்களுடைய உணர்வை எதிரொலித்த பிறகுதான் மரியாதை ஏற்பட்டது. பல ஆசிரியர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பிரதிநிதியாக தொடர்ந்திருக்கக்கூடிய வாரிசாக திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நான் வாழ்த்துகிறேன்.

ஆசிரியர்கள் இயக்கத்தின் சார்பாக முதன்முதலாக பட்டதாரிகளுக்காகப் போராட்டம் நடத்தியபோது கைது செய்யப்பட்டு சிறை சென்ற செல்வி லீலாவதி அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் இயக்கத்திற்காகப் பணியாற்றுவதற்காக இங்கே மற்ற பல பேரும் வந்து அமர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். எங்கே இருந்தாலும் சேவை செய்யுங்கள். இந்த அவைக்கு மட்டுமல்லாமல் இந்த சமுதாயத்திற்கு பணியாற்ற வேண்டும். இங்கே பணியாற்றினாலும், 63 பேர்

தான் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வெளியே ஏராளமான பேர்கள் பணியாற்றுகிறோம். முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, தொடர்ந்து இந்தச் சமுதாயத்திற்கு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

இன்னொரு உயர்வான கருத்தைச் சொல்லி முடிக்கிறேன். நாங்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே "டில்லிக்குச் சென்று ஆசிரியர்களுடைய அடிப்படைப் பிரச்சினையைக் கேட்கவேண்டும், 25 ஆயிரம் ஆசிரியர்கள் செல்கிறோம்; அதற்காக நீங்கள் விடுப்புத் தரவேண்டும்; ஸ்பெஷல் கேஷுவல் லீவ் தரவேண்டும்; 500 ரூபாய் லோன் தரவேண்டும்" என்று கேட்டோம். அவர்கள் எங்களை மிக நல்லமுறையிலே வாழ்த்தி, அந்த விடுப்பையும் தந்து, 500 ரூபாய் லோனையும் தந்து அங்கே அனுப்பிவைத்தார்கள். டில்லியிலே சென்று மாநாடு நடத்தியபோது, சில பேர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இதை யார் "ஆர்கனைஸ்" செய்கிறார்கள் என்று கேட்டார்கள். நான், "தமிழ்நாடு ஆசிரியர்கள் கூட்டணி organising the conference என்று சொன்னேன். அடுத்த வாசகம் ஒன்று கேட்டார்கள். financing the Party's Conference? என்று கேட்டார்கள். which is We got Rs. 500 from every teachers' Provident Fund and we are organising the conference. என்று சொன்னேன். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு உதவிகளைச் செய்தீர்கள்; எதிர்காலத்திலேயும் செய்வீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.

திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் மிகப் பெருந்தன்மையாளர். அவர்கள் காலத்திலும் நான் பணியாற்றியிருக்கின்றேன். அவர்கள் மிக வேகமானவர்கள். அவர்கள் என்னை அன்போடு கடிந்துகொள்வார்கள். அதைப்போலவே இன்றைக்கு இருக்கக்கூடிய பெரியவர் அவர்கள். ஐயா அவர்கள், தமிழ் பெரியவர். நான் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே, முதல்வர் அவர்கள் அழைத்து, இன்னார் தலைவராக வர இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். "ஐயா அவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்" என்று நான் மகிழ்ச்சி பொங்கச் சொன்னவன். இடையிலே அவர்களோடு நான் உரிமையோடு சண்டை போடுவேன். இருந்தாலும்கூட ஐயா அவர்களுக்கு கடந்த காலத்தில் சொன்ன சொற்கள் ஏதாவது மனதில் பட்டிருக்குமானால், தயவுசெய்து உங்களுடைய மகனைப்போல, நீங்கள் என்னைப் பொறுத்தருள்க; தவறாக பேசி இருந்தால், நீங்கள் அதை ஆட்செய்க என்று மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு நன்மைகள், நலன்கள் இவற்றுக்காகப் பணியாற்றுவதற்குப் பல்வேறு நேரங்களை ஒதுக்கித் தந்த உங்களுக்கும், ஒத்துழைத்த அமைச்சரவைக்கும், இங்கே எதிர்க்



கட்சிகளாக இருப்பவர்கள் என்னுடைய உரிமைக்காகப் பல நேரங்களிலே எழுப்பிய பிரச்சினைகளைப் பாதுகாத்துத் தந்தவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், என்னை ஆதரித்த அத்தனை பேர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய திரு. மியாகான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "கடந்த ஆறு ஆண்டுக் காலமாக ஆங்கிலத்திலே பேசிவந்த என்னை தமிழிலே பேசச் சொன்னீர்கள். பதவிக் காலம் முடிந்து போகிறபோது தமிழிலே பேசிப் போகிறேன்" என்று சொன்னார்கள். எனக்கு உள்ள பெருமை என்னவென்று சொன்னால், இன்றையதினம் அவர் பேசுகிற தமிழை நான் பார்த்தபோது மிகச் சிறப்பாக இருந்தது. கடந்த ஆறு ஆண்டுக்காலம் ஏன் தமிழிலே பேசாமல் இருந்தார்கள்? அதுதான் எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறது. நான் அதைச் சொன்னால், அவர் ஆங்கிலத்திலே ஏதோ குறைவாகப் பேசினார் என்று யாரும் தவறாக நினைக்கவேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** துணைத் தலைவர் சொல்லி அவர் நம்ப மாட்டார்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஆங்கிலத்திலே மிகச் சிறப்பாகப் பேசக்கூடியவர் தமிழிலே நன்றாகப் பேசினார்கள். நான் இந்த அவைக்கு 1968 ஆவது ஆண்டிலே வருகிறபோது இங்கே இருக்கக்கூடிய பல்வேறு உறுப்பினர்கள் முக்கியமாக ஆங்கிலத்திலேதான் பேசிக்கொண்டிருப்பார்கள். யாராவது சில பேர்கள் தமிழிலே பேசுவார்கள். ஆசிரியர் தொகுதியிலே இருந்து வந்த திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் எல்லாம்கூட ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள். அதுவும் முன் வரிசையில் இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். திரு. ராஜா ஐயர் அவர்களும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். ஏதோ சில பேர்கள்தான் தமிழிலே பேசுவது வழக்கம். அப்போது தலைமை வகித்துக்கொண்டிருந்த திரு. மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும் அநேகமாக 99 சதவீதம் ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள். இப்படிப் பேசிக்கொண்டிருந்தது கொஞ்சம் கொஞ்சமாக மாறி, பிறகு திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் தலைவராக வந்தபோது, அவரும் அநேகமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பாதி பாதியாகப் பேசுவார்கள். பிறகு தாங்கள் தலைவராக வந்தபோதுதான் அந்த நிலைமை மாறி, தலைவர்கள் தமிழில் பேசவும், உறுப்பினர்கள் தமிழில் பேசவுமாக மாறியிருக்கிறது. இனிமேல் தமிழிலேதான் அநேகமாக எல்லோரும்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 மார்ச் 30

பேசுவார்கள் என்ற நிலைமையிலும் ஏதோ ஓரிரண்டு பேர்கள்தான் ஆங்கிலத்திலே பேசுபவர்களாக இருப்பார்கள். அவர்களும்கூட ஏதோ ஆங்கிலத்திலே பேசினால் முரண்பாடாக இருக்குமென்று கருதி, நாமும் தமிழிலே பேசுவது நல்லதென்று கருதிப் பேசுகின்ற நிலைமைதான் ஏற்படும். ஆங்கிலத்திலே பேசக்கூடிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் திரும்ப வெற்றி பெற இயலவில்லை. அவர்கள் இங்கே வரவில்லை. அவர்கள்தான் முழு மூச்சாக நூறு சதவீதம் ஆங்கிலத்திலே பேசுவார்கள். திரு. வசந்த பை அவர்களும் ஆங்கிலத்திலே பேசுவார்கள். ஆகவே இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அநேகமாக எப்போதுமே தமிழிலே பேசுகிற உறுப்பினர்களாகத்தான் இருக்கிறார்கள். ஏதோ நானும், இன்னுமொரு உறுப்பினரும் தான் ஆங்கிலத்திலே பேசுகிறவர்களாக இருக்கின்றோம்.

இங்கிருந்து விடைபெறுகிறவர்களிலே ரொம்ப நாளாக இந்த அவையினுடைய உறுப்பினராக திரு. சங்கரலிங்கம் அவர்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் 1964 ஆவது ஆண்டில் உறுப்பினராக வந்தார்கள். கிட்டத்தட்ட 22 ஆண்டுக் காலம் அவர்கள் இங்கு உறுப்பினராக இருந்திருக்கிறார்கள் அதேமாதிரி டாக்டர் ஹண்டே அவர்களும் 1964 ஆவது ஆண்டில் இருந்து இங்கே உறுப்பினராக இருக்கிறார்கள். ஆனால் டாக்டர் ஹண்டேவுக்கும் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம், டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு மூன்று ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்த பிறகு, மறுபடியும் அவர்கள் பேரவையினுடைய உறுப்பினராக மாறி, பிறகு சென்ற ஆறு ஆண்டுக் காலம் வரைக்கும் மறுபடியும் இங்கே உறுப்பினராக வந்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக டாக்டர் ஹண்டே அவர்கள் இங்கே இருந்த

(பிற்பகல் 2-20)

தில்லை. ஆகவே இப்போது விடை பெறுகின்றவர்களிலே மிகவும் மூத்த உறுப்பினர் என்று பார்க்கின்றபோது, திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள்தான். அவர்கள் ஒரே தொகுதியிலே நின்று கிட்டத்தட்ட 22 ஆண்டுக்காலம் இங்கே பணி புரிந்திருக்கின்றார்கள். அதற்கு அடுத்து 1966-வது ஆண்டில், நமது திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் இங்கே இருந்தது கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலம். திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. சந்தோஷம் அவர்களும், 20 ஆண்டுக் காலம் இங்கே இருந்திருக்கின்றார்கள். நான் 1968 ஆவது ஆண்டிலேயிருந்து கிட்டத்தட்ட 16 ஆண்டுக்காலம், இந்த அவையிலே பணியாற்றிடக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது. இங்கே இருக்கின்ற நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, நம்முடைய மதிப்பிற்குரிய தலைவர் அவர்களைப்பற்றி

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 மார்ச் 30

புண்படுத்தாத அளவிற்கு இடித்துரைக்கும் பாங்கைப் பெற்றிருக்கிறார்கள். ஆகையினால் அரசியலிலே இருக்கும் உறுப்பினர்கள் வருவதாலே எந்த விதமான தவறுமில்லை என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த அவையினுடைய ஓர் அணிகலனாக இருந்தார்கள். அவை முன்னவர் அவர்களும் அந்தக் கருத்தைத் தான் சொன்னார்கள். கடந்த 18, 20 ஆண்டுக் காலமாக தான் நினைத்த கருத்துக்களை, தனக்கு உண்மை என்று தெரிந்ததை எதற்கும் அஞ்சாமல் சொல்லக்கூடியவர்கள். அவர் நல்ல செல்வந்தர். நல்ல தொழில் அதிபர். பல இடங்களில் பெரிய தொடர்புகள் உடையவர். இது பலருக்குத் தெரியும். சில சமயங்களில் என் நண்பர்கள் சிலர் இவர் கொஞ்சம் 'வெஸ்டட் இன்டரஸ்ட்'-ஆகப் பேசுகிறாரே என்று சொல்வது வழக்கம். அவர் மனதுக்குச் சரி என்றுபட்டதைத்தான் பேசுவார். அரசாங்கத்திற்குப் பிடிக்கும், பிடிக்காதென்று பேசுவதில்லை. இன்னொன்று, அவையினுடைய உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றும்போது முதல் ஆறு ஆண்டுக் காலம் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். அடுத்த ஆறு ஆண்டுக் காலத்தில் கொஞ்சம் சோர்வு வரும். அதற்கடுத்த ஆறு ஆண்டுகளில் சோர்வு இன்னும் கொஞ்சம் அதிகமாக வரும். ஓர் உறுப்பினருடைய பணியாற்றுகின்ற காலங்களை எடுத்துப் பார்க்கிறபோது முதல் ஆறு ஆண்டுக் காலத்திலே எப்படிப் பணியாற்றினார், அடுத்த ஆறு ஆண்டுக் காலத்திலே எப்படிப் பணியாற்றினார் என்பதைப் பார்க்கிறபோது, ஒரே தொடர்பாக ஒரே மாதிரியாக இருப்பதை நாம் பார்ப்பதில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களைப் பொறுத்தவரையில், 1968 ஆம் ஆண்டிலே எப்படி அவர் பணியாற்றினாரோ, அதேமாதிரி இன்றைய வரையில் ஒரே தொடர்பாகப் பணியாற்றிய சிறந்த உறுப்பினர். அவர் இந்த அவைக்கு வராமலிருப்பது பெரிய இழப்பு என்பதை உணர்கிறேன். அவை முன்னவர் அவர்களும் அதைச் சொன்னார்கள். இருந்தாலும் அவர் பெரிய வயதானவர் அல்ல 55, 56 வயதுதான் இருக்கும். இன்னும் அவருக்குப் பெரிய அரசியல் எதிர்காலம் இருக்கிறது. நான் அவருக்குப் பெரிய யோசனை சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. நான் முன்பே சொன்னமாதிரி, தனியாக இருப்பதை விட, அரசியல் கட்சிகளில் இருந்தால், நல்ல பெரியவர்கள், சிறந்தவர்களாக இருப்பவர்கள் நாட்டுக்கும் பயன்படக்கூடிய நிலையிலே இருக்க முடியும் என்கிற கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு அவருக்கு என்னை அறிமுகப்படுத்தோடு, அவர் இன்னும் பல ஆண்டுக்காலம் அரசியலிலே இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.



984 மார்ச் 30] [திரு. ஜி. சுவாமிநாதன்]

மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களைப் பொறுத்தவரையில், ...வரைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. கிட்டத்தட்ட 20, 25 ஆண்டுக் ...லமாக நமக்குத் தெரிந்தவர். மீண்டும் அவர்கள் அவைக்கு வந்திருக் ...றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் தேர்தலிலே ...ற்கிறார்கள். மீண்டும் வருவார்கள் என்று நாம் எல்லாம் உறுதியாக ...ம்புகிறோம். அவர் என்னுடைய சிறந்த நண்பர். நெருங்கிய நண்பர். ...என்னிடத்திலே அபிமானம் கொண்டவர், நான் அவரிடத்திலே அபிமானம் ...கொண்டவன் என்ற நிலைமையிலே அவரைப்பற்றி அதிகம் பேச வேண்டிய ...தேவை இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களைப்பற்றி அவை ...முன்னவர் அவர்கள் சிறந்த முறையிலே விமர்சனம் செய்தார்கள். நல்ல ...முறையிலே பணியாற்றிய சிறந்த உறுப்பினர். ஆறு ஆண்டுகளுக்கு முன்னாலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் வருகிறார் என்று சொன்னவுடனே, அவர் வந்தால் இந்த அவை எப்படி இருக்குமோ என்று நானும் நினைத்தேன். பலரும் நினைத்தார்கள். அவர் பெரிய பாணியையும் அவர் இருந்த நிலைமையையும் பார்க்கிறபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரா இப்படி இருக்கிறார் என்று கேட்கிற அளவிற்கு அவர்கள் இங்கே பணியாற்றினார்கள். அவர்கள் இந்த அவைக்கு மீண்டும் வருவார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைக்குறித்து ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் சிறந்த எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலே எல்லாத் துறையிலும் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். அவர் ஒரு சிறந்த பார்லிமெண்டேரியன் என்று சொல்லலாம். அதாவது அவருடைய கட்சியினுடைய நிலைமை என்ன என்பதை அவரை வைத்துக்கொண்டு பார்த்தாலே நமக்குப் புரிந்துவிடும்.

(பிற்பகல் 2-30)

அவருடைய பேச்சைப் பார்க்கிறபோது, அவருடைய கட்சியால் இப்படி அவருடைய பேச்சைப் பார்க்கிறபோது, அவருடைய கட்சியால் இப்படி முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். சில சந்தர்ப்பங்களில் அவர் ... கட்சி கோபமாக இருக்கிறது என்பது தெரியும். ...சாடுகிறபோது, அவருடைய கட்சி கோபமாக இருக்கிறது என்பது தெரியும். ...ரு சமயத்தில் அவர் அணைத்து அரவணைத்துப் பேசும்போது, அவருடைய கட்சியின் நிலை மாறிவிட்டது என்பது புரியும். அவருடைய கட்சியின் நிலை கட்சியின் நிலை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தியின் நிலை. என்னவோ அதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தியின் நிலை. ...திரு. இராமமூர்த்திக்கு என்று தனி நிலையை நான் பார்த்ததில்லை. இறை... என்னுடைய வாழ்த்தாக அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்...கிறேன். சிறந்த தொண்டராக இருந்து, கட்சிப் பணியாற்றியவர்கள். அவருக்கு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1984 மார்ச் 30

நீண்ட எதிர்காலம் இருக்கிறது. தேர்தல்கள் இன்றோடு முடியப் போவதில்லை. தேர்தல்கள் விரைவாகக்கூட வரக்கூடிய காலகட்டம் இருக்கிறது. அவருக்குப் பெரிய பதவிகளும், பொறுப்புகளும் அதன்மூலம் கிடைக்குமென்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. சந்தோஷம் அவர்கள் நல்ல முறையிலே இங்கே பணியாற்றியவர்கள். திரு. வசந்த பை அவர்கள் கோபத்தோடு சில சந்தர்ப்பங்களிலே கருத்துக்களைச் சொல்லுவார்கள். வெளிநாடுகளுக்கு அவர்கள் அடிக்கடி போவார்கள். இங்கே பேசிவிட்டு வெளியே வந்தால், அமெரிக்கா பற்றி, பிரேசில் பற்றி, பெரு பற்றி என்னிடம் பேசுவார்கள். ஆகவே உலக நாடுகளைப் பற்றி நான் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு சொல்லக்கூடிய நல்ல உறுப்பினராக அவர்கள் இருந்தார்கள். நான் திரு. ஜெயபிரகாஷ்பற்றி பொறாமைப்படுவதுண்டு. எப்போது அவரைப் பார்த்தாலும், அவர் சிரித்துக் கொண்டே இருப்பார். நல்ல நேரத்திலும் சிரித்துக் கொண்டே இருப்பார். எப்படி அவர் எல்லாக் காலங்களிலும் மகிழ்ச்சியோடு இருக்க முடிகிறது, அதற்குக் காரணம் என்ன என்று அவரிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டு மென்று கூட நினைப்பேன். நல்ல தன்மை கொண்ட நண்பர். கொறடாவாக இருக்கும் அவர் எல்லோரிடமும் சுமுகமாகப் பழகக் கூடியவர். அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய நண்பர். அவருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, அவர் மீண்டும் இந்த அவைக்கு வர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அடுத்து, திரு. வலம்புரி ஜான் அவர்கள். அவரைப்பற்றி அறிந்துகொள்ள நம்முடைய **Who is who** புத்தகத்தில் பார்த்தபோது, அவரைப் பற்றி ஒன்றுமில்லை. நாடாளுமன்றத்திற்கு முன்பு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டு, அங்கே பிரச்சினை வந்தது, திரும்பி வந்துவிட்டார். அவரைப்பற்றிப் புத்தகத்தில் ஒன்றுமில்லை. அவரைப்பற்றி ஒன்றும் விவரம் தெரியாதபோது, யார் இவர் என்று எண்ணியபோது, பத்திரிகையில் வந்தது. அவருடைய வயது 37 என்று போட்டிருந்தார்கள். 37 வயதுள்ளவரா இவ்வளவு சிறப்பாகப் பேசுகிறார், அருமையாகக் காரியங்கள் ஆற்றுகிறார் என்று வியக்கும் அளவுக்கு அவருடைய பேச்சு இருக்கிறது. என்னுடைய 20 ஆண்டுக்கால அனுபவத்தில் சிறப்பாகவும், அழகாகவும், உவமை நயத்தோடும் பேசும் சிறந்த நண்பராக அவர் இருந்தார். அவர் இங்கிருந்து டெல்லி செல்கிறார். அவருடைய தமிழ் நயத்தை, இலக்கிய நயத்தை, தமிழ் பேச்சை டெல்லியில் இருக்கிறவர்கள், இங்கே இருக்கிறவர்கள் அனுபவிப்பதுபோல் எங்கே அனுபவிக்கப் போகிறார்கள் என்பது என்னுடைய சந்தேகம். அவர் இந்த அவையில் சிறந்த முறையில் பணியாற்றினார்.



1984 மார்ச் 30] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அடுத்து, திரு. முத்துசாமி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றியவர். அவருக்கும் வயது குறைவு. இன்னும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆசிரியர்களுக்குப் பணியாற்றுகிற அவர் இந்த மேலவைக்குத் திரும்ப தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்கள் என்று கருதுகிறேன். அவர் மீண்டும் வர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீனாட்சிசுந்தரம், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர்பற்றி நான் பேச வேண்டியதில்லை. அவர்கள் மறுபடியும் வந்துவிட்டவர்கள். திரு. வெங்கடேசன் அவர்கள் நீண்ட நாட்களாகத் தெரிந்த நண்பர். அவருடைய கருத்தை எளிமையாகப் பேசக் கூடியவர். சிறந்த உறுப்பினராக அவர்கள் திகழ்ந்தார்கள். அவருக்குப் என்னுடைய மகிழ்ச்சியையும், நல்லெண்ணத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆறுமுகம் அவர்கள், திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி ஆகியவர் களெல்லாம் நல்லமுறையிலே இங்கே பணியாற்றியிருக்கிறார்கள். அவர் களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்து, அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்து நமமுடைய தமிழ் நாட்டிக்கும், நாட்டுக்கும் உழைக்க வேண்டுமென்று கேட்டு, மீண்டும் மேலவை உறுப்பினர்களாக வர வாய்ப்பைப் பெற வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, நம் முடைய வரலாற்றிலேயே, இந்த அவையின் வரலாற்றிலேயே இந்த நாள் ஒரு திருப்பம் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. எத்தனை பேர்கள் விலகுகிறார்கள் என்பது முக்கியமல்ல. இருக்கிறவர்கள் விலகுபவர்களைப் பற்றிய சிந்தனையோடு இருப்பதால், எல்லோருடைய உள்ளத்திலும் ஒருவித கலகலப்பை உண்டாக்குகிற நாளாக இன்று இருக்கிறது. நான்கூட இன்று ஒரு விரதத்தை எடுத்துக்கொண்டேன். யார் எவ்வளவு நாழி பேசினாலும், விட்டுவிடுவது என்பதுதான் அது.

ஒன்றை முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் என்னைப் பாராட்டினார்கள். அவர் அவை முன்னவராக வந்திருப் பது சமீப காலத்தில்தான். இவர் என்னோடு ஒத்துழைத்தார்கள். அவருடைய பதவி நீண்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய பதவிபற்றி அவர் விரும்புவதை, நம்புவதை இங்கே சொன்னார்கள். அதிலே நான் கருத்தைச் சொல்வது முறையாகாது என்று சொல்லவில்லை. ஆனால் அவருடைய நல்லெண்ணத்திற்கு நான் நன்றி செலுத்துகிறேன், பாராட்டுகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1984 மார்ச் 30

இந்த அவையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே அமைச்சராக வருவதற்கு முன்பே வெளியிலே அவருக்கும் எனக்கும் நட்பு உண்டு. பேரவையிலே நாங்கள் உறுப்பினர்களாக இருந்தபோது, ஒரே வரிசையில் அமர்ந்திருந்தோம், எதிர் வரிசையில் என்றாலும் கூட. ஆங்கிலத்தைப் பற்றிய பிரச்சினை வந்தபோது, இரண்டு பேரும் சூடாக கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டது இன்னும் என்னுடைய நினைப்பில் இருக்கிறது. அவர் ஒரு தீர்மானம் கொண்டு வர, அதை எதிர்த்துப் பேசுவதற்கு என்றே மருத்துவமனையில் படுக்கையிலிருந்த நான் அரை குறையாக தள்ளாடி அவைக்கு வர, அதைக் கேள்விப்பட்ட அண்ணா அவர்கள் மனம் பதைத்துப் போய் அந்த நேரத்தில் அவைக்கு வந்து, என்னை ஆறுதல்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, டாக்டர் ஹண்டே அவர்களுடைய தீர்மானத்தை வாபஸ் பெறச் செய்து, என் கட்சியை ஆதரித்துப் பேசினார்.

பிறகு நான் அறுவை சிகிச்சை செய்யச் சென்றபோது நடந்ததைச் சொல்கிறேன். நான் வேதாந்தம் சுமாராகத் தெரிந்தவன். இந்த வேதாந்தத்திலிருந்து அடுத்த நாள் நடக்கப் போவதுபற்றிக் கவலைப்படக் கூடாது. இந்த நாளை மட்டும் தான் நினைக்க வேண்டும். மருத்துவமனைத் தியேட்டருக்கு நான் போகிறபோது, திரும்ப வராத நிலை வரலாம் என்பதை முடிவு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் என் மகனுடன் போய்—அங்கே சொன்ன கருத்துக்களை முதல்வர் அவர்களிடம் எனக்குள்ள நம்பிக்கையினால் சொல்கிறேன். அதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்—"நான் திரும்பி வரவில்லையானால் [redacted] நீங்கள் தான் என் குடும்பத்தைக் காக்க வேண்டும்" என்று சொன்னேன். முதல்வர் அவர்கள் ஒரே வார்த்தையில் "செய்திட்டேன்" என்று சொன்னார்கள். அவை முன்னவர் அவர்களுடைய வார்த்தைகளைப் போல நான் இங்கே திரும்பி வந்திருக்கிறேன், என்றால் அதற்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களும் எனக்காக இரவு பகலாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் தான். அங்கேயே அவர்களுடைய கருத்தையும் கவனத்தையும் செலுத்தி என்னை கவனித்தார்கள். அவர்களுக்கு நான் முதலிலே என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. சங்கரலிங்கம் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் பேரவையிலே உள்ள எதிர்க் கட்சி எப்படியோ வெளியிலே உள்ள நிலைமைகளை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, எவ்வளவோ இரண்டு இடத்தையும் சமப்படுத்துகின்ற நிலைமையிலே நடந்துகொண்டார். அதற்கு மிகப் பெரிய ஒரு

றேன். அவர்கள் அமைதியாக இங்கே உட்கார்ந்து ஒன்றிரண்டு முறை பேசி
யிருக்கிறார்கள். என் துரதிருஷ்டம் அவர்கள் பேசுகிறபோது, நான் இங்கே
இருந்து கேட்க முடியாமல் போயிருக்கிறது. ஒருவேளை நான் இங்கே
இல்லாத நேரத்தில் பேச வேண்டுமென்று நினைத்துவிட்டார்களோ என்னவோ
என்று நினைக்கிற அளவுக்கு அவர்கள் அருமையாக இங்கே பேசியதாகக்
கேள்விப்பட்டேன். அவர்கள் ரொம்ப மகிழ்ச்சியோடு, அடக்கத்தோடு செய்த
சேவைக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

அடுத்து, திரு. மியாகான் அவர்கள் இங்கே பேசினார்கள். நேரத்தைக்
குறைக்க வேண்டிய நேரத்தில் அவர்கள் இவ்வளவு நேரம் பேசியதை நான்
இதுவரை பார்த்ததில்லை. அன்புள்ளத்தால் அவர்கள் முடிக்க முடியாமல்
தவித்தார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி வார்த்தைகளைத் தேடி

(பிற்பகல் 2-40)

முடிக்க முடியாமல் பண்ணிய அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
எப்போதுமே நான் அவரைப் பார்க்கிறபோது எல்லாம், அவருடைய தந்தை
என்னுடைய கவனத்திற்கு வருவதுண்டு. 1971 ல் நான் மயிலாப்பூர் தொகுதி
யில் தோற்றுவிட்ட போது, அப்போது கடற்கரையில் மதுரான் வெற்றிபெற்ற
வர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. யாரும் எதிர்பார்க்காத
வகையில், தோற்ற வேட்பாளனாக நானும் மேடையில் அமர்ந்திருந்தேன்
அதே வரிசையில் அடுத்த பக்கத்தில் திரு. மியாகான் அவர்கள் அமர்ந்திருந்
தார்கள். என்னை அவர் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று பார்த்துவிட்டார்.
அந்தப் பக்கத்திலிருந்து எழுந்துவந்து, என் கையைப் பிடித்துக்கொண்டு
"என்ன செய்துட்டாங்கய்யா, என்ன செய்துட்டாங்கப்பா?" என்று கண்
கலங்கியதைக் கண்டபோது, எனக்கு ரொம்ப ஆறுதலாக இருந்தது. அந்த
நன்றி உணர்வோடு நான் திரு. மியாகான் அவர்களைப் பார்த்துக்கொண்டிருக்
கிறேன். எனக்காகத்தான் தமிழில் பேசியதாக அவர் சொன்னார். தமிழ்த்
தாயே உறுப்பினரை வாழ்த்துகிறது. இந்த வாழ்த்து அவர்களை மீண்டும்
இங்கே வரவழைக்கும் என்ற உறுதியைத் தருகிறேன்.

திரு. மாணிக்கம் அவர்கள் ஒரு அகில இந்தியக் கட்சி சார்பில், என்,
உலகக்கட்சியின் சார்பில் வந்திருந்தாலும், அவர்கள் இயற்கையிலேயே சாது
வாக இருப்பவர்கள். எப்படி திரு. நல்லசிவன் அவர்கள் தோற்றத்திலேயே
திரு. மாணிக்கம் அவர்களுக்கு நேர்மாறாக விறுவிறுப்பைக் காட்டுகிறாரோ,
அதுபோல் திரு. மாணிக்கம் அவர்கள் தனது பேச்சிலேயே சாதுத் தன்மையைக்
காட்டுகிறவர். அவர் அருமையாகச் சொன்னார். அவருக்கும் என்னுடைய
பாராட்டு. என்னை அவர் பாராட்டினார் என்பதற்காக நான் அவரைப்
பாராட்டவில்லை.



திரு. நல்லசிவன் அவர்கள் முதன்முதலில் வந்தபோது நான்கூட ஒரு
பட்டதுண்டு. காரணம் வந்த முதல் நாளிலேயே 17 ஒத்திவைப்புத் தீர்மானங்
களுக்கான முன்னறிவிப்புகளை என் கையில் கொடுத்துவிட்டார். பயந்தும்
போய் விட்டேன், எப்படி இவரைச் சமாளிக்கப்போகிறோம் என்று. பிறகு
மானங்களையெல்லாம் நான் சொன்னபோது, எல்லாவற்றையும் விளக்கமாகக்
கேட்டுத் தெரிந்துகொண்டார். இப்போது நினைத்தாலும், அது மலைப்பாக
இருக்கிறது. இப்போது கூட அவர் எந்தப் பிரச்சினையைக் குறித்து ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொடுத்தாலும், அதற்கான காரணத்தையும் நியாயத்தை
யும் சொல்லி அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருவார். மறுக்கப்
போகிறோம் என்றால், "நீங்கள் மறுத்துவிடுங்கள், நான் அதை ஒத்துக்
கொள்கிறேன்" என்பார்.

எல்லோரும் இங்கே வருவதைப்போல, திரு. ஜேப்பியார் வருகின்றார்.
எல்லோரும் வர வேண்டுமென்று நான் ஆசைப்படுவதுண்டு. வாழ்த்துவேன்.
எப்படி ஏழு பேர் வரமுடியும், 6 பேர்தானே வர முடியும் என்று சொல்லலாம்.
ஆனால் வாழ்த்துவதில் ஏன் கஞ்சத்தனம் பார்க்க வேண்டும்? ஆகவே அவரும்
மற்ற எல்லோரும் வர வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகிறேன்.

திரு. வலம்புரி ஜான் டில்லிக்குப் போகிறார். இரண்டு முறைதான் அவர்
பேசியதை நான் கேட்டிருக்கிறேன். எனக்கு ஒரு குற்ற மனப்பான்மை கூட
இருந்தது. நான் இந்த தலைமையிடத்தில் உட்கார்ந்திருப்பதால்தானே தமிழ்
மொழிக்காக, பயிற்சிமொழிக்காக, ஆட்சிமொழிக்காக குரல் கொடுக்க முடிய
வில்லை, அதற்கு முன்பு எவ்வளவு குரல் கொடுத்தோம் என்று நினைத்துக்
கொள்வதுண்டு. ஆனால் திரு. வலம்புரி ஜான் பேசிய நேரத்தில் எல்லாம்
என் சார்பிலும், எனது தமிழரசுக் கழகத்தின் சார்பிலும் பேசியதைப்
போலவே பேசினார். அவை முன்னவர் தவறாகக் கருதவேண்டாம். (சிரிப்பு)
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் அதுவேதான்.
அண்மையில் அவர் பேசியபோது, ஒரு உவமானத்தைச் சொன்னார். புரட்சி
தோற்றுவிட்டால் அது கலகம் என்று பெயர் பெற்றுவிடுகிறது வரலாற்றில்.
ஆனால் கலகம் வெற்றி பெற்றுவிட்டால் அது புரட்சி என்று இடம் பெற்று
விடுகிறது என்று அருமையாகச் சொன்னார். அது மாதிரி பலமுறை எத்த
னையோ கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அதுமாதிரி கன்வென்ட்
பள்ளிகள் பற்றி அவர் என்னைவிட வேகமாக, உணர்ச்சியோடு கருத்து சொல்
கிறார் என்பதைப் பார்க்கிற போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன்.
கடைசியில் அவரது பதவிக் காலம் முடிந்தபோது, "இங்கே எங்களுடைய
அதிகாரம் கூடுதலாக இருக்க வேண்டும் உங்களுடைய உழைப்பால்" என்று

[மேலவைத் தலைவர்] [1984 மார்ச் 30

வாழ்த்துக்கூறி, "என் சார்பிலும், டில்லியில் பேசுங்கள்" என்று வாழ்த்துகிறேன். அவருடையே அழகிய தமிழ் சில நேரத்தில் ஏதோ தயாரித்து வந்து பேசுவதைப்போல இருக்கும். திரு. வலம்புரி ஜான் விஷயத்தில் அப்படி இருக்காது. ஏனென்றால் இவரது பேச்சுகளில் விஷயத்தோடு அழகிய தமிழும் இருக்கும். அவருக்கு என்னுடைய பாராட்டைச் சொல்லி வாழ்த்தி அனுப்புகிறேன். டில்லியில் நல்லமுறையில் பணியாற்ற வேண்டும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்பற்றி இங்கே சொன்னார்கள். தேர்தலில் ஜெயிப்பதும் தோற்பதும் இயற்கை. அவர் மீண்டும் இங்கே வருகிற நேரத்தில் அவரை வாழ்த்தப்போகிறோம். ஆனால் திரு. தாமோதரன் இடத்தை திரு. தாமோதரன்தான் நிரப்ப முடியும் என்ற வகையில் இவ்வளவு காலம் நம்மோடு சேர்ந்து பணியாற்றினார். பூரணமாக என்னோடு ஒத்துழைத்தார். அவருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தனியாக எதுவும் சொல்ல வேண்டிய தில்லை. இருந்தாலும் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், இருக்கிறவர்களே வரவேண்டும் என்று சொன்னால், நான் விலகுகிறவன், அதனால்தான் அப்படிச் சொல்கிறேன் என்று வரும். அப்படி எடுத்துக்கொள்ளவேண்டும். புரியாமல் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளவேண்டாம்.

திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் சில நேரத்தில் கோபம் வரும். அவர் கூட எங்கே திரு. முத்துசாமியோடு போட்டிக்கு வருகிறாரோ என்று சொல்லக் கூடிய அளவில், சில நேரத்தில் வேகமாக இருந்தாலும் அவர் தவறாக நடந்து கொண்டதே இல்லை. அவர் மீது எனக்கு ஆர்வம் உண்டு. எனக்கு மகிழ்ச்சி யுண்டு. அவரையும் பாராட்டுகிறேன். திரு. லட்சுமிகாந்தன், திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் இரண்டு பேரும் மீண்டும் வந்துவிட்டார்கள். அவர்களுக் கும் பொதுவான பாராட்டுகளைச் சொல்லவேண்டியது அவசியம். திரு. முத்து சாமியின் தேர்தல் முடிவு வந்தபோது உடனடியாக நான் அவரைத் தேடி னேன். ஆறுதல் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அவர் அந்தச் சமயத்தில்தான் வந்தார். "உன்னைத் தான் தேடிக்கொண்டிருந்தேன், வந்துவிட்டாய்," என்று ஆறுதல் சொன்னேன். அன்று சொன்னதையே இன்றும் சொல்கிறேன்.

அவை முன்னவர் அருமையாகச் சொன்னார். தோற்றவர்களின் வாழ்வெல்லாம் அதோடு முடிந்துவிடும் என்றால், என்னுடைய பொதுவாழ்வு நான் மைலாப்பூரில் தோற்ற உடனே அதோடு முடிந்திருக்க வேண்டும். ஆனால் மைலாப்பூரில் நான் தோற்ற பிறகுதான் இங்கே வந்திருக்கிறேன். அதுமட்டு மல்ல. 12 ஆண்டுக் காலம் நீடித்தும் இருந்திருக்கிறேன் என்று நினைக்கிற



1984 மார்ச் 30] [மேலவைத் தலைவர்]

போது, என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் இளையவர், அவருக்கு இன்னும் நிறைய வயது இருக்கிறது என்ற காரணத்தால், அவருக்கு இன்னும் வாய்ப்புகள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1966 ஆம் ஆண்டில் நான் மைலாப்பூரில் தோற்றேன். மாண்புமிகு உறுப்பினருக்கு இப்போது 50 வயதுகூட முடியவில்லை என்றுதான் நினைக்கிறேன். எனவே இளமையில் முதுமை வேண்டாம். வாழ்க்கைக்குரிய நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். வேறு எப்போது என்னுடைய பேச்சைக் கேட்காவிட்டாலும்கூட இப்போது அவர் என்னுடைய பேச்சை எடுத்துக்கொள்வார் என்றுதான் நம்புகிறேன். எனவே வரும் காலம் நல்ல படியாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்களைப்பற்றியும் இங்கே சொன்னார்கள். என்னிடத்திலேயே சிலர் கேட்டார்கள். "இதற்கு முன்பெல்லாம் எவ்வளவு வேகமாக இருப்பார்கள், ஏனோ இப்போதெல்லாம் அப்படியில்லையே" என்றார்கள். எல்லாம் என்னுடைய அதிர்ஷ்டம். அவர் என்னுடைய அறைக்கு வருகிறபோதே, இன்றைக்கு நான் பேச வேண்டும் என்று சொல்வார். "எப்போதும் யார் பேசுவதையும் நான் தடுக்க மாட் டேன் எனக்கு நேரம்தான் முக்கியம்" என்பேன். "ஒப்புக் கொள்ளுகிற நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்பேன். ஒப்புக் கொண்ட நேரத்தை அவர் ஒரு நாள்கூட தாண்டியதில்லை. அந்த அளவுக்கு ஒழுங் காகக் கடைப்பிடித்து என்னோடு ஒத்துழைத்தார்கள். அவருக்கும் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் இன்றையதினம் பேசவில்லை. காரணம் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த உறுப்பினர்கள் மனம் புண்பட்டுப் போயிருக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களை யும் கட்சித் தலைவர்களையும் மட்டுமே பேச விடுவதாக இருந்த காரணத்தால் அவரைப் பேச அனுமதிக்க இயலவில்லை. திரு. வெங்கடேசன் அவர்களை நான் மாற்றுத் தலைவராகப் போட்ட காலத்தில், அவையில் நன்கு பணி யாற்றி என்னோடு ஒத்துழைத்தார்கள் என்ற முறையில், அவருக்கும் என் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் மேலாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப் பிட்டபடி, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் தலைவராக 6 ஆண்டுக் காலம் பணியாற்றும் வாய்ப்பு அளித்த அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். என்னை இங்கே அமர்த்தியபோது, தமிழே இங்கே அமர்த்தப் பட்டிருக்கிறது என்று சொன்ன பெருந்தன்மையையும் பண்பாட்டையும், தமிழ் மொழியிடம் அவருக்குள்ள பற்றுதலையும் சேர்த்து என்னைச் சொன்னபோது

[மேலவைத் தலைவர்] [1984 மார்ச் 30

எனக்கு அப்போது அதிகப்படியான பாரத்தை என் தலையில் வைத்து அழுத்த வைத்ததைப்போல் உணர்ந்தேன். தலைவர் பதவி எனக்கு அப்போது அவ்வளவு பாரமாகத் தெரியவில்லை. தமிழையே இங்கு அமர்த்தியிருக்கிறேன் என்று சொன்னபோது, இந்த ஆறு ஆண்டுக் காலமும் அந்த நம்பிக்கைக்கு ஏற்ப நடக்க வேண்டுமே என்று எண்ணினேன். அந்த வகையில்தான் நடந்து கொண்டிருக்கிறேன் என்று நம்புகிறேன். சில சமயங்களில் தீர்ப்பளிக்கும்போது, அரசுத் தரப்பினருக்கு எப்படி இருந்தது என்பதை நான் தெரிந்து கொள்ள முயன்றபோது—சில நேரங்கள் அது ஆட்சித் தரப்புக்கு மாறுபட்டும் இருந்திருக்கலாம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "தாங்கள் சரி என்று எதை நினைக்கிறீர்களோ அதைச் செய்யலாம்" என்று சொல்லி, ஒரு சந்தர்ப்பத்தில்கூட அதற்கு மாறாக என்னை வற்புறுத்தியது கிடையாது. சில நேரங்களில் நான் அளித்த தீர்ப்பு அவருக்கு மாறுபட்டும் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட தீர்ப்பை வழங்கிவிட்டு அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது "நீங்கள்தான் சொல்லியாகிவிட்டதே. அதற்குப் பிறகு என்னுடைய அபிப்பிராயத்தை எதற்காகக் கேட்க வேண்டும்?" என்பார்கள். அந்த அளவுக்கு உயர்ந்த பண்பாண்மை. அவர் என்னுடைய அறைக்கு வரும்போது, நான் மரியாதை காரணமாக என்னுடைய இருக்கையிலிருந்து எழுந்தபோதெல்லாம், என்னுடைய கையைப் பிடித்து அழுத்தி, "நீங்கள் தலைவர், எனக்காக நீங்கள் எழுந்திருக்கலாமா?" என்று சொன்ன பண்பாட்டைப் பார்க்கிறபோது, கடந்த ஆறாண்டுக் காலம் எனக்கு இந்தத் தரப்பிலும் இனிமையாக இருந்தது, அதைப்போலவே அந்தத் தரப்பிலும் அப்படியே இருந்தது. என்னை இந்த அளவுக்கு மரியாதையாக நடத்தியதற்கு என்னுடைய வயது ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப் போல், என்னுடைய வரலாறு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அல்லது என்னுடைய அரசியல் சாதனைகள் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதையெல்லாம்விட உங்களுடைய நல்லெண்ணமும், ஜனநாயகப் பாராளுமன்ற முறையும்தான் முக்கியமான காரணம் என்பதை நான் அறிவேன். இதற்கெல்லாம் காரணமாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மாண்புமிகு அவை முன்னவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவையின் முன்னவராக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும்போது எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. கண்டிப்பாகப் பேசுகிறவராயிற்றே என்று நினைத்தேன். இருந்தாலும் ரொம்பவும் அருமையாக எனக்கு ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள். வருகிற தலைவருக்கும் ஒத்துழைப்பைத் தர வேண்டும்.



1984 மார்ச் 30] [மேலவைத் தலைவர்]

திரும்பவும் சொல்கிறேன். வேதாந்தத் தத்துவமாகச் சொல்கிறேன். எதிர்காலம் என்ன என்பது என் கையில் இல்லை. அது ஆட்சியின் கையில் இருக்கிறது, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கையில் இருக்கிறது. இந்த அவையின் கையில் இருக்கிறது. எனவே இதுவரை எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைத்த செயலாளர் அவர்களுக்கும், துணைச் செயலாளர் அவர்களுக்கும், நிருபர்களுக்கும் மற்றும் இருக்கிற அனைத்து ஊழியர்களுக்கும்—ஒவ்வொரு சாமான்ய ஊழியரையும் சேர்த்தே சொல்கிறேன்—எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எல்லாம் என்னுடைய வயதின் காரணமாக மரியாதை காட்டியிருக்கலாம். தலைவர் என்கிற முறையில் நான் அவைக்கு வரும்போது, நீங்கள் எல்லாம் எழுந்திருப்பது—தலைவர் என்ற முறையில்தான், தலைவருக்குரிய மரியாதையாக எழுந்து நிற்கிறீர்கள் என்பதை அறிவேன்—என்றாலும் அன்பு காரணமாகவும் என்னுடைய வயது காரணமாகவும் நீங்கள் மிகுந்த மன நிறைவோடு அதைச் செய்தீர்கள்—வெறும் சடங்குக்காக, கடமைக்காக அல்ல என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருந்தது. நான் இருப்பது தலைவர் ஆசனமாக இருந்தாலும், மீண்டும் உங்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 6 ஆண்டுக் காலம் ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் கரம் கூப்பி என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன, அவை மீண்டும் 23—4—1984 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2.49)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

148. வணிகவரி-அறநிலையத்துறையின் 29—12—1981 ஆம் நாளிட்ட II (1)|CTRE|583a|81 81 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக 28—12—1983 ஆம் நாளிட்ட வணிகவரி அறநிலையத் துறையின் 1466 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1|1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

94. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கிராம அதிகாரிகளை (வகைப்படுத்தல், கட்டுப்படுத்தல்-மேல்முறையீடு) விதிகளுக்கு மாற்றாக தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கிராம ஊழியர்களை நியமிப்பதற்கான (வகைப்படுத்தல், கட்டுப்படுத்தல்-மேல்முறையீடு) விதிகளை இயற்றுவது தொடர்பாக, 24—6—1983 ஆம் நாளிட்ட வருவாய்த்துறையின் 1131 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

95. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கிராம அதிகாரிகளின் நடத்தை விதிகளுக்கு மாற்றாக தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கிராம ஊழியர்களின் நடத்தை குறித்த விதிகளை இயற்றுவது தொடர்பாக 24—6—1983 ஆம் நாளிட்ட, வருவாய்த்துறையின் 1131 ஆம் எண்ணுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

*96. சேலம்-நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ள "லாக்அப்" அறையில் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளன்று தெய்வமணி என்ற குள்ளகுண்டு இறந்து போனது பற்றி ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. எ. எம். தஞ்சப்பன் தலைமையில் இயங்கிய "ஒரு நபர் கமிஷன்" அறிக்கை (தமிழ்).

97. உடுக்குறியிடப்படாத 67 முதல் 106 வரையிலான வினாக்களுக்கான விடைகள்

* 29—3—1984 அன்று பேரவை முன் வைக்கப்பட்டது.



### இணைப்பு 1

(258 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 70-க்கான விடையைக் காண்க)

| | மாவட்டம். | | 1979 ஏப்ரல் 23-ஆம் தேதி விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தை யொட்டி தமிழ்நாடு முழுவதும் கைது செய்யப்பட்டவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்? | இதில் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் கட்சிவாரியாக எத்தனை பேர்? | இதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு? |
|---|---|---|---|---|---|
| | (1) | | (2) | (3) | (4) |
| 1 | சென்னை | .. | 514 பேர் | ஒருவரும் இல்லை | ஒன்றும் இல்லை |
| 2 | செங்கற்பட்டு | .. | 910 பேர் | .. | ரூ. 18,778.07 |
| 3 | வட ஆற்காடு | .. | 712 பேர் | .. | ஒன்றும் இல்லை |
| 4 | தென் ஆற்காடு | .. | 325 பேர் | .. | .. |
| 5 | சேலம் | .. | 219 பேர் | .. | .. |
| 6 | தர்மபுரி | .. | 387 பேர் | .. | .. |
| 7 | கோயம்புத்தூர் | .. | 2,364 பேர் | .. | ரூ. 17,500.00 |
| 8 | நீலகிரி | .. | ஒருவரும் இல்லை | .. | ஒன்றும் இல்லை |
| 9 | திருச்சிராப்பள்ளி | | 3,006 பேர் | .. | ரூ. 2,131.96 |
| 10 | தஞ்சாவூர் | .. | 598 பேர் | .. | ரூ. 6,530.09 |
| 11 | புதுக்கோட்டை | .. | 819 பேர் | இந்திய காங்கிரஸ் 25, தி.மு.க. 38, வலது கம்யூனிஸ்ட் 12 } 75 | ஒன்றும் இல்லை |

| (1) | | (2) | (3) | | | (4) |
|---|---|---|---|---|---|---|
| 12 | மதுரை .. | 4,529 பேர் | ஒருவரும் இல்லை | | | ஒன்றும் இல்லை |
| 13 | இராமநாதபுரம் .. | 1,504 பேர் | தி.மு.க. | 2 | 10 | ரூ. 25,000.00 |
| | | | வலது கம்யூனிஸ்ட் | 5 | | |
| | | | காந்தி காமராஜ் | 0 | | |
| | | | தேசிய காங்கிரஸ் | 1 | | |
| | | | இந்திரா காங்கிரஸ் | 2 | | |
| 14 | திருநெல்வேலி .. | 553 பேர் | தி.மு.க. | 6 | 21 | ரூ. 748.65 |
| | | | இந்திரா காங்கிரஸ் | 4 | | |
| | | | இடது கம்யூனிஸ்ட் | 2 | | |
| | | | வலது கம்யூனிஸ்ட் | 5 | | |
| | | | ஜனதா | 1 | | |
| | | | காந்தி காமராஜ் | 0 | | |
| | | | தேசிய காங்கிரஸ் | 3 | | |
| 15 | கன்னியாகுமரி .. | 144 பேர் | இடது கம்யூனிஸ்ட் | 7 | 22 | ஒன்றும் இல்லை |
| | | | இடது கம்யூனிஸ்ட் (லெனினிஸ்ட்) | 3 | | |
| | | | தி.மு.க. | 10 | | |
| | | | இந்திரா காங்கிரஸ் | 2 | | |
| | மொத்தம் .. | 16,574 பேர் | | | 128 பேர் | ரூ. 70,788.17 |



## இணைப்பு II

(2 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 71-க்கான விடையைக் காண்க.)

4—4—1979 அன்று இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்காவில் உள்ள வாகைக்குளம் கிராமத்தில் போலீசார் துப்பாக்கிச் சூடு செய்ததைக் கண்டித்து, 24—4—1979 அன்று ஒரு பொது வேலை நிறுத்த நாளாக அனுசரிக்கும்படி தமிழக விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அன்றைய தினம் வன்முறையில் ஈடுபட்ட கும்பலின் மீது போலீசார் தமிழ் நாட்டிலுள்ள ஏழு இடங்களில் சுட நேர்ந்தது:—

(1) பனவடலி சத்திரம்—திருநெல்வேலி மாவட்டம்—இதில் இருவர் காயமடைந்தனர். ஒரு காவல் துறை துணை ஆய்வாளர் வெட்டுப்பட்டு மரண மடைந்தார்.

(2) அழகிய பாண்டியபுரம்—திருநெல்வேலி மாவட்டம்—இதில் மூவர் காயமடைந்தனர்.

(3) ஆலங்குளம்—இராமநாதபுரம் மாவட்டம்—இதில் 4 பேர் காயம் மடைந்தனர்.

(4) மற்றும் (5) உடுமலைப்பேட்டை—கோவை மாவட்டம்—(இரு தடவை) இதில் இருவர் மரணமடைந்தனர், 15 பேர் காயமடைந்தனர்.

(6) பொரப்பாக்கம் கிராமம்—செங்கல்பட்டு மாவட்டம்—இதில் யாரும் காயமடையவோ உயிரிழக்கவோ இல்லை.

(7) கோவில்பட்டி—திருநெல்வேலி மாவட்டம்—இதில் யாரும் காய மடையவோ உயிரிழக்கவோ இல்லை.

2. இதைத் தவிர, பின்வரும் இடங்களில் தடியடிப் பிரயோகம் நடந்தது.

1. இராமநாதபுரம் மேற்கு—இதில் பத்துபேர் காயமடைந்தனர்.

2. வடார்க்காடு—இதில் யாரும் காயமடையவில்லை.

3. தென்னார்க்காடு—இதில் யாரும் காயம் அடையவில்லை.

4. தஞ்சை (கிழக்கு)—இதில் யாரும் காயம் அடையவில்லை.

5. திருச்சி—இதில் யாரும் காயம் அடையவில்லை.

6. கோவை (புறநகர்)—இதில் 49 பேர் காயம் அடைந்தனர்.

[1984 மார்ச் 30

7. செங்கல்பட்டு (மேற்கு)—இதில் 52 பேர் காயம் அடைந்தனர்.

திருவள்ளுவர் நகர்—(29 பேர்).

பனப்பாக்கம், லட்சுமிவாக்கம், பாலவாக்கம் (17 பேர்);

பொரப்பாக்கம் (6 பேர்) ஆகிய கிராமங்களில் தடியடி செய்தபோது காயமடைந்தவர்கள் இதில் அடங்குவர்.

8. 28—4—1979 அன்று வன்முறைக் கும்பலைக் கலைக்க, காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும், தடியடிப் பிரயோகங்களில் காயமடைந்த அல்லது மரணமடைந்தவர்களில் பொது மக்களில் எவருக்கும் அரசு உதவித் தொகை வழங்கப்படவில்லை.

கடமையைச் செய்யும்போது மரணமடைந்த காவல் துறை துணை ஆய்வாளர் திரு. அப்பாப்பழத்தின் குடும்பத்தினருக்கு மட்டும் ரூபாய் 10,000 உதவி அளிக்கப்பட்டது.

## இணைப்பு III

(261 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 77-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) வெடி மருந்துப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 1,000.

## இணைப்பு IV

(262 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 78-க்கான விடையைக் காண்க)

| மாவட்டம். (1) | | வழக்குகளின் எண்ணிக்கை. (2) | கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. (3) | வழக்கு தொடரப்பட்டவர்களின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு (கிழக்கு) | .. | — | — | — |
| 2 செங்கல்பட்டு (மேற்கு) | .. | — | — | — |
| 3 தென்னாற்காடு | .. | — | — | — |



1984 மார்ச் 30]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4 வட ஆற்காடு .. | .. | — | — | — |
| 5 சேலம் .. .. | .. | 2 | 6 | 6 |
| 6 தர்மபுரி .. .. | .. | — | — | — |
| 7 கோயம்புத்தூர் (நகரம்) | .. | — | — | — |
| 8 கோயம்புத்தூர் (ஊரகம்) | .. | — | — | — |
| 9 பெரியார் .. | .. | — | — | — |
| 10 நீலகிரி .. | .. | — | — | — |
| 11 திருச்சிராப்பள்ளி | .. | 1 | 1 | 1 |
| 12 தஞ்சாவூர் (கிழக்கு) | .. | 2 | 2 | 2 |
| 13 தஞ்சாவூர் (மேற்கு) | .. | — | — | — |
| 14 புதுகோட்டை .. | .. | — | — | — |
| 15 மதுரை (தெற்கு) .. | .. | — | — | — |
| 16 மதுரை (வடக்கு) .. | .. | — | — | — |
| 17 இராமநாதபுரம் (கிழக்கு) | .. | — | — | — |
| 18 இராமநாதபுரம் (மேற்கு) | | — | — | — |
| 19 திருநெல்வேலி .. | .. | 2 | 8 | 8 |
| 20 கன்னியாகுமரி .. | .. | 7 | 23 | 23 |
| 21 ரயில்வே காவல் மாவட்டம் | | — | — | — |
| 22 சென்னை மாநகரம் | .. | 20 | 46 | 46 |
| 23 குற்றப்பிரிவு சி. ஐ. டி. | .. | 5 | 19 | 19 |
| | | 39 | 105 | 105 |

## இணைப்பு V

(266 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினாக்கள் 85 க்கான விடையை காண்க.)

(ஆ) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | முன்விசாரணை (Preliminary Enquiry). | | விரிவான விசாரணை (Detailed Enquiry.) | | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (Regd. cases.) | | கண்ணி வைப்பு வழக்குகள் (Trap cases). | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அ மற்றும் ஆ பிரிவு அதிகாரிகள் | இ மற்றும் ஈ பிரிவு அதிகாரிகள் | அ மற்றும் ஆ பிரிவு அதிகாரிகள் | இ மற்றும் ஈ பிரிவு அதிகாரிகள் | அ மற்றும் ஆ பிரிவு அதிகாரிகள் | இ மற்றும் ஈ பிரிவு அதிகாரிகள் | அ மற்றும் ஆ பிரிவு அதிகாரிகள் | இ மற்றும் ஈ பிரிவு அதிகாரிகள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1977—78 | 147 | 156 | 141 | 99 | 32 | 47 | 23 | 114 |
| 1978—79 | 161 | 109 | 135 | 119 | 26 | 17 | 28 | 82 |
| 1979—80 | 113 | 133 | 143 | 103 | 13 | 16 | 12 | 55 |
| 1980—81 (21—2—1981 முடிய) | 202 | 205 | 125 | 99 | 4 | 5 | 4 | [illegible] |



(இ) இவர்களில் ஐ. ஏ. எஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையும் ஆண்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு. | முன் விசாரணை. | விரிவான விசாரணை. |
|---|---|---|
| 1977—78 | 1 | 2 |
| 1978—79 | 3 | — |
| 1979—80 | 3 | 1 |
| 1980—81 (21—2—81 முடிய) | — | — |

(உ) இதில் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

வேலை நீக்கம், கட்டாய ஓய்வு ஆகியவற்றுக்கு இலக்கான அதிகாரிகளின் எண்ணிக்கை (ஐ. ஏ. எஸ். நீங்கலாக) ஆண்டு வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:

| ஆண்டு | வேலை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை. | | கட்டாய ஓய்வு பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | அ மற்றும் ஆ பிரிவு | இ மற்றும் ஈ பிரிவு | அ மற்றும் ஆ பிரிவு | இ மற்றும் ஈ பிரிவு |
| 1977—78 | 2 | 18 | 2 | 2 |
| 1978—79 | 2 | 19 | — | 2 |
| 1979—80 | 3 | 12 | 1 | 1 |
| 1980—81 (21-2-81 முடிய) | 4 | 14 | 2 | 3 |

## இணைப்பு VI

(274ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 98-க்கான விடையைக் காண்க.)

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதி உதவி திட்டத்தின் கீழ் 1—1—1978 முதல் 30—6—1984 முடிய நிதி உதவிக்கு ஒப்பளிப்பு செய்யப் பட்டோரின் பட்டியல்.

| தொடர் எண். | தமிழறிஞரின்பெயர். |
|---|---|
| 1. | மயிலை சீனிவெங்கடசாமி |
| 2. | கவிஞர் சுரதா |
| 3. | திரு. எஸ். ஏகாம்பரம் |
| 4. | திரு. கே. ஜி ராஜு |
| 5. | திரு. ம. தியாகராஜன் |
| 6. | கவிஞர் தே. ப. பெருமாள் |
| 7. | திரு. கே. ராஜகோபாலச்சாரியார் |
| 8. | திரு. நாரண துரைக்கண்ணன் |
| 9. | திரு. கே. ஜே. வேதமுத்து |
| 10. | திரு. மாணிக்கவாசகம் |
| 11. | திரு. பி. ராகவன் |
| 12. | திரு. அழகானந்தா செங்கநாதன் |
| 13. | திருமதி ரஞ்சிதம் ராமசாமி |
| 14. | திரு. சுவாமி சுத்தாபாரதி |
| 15. | திரு. எஸ். கே. லெட்சுமணன் |
| 16. | திரு. என். ராமலிங்கம் |
| 17. | திரு. டி. பி. அ. காராபப்பிள்ளை |
| 18. | திரு. வெள்ளியங்காட்டான் |
| 19. | திரு. எஸ். முத்துசிங்கம் |
| 20. | திரு. புலவர் குமாரசா சம்பந்த |
| 21. | திரு. முகமது ஷெரீப் புலவர் |
| 22. | புலவர் எம். தங்கவேலன் |
| 23. | திரு. எம். சடகோபராமானுஜம் பிள்ளை |



| | |
|---|---|
| 24. | புலவர் வி. பொ. பழனிவேலனார் |
| 25. | திரு. வேதநாயக சந்திரசேகரன் |
| 26. | புலவர் எஸ். முத்துகிருஷ்ணன் |
| 27. | திரு. டி. கந்தசாமி |
| 28. | திரு. கேசவராமசாமி |
| 29. | திரு. வித்வ ரத்தினம் ராமசுப்பிரமணியம் |
| 30. | பண்டிதரத்னம் எஸ். சுருளிபாண்டி பாவலர் |
| 31. | திரு. அரங்க சீனிவாசன் |
| 32. | திரு. பி. ஸ்ரீ. ஆச்சார்யா |
| 33. | புலவர் போற்றிக் கண்ணனார் |
| 34. | திரு. முத்து டி. குப்புசாமி |
| 35. | புலவர் எ. பரசுராமன் |
| 36. | புலவர் டி. கணபதி நாயக்கர் |
| 37. | திரு. கே. வெங்கடாசலம் |
| 38. | புலவர் மணிவித்வான் எம். இரத்தின தேசிகர் |
| 39. | புலவர் சி. மகாதேவன் |
| 40. | திரு. கே. சி. சுவாமிநாத முதலியார் |
| 41. | திரு. ஜோதி வளையாபதி அடிகள் |
| 42. | திரு. எஸ். துரைசாமி |
| 43. | மகாவித்வான் கே. மதுரை முதலியார் |
| 44. | திரு. எ. மயிலைநாதன் |
| 45. | திரு. பி. சச்சிதானந்தம் |
| 46. | திரு. நாராயண சீனிவாச முதலியார் |
| 47. | திரு. அடிகளாசிரியர் |
| 48. | திரு. பி. நாராயணன் |

[illegible]

49. திரு. சி. பி. சுப்பிரமணியன்
50. திரு. கே. அருணாசல கவுண்டர்
51. திரு. ஏ. [illegible]
52. திரு. டி. சொக்கலிங்கம்
53. திரு. எ. வெங்கடசுப்பிரமணியன்
54. திரு. கே. சுப்பிரமணிய ஐயர்
55. திரு. டி. பாஸ்கர ஐயர்
56. திரு. கே. ராஜு முதலியார்
57. பாமணி எம். பாலசுப்பிரமணியன்
58. வானம்பாடி அன்ட் டி. சந்திரசேகர்
59. திரு. சரவண பவானந்தர்
60. திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி
61. திரு. அ. லெ. நடராசன்
62. திரு. என். பலராமன்
63. திரு. கவிரத்தினம் வித்வான் என். உடையநாத பிள்ளை
64. திரு. டி. பி. நடராசன் பிள்ளை
65. திருமதி ஜெயலட்சுமி அம்மாள்
66. திரு. ஞானகிரி நாடார்
67. திருமதி தவசீலி ஜெகசிற்பியன்
68. திரு. வி. ஜி. எஸ். இருதயநாதன்
69. திரு. எஸ். வேதாசலம்
70. திரு. சி. கயிலாயம்
71. திரு. என். ஆறுமுகம்
72. திரு. வி. குமாரசாமி
73. திரு. வி. சடகோபப்பிள்ளை



74. திரு. கே. சி. அருணாசலம்
75. திரு. என். இராமசாமி
76. திரு. வி. சோமசுந்தரம்
77. திரு. எம். பழனிவேல்
78. புலவர் நா. சண்முக தேவர்
79. திரு. இரா. மகேந்திரன்
80. திரு. கே. ஏ. ஆறுமுகம்
81. புலவர் கு. மாரியப்பப் பிள்ளை
82. வித்வான் க. சங்கரநாராயணப் பிள்ளை
83. திரு. டி. சுப்பையா தேவர்
84. திரு. எஸ். குருசாமி
85. புலவர் இரா. பெ. இராமச்சந்திரன்
86. திரு. ஆ. அன்பையா
87. திரு. கனி இப்ராஹிம்
88. திரு. ஏ. கணபதி
89. திரு. எம். குஞ்சிதபாத தேவர்
90. திரு. கே. சௌந்தரராஜன்
91. திரு. நா. குருசாமி
92. திரு. வித்வான் ஆர். பழனியாண்டி முதலியார்
93. திரு. தே. சுப்பிரமணியப்பிள்ளை
94. திரு. எஸ். இராமசாமி
95. செல்வி மேரிமாசிலாமணி
96. திரு. இரா. வெங்கடாசலம்
97. திரு. ஏ. எஸ். இராமசாமி
98. திரு. புலவர் பி. சுப்பையன்

[library stamp] சென்னை-600 008 143897
D
V211,32'N84
N84.2.8.3

99. திரு. டி. இக்காரவேலு
100. புலவர் திருமதி எஸ். இலாமி
101. திரு. இரா. பாஸ்கரன்
102. திரு. எ. இ. சண்முக முதலியார்
103. திரு. வி. இராமலிங்கம்
104. திரு. டி. பி. சதிரேசன்
105. திரு. கே. சம்பந்தன்
106. வித்வான் மு. சந்திரசேகரப்பிள்ளை
107. எம். இராமையா முதலியார்
108. புலவர் பி. எஸ். ஜெகந்நாதன்
109. திரு. டி. கே. குப்புசாமி ஆழ்வார்
110. திரு. வி. மகாலிங்கம்
111. புலவர் எஸ். குமாரசாமி
112. வித்வான் எஸ். சோமசுந்தரம்
113. புலவர் வி. கருணைச்செல்வராசம்
114. திரு. எஸ். இராமலிங்கம் தேசிகர்
115. திரு. கே. எ. வரதராசன்
116. திரு. எஸ். நடராசப்பிள்ளை
117. திரு. க. சங்கரநாராயணப் பிள்ளை
118. திரு. ஜி. பி. சுந்தர வைத்யநாத்
119. திரு. எஸ். என். ஸ்ரீராமதேசிகன்
120. திரு. வி. கே. மாணிக்கம் பிள்ளை
121. திருமதி சி. பெரியநாயகி
122. திரு. டி. எஸ். எஸ். மணி (செஞ்சி)
123. திருமதி சௌந்தரம் அம்மாள்
124. திரு. ந. மா. திருநாவுக்கரசு
125. திரு. கா. இ. நாகவேரு
126. திரு. பொ. தனிகாசலம்
127. திரு. இ. சொக்கலிங்கமணியும் பிள்ளை
128. திரு. எம். நாராயணவேலு

திரு. நா. மு. மாணிக்கம்
திரு. மு. தருமலிங்கம்
திரு. டி. ஆறுமுகம்
திரு. செல்லப்பந்தமூர்த்தி
திரு. வி. பாலகிருஷ்ணன் என்கிற வி. இளங்கண்ணனார்
திரு. நீ. இ. சுப்பிரமணியன்
திரு. சி. இராமசாமிச் சோனார்
திரு. செ. சிதம்பரம்
திரு. எஸ். ஆறுமுகம்
திரு. பா. கிருட்டிணன்
திரு. எ. எம். சோமசுந்தரம் பிள்ளை
திரு. அ. மு. அன்பு கருணையானந்தா
திரு. வி. வெல்சோழுந்து
திரு. அ. சண்முகவேலு
திரு. மீ. கந்தசாமி புலவர்
திரு. கா. க. துரைராசு
திரு. க. பழனிச்சாமிப் புலவர்
திரு. நி. செ. குப்புசாமி
திரு. நி. செ. கந்தசாமி
திரு. ஐ. ஜெயராமப் பிள்ளை
திரு. சி. கோவிந்தசாமி
திரு. அ. இராசகோபாலன்
திரு. வி. ஜி. சுப்பிரமணியன்
திரு. எம். டி. பழனிமகாதேவன்
திரு. கே. எ. குப்புசாமிப் பிள்ளை.

தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விபரம்

| தமிழ் அறிஞர்கள் | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|---|
| | | 1978 | | | | |
| 5 (ரூ. 100 விதம்) | 500 | 500 | 500 | 500 | 500 | 500 |
| 28 ,, | — | — | — | 2800 | 2800 | 2800 |
| 33 (மொத்தம்) | 500 | 500 | 500 | 3300 | 3300 | 3300 |
| | | 1979 | | | | |
| 33 (ரூ. 250 விதம்) | 7500 | 7500 | 7500 | 7500 | 7500 | 7500 |
| 32 ,, | — | — | — | 8000 | 8000 | 8000 |
| 2 ,, | — | — | — | — | — | — |
| 67 (மொத்தம்) | 7500 | 7500 | 7500 | 15500 | 15500 | 15500 |
| | | 1980 | | | | |
| 67 (ரூ. 250 விதம்) | 16750 | 16750 | 16750 | 16750 | 16750 | 16750 |
| 27 ,, | 6750 | 6750 | 6750 | 6750 | 6750 | 6750 |
| 1 ,, | — | — | — | — | — | — |
| 1 ,, | — | — | — | — | — | — |
| 96 (மொத்தம்) | 23500 | 23500 | 23500 | 23500 | 23500 | 23500 |
| | | 1981 | | | | |
| 96 ரூ. 250 விதம் | 24000 | 24000 | 24000 | 24000 | 24000 | 24000 |
| 25 ,, | — | — | — | 6250 | 6250 | 6250 |
| 1 ,, | — | — | — | — | — | — |
| 122 மொத்தம் | 24000 | 24000 | 24000 | 30250 | 30250 | 30250 |



தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி—தொடர்ச்சி.

| தமிழ் அறிஞர்கள் | | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|
| 5 (ரூ. 100 விதம்) | — | 500 | 500 | 500 | 500 | 500 | 500 |
| 28 ,, | — | 2800 | 2800 | 2800 | 2800 | 2800 | 2800 |
| 33 (மொத்தம்) | | 3300 | 3300 | 3300 | 3300 | 3300 | 3300 |
| | | | 1979 | | | | |
| 33 (ரூ. 250 விதம்) | — | 7500 | 7500 | 7500 | 7500 | 7500 | 7500 |
| 32 ,, | — | 8000 | 8000 | 8000 | 8000 | 8000 | 8000 |
| 2 ,, | | — | — | — | — | — | 500 |
| 67 (மொத்தம்) | — | 15500 | 15500 | 15500 | 15500 | 15500 | 16000 |
| | | | 1980 | | | | |
| 67 (ரூ. 250 விதம்) | — | 16750 | 16750 | 16750 | 16750 | 16750 | 16750 |
| 27 ,, | — | 6750 | 6750 | 6750 | 6750 | 6750 | 6750 |
| 1 ,, | — | | 250 | 250 | 250 | 250 | 250 |
| 1 ,, | — | | | 250 | 250 | 250 | 250 |
| 96 (மொத்தம்) | — | 23500 | 23750 | 24000 | 24000 | 24000 | 24000 |
| | | | 1981 | | | | |
| 96 ரூ. 250 விதம் | — | 24000 | 24000 | 24000 | 24000 | 24000 | 24000 |
| 25 ,, | — | 6250 | 6250 | 6250 | 6250 | 6250 | 6250 |
| 1 ,, | — | — | — | — | — | — | 250 |
| 122 மொத்தம் | — | 30250 | 30250 | 30250 | 30250 | 30250 | 30500 |

தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்

1982

| ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|
| 30500 | 30500 | 30500 | 30500 | 30500 | 30500 |
| — | — | — | 7750 | 7750 | 7750 |
| 30500 | 30500 | 30500 | 38250 | 38250 | 38250 |



## இணைப்பு

(280ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறை.

### மானியக்கோரிக்கை எண் 31.

### கொள்கை விளக்கக்குறிப்பு (1984-85).

"ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன்" என்ற தலைப்பின்கீழ் 1984-85 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கை எண் 31-ல் ரூ. 4,803.21 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது மொத்த மக்கள் தொகையில் முறையே 18.35 சதவிதமும் 1.07 சதவிதமும் ஆகும். தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 சதவிதம். இதில் கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிடர் 29.67 சதவிதமும், பழங்குடியினர் 20.45 சதவிதமும் ஆவர்.

3. தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்த பலமுனைத்திட்டங்களின்கீழ் பயன்பெறுவதோடு கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களின்கீழ் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை செயல்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதிதிராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட இரண்டு முக்கிய குறிக்கோளுடன் கூடிய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற் படுத்தப்பட்டு வருவதை இந்த அவையினர் நன்கறிவர்.

(1) ஆதிதிராவிடர்களில் பாதிபேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவர்கள் வறுமை நிலையிலிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர உதவுதல்.

(2) ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூடவசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.

இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சியையும் நிதி வாயில்களையும் ஒருங்கு திரட்டப்பட்டு பொதுத் துறையிலிருந்து நன்மையை ஆதிதிராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது.

இதற்காக, ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும், நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் சுமார் 4.46 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி செய்யப்பட்டுள்ளது. 1983-84-ம் ஆண்டில் 1.8 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார மேம்பாடு திட்டங்களின்கீழ் பயன் பெறும். 1984-85 ஆம் ஆண்டில் சுமார் 12.3 கோடி ரூபாய் இதற்கென்று செலவழிக்கப்படும். மீதமுள்ள ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து மேம்பாட்டு நிலைக்கு கொண்டு வரும் குறிக்கோளுடன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நிதி இலக்கும் விவரங்கள் இணைப்பு IX-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களின் நலனைக் கவனித்துக்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவாக்க அதிகாரியை அரசு 1982-83 ஆம் ஆண்டில் நியமித்துள்ளது. மேலும், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் திட்ட மேம்பாட்டையும், நிதி மேம்பாட்டையும் கோட்ட அளவிலேயே திறம்பட ஆய்வு செய்து கண்காணிக்க சென்னை மாவட்டத்தைத் தவிர பிற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இது இதற்காக திங்கள் ஒருமுறை கூடும். கோட்டாட்சியர் இதன் தலைவராக இருப்பார்.

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத் துறை திட்டத்தின் கீழ் தனித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நலத் துறைத் திட்டம் வந்ததையடுத்து பழங்குடியினர் மேம்பாட்டு நடவடிக்கை களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் உள்ள இயல்பான துறைத்திட்டங்களுடன் இத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6. இந்திய ஆட்சிப் பணி பதவி நிலையிலுள்ள இயக்குநரின் தலைமையின் கீழ் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. பொது நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் உள்ள இணை இயக்குநர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வி தொடர்பான திட்டங்களில் இவருக்கு கல்வித்துறை துணை இயக்குநர் உதவி புரிகிறார். துணை இயக்குநரின் வேலைப் பளு அதிகமாக உள்ளதால், அவருக்கு உதவிபுரிய மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவரை சார் பணியாளர்களுடன் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதுவரை இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் கல்வி மற்றும் நிர்வாக





சம்பந்தமாக மேலும் கவனம் செலுத்தி பள்ளிகள் நல்ல முறையில் இயங்கவும் கல்விப் பணிகள் சீராகவும் இயலும். கணக்குப் பிரிவின் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குநருக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் துறை கணக்குகளுக்கும் துறை கணக்கு குறித்து துறை தணிக்கைக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்கள், சில்லறை வியாபாரிகளுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்க அனுமதி அளிப்பது ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் கூட்டுறவு துணைப்பதிவாளர் ஒருவர் இயக்குநருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் இத்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்படுத்துவதை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

7. ஆதிதிராவிடருக்கான சிறப்பு உள்ளடக்கம் கொண்ட திட்டத்தின்கீழ் வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் பழங்குடியினர் நலத்துறைத் திட்டத்தின் கீழ் வரும் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதன் பயனாக ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூகப் பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது. இதுவரை, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், இயக்குநர் அலுவலகத்தின் வரவு-செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ள நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமே பொறுப்பேற்றிருந்தார். அரசுத் துறைகளிலும், அரசு பொதுத் துறை நிறுவனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் ஆதிதிராவிடருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப் படுகிறதா என்பதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் அவர் உயர் அதிகாரக் குழுவின் உறுப்பினர்-செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இதுபோன்ற சிறப்பு உள்ளடக்கத் திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நலத்துறைத் திட்டம் ஆகியவை செயற்படுத்தப் படுவதையும் ஆய்வு செய்வதும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் பொறுப்பாகும். சிறப்பு உள்ளடக்கம் கொண்ட திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நலத் துறைத் திட்டம் ஆகியவை செவ்வனே செயற்படுத்தப்படுவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் கூடுதல் பொறுப்பும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

[1984 மார்ச் 30

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

8. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையில் ஒதுக்கப் பட்ட தொகையைத் தவிர "மூலதனச் செலவு", என்ற தலைப்பில் ரூ. 540.01 இலட்சமும், "கடன்கள்-முன்பணங்கள்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 70.70 இலட்சமும், "கொத்தடிமைகளுக்கு புதுவாழ்வு அளித்தல்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 0.28 இலட்சமும், சாட்டிபவை என்பதில் ரூ. 15.02 இலட்சமும், ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 5,429.22 இலட்சம் ஒதுக்கப்படும்.

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு அரசு மேற் கொண்டுள்ள பணிகள் பின்வரும் மூன்று பெருந்தலைப்புகளாக வகைப் படுத்தப்படுகின்றன :—

1. கல்வி.

2. வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.

3. பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி.

### 1. கல்வி :

9. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு முதன்மையானதாகவும், இன்றியமையாததாகவும் திகழ்வது கல்விதான் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை நடத்தி வரும் பள்ளிகளில் மட்டுமல்லாமல், கல்வித் துறை தனியார் நிறுவனம் நடத்தும் பள்ளிகளிலும் அவர்களுக்கு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி அளிக்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பகுதியானது கல்விக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆதிதிராவிடர்-பழங் குடியினர் நலனுக்காக மொத்த ஒதுக்கீட்டுத் தொகை. | ஆதிதிராவிடர் பழங் குடியினர் கல்விக்காக மட்டுமான ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1981-82 | 2,702.17 | |
| 1982-83 | 4,285.64 | 1,791.25 |
| 1983-84 | 4,460.99 | 2,117.58 |
| 1984-85 | 4,828.62 | 2,378.27 |
| | | 2,617.17 |



1984 மார்ச் 30]

## படிப்புதவித் தொகை.

### 10. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு :

1976-77 ஆம் ஆண்டு இறுதிவரை, முதல் வகுப்பு முதல் பதினோராம்
வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் (இந்து) பழங்குடியினர், கிறித்தவராக
மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய
படிப்பிற்காக மாணவரில்லங்களில் தங்கிப் பயிலாததற்கான படிப்புதவித்
தொகையும் வழங்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை, புத்தகங்களுக்
காகவும், தனிக் கட்டணங்களுக்காகவும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது.
படிப்புதவித் தொகையுடன், அவசியமானபோது தேர்வுக் கட்டணங்களும்
ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை வழங்க,
பெற்றோர்/பாதுகாவலரின் அதிக அளவு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று
நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1977-78 ஆம் ஆண்டு முதற்கொண்டு, நான்காம்
வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் ஆதிதிராவிடர் (இந்து)
பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்
களுக்கு, அவர்களின் பெற்றோரின்/பாதுகாவலரின் வருமானத்தைப் பாராமல்
இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல்
மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வித் துறை இலவசமாக
புத்தகங்களையும், சிலேட்டுகளையும் வழங்கி வருகிறது. சம்பந்தப்பட்ட
நிலையங்களுக்கு தனிக் கட்டணங்களைத் திருப்பி கொடுப்பது தொடர்பான
சலுகைகள் தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதில் அளிக்கப்பட்ட
சலுகைகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய
ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின்
வருமானத்தைக் கருதாமல் அளிக்கப்படுகிறது. இச்சலுகைகளினால் IV
முதல் X ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயிலும் மாணவர்களில்
இந்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி
திராவிடர் வகுப்பைச் சேர்ந்த சுமார் 8.26 இலட்சம் மாணவர்கள் 1982-83 ஆம்
ஆண்டில் பயனடைந்தனர். இதைத் தவிர பள்ளிகளுடன் இணைக்கப்பட்ட
மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் VI முதல் X வகுப்புகளில் பயிலும்
இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் கிறித்தவர்களாக மதம் மாறிய
ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்வதற்
குரிய கட்டணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மெட்ரிக் படிப்புக்கு
முந்தைய படிப்பிற்கு மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்வதற்கான
கட்டணத் தொகைக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வருமான வரம்பு
ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-லிருந்து ரூ. 6,000-மாக உயர்த்தப்பட்டது. இது
1981-82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. தங்கிப் பயிலும்

மாணவர் ஒருவருக்கு 1981-82 ஆம் ஆண்டில் உணவு, தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் வழங்கப்படும் தொகை திங்களொன்று 10 ரூபாய் உயர்த்தப்பட்டது. உணவு மற்றும் தங்குவதற்குரிய தற்போதைய கட்டண விதம் ஆண்டொன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை ஆகும். இந்தச் சலுகை மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என்பதைப் பொறுத்து வழங்கப்படுகிறது.

11. மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு :

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் அனைவருக்கும் அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமல் படிப்புக் கட்டணம் வசூலிக்கப் படுவதில்லை. இவ்விதம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்புக்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எல்லா வகுப்புகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளிப் படிப்பு, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு, கலைக் கல்வி, அறிவியல் கல்வி, உயர்மட்ட தொழில் நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றைப் பயிலும் இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் (எம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாமல்) மத்திய அரசின் படிப்புதவித்தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் படிப்புதவித் தொகையை பெற தகுதி பெற்ற இந்து ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கும் (அவர்கள் எம்மதத்தை சேர்ந்தவராய் இருப்பினும்) கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும், மாநில அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் உதவித் தொகையை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 9,000-லிருந்து 12,000 ரூபாயாக 1—7—1981 முதற்கொண்டு உயர்த்தப்பட்டது. மாநில அரசின் உதவித் தொகையை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,000-லிருந்து ரூபாய் 6,000 ஆக 1981-82 ஆம் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப் பட்டது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மருத்துவ, பொறியியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் பராமரிப்புப் படியினை மத்திய அரசு 1—1—1978-லிருந்து திங்களொன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியது. ஏனைய



படிப்புகளுக்கும், பாராமரிப்புப் படியை 1—7—1981-லிருந்து திங்களொன்றுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 60 வரை உயர்த்தியுள்ளது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட பாராமரிப்புப் படிகள், மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என்பதைப் பொறுத்து வழங்கப்படுகிறது. மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகையில் பாராமரிப்புச் செலவிற்கான தற்போதைய தொகை திங்களொன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 200 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ள தொகை மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என்பதையும் மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலு கின்றாரா இல்லையா என்பதைப் பொறுத்தும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1977-78-லிருந்து 1982-83 வரையிலான ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு | மாநில அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | மாநில அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | மாநில அரசின் விதிமுறைகளின் கீழ் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | மத்திய அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | மத்திய அரசின் விதிமுறைகளின் கீழ் தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஆதிதிராவிடர்கள் : | | | | | |
| 1977–78 | 610,070 | 4,930 | 83.48 | 18,650 | 153.67 |
| 1978–79 | 669,688 | 3,819 | 102.46 | 18,254 | 153.02 |
| 1979–80 | 774,965 | 5,887 | 160.67 | 22,880 | 213.41 |
| 1980–81 | 779,444 | 8,229 | 171.49 | 39,214 | 278.10 |
| 1981–82 | 788,781 | 8,149 | 152.23 | 43,940 | 415.21 |
| 1982–83 | 825,898 | 8 362 | 175.97 | 49,920 | 446.80 |
| பழங்குடியினர் : | | | | | |
| 1977-78 | .. | .. | .. | 225 | 2.52 |
| 1978-79 | 3 | .. | 0.01 | 218 | 1.97 |
| 1979-80 | .. | 1 | 0.01 | 69 | 0.74 |
| 1980-81 | 53 | .. | 0.10 | 255 | 2.08 |
| 1981-82 | 39 | .. | 0.09 | 473 | 2.88 |
| 1982-83 | .. | 48 | 0.12 | 374 | 3.15 |

குறிப்பு.—மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 1978-79 ஆம் ஆண்டு முடிவில் செலவிடப்பட்ட தொகையைவிட அதிகமாகச் செலவிடப்பட்ட தொகையை மத்திய அரசு ஏற்கும். எஞ்சிய தொகையை பொறுப்பேற்ற செலவுத் தொகையாக மாநில அரசு ஏற்கும்.

மத்திய அரசின் படிப்புதவித் தொகை குறித்த நடைமுறைகளின்கீழும் மாநில அரசின் படிப்புதவித் தொகை குறித்த அறிக்கையின்கீழும், மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர்களே ஒப்புதலளிக்கும் அதிகாரிகளாவர் என்று 1982-83 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பள்ளி இறுதி வகுப்பில் தேறியிருக்க வேண்டிய அவசியமில்லாத தொழில் நுட்ப பயிற்சிப் படிப்புகளும் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பாகக் கருதப்படும்.

இப்புதிய நடைமுறையின்படி, 1982-83 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகை செலவிடப்பட்ட தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான தொகை 1983-84 ஆம் ஆண்டில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு படிப்புதவி தொகையின் முதல் தவணைத் தொகையாகப் பிரித்துக் கொடுப்பதற்கான முன்பணமாக கல்வி நிறுவனங்களின் தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 88,000 மாணவர்களுக்கு முதல் தவணைத் தொகை வழங்குவதற்காக, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளைக் கொண்ட 1,400 கல்வி நிறுவனங்களுக்கு இதுவரை ரூ. 281.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத் தலைவர்கள் வழங்கிய படிப்புதவித் தொகையை அடிப்படையாகக் கொண்டு படிப்புதவித் தொகையின் இரண்டாம் தவணைத் தொகை வழங்கப்பட உள்ளது.

12. செயலாக்கத் திட்டம்:

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதிதிராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும், கிறித்தவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும் மேற்படிப்பைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றிற்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூ. 80 கல்விச் சிறப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அம்மாணவர்கள் மாணவர் இல்லத்தில் தங்கவேண்டும் என்ற நியதியோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் வருமானத்திற்கு வரம்போ இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்படவில்லை. 10 + 2 + 3 என்ற கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர்,



10 ஆம் வகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதிதிராவிடர் (ஆண்கள்) மாணவர்களுக்கும், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் 1978-79 ஆம் ஆண்டு முதல் படிப்புதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் மாணவியர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) இத்திட்டத்தின்கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத்தேர்வில் மிக அதிகமாக மதிப்பெண்களையும் அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண்களையும் ஒரே மாதிரியாகப் பெறும் மாணவர்கள் இருவருக்கும் மேற்பட்டு இருப்பார்களேயானால், அவர்களுக்கு இப்படிப்புதவித்தொகை முழுவதும் வழங்கப்படும். மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களுடைய உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக்கொள்ளாமல் பரிசுத்தொகை முழுவதும் வழங்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை:

கல்வியில் சிறந்து விளங்கும் இந்து ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் படிப்புதவித் தொகையுடன் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைக் கல்வித்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு "காந்தியடிகள் நினைவுப் படிப்புதவித் தொகை" வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித் தொகை முதலாண்டிற்கு ரூ. 1,500-ம் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1,000-ம் வழங்கப்படுகிறது.

14. தகுதி-வருவாய் பரிசுத் திட்டம்:

கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரின் நலனைக்கருதி, "காந்தி நினைவுப் பரிசுத் திட்டத்தைப்" போன்றே தகுதி-வருவாய் பரிசுத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் இப்பரிசுத் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

[1984 மார்ச் 30

**15. தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம் :**

பள்ளி இறுதித்தேர்விலும், புகுமுக வகுப்புத் தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்றுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் தகுதி மானியமாக ரூ. 300-ஐ 1976-77 முதல் ஒவ்வோராண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை 1980-81 ஆம் ஆண்டு முதல், பள்ளி இறுதித் தேர்விலும் (10 ஆண்டு பாட முறைத் திட்டம்) மேல் நிலைக் கல்விப் படிப்பின் இரண்டாம் ஆண்டிற்குரிய தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் இந்தத் தகுதி மானியம் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 14.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**16. கடன் படிப்புதவித் தொகைகள் :**

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற்கல்வி கற்கும் மாணவர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகப்படியான தொகையினை செலவிட வேண்டியுள்ளது. எனவே அரசு இதனைப் பரிசீலித்து, நிதி உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்க ஆணை பிறப்பித்து உள்ளது. 1974-75 ஆம் ஆண்டு முதல் பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கும் கடன் படிப்புதவித் தொகை வழங்கப் படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, இதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :

| ஆண்டு. | ஆதிதிராவிட-பழங்குடியினர். | | கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). | (4) | (5) |
| 1979-80 | 4,912 | 38.09 | 153 | 0.89 |
| 1980-81 | 6,015 | 57.78 | 153 | 1.13 |
| 1981-82 | 7,884 | 54.62 | 176 | 1.03 |
| 1982-83 | 7,547 | 51.45 | 415 | 2.73 |
| 1983-84 (15-2-1984 வரை). | 5,675 | 41.36 | 326 | 2.06 |



1984 மார்ச் 30]

1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 56.75 இலட்சமும், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 2.35 இலட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆதி திராவிடர் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக வழங்கப்படும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது. 1983-84-ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்கவேண்டும் என்று சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் மாநிலம் முழுவதிலும் தற்போது செயல் படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 500 மாணவர்களுக்கு மேலாக இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**17. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள் :**

(அ) ஆதிதிராவிடர்.—இம்மாநிலத்தில் 952 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. தொடக்கப்பள்ளிகள் | 842 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | 71 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | 31 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் | 8 |
| மொத்தம் — | 952 |

இப்பள்ளிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 2.05 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதிதிராவிடர் நல மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ). பழங்குடியினர்.—இத்துறை பழங்குடியினருக்காக 150 பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| அரசு பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள். | 130 |
| அரசு பழங்குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளிகள் | 13 |
| அரசு பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் | 4 |
| அரசு பழங்குடியினர் உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் | 2 |
| அரசு பழங்குடியினர் உறைவிடம் இல்லாத பள்ளி | 1 |
| மொத்தம் . . | 150 |

மேற்கூறிய உறைவிடப் பள்ளிகளில் இலவச உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 9,198 மாணவர்கள் பயனடைகின்றார்கள். 1983-84 ஆம் ஆண்டில் புதிதாக 12 பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

1982-83 ஆம் ஆண்டில் 3 பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. பள்ளி ஆண்டில் மாணவிகள் குறிப்பாக மேல்நிலைக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடி மாணவியர் தம் கல்வியை இடையிலேயே நிறுத்தி விடுவதைத் தவிர்க்கவும், அதிக எண்ணிக்கையில் மாணவர்களை சேர்க்கவும் பள்ளித் தலைமை ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசுத்திட்டம் ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்டவாறு இந்த உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கென தனித்தனி பள்ளிகளாக உருவாக்கியுள்ளது. சென்னை (ஒன்று), செங்கல்பட்டு (இரண்டு), வடார்க்காடு (ஒன்று) மற்றும் திருச்சிராப்பள்ளி (ஒன்று).

மேலும் தலைமை ஆசிரியர்களுக்கென 5 பணியிடமும், முதுநிலை பட்டதாரி உதவியாளருக்கென 2 பணியிடமும், பட்டதாரி உதவியாளர்களுக்கென 23 பணியிடமும், தமிழ் பண்டிதர்களுக்கென 13 பணியிடமும், உடற்கல்வி பயிற்சியாளர்களுக்கென 6 பணியிடமும், இடைநிலை உதவியாளர்களுக்கென 163 பணியிடமும், கைத்திறத் தொழில் பயிற்சிகளுக்கென 9 பணியிடமும், ஓவிய ஆசிரியர்களுக்கென 9 பணியிடமும், இளநிலை உதவியாளர்களுக்கென 18 பணியிடமும், தட்டச்சர்களுக்கென 34 பணியிடமும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.



ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு மேசை, நாற்காலிகள், கணித சாதனங்கள், தூங்க வசதிகள், குப்புரவு வசதிகள், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவற்றை வழங்கவும் கருதப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி செய்து கொடுப்பதற்காக 1980-81 இல் ரூபாய் 1 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டம் ஒன்று 1981-82-ல் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது.

1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் நடத்தப்பெறும் 39 ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகள்/மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணித சாதனங்கள், போதனை வசதிகள் மற்றும் சுவர் வரைபடங்கள் வழங்குவதற்காக 0.72 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

18. மாணவ மாணவிகளுக்கு உடைகள் வழங்குதல் :

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயிலும் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியர் அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. நான்கு முதல் பத்து வரையில் உள்ள வகுப்புகளில் பயிலுகின்றவர்களும் அரசினர் ஆதிதிராவிடர் நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு உடைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு ஜதை உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உறைவிடப்பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சாரணர்களுக்கும் சாரண பயிற்றுநர்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து சீருடைகள் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 1.28 இலட்சம் ரூபாய் இதற்கென்று சேர்க்கப் பட்டுள்ளது.

19. கல்விச் சுற்றுலா :

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம்

1969-70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், ரூ. 1,000 வழங்கப்படுகிறது. அதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 0.37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**20. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் :**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 5 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 45 காசு செலவில் சத்துணவு வழங்கும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 1983-84-ம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டது.

45 காசு செலவில், 34 காசு உணவுப்பொருள் வழங்கு துறையாலும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கும் அரிசி, எண்ணெய், பருப்பு போன்றவற்றிற்காக சரிக்கட்டப்படுகிறது. எஞ்சிய 11 காசு காய்கறிகள், சுவைப் பொருள்கள், வாங்குவதற்காக மானியமாக வழங்கப்படுகிறது. வனத் துறை நடத்தும் 14 பள்ளிகள் உட்பட ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 1,77,815 மாணவர்களுக்கு 1,070 மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

இதுவரையில் 1,092 சமையற்காரர்களும், 1,064 உதவியாளர்களும் சத்துணவுக் கூடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திலும் ஒரு பகுதி நேர அமைப்பாளர், மாதம் 150 ரூபாய் மதிப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். மலைப் பகுதிகளில் உள்ள சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு பற்பொடி வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலப் பள்ளிகளில் புதிய மதிய உணவு வழங்குவதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 109.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**21. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும், பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குதலும் ;**

இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர்களுக்காகவும், பழங்குடியினருக்காகவும், 1,102 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. கல்வியாண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய்



இருந்தாலும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 2.13 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக, 1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 37.07 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**22. ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் :**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சமவெளிகளில் ஒவ்வொன்றும் ரூபாய் 15,060 செலவிலும், மலைப் பகுதிகளில் ஒவ்வொன்றும் ரூபாய் 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 182 ஆசிரியர்கள் குடியிருப்புகள் கட்டப் பட்டுள்ளன. மலைப் பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரூ. 41.10 இலட்சம் ரூபாயில் 1983-84 ஆம் ஆண்டில் 137 தனி நபர் வசிக்கும் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன. இதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 4.65 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில் ஆசிரியர்கள் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

**23. குழந்தைகள் காப்பகம் :**

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வோராண்டும் 50 என்ற வீதத்தில் குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது. 200 குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் உள்ளனர். பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும் வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும், அக் குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். மூன்று முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டம் நண்பகல் உணவுத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**24. தட்டச்சு, சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்காக திட்டம் :**

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால், தட்டச்சு, சுருக்கெழுத்தர் பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற்

கொண்டு, தனியார் நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்தது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 3.54 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**25. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி :**

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற பட்டதாரிகள் ஐவருக்கு 1974-75 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலிய வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூபாய் 750 கடன்.

புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 உதவித் தொகை.

1982-83 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 5-லிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**26. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம் :**

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல் கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், மாணவர்களுக்காக ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு செயல்படுகின்றன. இந்த வசதி, 1976-77 இல் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி வசதி 189 கல்லூரிகள் அனைத்திலும் ஓராண்டில் இரு திங்கள்கட்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 மொத்தத் தொகையாக அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக இவ்வாண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏழு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கும் இச்சிறப்புப் பயிற்சித் திட்டத்தை 1981-83 ஆம் ஆண்டில் அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**27. மாணவர் இல்லங்கள் :**

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல மாணவர் இல்லங்களில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் :—

| ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள். | சதவீதம். |
|---|---|
| (1) | (2) |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | 20 * |
| முன்னிலை வகுப்பினர் | 5 |
| பழங்குடியினர் மாணவரில்லங்கள். | |
| பழங்குடியினர் | 60 |
| ஆதிதிராவிடர் | 30 |
| பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பாரம்பரையினர். | 10 |

1983-84 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கென்று உள்ள 685 மாணவர் இல்லங்களில் மொத்தம் 43,438 மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சதவீதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்தமட்டில், மொத்தம் 905 மாணவர்களைக் கொண்ட 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. 1983-84 ஆம் ஆண்டில்

* குறிப்பு—பிற்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இருபது விழுக்காட்டில் மீனவர்களின் குழந்தைகளும், உடல் ஊனமுற்ற குழந்தைகளும் அடங்கும்.

ஆதிதிராவிடர்களுக்காக 10 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 460 மாணவர்கள் தங்கலாம். இல்லங்கள், சுகாதார மற்ற தொழில்களில் ஈடுபடுபவர்களின் இவற்றில் இரண்டு மாணவர் கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் குழந்தைகளுக் தங்கலாம். இவைகளில் ஒன்று வட ஆற்காடு மாவட்டம் 30 மாணவர்கள் மற்றொன்று மதுரை மாவட்டம் திண்டுக்கல்லிலும் ஆம்பூரிலும், ஆண்டு 8 கல்லூரி மாணவியர் விடுதிகளும், துவங்கப்படும். 1984-85 ஆம் விடுதிகளும், 12 உயர்நிலைப்பள்ளி 6 உயர்நிலைப் பள்ளி மாணவர் 26 விடுதிகள் மாணவியர் விடுதிகளும் ஆக மொத்தம் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்காக இரண்டு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. தவிர, தொழில் பயிற்சி

ஜவ்வாது மலையில் வாழும் பழங்குடி மாணவியர் ஜமுனா மருதூரில் உள்ள பள்ளிக்குச் செல்ல தினமும் 15 கிலோ மீட்டர் கூடுதலாக பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதால் அநேக மாணவிகள் கல்வியை இடையிலேயே நிறுத்தி விடுகிறார்கள். இதேநிலை திருச்சி மாவட்ட பச்சைமலைப் பகுதியிலும் நிலவி வருகிறது. ஆகவே, இப்பகுதியிலுள்ள பழங்குடியின மாணவியர்களின் இடர்ப்பாடுகளைக் களைய வேண்டி 2 பழங்குடி மாணவியர் விடுதிகள் 1984-85-ல் ரூ. 1.35 இலட்சத்தில் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் புதிய மாணவரில்லங்களைத் திறப்பதற்கும் 705 மாணவரில்லங்களை (ஆதிதிராவிடர்களுக்கு 685, பழங்குடியினருக்கு 20) பராமரிப்பதற்கும் ரூ. 550.49 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள அரசு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 2 மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண விகிதங்கள் வருமாறு :—

| மாணவர் இல்லங்களின் வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள் சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள். | |



| | |
|---|---|
| 2. வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள். | 80 |
| 3. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள். | 60 |

பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண விதங்களின் விவரம் வருமாறு :—

| வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| பழங்குடியினர் உறைவிட தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள். | 45 |
| பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளி. | 60 |

1983-84 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரி தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களுக்கு சிறிய மேசை ஒன்றும், நாற்காலி ஒன்றும், ரூ. 4.25 இலட்சம் செலவில் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது.

மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கும் 1983-84 ஆம் ஆண்டில், கம்பளிச் சட்டைகள் வழங்குவதற்கென ரூ. 2.99 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

28. அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல் :

இத்துறை நடத்திவரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

29. மாணவ/மாணவியர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல் : [1984 மார்ச் 30

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 705 அரசு இல்லங் களில் (ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு 685, பழங்குடியினர் மாணவர்களுக்கு 20) 206 இல்லங்கள் (ஆதிதிராவிடர்களுக்கு 191, பழங்குடி யினர்களுக்கு 15) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் மேற்கொண் டுள்ளது. இதுவரையில், ஆதிதிராவிடர்களுக்காக 241 இல்லங்கள் (ஆதி திராவிடர்களுக்கு 237, பழங்குடியினர்களுக்கு 4) கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் 127 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் 126 விடுதிகள் ஆதிதிராவிடர்களுக்கும் 1 விடுதி பழங்குடியினருக்கும் ஆகும். 114 இல்லங்கள் கட்டும் பணி (ஆதிதிராவிடர்களுக்கு 111, பழங்குடியினருக்கு 3) பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 240.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

30. பகுதி நேர சிற்றாசிரியர்கள் :

ஆதிதிராவிடர், பழங்குடியினர்க்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தேர்வுகளை சிறப்பாக எழுதத் துணை புரியும் பொருட்டு, பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப் படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவை தவிர கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர்/மாணவியர் இல்லங்களில் ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப் பட்டதால், உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் இருப்பின் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப் படுகின்றனர். இதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.47 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

31. தனியார் நடத்தும் மாணவர் இல்லங்களுக்கான உதவித் தொகை :

ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான அரசு இல்லங்களைத் தவிர, 41 இல்லங்கள் ஆதிதிராவிடர் மாணவர்களுக்காகவும், நான்கு பழங்குடியினர் மாணவர்களுக்காகவும் உறைவிடப் பள்ளிகள் தனியார் நிறுவனங்கள் அரசு நிதியுதவியுடன் நடத்தி வருகின்றன.



உதவித்தொகை பெறும் இல்லங்களுக்கு அளிக்கப்படும் உணவு மானியத் தொகையை 1981-82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரம், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்கள், இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவியுடன் நடத்தப்பட்டு வரும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 ஆக இருந்ததை ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, ஏனைய இடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 30-ல் இருந்து ரூ. 40-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிருவகிக்கப்படும் நான்கு பழங்குடியினர் மாணவர் உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் மானியத் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 36-லிருந்து ரூ. 46-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 11.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.

32. வேளாண்மை :

உழவு மாடுகள் வாங்க மற்றும் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கான மானியம் வழங்குதல்.

வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு, உழவு மாடுகள் வாங்குவதற்காக நிதி உதவி அளிக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

உழவு மாடுகள் :

உழவு மாடுகளின் விலை ஏற்றத்தினை மதிப்பீட்டில் கொண்டு, ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப, ஒரு சீரான நடை முறையை மேற்கொள்ளும் பொருட்டு, அரசு இத்திட்டத்தினை மாற்றி யமைத்துள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோருக்கு மாற்றியமைக்கப்பட்ட முறையின் கீழ் நிதி உதவி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த உத்திரவிடப் பட்டுள்ளது.

இதன்படி, உழவு மாடுகளின் விலையில் 1/3 பாகம் அல்லது உயர் அளவுத் தொகை ரூ. 600-ஐ உழவு மாடுகள் வாங்குவதற்கு மான்யமாக வழங்கப்படும். மீதமுள்ள 2/3 பாகம் அதாவது ரூ. 1,200-ஐ பயன்பெறுவோர்களுக்கு வங்கி களின் மூலம் கடனாக வழங்கப்படும். இவ்வாறாக மாற்றியமைக்கப்பட்ட முறை, 1983-84 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

**பாசனக் கிணறுகள் :**

பாசனக் கிணறு வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகை திட்டத்தினை அரசு மாற்றியமைத்துள்ளது. இப்புதிய திட்டத்தின்கீழ் கிணறு வெட்ட ஆகும் மொத்த செலவில் 1/3 பாகம் மானியமாக அளிக்கப்படும். மீதமுள்ள 2/3 பாகம் நிலவள வங்கி வணிக வங்கிகளிலிருந்து கடனாக வழங்கப்படும். மேற்கூறிய அரசு மானியம் பயனடையும் ஒவ்வொருவருக்கும் உயர் அளவுத் தொகை ரூ. 5,000-மாக இருக்கும்.

1984-85 ஆம் ஆண்டில் இதற்கென ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 6.68 இலட்சமும் பழங்குடியினருக்காக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, இந்த இனங்களுக்கு கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு ரூ. 1.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆதிதிராவிடர் வைத்திருக்கும் நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிப்பதற்காக, மத்திய அரசு அளிக்கும் சிறப்பு நிதியுதவியைக் கொண்டு, பெரும் பாசனத் திட்டம் ஒன்றை இம்மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் பணியாளர்கள், ஆதிதிராவிடர் வைத்திருக்கும் நிலங்களை இத்திட்டத்தின்கீழ்க் கண்டறிந்து வருகின்றனர். செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் நிலங்களுக்குப் பாசன வசதிகளை அளிக்க தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனம் திட்டங்களை வகுத்துள்ளது.

**33. தோட்டக்கலை :**

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக்கல்ராயன் மலை, பெரியகல்ராயன் மலை ஆகிய இடங்களில் தோட்டக் கலையை மேம்படுத்துவதற்கு தட்ப வெட்ப நிலை சாதகமாக உள்ளது. எனவே, அங்கு வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தருமபுரி, தோட்டக் கலை-மலைத்தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்சொன்ன திட்டத்திற்கு 31—7—1982 வரை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் நிதியிலிருந்து தொகை செலவிடப்பட்டது. இத்திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்துடன் சேர்க்கப்பட்டு தோட்டக்கலை மலைத் தோட்டப் பயிர்கள், இயக்குநரால் 1—8—1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**34. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல் :**

கருமார், தச்சர், தையல் தொழில்கள், ஏனைய 18 தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர்கள், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியவர்களுக்கு இலவசமாகக் கருவிகள் சாதனங்கள் வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**35. சிறுதொழில் கடன் :**

சைக்கிள், கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச் சாலைகள்) மளிகைக் கடைகள், அச்சகம் முதலியவை போன்ற முப்பத்தோறு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதிதிராவிடர்களுக்கு சிறுதொழில் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் வகைகளுக்கு ஏற்ப ரூ. 125-லிருந்து ரூ. 15,000 வரை கடன் தொகை வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்காக, ரூ. 10.00 இலட்சமும், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்காக ரூ. 1.00 இலட்சமும், பழங்குடியினருக்காக 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**36. பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சிக்கால உதவித் தொகை:**

வேலை வாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 25 பெறும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்தும் திங்கள் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் 1—8—1980-லிருந்து அவர்கள் பெறும் பயிற்சி உதவித் தொகை மொத்தம் ரூ. 55 ஆகிறது. ஆதி திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூ. 55 பயிற்சி உதவித் தொகையும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 13.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

**37. கூட்டுறவு :**

**(அ) ஆதிதிராவிடர் :**

தொழில் துறையில் ஆதிதிராவிடர் துரிதமாக முன்னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி உற்பத்தி

நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இவை; தொழில்-வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந் நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினர் :

பழங்குடியினரை சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டும், காடுபடு பொருட்களைப் பழங்குடியினர் விற்பனைச் செய்வதற்கு இயலும் பொருட்டும், அவர்களுடைய பொருளாதார நிலைமை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கென இம்மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அரசு அமைத்துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, இரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஐந்து வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி வீதத்தில், நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வசதிக்கு வகை செய்வதற்காக பெரிய அளவிலான பழங்குடியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 13 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் உற்பத்திக்காக கடன் வசதியை அளிப்பதோடு மட்டுமின்றி, நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன.

38. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் :

ஏழை ஆதிதிராவிடர்களுக்கு உதவிபுரிதல், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஆதிதிராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு கால்நடைக்கு 1,500 ரூபாய் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். இந்தத் தொகையில் ரூ. 500 ஆதிதிராவிடர் நல நிதியிலிருந்து மானியமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாய் கடன் தொகையாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரு கால்நடைகளை வாங்குவதற்கு மட்டுமே மேற்கூறிய உதவியைப் பெறத் தகுதி யுடையவராவார். ஆதிதிராவிடர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கு மானியம் வழங்க இத்திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 31.85 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



சிறப்பு மத்திய உதவி.

39. ஆதிதிராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்தை விரைவு படுத்தும் பொருட்டு மத்திய அரசு சிறப்பு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக இந்த மத்திய நிதியுதவி செயல்படுத்தும் துறைகளுக்கு வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூ. 9.56 கோடி மத்திய உதவி, ஆதிதிராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு செலவு செய்ய மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்கள் மட்டும் ஆதிதிராவிடர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்காது. எனவே, இவர்களின் தொழில் முறையை மாற்றியமைக்கும் பொருட்டு, நிறைய வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய, வருவாய் தரத்தக்க தொழில்கள்/தொழிற் மையங்கள் ஏற்படுத்த மத்திய உதவி நிதி செலவிடப்பட்டு வருகிறது. இதுவரை சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ. 37.20 கோடி பெறப்பட்டுள்ளது.

சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து கைத்தறி மற்றும் துணி நூல் துறை வாயிலாக அநேக திட்டங்களை செயல்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 5,151 ஆதிதிராவிடர் வேலைவாய்ப்பு பெறுவர். அவைகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு :—

(i) கூட்டுறவு நூற்பாலைகள்.

(ii) 11 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

(iii) 14 விசைத்தறி வளாகங்கள்.

(iv) பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிதி உதவி போன்றவை.

தொழில் வணிகத்துறையின்கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக சுமார் 3,484 ஆதிதிராவிடர்கள் வேலை வாய்ப்பளிக்க உதவி செய்யப்பட்டுள்ளது. அவைகளில் முக்கியமான தொழில்கள் வருமாறு :—

செங்கல் உற்பத்தி தொழிற்சங்கங்கள்.

பாலிதீன் பைகள் செய்யும் தொழில்கள்.

தீப்பெட்டி தொழில்கள்.

கயிறு உற்பத்தித் தொழில்கள்:

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் ஊரக நெசவு மையங்கள், நேபால் தறி மையங்கள், பனை மற்றும் பனை உற்பத்தி வளாகம், பாய் நெசவு கூட்டுறவு சங்கம், கைவினைத்தாள் பிரிவு போன்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் போன்றவை வகுக்கப் படுகின்றன. மேலும், 1,000 காலணி செய்யும் தொழிலாளர்களுக்கு பெட்டிக் கடை, தேவையான சாமான்கள், சிறு முதலீடு ஆகியவை இவ்வாரியம் மூலம் வழங்கப்பட்டது. இவ்வாரியம்மூலம் 12,860 ஆதிதிராவிடர் பயனடைந் துள்ளார்கள். 3,192 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க உழைப்பாளர் ஒப்பந்தச் சங்கங்கள் மற்றும் கல் உடைக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டும், ஆதிதிராவிடர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தால் அளிக்கப்படும் உதவித் தொகையோடு சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்தும் உதவித் தொகை சேர்த்து 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு அளிக்கப்படுகின்றது. மேலும், செயலற்று கிடக்கும் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கொட்டகை உபகரணங்கள் முதலியவை அளிக்கப்படுகிறது. 50 சதவீத விலையில் 1,500 ஆடு மற்றும் 200 கோழிப்பண்ணைகளும் அளித்து சுமார் 1,700 ஆதிதிராவிடர்களுக்கு உதவி செய்யப்பட்டன.

**நகர வளர்ச்சித் திட்டங்கள் :**

நகர்ப்புறத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவி அளிக்கப்படுகிறது. 3,500 ஆதிதிராவிடர்கள் சுய வேலை வாய்ப்புப் பெற ரூபாய் 70 இலட்சம் செலவிடப்படும். ரூபாய் 18 இலட்சம் செலவில் 1,500 ஆதிதிராவிடர்களுக்கு புரைசம் முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**கூட்டு கிராம வளர்ச்சித் திட்டங்கள் :**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மாநிலத்தில் 15 பின்தங்கிய வட்டாரங்களில் 15,000 ஆதிதிராவிடர் குடும்பங்களைத் தெரிந்தெடுத்து அக் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான எல்லா வகையான உதவிகளையும் அளிக்கிறது. அக் குடும்பங்களில் ஒருவரேனும் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புப் பெறும் வகையில் ஊரகத் தொழில்கள் நிறுவப்படும். இதைத் தவிர ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அடிப்படை வசதிகளுடன் எல்லா வகையான வசதிகளும் அளிக்கப்படும்.



**41. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்விற்குப் பயிற்சியளித்தல்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் இரண்டு மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் 17 பயிற்சி நிலையங்கள் 1976 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினரில் 40 நபர்கள் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களில் 20 நபர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர். பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு நாளுக்கு முதல் நாள் வரையில் வகுப்புக்கள் நடத்தப்படும். பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் புகுமுக வகுப்பு தேர்ச்சி பெற்ற/தேர்ச்சி பெறாத ஆதிதிராவிடர் பழங் குடியினர் மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோர் இப்பயிற்சியில் சேர தகுதி உடையவர்கள். இவர்கள் தகுதி அடிப்படையில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவினால் 1977 ஆம் ஆண்டு முதல் 1981 வரையில் இப்பணிக்குரிய தேர்வுகள் நடத்தப் படாததால் அந்தக் காலங்களில் இப்பயிற்சி நடத்தப்பெறவில்லை. 1982-83 ஆம் ஆண்டில், ரூ. 1.30 இலட்சத்தில், இத்திட்டத்தின் மூலம் பயிற்சி வழங்கப் பட்டது.

**42. ஆயுதப் படைப் பிரிவு, காவல்துறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியளித்தல் :**

ஆதிதிராவிடர் (இந்த வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள்) தரைப்படை மற்றும் காவல் துறையில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க, இவர்களுக்கு உடல் அமைப்பு, அறிவுக் கூர்மை இவற்றை அதிகரிக்கும் நோக்கோடு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும் இது. சென்னை, முன்னாள் இராணுவத்தினர் நல வாரியத்தின் இணை இயக்குநர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி முகாம்களை நடத்துகிறார். தேவைப்படும் ஆதி

திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட, ஆதிதிராவிடர் நல அலுவலருடையதாகும். இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில், முதற்கண், மாவட்டத்திலும் 100 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இரண்டு திங்கள் கால அளவிற்கு பயிற்சி முகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த முகாம்கள் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால் 16 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதிதிராவிட மாணவர்களுக்கு 60 நாட்களுக்கு படைப் பிரிவு காவல் துறையில் சேர்வதற்கு வகை செய்யும் பொருட்டு மேற்சொன்ன பயிற்சி முகாம்களை நடத்த அரசு அனுமதி வழங்கி யுள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உணவு, தங்குமிட வசதிகள் போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 911 நபர்கள் ஆயுதப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகவும், 164 நபர்கள் காவல் துறைப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகவும் பயிற்சி பெற்றனர். ஆயுதப் படைப் பிரிவில், பயிற்சி பெற்ற 911 நபர்களில், 636 நபர்கள் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**43. அனைத்திந்திய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம் :**

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறும் மாணவியருக்கு சென்னை, மாநிலக் கல்லூரி மகளிர் விடுதியில் தங்குமிட வசதியும், உணவு வசதியும் அளிக்கப் படுகின்றன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 125 உணவிற்காக செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்திய பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொரு வருக்கும் ரூ. 1,000 மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 44 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கு இறுதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். இத்திட்டத் திற்கென 1984-85 ஆம் ஆண்டில் 9.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



முன்னோடி பயிற்சி நிலையம் செயல்படுவதைத் தவிர, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அறிவுக் கூர்மை மிக்க 10 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மத்திய தேர்வாணைக் குழுவினால் நடத்தப்பெறும் குடிமுறை அரசுப் பணி தேர்வில் சிறப்பான தேர்வுகளைப் பெற புதுடில்லியில் உள்ள டாக்டர் ராவ் படிப்பு நிலையத்தில் பயிற்சி பெற அனுப்புவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற அனுமதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு துணையாக இரண்டு துணை நிலையங்கள், ஒன்று மதுரையிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் நிறுவப்பட் உள்ளன.

**44. பொது சுகாதாரம், வீட்டு வசதி, வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்.**

**வீட்டுமனைகள் :**

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதிதிராவிடர்கள் பழங் குடியினருக்கு வீட்டு மனைகளாக ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாதபோது 1894 ஆம் ஆண்டு நிலங்கள் கையகப்படுத்துதல் சட்டம் 1-ன்கீழ் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி அவற்றை தகுதி யுடைய ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு மூன்று செண்டுகள் வீதம் வீட்டு மனைகளாக வழங்கப்படுகிறது. 1949 ஆம் ஆண்டிலிருந்து 1983-84 ஆம் ஆண்டு வரை (31—12—1983 ஆம் நாள் அன்று இருந்தவாறு) 4,23,282 மனைகள் வழங்குவதற்காக 26,493.52 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 3,78,619 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூ. 1,175.24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்றவரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்னும் உணர்வைப் போக்கவும், எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும், உண்மையிலேயே நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உதவி புரியவும், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்/வீடு கட்டிக் கொடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் கையகப்

படுத்தப்பட்ட வீட்டு மனைகளில்/கட்டப்பட்ட வீடுகளில் ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள், உயர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு இலவசமாக முறையே 80, 10 மற்றும் 10 விழுக்காடு விதத்தில் ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தேசிய கிராமப் பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப் பட்ட மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அரசு அறிவுரை வழங்கி உள்ளது.

### 45. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் :

இந்நிறுவனம் பிப்ரவரி திங்கள் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், மீனவர் மற்றும் துப்புரவாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும் பொறுப்பு மற்றும் மாணவர் இல்லங்கள்/பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டும் பணியையும் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. கட்டுமானப் பணி தவிர ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. 1974 முதல் 1979 முடிய இந்நிறுவனம் ஆதிதிராவிடர்களுக்கு 41,675 வீடுகளைக் கட்டி பயனடைவோர்க்கு, இலவசமாக அளித்துள்ளது. 1979 ஆம் ஆண்டு திட்டத்திலிருந்து இத்திட்டத்தை அரசு மானியம் மற்றும் பயன்படுவோரின் உழைப்பின் அடிப்படையில் செயற்படுத்திட ஆணையிடப் பட்டுள்ளது. (மானியம் ரூ. 3,250 பயனடைவோர் உழைப்பின் பங்கு ரூ. 750) இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் வடிவமைப்பைப் பின்பற்றி 201 சதுர அடி பரப்பளவில் பயனடைவோர் தாமே அரசு மானியத்துடன் வீடுகளைக் கட்டிக்கொள்வர். பயன் பெறுவோருக்கு தேவையான பொறியியல் மேற்பார்வை உதவிகள் மேற்படி கழக பொறியாளர் மூலம் அளிக்கப்படும். 1979-80, 1980-81-ல் 10,000 வீடுகள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 562 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 5,290 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1982-83 முதல் ஆதிதிராவிடர் மேம்பாட்டு சிறப்புத் திட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டுக் கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இதுவரை 55 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1,536 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளன. தற்போது வீட்டின் மதிப்பீட்டுச் செலவினை ரூபாய் 4,000 ல் இருந்து 6,000 ஆக அரசு உயர்த்தி உள்ளது. ரூ. 6,000 முழுவதும் மானியமாக வழங்கப்படும்.



இந்நிறுவனம் ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பணியினை நிறைவேற்ற இயலும் பொருட்டு ஆதிதிராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதியுதவி முதலீடு செய்வதற்காக மாநில அரசுக்கு மத்திய உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. பங்கு முதலீட்டில் 49 சதவீதத் தொகையை மத்திய அரசும், 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதிதிராவிடர்களுக்கு உதவி புரிவதற்காக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாக பயன்படுத்தப்படும். ஆதிதிராவிடர் தங்களது வருமானத்தை பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக மொத்த செலவில் 25 விழுக்காடுத் தொகை இந்த தொடக்கச் செலவு தொகையாக 4 விழுக்காடு வட்டி விதத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 75,305 ஆதிதிராவிடர் குடும்பங் களுக்கு ரூ. 458.75 இலட்சம் தொடக்கச் செலவு தொகையாக வழங்கப் பட்டுள்ளது. 1984-85-ன் வரவு-செலவு மதிப்பீட்டில் இதற்காக ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 46. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் :

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராம வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒவ்வொர் வீடும் 6,000 ரூபாய் செலவில் கிராமப் பகுதிகளில் வீடு கட்டப்படுகின்றது. ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவோருமான ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனுக்கும்; 1,000 ரூபாய் மான்யமாக வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. ஆதிதிராவிடர் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடு கட்ட விழையும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேராதவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர் ஆவர். பயன் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் வழங்கப்படுவதற்காக உதவித் தொகை குறித்து ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறையின் 1984-85 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 600 இலட்சம் மூலதனம் மற்றும் வட்டிக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) பதிவாளரால் செயற்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1—4—1983 முதல் 31—12—1983 வரையில் 21,734 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் 18,003 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு கட்டப்பட்டவையாகும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. 1983-84ல் 10,000 வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றில் 9,000 ஆதிதிராவிடர்களுக்கும், 1,000 பழங்குடியினருக்கும் ஆகும். சமவெளியில் இதற்கென வீடு ஒன்றிற்கு தொகை ரூ. 6,000 மெனவும், மலைப் பிரதேசங்களுக்கு ரூ. 9,000 மெனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரால் செயல்படுத்தப்படுகிறது.

47. துப்புரவுப் பணியாளர்கள், குப்பை கூட்டுபவர்கள் பணிநிலையை மேம்படுத்துதல் :

துப்புரவுப் பணியாளர்கள் மலக்கூடையை தலையில் சுமக்கும் பழக்கம் தற்போது இம்மாநிலத்தின் நடைமுறையில் இல்லை. பெருக்குபவர்களுக்கும், துப்புரவுப் பணியாளர்களுக்கும், தள்ளு வண்டிகள், கையுறைகள் இலவசமாக காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும், 216. தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்த 1979-80-ல் 58 நகராட்சிகளுக்கு 2,980 தள்ளு வண்டிகளும், 102 பேரூராட்சிகளுக்கு 390 தள்ளு வண்டிகளும், 480 சுரண்டு கருவிகளும் வழங்க ரூபாய் 9,66,400 வழங்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் 250 தள்ளு வண்டிகள்,. 250 சுரண்டு கருவிகள், தட்டுகள் ஆகியவற்றை ரூ. 1,58,154 செலவில் 53 பேரூராட்சிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டது.

48. குடிநீர் வசதி :

ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கென• ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு ரூ. 7,500 ஆகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோருக்காக ஆண்டுதோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த் தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த் தேக்கம் கட்டவும் ஆழ்கிணறு தோண்டவும் உயரளவு செலவு வரம்பு ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்கு பதிலாக இயன்ற அளவிற்கு துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ஆதி



திராவிடர்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் குடிநீர் கிணறுகள் அமைத்து கொடுப்பதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 29.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

49. மின் வசதி :

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1984 சனவரி வரை 25,863 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டது.

50. சமுதாயக்கூடங்கள் :

ஆதிதிராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், சமூக விழாக்கள், கூட்டங்கள் நடத்துவதற்கென்று அக்குடியிருப்புகளில் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் ரூ. 10,500 செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூ. 15,000 மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1983-84 ஆம் ஆண்டில் சமுதாயக் கூடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 55,000 செலவில் கட்டுவதற்காக மூன்று இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை செங்கை மாவட்டத்தில் உள்ள பம்மல் மற்றும் வடஆற்காடு மாவட்டத்திலுள்ள களத்தூர் மற்றும் தக்கோலத்திலும் ஆகும். இத்தொகை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கென 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

51. சமுதாய நிலையங்கள் :

ஆதிதிராவிடர், அவர் தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்யும் பொருட்டு ஆடவர் சமூகப் பணியாளர் ஒருவரும், மகளிர் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். சிறார்களை நீராட்டி, ஆரோக்கியமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்

பழக்கத்தையும் அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் முதலமைச்சரின் சத்துணவும் பல்வகை வைட்டமின் சத்துவள மாத்திரைகளும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச்சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1984-85 ஆம் ஆண்டில் 5.31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**52. நீர்ப்புற சலவைக் கூடம் :**

1978-79 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சலவைத் தொழிலாளி சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சலவைக்கூடம் அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சியில் செயல்படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சியில் (மணவாளக்குறிச்சி மற்றும் அருமனை) நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் கட்டித் தரப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்குடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் பரக்கைக் குளத்திலும் நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருகலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள இலத்தூரிலும், நீர்புறச் சலவைக் கூடங்கள் அமைக்கும் பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு ஊருக்கும் ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. 1982-83-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சோமங்கலத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள சாம்பவர் வடகரையிலும் நீர்ப்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு ஊருக்கும் ரூபாய் 10,000 வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**53. தீண்டாமை ஒழிப்பு :**

திருத்தி இயற்றப்பட்ட "குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்" 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் செவ்விய முறையில் செயல்படுத்தப்படுவதற்காக காவல் துறைத் துணைத் தலைமை அதிகாரி பதவித் தரத்தில் காவல் துறை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



இம்மாநிலத்தில் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் (மேற்கு), மதுரை (தெற்கு), கோயம்புத்தூர் (நகர்ப்புறம்), செங்கற்பட்டு (கிழக்கு), இராமநாதபுரம் (மேற்கு), வட ஆற்காடு, கன்னியாகுமரி, சேலம், தருமபுரி, நீலகிரி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு (மேற்கு), மதுரை (வடக்கு), இராமநாதபுரம் (கிழக்கு), தஞ்சாவூர் (கிழக்கு), கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில் 20 இயங்கும் காவல் படைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இக்காவல் படைப் பிரிவுகள் அனைத்திற்கும் ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 31—12—1983 ஆம் நாள் வரையில் இயங்கும் காவல் படைப் பிரிவுகள் 10,177 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,090 வழக்குகளில் நீதி மன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான குற்றங்களைப் பதிவுசெய்து, விரைவில் விசாரித்து முடிவு செய்ய திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் (கும்பகோணம்) மாவட்டங்களில் நான்கு தனி நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தனி நீதி மன்றங்கள் செயல்பட்டு வரும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் வழக்குகள் பெருமளவு நிலுவையில் உள்ள தென் ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் நீதி மன்றப் பணிகளைக் கவனிக்க ஆறு வழக்குத் தொடர்பு குழுக்களை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்கும் மாநில அளவிலான குழுவை அரசு மாற்றியமைத்துள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவுடன் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது. இதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகர் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதற்பரிசின் மதிப்பு ரூ. 1,000. இரண்டாவது பரிசின் மதிப்பு ரூ. 500 இதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 0.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தீண்டாமைக் கொடுமைகளை எடுத்துரைக்க ரூ. 3.10 இலட்சம் செலவில் ஒரு செய்திச் சுருள் படம் தயாரிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் சனவரி திங்கள் 24 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள்வரை "தீண்டாமை ஒழிப்பு வாரம்" கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை பொது மக்கள் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலனுக்காக ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடுகள் முக்கிய நாளேடுகளில் 1978-79 ஆம் ஆண்டு முதல் அரசால் வெளியிடப்பட்டு வருகிறது.

### 54. கலப்புத் திருமணங்கள் :

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968-69-ல் கொண்டுவரப்பட்டது. கிறித்தவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர் :—

(அ) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(ஆ) தம்பதிகளின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும் ஆறாவது அல்லது ஏழாவது வெளியீட்டு தேசியச் சேமிப்பு பத்திரமாக 4,000 ரூபாய்க்கும் வழங்கப்படும். இப்பத்திரம் அவர்கள் இருவர் பெயரிலும் இருக்கும். இதனை அவர்கள் விற்கவோ அடைமானம் வைக்கவோ கூடாது. ஆறு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் பிரிந்துவிட்டால், வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும். மனைவியை இழந்தவர்களுக்கும் கணவனை இழந்தவர்களுக்கும் மணவிலக்கு செய்து கொண்டவர்களுக்கும் குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி 21—8—1979 முதல் மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

(இ) கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியையோ, தாயின் சாதியையோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் மற்ற குழந்தைகளுக்கும் சாரும்.



(ஈ) மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்கு சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக ஆறு இடங்கள் 1979-80 ஆம் ஆண்டு முதல் கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கென்று ஒதுக்கப்படுகின்றன.

(உ) பொறியியல் (B.E.) முதலாம் ஆண்டு பட்டப் படிப்பில் ஐந்து இடங்கள் 1980 முதல் கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஊ) கலப்புத் திருமணத் தம்பதிகளின் மாத வருமானம் ரூ. 250-ம் அதற்குக் குறைவாகவும் உள்ளவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் பத்து குடியிருப்புகள் தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படுகின்றன. தவிர தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் அல்லது தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடமிருந்து குடியிருப்போ, வீட்டு மனையோ, வீடோ சென்னை நகரில் வாங்குவதற்காக கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு உதவித் தொகை ரூபாய் 1,200 வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கியதிலிருந்து 31—12—1983 முடிய 1,497 தம்பதியருக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 7.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 55. இறுதிச் சடங்குகளுக்கு தொகையளித்தல் :

ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள், கிறித்தவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூ. 50 நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஈமக் கடனுக்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 52.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்ளாட்சி மன்றங்களின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

### 56. பழங்குடியினர் துணைத் திட்டம் :

தமிழ் நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்க

ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது. இதற்காக தொகை (1976-77 ஆம் ஆண்டில்) ரூ. 101.82 இலட்சமாக இருந்தது. தற்போது 1984-85 ஆம் ஆண்டில் 685.00 இலட்சமாக உள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துணைத் திட்டத்திற்காக (1980-85) ரூபாய் 2,167.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுதி அடிப்படையிலான திட்டமாகும். பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதிகளில் (துணைத் திட்டம் பகுதி) வசிக்கின்ற சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் பயனடைகின்றனர். குறைந்தது 15,000 பழங்குடியினரை கொடிய வறுமையிலிருந்து மீளச் செய்து நல்வாழ்வு வாழச் செய்வதே இந்த பழங்குடியினர் துணைத் திட்டத்தின் நோக்கமாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஓராண்டுக்கு 3,000 வீதம் பழங்குடியினர் குடும்பத்தினரை முன்னேறச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண்வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், சமூகநலம், கிராமியத் தொழில்கள், பட்டுப்புழு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியன அடங்கும்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பெறும் பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகாரக் குழுவால் ஆய்வு செய்யப்பெறுகின்றது. முதலமைச்சரின் சிறப்புக் கட்டளையின் பேரில், தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து பழங்குடியினருக்கும் இரண்டாண்டு காலத்திற்குள் குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டு இதற்கான பெருநோக்குத் திட்டம் முடியும் நிலையில் உள்ளது.

இத்திட்டங்களைச் செயற்படுத்த அந்தந்த துறைகள், பொறுப்பேற்கின்றன. மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாவர்.





**57. ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு செய்யும் [illegible] விதிகள் :**

**கல்வி நிறுவனங்களில் அனுமதி :**

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 விழுக்காடு இடங்கள் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு 4—7—1983 அன்று ஆதிதிராவிடர் நல அமைச்சரின் தலைமையில், கூடி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்து விரிவாக ஆய்வு செய்தது. 1981-82 மற்றும் 1982-83-ல் பல்வேறு கல்வி நிலையங்களில் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரங்கள் மேற்படி கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவை குழுவினால் ஆய்வு செய்யப்பட்டன.

**அரசுப் பணிகளில் நியமனம் :**

மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இடங்கள், ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள இடங்கள் (விழுக்காட்டில்) வருமாறு :—

| | விழுக்காடு. |
|---|---|
| அரசுத் துறைகள் | 11.27 |
| அரசு பொதுத்துறை நிறுவனங்கள் | 12.43 |

**58. தமிழ்நாட்டில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிப்பது ;**

தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் 1981 வரையிலான காலத்தில் 10 மாவட்டங்களில் கொத்தடிமைகள் முறை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு 27,874 நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதில் 1976 ஆம் ஆண்டில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட தென்னார்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைக்

